/28/

# தமிழ் நாடு

# சட்டப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

VOL - 12 APL - 1989 NO - 1

C

D
V2,1,31'N89
N89.12.1.
138197

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

1281

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 22, 1989–தொகுதி 12–எண் 1

Saturday, the 22nd April, 1989–Volume 12–No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## உள்ளடக்கம்

22—4—1989.


பக்கங்கள்.

| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i-v |
| Personnel of the Government of Tamil Nadu | vi-viii |
| சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xi-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) .. | xiii-xxiv |

1. வினாக்கள் — விடைகள்—

| | |
|---|---|
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1-32 |

2. தகவல் கோரல்—

| | |
|---|---|
| (அ) கர்நாடக மாநில அரசை மத்திய அரசு கலைத்துள்ளது குறித்து .. .. | 32-33 |
| (ஆ) கர்நாடக முதல்வரோடு காவிரி நீர்ப் பிரச்சினை பற்றித் தமிழக முதல்வர் நடத்தஇருக்கும் பேச்சு வார்த்தை குறித்து. | 33-43, 45-60 |

3. ஒழுங்குப் பிரச்சினை—

| | |
|---|---|
| ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது குறித்த நடைமுறை .. .. .. | 44-45 |

4. கவன ஈர்ப்பு—

| | |
|---|---|
| (அ) வட ஆற்காடு மாவட்டத்தின் சில பகுதிகளில் காட்டு யானைகள் விளைவிக்கும் கேடுகள் குறித்து .. .. .. | 61-64 |
| (ஆ) சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் அம்மை நோயால் பாதிப்பு .. .. | 64-68 |

5. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும், வாக்கெடுப்பும்— தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| கோரிக்கை எண். 32— பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன். | | 68-140 |
| மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி .. | .. | 68-69, 120-137 |
| *திரு. சி. கோவிந்தராஜன் .. | .. | 69-77 |
| திரு. அ. பெரியண்ணன் .. | .. | 77-81 |
| *திரு. வே. பெரியசாமி .. | .. | 81-85 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | .. | 85-91 |
| திரு. தூ. க. சுப்பிரமணியம் | .. | 91-95 |
| திரு. பி. எச். பாண்டியன் .. | .. | 95-99 |
| திரு. கோ. பூவராகன் .. | .. | 99-109 |
| திரு. எம். அப்துல் லத்தீப் .. | .. | 109-116 |
| திரு. எஸ். டி. உகம்சந்த் .. | .. | 116-120 |
| 6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் | .. | 140-141 |



N2 11,31 '99 D
N99.12
600 008.
138897


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர் : மேதகு திரு. பி. சி. அலெக்சாண்டர்.

[redacted]

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. | **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத்துறை. |
| 2. கல்வி அமைச்சர் | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் ;** கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்ட மன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல் பொருள் இயல். |
| 3. சட்ட அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள் அளவைகள் பற்றிச் சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிச் சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம். |
| 5. போக்குவரத்துத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள். |

| | |
|---|---|
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** அறநிலையத்துறை, வீட்டு வசதி, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள், சின்கோனா. |
| 7. வேளாண்மைத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கோ சி. மணி:** வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 8. உணவு அமைச்சர். | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உணவு. விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 10. ஊரக—வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்:** நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புறகுடன் சம்பந்தப்பட்டவை. |
| 11. பொதுப் பணித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட) திட்டப் பணிகள். |



| | |
|---|---|
| 12. சமூக நலம்—ஊரகத் தொழிற்துறை அமைச்சர். | **மாண்புமிகு . திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்:** சமூக நலம் (குழந்தைகள் மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம குடிசை சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம். |
| 3. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்:** ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 14. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி (எ) தெய்வசிகாமணி:** மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், நகர அமைப்பு, குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல். |
| 15. மின் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மின்சாரம் மற்றும் பால். |
| 16. கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்:** கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 17. கைத்தறித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. ச. தங்கவேலு:** கைத்தறி, நெசவாலைகள், நகர்ப்புற மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |
| முதலமைச்சரின் பேரவைச் செயலர் | **திரு. எல். கணேசன்.** |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU—THIRU P. C. ALEXANDER

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | THE HON. DR. M. KARUNANIDHI : Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education .. | THE HON. PROFESSOR K. ANBAZHAGAN : Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. | THE HON. THIRU S. J. SADIQ PASHA : Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money-lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue .. | THE HON. THIRU NANJIL K. MANOHARAN : Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport .. | THE HON. THIRU M.KANNAPPAN: Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways. |
| 6. Minister for Hindu Religious and Charitable Endowments. | THE HON. THIRU K. P. KANDASAMY: Hindu Religious and Charitable Endowments, Housing, Tourism, Tourism Development Corporaion, Forest and Cinchoa. |
| 7. Minister for Agriculture .. | THE HON. THIRU KO.SI. MANI: Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production. |
| 8. Minister for Food .. | THE HON. THIRU ARCOT N. VEERASAMY : Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics. |
| 9. Minister for Information and Labour. | THE HON. THIRU PON. MUTHURAMALINGAM : Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press. |
| 10. Minister for Rural Development and Local Administration. | THE HON. THIRU VEERAPANDI S. ARUMUGAM:Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness. |
| 11. Minister for Public Works. | THE HON. THIRU DURAIMURUGAN: Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works. |
| 12. Minister for Social Welfare and Rural Industries. | THE HON. TMT. SUBBULAKSHMI JAGADISAN : Social Welfare including Children and Women's Welfare, Beggars,Home, Orphanages Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan. |
| 13. Minister for Adi-Dravidar Welfare. | THE HON. DR. E. RAMAKRISHNAN : Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |

| | | |
|---|---|---|
| 14. | Minister for Public Health. | THE Hon. DR. K. PONMUDI ALIAS DEIVASIGAMANI : Public Health, Medicines, Town Planning, Water Board and Environmental Pollution Control. |
| 15. | Minister for Electricity .. | THE HON. THIRU K. N. NEHRU : Electricity and Milk. |
| 16. | Minister for Animal Husbandry. .. | THE HON. DR. K. CHANDRA-SEKARAN : Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation. |
| 17. | Minister for Handlooms. .. | THE ON. THIRU S. THANGAVELU : Handlooms, Textiles, Urban Development, Slum Clearance Board and Accommodation Control. |
| | Parliamentary Secretary to Chief Minister. .. | THIRU L. GANESAN |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்

### பேரவைத் துணைத் தலைவர்.

திரு. பி. துரைசாமி.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மு. இராமநாதன்.

திரு. என். கணபதி.

திரு. பெ. சீனிவாசன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள.

திரு. சி. கோவிந்தராஜன்.

### செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி,

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(அகர வரிசைப்படி)

| | | |
|---|---|---|
| [illegible]நாராயணன், திரு. வெ., பி. காம்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி., | .. | முதுநிலை குழு அலுவலர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல்., | .. | துணைச் செயலாளர். |
| சாமிநாதன், திரு. பொ. க. | .. | துணைச் செயலாளர். (பதிப்பாளர்) |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்., | .. | துணைச் செயலாளர். |
| ஞானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல்., | .. | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு. அ., பி.ஏ., | .. | குழு அலுவலர். |
| இராசாராம், திரு வி. பி. ஏ., பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல்., | .. | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. சு., பி.ஏ., | .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., | .. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி. பி.எஸ்ஸி., பி.எல்., | .. | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர். |
| மூனிர் உன்னிசா, திருமதி, பி.எஸ்ஸி., | .. | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ., | .. | சார்புச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ., | .. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ., | .. | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல்., | .. | சார்புச் செயலாளர். |

| | | |
|---|---|---|
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. | .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., | .. | தலைமை நிருபர். (பேரவை) |
| சுவாமிநாதன், திரு. ச., எம். ஏ. | .. | தலைமை நிருபர் (குழுக்கள்) |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல்.

(அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 'அ' | | |
| 1. அங்கமுத்து, திரு. கே. | .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.). |
| 2. அசேன், திரு. ஜெ. | .. | இராணிப்பேட்டை. |
| 3. அண்ணாதுரை, திரு. கே. | .. | பட்டுக்கோட்டை. |
| 4. அண்ணாதுரை, திரு. கே. | .. | வரகூர் (செ. வ.). |
| 5. அண்ணாநம்பி, திரு. ஆர். | .. | அவிநாசி (செ. வ.). |
| 6. அண்ணாமலை, திரு. எம். | .. | அரூர் (செ. வ.). |
| 7. அதியமான், திரு. ஆ. | .. | சேடப்பட்டி. |
| 8. அப்துல்சமத், திரு. பா. | .. | வாணியம்பாடி. |
| 9. அப்துல் லத்தீப், திரு. எம். | .. | சேப்பாக்கம். |
| 10. அர்ஜுனன், திரு. கே. | .. | தாரமங்கலம். |
| 11. அழகர்சாமி, திரு. சோ. | .. | கோவில்பட்டி. |
| 12. அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ. வ.). |
| 13. அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.). |
| 14. அன்பழகன், பேராசிரியர் க. | .. | அண்ணா நகர். |
| 15. அன்பழகன், திரு. வ. | .. | செய்யாறு. |
| 16. அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'ஆ' | |
| 17. ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிப்பட்டி. |
| 18. ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம். |
| 19. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர். |
| 20. ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. .. | சேலம்-2. |
| 'இ' | |
| 21. இரகுமான்கான், திரு. அ. .. | பூங்கா நகர். |
| 22. இராசமாணிக்கம், திரு. இரெ. .. | குத்தாலம். |
| 23. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. .. | மேலூர். |
| 24. இராசன், திரு. வி. பி. .. | ராஜபாளையம் (செ. வ.). |
| 25. இராசு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ. வ.). |
| 26. இராசு, திரு. வெ. .. | குளத்தூர் (செ. வ.). |
| 27. இராசேந்திரன், திரு. அ. .. | போளூர். |
| 28. இராதா, திரு. எஸ். ஆர். .. | மதுரை கிழக்கு. |
| 29. இராதாகிருஷ்ணன், திரு. டி. .. | சோழவந்தான். |
| 30. இராமகிருஷ்ணன், டாக்டர். எ. .. | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 31. இராமகிருஷ்ணன், திரு. நா. .. | கம்பம். |
| 32. இராமச்சந்திரன், திரு. எம். .. | திருவோணம். |
| 33. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். .. | விளாத்திகுளம். |
| 34. இராமச்சந்திரன், திரு. ந. .. | செஞ்சி. |
| 35. இராமசாமி, திரு. ஏ. எம். .. | ஆத்தூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'இ'—தொடர்ச்சி. | |
| 36. இராமசாமி, திரு. கே. வி. .. | கரூர். |
| 37. இராமசாமி, திரு. வி. .. | திருச்செங்கோடு. |
| 38. இராமசாமி, திரு. கே. ஆர். .. | திருவாடானை. |
| 39. இராமநாதன், திரு. மு. .. | கோவை மேற்கு. |
| 40. இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 41. இராஜேந்திரன், திரு. கே. ஆர். .. | பர்கூர். |
| 42. இராஜேந்திரன், திரு. பி. வி. .. | வேதாரண்யம். |
| 43. இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் (செ. வ.). |
| 'ஈ' | |
| 44. ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ. வ.). |
| 'உ' | |
| 45. உகம்சந்த், திரு. எஸ். டி. .. | மதுராந்தகம். |
| 46. உதயசூரியன், திரு. தா. .. | சின்னசேலம். |
| 47. உபயதுல்லா, திரு. எஸ். என். எம். .. | தஞ்சாவூர். |
| 'எ' | |
| 48. எட்டியப்பன், திரு. ஆர். .. | பேரணமல்லூர். |
| 'ஏ' | |
| 49. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. .. | பள்ளிபட்டு. |
| 'க' | |
| 50. கண்ணப்பன், திரு. மு. .. | பல்லடம். |
| 51. கண்ணன், திரு. எஸ். பி. .. | அணைக்கட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 'க'—தொடர்ச்சி. | |
| 52. கணபதி, திரு. என். | மயிலாப்பூர். |
| 53. கணேசமூர்த்தி, திரு. என். | குறிஞ்சிப்பாடி. |
| 54. கணேசமூர்த்தி, திரு. ஏ. | மொடக்குறிச்சி |
| 55. கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 56. கணேசன், திரு. க. சொ. | ஜெயங்கொண்டம். |
| 57. கணேசன், திரு. சா. | தியாகராய நகர். |
| 58. கணேசன், திரு. வே. | மங்களூர் (செ. வ.). |
| 59. கந்தசாமி, திரு. கே. | கிணத்துக்கடவு. |
| 60. கந்தசாமி, திரு. கே. பி. | திருச்செந்தூர். |
| 61. கரீம், திரு. எம். கே. | கூடலூர். |
| 62. கருணாநிதி, டாக்டர் மு. | துறைமுகம். |
| 63. கருப்பசாமி, திரு. எஸ். எஸ். | சாத்தூர். |
| 64. கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபநாசம். |
| 65. கன்னையன், திரு. க. | தொட்டியம். |
| 66. கஜபதி, திரு. டி. ஆர். | ஆற்காடு. |
| 67. காஞ்சனா, டாக்டர் க. | கிருஷ்ணகிரி. |
| 68. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர். |
| 69. காளியப்பன், திரு. பி. | ஓட்டன்சத்திரம். |
| 70. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம். |
| 71. கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர். |
| 72. குணசேகரன், திரு. எஸ். | தலைவாசல் (செ. வ.). |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| கு—தொடர்ச்சி. | |
| 73. குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம். |
| 74. குருநாதன், திரு. சு. | பாளையங்கோட்டை. |
| 75. குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. | பவானி. |
| 76. கோதண்டம், திரு. ஏ. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ) |
| 77. கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம். |
| 78. கோவிந்தசாமி, திரு. சி. | திருப்பூர். |
| 79. கோவிந்தசாமி, திரு. வி. சி. | காவேரிப்பட்டினம். |
| 80. கோவிந்தராஜன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 81. கோவிந்தன், திரு. வெ. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 'ச' | |
| 82. சண்முகம், திரு. சி. | ஆலந்தூர். |
| 83. சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி. |
| 84. சந்திரசேகரன், டாக்டர் க. | ஆலங்குடி. |
| 85. சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர். |
| 86. சம்பத், திரு. ஏ. ஜி. | முகையூர். |
| 87. சற்குணம், திருமதி. எஸ். பி. | இராதாகிருஷ்ணன்நகர் |
| 88. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன், டாக்டர் மு. | இளையான்குடி. |
| 89. சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | உடுமலைப்பேட்டை. |
| 90. சாந்தகுமாரி, டாக்டர் த. | தாராபுரம் (செ. வ.) |
| 91. சாமிநாதன், திரு. ஆர். | திருமங்கலம். |
| 92. சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| **'ச'— தொடர்ச்சி** | |
| 93. சிவசுப்பிரமணியன், திரு. சா. .. | ஆண்டிமடம். |
| 94. சிவலிங்கம், திரு எஸ். ஆர். .. | பனைமரத்துப்பட்டி. |
| 95. சிவலோகம், திரு. எஸ். .. | புவனகிரி. |
| 96. சின்னசாமி, திரு. கே. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 97. சின்னசாமி, திரு. ரா. .. | தர்மபுரி. |
| 98. சின்னசாமி, திரு. வி. கே. .. | பவானிசாகர். |
| 99. சீரங்கன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 100. சீனிவாசன், திரு. பெ. .. | சிவகாசி. |
| 101. சுந்தர், திரு. கே. .. .. | உத்திரமேரூர். |
| 102. சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு. |
| 103. சுந்தரம், திரு. க. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 104. சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம். |
| 105. சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 106. சுந்தரராஜ், டாக்டர் எஸ். .. | பரமக்குடி (செ.வ.) |
| 107. சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. .. | கன்னியாகுமரி. |
| 108. சுப்பிரமணியம், திரு. தூ. க. .. | சத்தியமங்கலம். |
| 109. சுப்பிரமணியன், திரு. அ. லெ. | திருநெல்வேலி. |
| 110. சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை. |
| 111. சுப்பு, திரு. ஏ. .. .. | ராசிபுரம். |
| 112. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி. | ஈரோடு. |
| 113. சுப்பையா, திரு. வ. .. .. | திருமயம். |
| 114. செங்குட்டுவன், திரு. ஏ. .. | மயிலாடுதுறை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| **'ச'— தொடர்ச்சி.** | |
| 115. செங்கைசிவம் .. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 116. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிச்செட்டிபாளையம் |
| 117. சேட்டு, திரு. எம். .. .. | செங்கம் (செ.வ.) |
| 118. சொக்கர், திரு. ரா. .. .. | விருதுநகர். |
| 119. சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.) |
| **'ட'** | |
| 120. டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| **'த'** | |
| 121. தங்கபாண்டியன், திரு. வே. .. | அருப்புக்கோட்டை. |
| 122. தங்கம், திரு. அ. .. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 123. தங்கராஜன், திரு. எஸ். ஏ. .. | திண்டுக்கல். |
| 124. தங்கராஜு, திரு. ஏ. .. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 125. தங்கவேல், திரு. எம். .. | முசிறி. |
| 126. தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.) |
| 127. தங்கவேலு, திரு. ச. .. .. | சங்கரநாயனார்கோவில் (செ.வ.). |
| 128. தம்புசாமி, திரு. வி. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 129. தமிழ்மணி, திரு. வி. .. .. | செங்கல்பட்டு. |
| 130. தயாளன், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 131. தனபாலன், திரு. கே. ஆர். ஜி. | சேலம்-1. |
| 132. தனராஜ், திரு. சி. .. .. | வந்தவாசி (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'த'—தொடர்ச்சி | |
| 133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 134. திருமூர்த்தி, டாக்டர் து. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 135. திருவேங்கடம், திரு. பெ. சு. .. | கலசப்பாக்கம். |
| 136. துரை சந்திரசேகரன், திரு. .. | திருவையாறு. |
| 137. துரைசாமி, திரு. பி. .. .. | நாமக்கல் (செ.வ.) |
| 138. துரைபாண்டி, திரு. பெ. .. | மானாமதுரை (செ.வ.) |
| 139. துரைமுருகன், திரு. .. .. | காட்பாடி. |
| 140. துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 141. தென்னரசு, திரு. எஸ். எஸ். .. | திருப்பத்தூர். |
| 142. தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| 'ந' | |
| 143. நஞ்சப்பன், திரு. ந. .. .. | பெண்ணாகரம். |
| 144. நடராசன், திரு. ஆ. .. .. | பேரூர். |
| 145. நடராசன், திரு. பொ. .. | திருத்தணி. |
| 146. நடேச உடையார், திரு. எகால் மு. | ரிஷிவந்தியம். |
| 147. நடேசன், திரு. ஆர். .. .. | திருவட்டாறு. |
| 148. நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ. .. | பண்ருட்டி. |
| 149. நாராயணன், திரு. ராம. .. | காரைக்குடி. |
| 150. நூர்முகம்து, திரு. செ. .. | பத்மநாபபுரம். |
| 151. நேரு, திரு. கே. என். .. | லால்குடி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'ப' | |
| 152. பஞ்சாட்சரம், திரு. ஆர். .. | மேல்மலையனூர். |
| 153. பழனிச்சாமி, திரு. டி. கே. .. | திருவொற்றியூர். |
| 154. பழனிச்சாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 155. பழனிசுவாமி, திரு. க. .. | எடப்பாடி. |
| 156. பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 157. பன்னீர்செல்வம், திரு. மா. .. | சீர்காழி (செ.வ.) |
| 158. பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி. |
| 159. பாப்பா உமாநாத், திருமதி .. | திருவரம்பூர். |
| 160. பாப்பா சுந்தரம், திரு. அ. .. | குளித்தலை. |
| 161. பால்ராஜ், திரு. எஸ். .. .. | மதுரை-மத்திய. |
| 162. பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. .. | திருநாவலூர். |
| 163. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். .. | பொங்கலூர். |
| 164. பாலையா, திரு. ஆ. .. .. | கொளச்சல். |
| 165. பிச்சாண்டி, திரு. கே. .. .. | திருவண்ணாமலை. |
| 166. பிச்சைமுத்து, திரு. ரெ. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167. பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி. |
| 168. புகழேந்தி, திரு. இ. .. .. | கடலூர். |
| 169. பூவராகன், திரு. கோ. .. | விருத்தாசலம். |
| 170. பெரியசாமி, திரு. என். .. | தூத்துக்குடி. |
| 171. பெரியசாமி, திரு. ஐ. .. | ஆத்தூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'ந'— தொடர்ச்சி.** | |
| 172. பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.) |
| 173. பெரியண்ணன், திரு. அ. .. | புதுக்கோட்டை. |
| 174. பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 175. பொன்முடி, திரு. டி. .. .. | தண்டராம்பட்டு. |
| 176. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. | விழுப்புரம். |
| 177. பொன். முத்துராமலிங்கம் .. | மதுரை, மேற்கு |
| 178. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை(செ.வ.) |
| 179. பொன்னுசாமி, பேராசிரியர் கே. | மருங்காபுரி. |
| 180. பொன்னுபிள்ளை, திரு. ஜி. .. | தேனி. |
| **'ம'** | |
| 181. மகேந்திரன், திரு. ஆர். .. | நாட்ராம்பள்ளி. |
| 182. மணி, திரு. ஆச்சியூர் எம். .. | நாங்குநேரி. |
| 183. மணி, திரு. கே. ஏ. .. | கபிலர்மலை. |
| 184. மணி, திரு. கோ. சி. .. .. | கும்பகோணம். |
| 185. மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.) |
| 186. மதிவாணன், திரு. இரா. .. | இராயபுரம். |
| 187. மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 188. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி. |
| 189. மனோகரன், திரு. பா. .. | சிவகங்கை. |
| 190. மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம். |
| 191. மாசிலாமணி, திரு. தி. ரா. .. | பூந்தமல்லி. |



12

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'ம'— தொடர்ச்சி.** | |
| 192. மாதப்பன், திரு. கொ. .. | பாலக்கோடு. |
| 193. மாரப்பன், திரு. .. .. | காங்கேயம். |
| 194. மாரிமுத்து. திரு. அ. .. | வானூர் (செ.வ.) |
| 195. முகமது சித்திக், திரு. எம். .. | பூம்புகார். |
| 196. முத்துசாமி, திரு. ப. .. .. | வேடசந்தூர். |
| 197. முத்தையன், திரு. எம். .. | சங்கராபுரம். |
| 198. முத்தையா, திரு. எம். .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 199. முருகேசன், திரு. பொ. .. | காஞ்சிபுரம். |
| 200. முல்லைவேந்தன், திரு. வ. .. | மொரப்பூர். |
| 201. முனிரத்தினம், திரு. ஆ. மு. .. | சோளிங்கர். |
| 202. முனிரத்தினம், திரு, எஸ். ஆர். | திருவள்ளூர். |
| 203. மூக்கன், திரு. ஆர். .. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 204. மூக்கையா, திரு. எல். .. .. | பெரியகுளம். |
| 205. மோகன், திரு. இரா. .. | சிங்காநல்லூர். |
| 206. மோசஸ், திரு. எம். .. .. | நாகர்கோவில். |
| **'ய'** | |
| 207. யசோதா செல்லப்பா, திருமதி. .. | வலங்கைமான் (செ.வ.) |
| **'ர'** | |
| 208. ரமணி, திரு. கே. .. .. | கோவை கிழக்கு. |
| 209. ரமணி நல்லதம்பி, திருமதி .. | ராதாபுரம். |
| 210. ரவி அருணன், திரு. .. .. | அம்பாசமுத்திரம். |
| 211. ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஓசூர். |
| 212. ராமச்சந்திரன், திரு. கே. .. | மன்னார்குடி. |
| 213. ராமச்சந்திரன், திரு. சி. .. | திருப்பரங்குன்றம். |
| 214. ராமசாமி, திரு.மொஞ்சனூர் ப. | அரவக்குறிச்சி. |
| 215. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம். |
| 216. ராஜு, திரு. எச். எம். .. .. | உதகமண்டலம். |
| 217. ராஜேந்திரன், திரு. எம். எஸ்.கே. | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 'ல' | |
| 218. லட்சுமி, திருமதி பி. .. | வால்பாறை (செ.வ.) |
| 'வ' | |
| 219. வரதராஜன், திரு. ஆர். .. | சங்கரி (செ.வ.) |
| 220. வரதராசன், திரு. உ. ரா. .. | வில்லிவாக்கம். |
| 221. வல்லரசு, திரு. பி. என். .. | உசிலம்பட்டி. |
| 222. விஜயராகவன், திரு. பொன். .. | கிள்ளியூர். |
| 223. விஜயேந்திரையா, திரு. டி. சி. .. | தளி. |
| 224. வீராசாமி, திரு. ஆற்காடு நா. .. | புரசைவாக்கம். |
| 225. வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம். |
| 226. வெங்கடாசலம், திரு. பெ. .. | வீரபாண்டி. |
| 227. வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். .. | ஸ்ரீரங்கம். |
| 228. வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. .. | தொண்டாமுத்தூர். |
| 229. வேணு, திரு. கி. .. | கும்மிடிப்பூண்டி. |
| 230. வைத்தியலிங்கம், திரு. மீ. அ. .. | தாம்பரம். |
| 'ஸ' | |
| 231. ஸ்டாலின், திரு. மு. க. .. | ஆயிரம் விளக்கு. |
| 'ஜ' | |
| 232. ஜெயலலிதா, செல்வி ஜெ. .. | போடிநாயக்கனூர். |
| 'ஹ' | |
| 233. ஹமீது இப்ராகிம், திரு. அ. மு. | கடலாடி. |
| 'ஸ்ரீ' | |
| 234. ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். .. | சைதாப்பேட்டை. |
| 235. ஆஸ்கார் சி. நிக்லி, திரு. .. | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கு. அழகிரிசாமி .. தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, ஏப்ரல் 22, சனிக்கிழமை.

சித்திரை 9, சுக்ல--திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் ".

முற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப் பட்டோர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரும் பிறப்பால் சமமானவர்களே. ஆயினும், செய்கின்ற தொழில்களின் உயர்வு, தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பு இயல்பு ஒத்திருப்பதில்லை.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வசூல் செய்கின்ற வரிப் பணம்.

*101— (*வினா எண். 255)* திரு. கே. ஏ. செங்கோட்டையன் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வசூல் செய்கின்ற வரிப்பணம் அரசுக்கு செலுத்தாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது

### விவர அறிக்கை

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடு சட்டம் 1949-ல், துணை விதி 14 (1)-ன் படி ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் அரசுக்கு கரும்பு மேல் வரியாக டன் ஒன்றுக்கு ரூ. 5 செலுத்த வேண்டும். இதன்படி எல்லா கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் மேல்வரியை அரசுக்கு செலுத்தி வருகின்றன. ஆனால் சில தனியார் துறை சர்க்கரை ஆலைகள் குறிப்பாக ஈ.ஐ.டி. பாரி, காவேரி, டெக்கான், சவுத் இந்தியா, அருணா, சக்தி, கோத்தாரி மற்றும் திரு ஆரூரான் சர்க்கரை ஆலைகள், 1949ஆம் வருடத்திய தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் (கட்டுப்பாடு) சட்டம் செல்லாது என்றும், அதன்படி கரும்புக்கு மேல்வரி வசூலிக்கக் கூடாது என்றும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளன. மேலும் வரி செலுத்தாதற்குண்டான இடைக்கால தடையை அவ்வாலைகள் பெற்றுள்ளன. தடை உத்தரவு பெற்றுள்ளதால் மேற்கண்ட தனியார் சர்க்கரை ஆலைகளிடமிருந்து மேல்வரி வசூலிப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தனியார் துறை சர்க்கரை ஆலைகள் தொடர்ந்துள்ள வழக்கை எதிர்த்து அரசு எதிர் வழக்குத் தொடுத்துள்ளது. இவ்வழக்கில் மாநில அட்வகேட் ஜெனரலை வாதாட அரசு பணித்துள்ளது. இது தவிர தமிழ்நாடு சர்க்கரை இணையமும், மாநில அரசு வரி விதிப்பதை ஆதரித்து தன் சார்பில் வழக்காட தனியாக முதுநிலை வழக்குரைஞரையும் அமர்த்தி உள்ளது. இவ்வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் இன்னும் எடுத்துக் கொள்ளாமல் நிலுவையில் உள்ளன. இவ்வழக்குகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உயர்நீதிமன்றத்தில் விரைவில் எடுத்துக்கொள்ள அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலை நிர்வாகம் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தாமல், கோர்ட்டிலே வழக்கு தொடர்ந்து இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படி வழக்கு தொடர்ந்து எவ்வளவு நாட்களாக இது அப்படியே இருக்கிறது. இதன் மூலமாக அரசுக்கு வரவேண்டிய தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, 1981-லிருந்து ஏறத்தாழ 8 நிறுவனங்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்கு போட்டு, 31—3—1989 முடிய 1,358.57 லட்சம் பாக்கியிருக்கிறது.



**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, இந்த 8 தனியார் ஆலைகள் 1981ஆம் ஆண்டிலிருந்து சுமார் 138 லட்சத்திற்கு மேற்பட்ட தொகையை அரசுக்குச் செலுத்தாமல் வழக்கு மன்றத்திலே தடை வாங்கியுள்ளதாக விவர அறிக்கையிலும், மாண்புமிகு அமைச்சர் மூலமாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் தொகையினை உடனடியாக வசூல் செய்வதற்கு அரசு எந்தெந்த வகையில் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும், மேலும் கடுமையான முறையில் இதை வசூலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் நான் தங்கள் மூலமாக தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** தலைவர் அவர்களே, பிரத்யேகமாக அரசுத் தரப்பில் மனு கொடுக்கப்பட்டு, உடனடியாக இந்த வழக்கு எடுக்கப்பட வேண்டும் என்று 2 முறை கேட்கப்பட்டும், வழக்கறிஞர்கள் ஒத்தி வாங்கப்பட்ட காரணத்தால், காலதாமதம் ஆகி இருக்கிறது. மீண்டும் விரைவாக அந்த வழக்கை நடத்துவதற்கான முயற்சியில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**திரு. சி. கோவிந்தராஜன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1981-லிருந்து இந்த 8 நிறுவனங்கள் மேல்வரியைக் கொடுக்கவில்லை என்று கூறினார்கள். அவர்கள் தடையும் வாங்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்தத் தடையை வெக்கேட் பண்ணுவதற்கு அன்றைக்கு இருந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது போல் அல்ல, தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஈ.ஐ.டி. பாரி, அருணா சுகர்ஸ், இவர்கள் மட்டும் அரசுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி, இந்த வகையின் மூலமாக சுமார் 25 கோடி ரூபாய்க்கும் மேலே வருகிறது. இதனால் கரும்பு பராமரிப்புச் சாலைகள் பூராவும் பராமரிக்கப்படாமல் குண்டும் குழியுமாக இருந்து விபத்துகள் ஏற்படுவதும், கரும்புச் சாலைகளில் கரும்பு வண்டிகளில் அவைகளை ஏற்றிக் கொண்டு செல்ல முடியாத ஒரு நிலைமையும் இருக்கிறது. இந்த தடையை உடனடியாக வெக்கேட் செய்ய வேண்டும் என்று எங்களுடைய மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்கூட தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். அது அரசுக்கு வந்திருக்கிறதா? ஹைகோர்டில் காலம் கடத்துவதற்காக சர்க்கரை ஆலை முதலாளிகள் முயற்சிகளை செய்து கொண்டு வருகிறார்கள். எனவே விரைவில் நடவடிக்கை எடுத்து, ரோடுகள் பூராவையும் பராமரிப்பதற்கும், இந்தத் தொகை கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் தீர்மானம் அரசுக்கு வந்ததாக எனக்குத் தகவல் இல்லை. விசாரித்துச் சொல்கிறேன். ஆனால் விரைவாக அந்த வழக்கை நடத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒரு டன்னுக்கு 5 ரூபாய் வீதம் ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் மேல்வரியாக செலுத்த வேண்டும் என்று போட்ட உத்தரவை கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறை சர்க்கரைஆலைகளும் ஒழுங்காக செலுத்திக் கொண்டு வருகின்றன. ஆனால் தனியார் சர்க்கரை ஆலைகள் கோர்ட்டிலே ஸ்டே வாங்கிக் கொண்டு இதுவரையில் செலுத்தாமல் கோடிக் கணக்கான ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள், சாதாரண ஏழை எளிய மக்கள் 4 ரூபாய் 3 ரூபாய் மின்சார கட்டணம் அல்லது நிலத் தீர்வை செலுத்த வில்லையென்றால் உடனடியாக ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய அரசாங்கத்தினுடைய கொள்கை, மிகப் பெரிய ஆலை முதலாளிகள் மட்டும் கோடிக் கணக்கான ரூபாய் பாக்கியிருக்கும்போது, கோர்டிலே தடை என்று சாக்கு சொல்லி வசூல் செய்யாமல் இருப்பது நியாயம் தானா? ஆகவே இந்தத் தடைகளை எல்லாம் வாங்காமல் இருக்கக் கூடிய வகையில் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வந்து யாராக இருந்தாலும், வரி செலுத்தாத முதலாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுடைய எண்ணம் தான் இந்த அரசினுடைய எண்ணமும். அவர்களுக்கு என்ன கவலை இருக்கிறதோ அந்தக் கவலையும் அக்கறையும் இந்த அரசுக்கும் இருக்கிறது. கூடுமான வரையில் சட்டத்திற்கு உட்பட்டு வழக்குகளை விரைவாக முடிப்பதற்கோ அல்லது மேல்நடவடிக்கை எடுப்பதற்கோ இந்த அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால தடை உத்தரவு என்றைக்குப் பெறப் பட்டது? இந்தத் தடை உத்தரவுக்கு அரசின் சார்பிலே எதிர் உரை தாக்கல் செய்யப்பட்டதா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்!

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** தலைவர் அவர்களே, அருணா ஷுகர் பேக்டரி, 1981, சவுத் இந்தியன் ஷுகர் 1981, கோத்தாரி ஷுகர் 1981, சக்தி ஷுகர் 1982, டெக்கான் ஷுகர் 1982, மதுரா ஷுகர்ஸ் 1982, ஈ.ஐ.டி. பாரி 1982, திரு ஆரூரான் 1982.



**திரு. ஜி. ஜி. குருமூர்த்தி:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தக் கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வசூல் செய்யப் படுகிற வரிப் பணம் வேறு பணிகளுக்காக செலவிடப்படுவதினாலேதான், இந்தக் கம்பெனிகள் வழக்கு தொடுத்திருக்கிறார்கள் என்பது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செஸை பொறுத்த வரையில் சாலை பராமரிப்புக்கு மட்டும்தான் செலவழிப்பது என்று கொள்கை அளவில் இருக்கிறது. அது வேறு எப்படியாவது இருந்தால் அது குறித்து தகவல் தந்தால் அது பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கோ. வீரையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரக்கூடிய வரிப்பணம், 8 சர்க்கரை ஆலைகளிலும் ஏறக்குறைய 100 கோடி ரூபாய்க்கு வர வேண்டியிருக்கிறது. தனியார் சர்க்கரை ஆலைகளில் இப்படி கொடுக்காமல் வைத்திருக்கிறார்கள். கூட்டுறவு ஆலைகளும், அரசு சர்க்கரை ஆலைகளும் கொடுக்கக் கூடிய அந்தப் பணத்தை வைத்து எல்லா ஆலைகளுடைய சாலைகளையும் நிர்வகிக்கிற போது, ஒரு சாலையையும் சரியாக நிர்வகிக்க முடியாத சிரமம் ஏற்படுகிறது. எனவே இந்த வழக்குகளின் தடை நீக்கம் பெற்று, அல்லது வழக்கை முடித்து பணத்தை உடனடியாக வசூலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புவதோடு, 8 சர்க்கரை ஆலைகளும் எவ்வளவு ரூபாய் வரிப்பணம் செலுத்த வேண்டியிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி ;** பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கைப் பொறுத்த வரையில் அதிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கும் கொள்கை தான் அதே எண்ணம் தான் அரசுக்கும் இருக்கிறது. அது வழக்கு மன்றமாக இருக்கிற காரணத்தாலே துரிதமாக நடவடிக்கை எடுக்கிற சூழ்நிலை தற்போது இல்லாமல் இருந்துக் கொண்டிருக்கிறது. மேலும் அந்த ஸ்டேயை வெக்கேட் பண்ணவேண்டும் என்பதற்காக அரசாங்கம் தயாராக இருக்கிறது. அந்த விவரப்படி என்னிடத்திலே இருக்கிற தகவலின்படி, ஈ.ஐ.டி. பாரி கம்பெனி 220.37 லட்சம், காவிரி ஷுகர்ஸ் 34.43 லட்சம், டெக்கான் 101.02 லட்சம், சவுத் இந்தியா 151.59 லட்சம், அருணா ஷுகர்ஸ் 254.13 லட்சம், சக்தி 308 லட்சம், கோத்தாரி 120.43 லட்சம், திரு. ஆரூரான் 136.37 லட்சம், மதுரா சுகர்ஸ் அரசு எடுப்பதற்கு முன்னால் தனியார் துறையில் இருந்த போது உள்ள பாக்கி 32.23 லட்சம்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலை முதலாளிகள் எல்லாம் அகில இந்திய அளவிலே ஒரு சங்கத்தை உருவாக்கி, அந்தச் சங்கத்தின் மூலமாக பெரிய நிதியை வசூலித்து, அங்கு ஊழியர்களின் ஊதியத்தை திருத்திஅமைக்க வேண்டுமென்று பரிசீலனை செய்து வந்ததற்குப் பின்னாலும் கூட, அதைக் கொடுக்காமல் இருப்ப தோடு அரசுக்கும் வரி பாக்கி அதிகம் வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய சாலைகளில் கரும்பு லோடு அதிகமாக எடுத்துச் செல்வதால் கிராமப்புற சாலைகள் மிக மோசமாக ஆகிவிடுகின்றன. எனவே வேண்டு மென்றே இப்படிச் செய்கின்ற அந்த முதலாளிகளுடைய ஆலை களை அரசுடைமையாக்கி இந்தியாவுக்கு தமிழகம் வழி காட்டுமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இந்த வினாவிற்கு உடனே பதில் சொல்ல இயலவில்லை. முதலமைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு, அரசினுடைய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து அவர்கள் எந்தக் காரணத்திற்காக நீதிமன்றம் சென்று தடை வாங்கியிருக்கிறார்கள் அதற்கு எதிர் மனு கொடுக்கப்பட்டதா? கடைசியாக தடையை நீக்குவதற்கு நம்முடைய புதிய அரசு வந்ததற்குப் பிறகு முயற்சி எடுக்கப்பட்டதா? எந்தத் தேதியில் முயற்சி எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, 1983-ல் எதிர் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தொடர்ந்து அந்த எதிர் மனு மீது விசாரணை நடக்க வில்லை. வழக்கை ஒத்தி ஒத்தி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அட்வகேட் ஜெனரல் அவர்களைக் கலந்து மறு படியும் புதிதாக வெக்கேட் பண்ண வேண்டும் என்பதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. கோ. பூவராகன் : தலைவரவர்களே. . . .

Mr. SPEAKER: No second question.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, கரும்பு ஆலை அதிபர்கள் இதே போன்று வரிகளை செலுத்துவது இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று அவர்கள் காமன் குட்ஸ்பண்டு என்ற முறையிலே மக்களுக்கு நன்மைகள்



செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பணத்தையும் சரியான முறையில் மக்களுக்கு செலவு செய்யப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா. அப்படிப்பட்ட தவறுகள் செய்கின்ற ஆலைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, தனிப்பட்ட புகார் எதுவும் இதுவரை அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது தகவல் இருந்தால் என்னிடத்தில் எழுத்து மூலமாக தந்தால் உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலைகளுடைய பணத்தை வசூலிப்பதற்கு இப்புதிய அரசு ஏதாவது புதிய முயற்சி எடுத்துக் கொண்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இரு முறை அதற்கு பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே நடந்து கொண்டிருக்கின்ற பல தனியார் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு சரியாக பணம் கொடுப்பதில்லை. ஆகையால் இனி ஏற்படுத்துகின்ற சர்க்கரை ஆலைகளை கூட்டுறவுத் துறை யில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, அதுபற்றி உரிய நேரத்தில் பரிசீலிப்போம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு வாங்குகின்ற இந்த பர்ச்சேஸ் டாக்ஸ் மூலமாக நமது தமிழக அரசுக்கு கிடைக்கின்ற வருமானத்தில், இதற்கு முந்தைய புரட்சித் தலைவர் அரசில் எல்லாம் டன் ஒன்றுக்கு 10 ரூபாயிலிருந்து 20 ரூபாய் வரையிலும் திருப்பி விவசாயி களுக்கு ரிபேட்டாக தரப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இந்த அரசும் இந்த ஆண்டு ரிபேட்டாக விவசாயிகளுக்கு வழங்குமா என்று அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் இயங்குகின்ற ஆலைகளில் வருகின்ற லாபத்தை, ஓரளவிற்கு நிகரலாபத்தை எடுத்து மீண்டும் கரும்பு கொடுகின்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அந்தப் பணி தொடரும்.

**விவசாயப் பொருட்களுக்கு இன்சூரன்ஸ்.**

102— (*வினா எண். 572) **திரு. ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் சேதம் அடைந்தால் அந்த நஷ்டத்தை ஈடு செய்ய அரசிடம் இன்சூரன்ஸ் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. ஆர். ஈஸ்வரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் சேதம் அடைந்தால் அந்த நஷ்டத்தை ஈடு செய்ய அரசிடம் இன்சூரன்ஸ் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அதற்கு தான் விடை ஆம் என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஆர். ஈஸ்வரன்:** தலைவர் அவர்களே, எந்தெந்த பயிர்களுக்கு— விவசாயிகள் குடிசை வீடுகளில் மற்ற நவதானியங்கள் வைக்கும்போது தீ விபத்துக்களில் பல சேதம் அடைகின்றன. அதற்கும் இந்தத் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நெல் இரண்டாம் பயிர், பாசன சோளப் பயிர், பாசன கம்புப் பயிர், பாசன கேழ்வரகுப் பயிர், பாசன நிலக்கடலை பயிர், பாசன எள் பயிர், பாசன சூரிய காந்திப்பயிர் ஆகியவைகளுக்கு இன்சூரன்ஸ் செய்கின்ற திட்டம் அமலாக்கப்பட்டது.



**திரு. வெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயிகளுக்காக சொல்லப்படுகின்ற இந்த இன்சூரன்ஸ் திட்டம் விவசாயிகளுக்கு உதவாத திட்டமாக இருக்கிறது. மலையைத் தோண்டி எலி பிடிப்பது என்று சொல்வார்கள். விவசாயிகளுக்கு உதவாத இந்தத் திட்டத்தை விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையிலே இந்த அரசு மாற்றியமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல இந்தத் திட்டம் பெயரளவிற்கு இருக்கிறதே தவிர, இதனுடைய பயன் உண்மையான விவசாயிகளுக்குப் போய்ச் சேரக் கூடிய வகையில் இல்லை. உதாரணமாக, கடந்த ஆண்டு வெள்ளத்தாலே, மதுராந்தகம் ஏரி உடைந்து அந்தப் பகுதி முழுவதும் பாதிக்கப்பட்டு, நம்முடைய இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லாம் கூடப் போய், அவரோடு நானும் சென்றிருந்தேன். அதைப் பார்த்து, அந்தச் சேதங்களைக் கண்ணால் பார்த்தோம். இருந்தாலும் கூட, அங்கே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் பணம் கேட்டபோது, அந்த வட்டாரம் முழுவதும் பாதிக்கப்பட்டால் தான் இன்சூரன்ஸ் பணம் கொடுக்கப்படுமே தவிர, ஒரு குறிப்பிட்ட பகுதியிலே அந்த விவசாயம் பாதிக்கப்பட்டிருந்தால் கொடுக்க முடியாது என்று இன்சூரன்ஸ் கம்பெனி சொல்கிறது. இப்படித் தான் இந்தத் திட்டம் இருக்கிறது. இது குறித்து மாண்புமிகு உறுப்பினா சொன்ன அந்த யோசனையைக் கருத்திற் கொண்டு, இந்த அரசாங்கம் உடனடியாக சம்பந்தப்பட்ட இன்சூரன்ஸ் கம்பெனிகளுக்கு எழுதியும் அதற்குரிய சட்ட திட்டம் கொண்டு வரவும் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தும்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் சேதம் அடைந்தால், இன்சூரன்ஸ் திட்டம் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சேதத்தைத் தடுப்பதற்கு— சேதம் ஏற்படுவதற்கு முன்னாலேயே, விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய அந்த வயல்களில் எலிகள், சாரைப் பாம்புகள் மூலம் பெரிய அளவு விவசாயப் பயிர்கள் நாசம் செய்யப்பட்டு விடுகிறது. இதற்கு அந்த மருந்துகள் அடிக்கும் பொறுப்பு அரசு ஏற்றுக் கொண்டால் அந்தச் சேதாரமே ஏற்படாது. அதைச் செய்வதற்கு அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 22

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: அந்த யோசனையை அரசு பரிசீலகரும்.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் விவசாயிகளால் செலுத்தப் பட்ட பிரிமியம் தொகை எவ்வளவு? நஷ்ட ஈடாக விவசாயி களுக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ராபி 1987-88ஆம் ஆண்டுக்கு இன்சூரன்ஸ் செய்யப்பட்ட தொகை, 55 கோடியே 66 இலட்சத்து 98ஆயிரம். வசூலிக்கப்பட்ட பிரிமியம் 97 இலட்சத்து 9 ஆயிரம். வழங்கப் பட்ட ஈட்டுத் தொகை 70 இலட்சத்து 62 ஆயிரம். இந்தத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி இந்த ஆண்டு அந்த சம்பந்தப்பட்ட இன்சூரன்ஸ் கம்பெனிகள் நடவடிக்கை மேற் கொண்டு இருக்கின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை, திராட்சை போன்ற பணப் பயிர்கள் மழை அல்லாத காரணத்தால் மரங்கள் பட்டுப் பட்டு கீழே விழுந்து விட்டன. அதையும் இன்சூரன்ஸ் திட்டத் திலே சேர்த்தால் ஒரு மரத்திற்கு என்று ஏதாவது பிரிமியம் கட்ட வேண்டுமா? ஏக்கருக்கு, ஏக்கருக்கு என்று ஏதாவது பிரிமியம் கட்ட வேண்டுமா? இப்போது நெல்லுக்கு இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்க்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நெல்லுக்கு சேர்க்கப்பட்டு இருந்தால் அது ஒரு ஏக்கருக்கு எவ்வளவு பிரிமியம் கட்ட வேண்டும் என் பதை எல்லாம் அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஏக்கருக்கு என்று அல்ல. எவ்வளவு ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகைக்கு எவ்வளவு இன்சூர் செய்யப்படுகிறதோ அதில், நெல், சோளம், கம்பு மற்றும் கேழ்வரகுப் பயிர்களுக்கு இரண்டு சதவிகிதமும், நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்திப் பயிர்களுக்கு ஒரு சதவிகிதமும் வழங்கப்பட்ட கடனிலே இப்போது பிரிமியமாக வசூலிக்கப்படுகிறது. அதிலே கூட சிறிய விவசாயிகளாக இருந்தால் அவர்கள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவிகிதம் மானியம் அனுமதிக்கப் படுகிறது. அந்த மானியம், மத்திய அரசு, மாநில அரசு இந்த இரண்டு அரசுகளும் வழங்குகின்றன. மத்திய அரசு 50 சதவிகிதமும், மாநில அரசு 50 சதவிகிதமும் இந்த மானி யத்தில் பங்கேற்கின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கமர்சியல் கிராப் சேர்த்துக் கொள்ளப்படுமா என்றும் கேட்டேன். பதில்....



1989 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தென்னை மரம், திராட்சை போன்றவைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இது எந்த எந்தப் பயிர்கள், எந்த எந்த மரம், இவைகள் எல்லாம் சேர்ப்பது என்பது இன்சூரன்ஸ் கம்பெனிகள் முடிவு எடுக்க வேண்டியது. அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து, இன்சூரன்ஸ் கம்பெனிகளுக்கு மத்திய அரசாங்கம் டைரக்ஷன் கொடுத்தால் அதை இந்த அரசாங்கம் வரவேற்கும்.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயப் பயிர்களுடைய இன்சூரன்ஸ் திட்டத்தில் இதுவரையில் யாருக்கும் இந்த இன்சூ திட்டத்தின் மூலமாகப் பணம் வழங்கியதாகத் தெரியவில்லையே, பலன் இல்லாமல் இப்படி விவசாயிகளிடத்திலே இன்சூரன்ஸ் திட்டத்திற்காகப் பணம் வசூலித்து, எந்த விவசாயிக்கும் கிடைக்காத காரணத்தினாலே இந்த இன்சூரன்ஸ் திட்டத்தையே நிறுத்துவதற்கு அரசு முயற்சி செய்யுமா? அல்லது பணம் ஒழுங்காக வழங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20.)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: இன்சூரன்ஸ் திட்டத்தையே கைவிட வேண்டும் என்பது ஒரு நல்ல கொள்கை அல்ல. ஆனால் இந்த இன்சூரன்ஸ் திட்டம் உண்மையாக விவசாயிகளுக்குப் பலன் அளிக்கக் கூடிய வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும். உதாரணமாக ராபி 1985-86, இன்சூரன்ஸ் செய்யப்பட்ட தொகை 17 கோடியே 74 இலட்சம். வசூலிக்கப்பட்ட பிரிமியம் ரூபாய் 31 இலட்சத்து 58 ஆயிரம். ஆனால் வழங்கப்பட்ட நஷ்ட தொகை 24 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய். ஆக பிரிமியம் எவ்வளவு வசூலித்து இருக் கிறார்களோ அதைவிட குறைவாகத் தான் இந்த நஷ்டத்தொகை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் வருத்தப்படக்கூடிய ஒன்று என்னவென்றால் தனிப்பட்ட ஒரு விவசாயி இதனால் பாதிக்கப்பட்டால் அந்த தனிப்பட்ட விவசாயிக்கு இதிலே பலன் இல்லை. ஆனால் வட்டாரம் முழுவதும் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டால்தான் அந்த விவசாயிகளுக்கு பலன் உண்டு. எனவே இதை மாற்றி எப்படி லைப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷ னில் இன்றைய தினம் ஒரு மனிதன் உயிர் போய்விட்டால் அதற்கு நஷ்டத் தொகை வழங்குகிறார்களோ அதைப் போல தனிப்பட்ட விவசாயி பாதிக்கப்பட்டாலும் அந்த இன்சூரன்ஸ் தொகை அவனுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கு ஏற்றாற் போல் இதை மாற்றியமைக்க வேண்டும் என்று இந்த அரசு கேட்டுக் கொள்ளும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொது இன்சூரன்ஸ் திட்டத்தில், நெல்லை மாவட்டத்தில் வாழைப் பயிர் முக்கிய பயிர். காற்று போன்ற 'நேட்சுரல் கலாமெட்டிஸ்' ஏற்படுவதால் அழிவு ஏற்படுகிறது. அப்படி அழிவு ஏற்படுவதை இந்த இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை சம்பந்தப்பட்ட இன்சூரன்ஸ் கம்பெனிக்கு இந்த அரசு பரிந்துரை செய்யும்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல், சோளம், ராகி போன்ற பாசனப் பயிர்களுக்கு மட்டும் தான் இந்த இன்சூரன்ஸ் திட்டம் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற தமிழ்நாட்டில் மேடு காடுகளில் விளைகின்ற பயிர்களுக்கும் இந்த இன்சூரன்ஸ் திட்டத்தை விரிவிபடுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனப் பயிர்களுக்கே சரியாக அந்த இன்சூரன்ஸ் செய்யப்பட்ட தொகை வந்து சேரவில்லை என்று வருத்தப்படுகின்ற நேரத்தில் வருமோ, வராதோ? பயிர் இருக்குமோ? இருக்காதோ? என்ற நிலையில் இருக்கக் கூடிய வானம் பார்த்த பயிருக்கு இன்சூரன்ஸ் கம்பெனி இன்சூரன்ஸ் செய்வது இல்லை.

**இந்திய ரிசர்வ் வங்கியின் சென்னைக் கிளையில் கூட்டுறவு அருந்தகம்.**

*103—* (வினா எண். 857)*

**திரு. உ.ரா. வரதராசன்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இந்திய ரிசர்வ் வங்கியின் சென்னைக் கிளையில் இயங்கி வந்த கூட்டுறவு அருந்தகம் மூடப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதனைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆம் எனில் அதனைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பது அடுத்த கேள்வி.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (ஆ) ரிசர்வ் வங்கி அந்த சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டால் அதுபற்றி இந்த அரசு ஒப்புதலை அளிக்க விரும்பும்.

**திரு. உ. ரா. வரதராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கூட்டுறவு அருந்தகத்திற்கு ரிசர்வ் வங்கி இலவச இடம், மின்சாரம், மாதம் 30 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுத்து நடத்தப்படுகிறது. ஆகவே, அந்த கூட்டுறவு அருந்தகத்தை நடத்த ஒரு தனி அதிகாரி நியமித்தோ அல்லது ஒரு தற்காலிகக் குழுவை அமைத்தோ, அதைத் திறப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிசர்வ் வங்கியில் நடந்து வந்த ஒரு சிற்றுண்டிச் சாலையில் அங்கே இருந்த ஊழியர்களால் கையாடல் ஏற்பட்ட காரணத்தினால், ரூபாய் 9,537.49 பைசா அளவுக்கு ரொக்க கையாடலும், மற்றும் ரூ. 3,55ப.80 பைசா சரக்கு கையாடலும் நடைபெற்று இருந்ததைக் கண்டு பிடித்த காரணத்தால் அங்கே இருக்கக் கூடிய தொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து அந்த சிற்றுண்டிச் சாலையை மூட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பிறகு இப்போது ஒரு தனியார் அங்கே சிற்றுண்டிச் சாலையை நடத்துகிறார்கள். இதிலே தரமும் இல்லை விலையும் அதிகம் என்ற காரணத்தால் மறுபடியும் கூட்டுறவுத் துறையில் அந்த சிற்றுண்டிச்சாலையை நடத்த வேண்டும் என்று அங்கே கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இன்றுள்ள விலைவாசியின் அடிப்படையிலும் மற்றும் அதிகாரிகளுடைய சம்பள உயர்வு காரணமாகவும் ஏற்படுகின்ற அந்த நஷ்டத்தை ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொள்ளுமானால் அது பற்றி இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. உ. ரா. வரதராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தகவலுக்காகச் சொல்லுகிறேன். ரிசர்வ் வங்கி அங்கே வழங்கப்படுகின்ற ஊதியத்தில் சரிபாதியைக் கொடுக்கிறது என்ற தகவலைச் சொல்கிறேன். அங்கே ஊழியர்கள் ஏதோ கையாடல் செய்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அங்கே முறைகேடுகளை நடத்தியவர்கள் இயக்குநர்கள். அந்த முறைகேடுகளை நடத்தி அதை மூடுவதற்குக் காரணமாக இருந்த இயக்குநர்கள் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

இத்தனை ஆண்டுகளாக அந்தக் கூட்டுறவு அருந்தகத்தைத் திறப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்காத, நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனைத் தொடர்ந்து விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் மற்றும் தண்டத் தீர்வை நடவடிக்கைகள் துணைப் பதிவாளர் (கடன் அற்றது) அவர்களால் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இங்கே மானியத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே ரிசர்வ் வங்கி எரி பொருளிலே 100 சதவிகித மானியமும். சிப்பந்தி சாதல்வார் செலவுகள் 85 சதவிகித மானியமும், நிர்வாகச் செலவுகள் 75 சதவிகித மானியமும், கொடுத்து வந்திருக்கிறது. ஆனால் இது மூடப்பட்டதற்குப் பிறகு மறுபடியும் திறக்க வேண்டுமானால் ரிசர்வ் வங்கி இந்தச் சலுகைகளை தொடர்ந்து கொடுக்கும் என்று அவர்கள் அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால் இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருந்தகம் மூடுவதற்குக் காரணமான முறைகேடுகள் நடத்திய இயக்குநர்கள் மீது வழக்குகள் தொடரப் பட்டுள்ளனவா? புலன் ஆய்வுகள் ஏதாவது மேற்கொள்ளப் பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அருந்தக இயக்குநர்களிடையே கருத்து வேற்றுமை நிலவியதோடு அனைவரும் தத்தம் இயக்குநர் பதவிகளை ராஜிநாமா செய்து விட்ட நிலையில் மேற்படி கூட்டுறவு உணவகம் 1985 ஆம் ஆண்டு முதல் செயல்படாமல் இருக்கிறது. எனவே அவர்கள் மீது 1961-ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டப் பிரிவு 72-ன கீழ் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டது. 7 இயக்குநர்கள் மட்டுமே பதில் அளித்தனர். அதே நேரத்தில் அருந்தக உறுப்பினர்களில் 825 நபர்கள் இந்த அருந்தகத்தை நல்ல முறையில் நடத்த வாய்ப்பில்லையென்றும் இவ்வருந்தகத்தின் விவகாரங்களைக் கலைத்து விடுமாறும் துணைப் பதிவாளரைக் கேட்டுக் கொண்டு இருந்தனர். இதனால் சட்டப் பிரிவு 72-ன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை கைவிடப்பட்டது.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி அந்த அருந்தகம் மூடப்பட்டதால் வேலை இழந்த ஊழியர்களுக்கு சட்டப்படியான இழப்பீடு ஏதேனும் கொடுக்கப்பட்டிருக்கிறதா? மீண்டும் அந்த அருந்தகம் திறக்கப் படும்போது அந்த அருந்தகம் மூடப்பட்டதால் ஏற்கெனவே



வேலையிழந்த ஊழியர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை இழந்த ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு பற்றிய பிரச்சினை இது வரையிலும் அரசாங்கத்திற்கு எழவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல மீண்டும் அந்த அருந்தகத்தைத் திறக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்குமானால் நிச்சயமாக அந்த அருந்தகத்தில் இதற்கு முன்னால் பணியாற்றிய தொழிலாளர்களுக்குத் தான் வேலையளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்தும் கொள்கிறேன்.

### ஜலக்காம்பாரையில் புதிய ஏரி கட்டும் திட்டம்

104—(வினா எண். 142) திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தாலுகா ஜலக்காம்பாரை என்னும் இடத்தில் புதிய ஏரி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயற்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி அடிவாரத்திலே ஏரி அமைக்கும் திட்டம் 1974 ஆம் ஆண்டு போடப்பட்டு அன்றைய தினம் இன்றைய முதல்வராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு இன்றுகூட அவரால் அடிக்கல் நாட்டப் பட்ட கல் அங்கே இருககிறது. இதற்குப் பின்னாலே பலமுறை கேட்டும் அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்போதாவது அந்தத் திட்டத்தை அரசு எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதியிலுள்ள, நிலத்தடி தண்ணீரை நம்பி இருக்கிற விவசாயிகளுக்கு வாழ்வு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா, பெருமாள்பட்டி கிராமத்தின் அருகில் ஜலக்காம் பாறை அருகே ஒரு புதிய ஏரி அமைக்கவேண்டுமென்று 1974 ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல 6.06 இலட்சத்தில் ஒரு திட்டம் துவக்கப்பட்டது. அப்போது, அன்றைக்கு இருந்த தலைமைப் பொறியாளர் பாசனம் அவர்கள், இந்தப் திட்டம் சிக்கனமற்றது என்று எழுதி இருந்தார். ஆனால் அன்றைக்கு முதல்வர் அவர்களும் அரசுத் துறையும் வறட்சியான இந்தப் பகுதியில் இப்படி ஒரு திட்டம் தேவையானதுதான் என்று உணர்ந்து அந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இது நடைபெற்றது 74-ல். அதற்குள் 75 ஆம் ஆண்டு முடிந்து 76 ஆம் ஆண்டும் ஆரம்பிக்கிறது. 14–9-1976 அன்று இந்தக் திட்டத்திற்கு 8 இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. 1976-77-ல் விலை ஏறிவிட்டது என்று சொல்லி மீண்டும் அது 18.40 இலட்சமாக அதிகரிக்கிறது. பிறகு 81—82 இல் 29.7 இலட்சம் என்று உயர்ந்து கொண்டே போகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் 1983ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இதுபற்றி பேசிய பிறகு 1983-84ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கு 50 இலட்சம் தேவைப்படும் என்று உயர்த்துகிறார்கள். 50 இலட்சத்தைத் தாண்டிய காரணத்தால் இது சிறு பாசனத் திட்டத்தின் கீழ் வருகிறது என்று சொல்லி இதனுடைய விதிமுறைகளை மாற்றி அமையுங்கள் என்று அரசு கேட்டுக் கொண்டது. அதன் அடிப்படையிலே விதிமுறைகள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது 80 இலட்சம் ரூபாயாக அதனுடைய திட்ட மதிப்பீடு உயர்ந்து இருக்கிறது. ஆக 1974-75 லே இந்தத் திட்டத்தை முடித்திருந்தால் 6 இலட்ச ரூபாயிலே முடித்திருக்க முடியும் இன்றைக்கு 80 இலட்சம் ரூபாய் ஆகிறது. பயன் செலவு விகிதத்தைப் பார்த்தால் 0.2 : 1 என்று ஆகிவிடுகிறது. எனவே இது சிக்கனமற்ற திட்டமாக இருககிறது என்ற காரணத்தினால் இது கைவிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30).

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல திட்டம். ஏலகிரி மலையிலிருந்து தண்ணீர் வருகிறது. ஒரு முறை அந்தத் தண்ணீர் பக்கத்தில் இருக்கிற தாதாவல்லி என்னுமிடத்தில் பெருக்கெடுத்து வந்ததால் அந்த ஊரே மூழ்கி, வீடுகள் எல்லாம் பாழாகிவிட்டன. ஆகையால் மழைக் காலத்தில் வருகிற தண்ணீரைத் தேக்கி வைத்துவறட்சி காலத்தில் அந்த தண்ணீரை விவசாயத்திற்குக் கொடுப்பதற்காக அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆகையால் அரசு மீண்டும் மறுபரிசிலனை செய்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றி மக்களுக்கு பலனளிக்கின்ற



நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அந்த திட்டத்தை 1984 ஆம் ஆண்டு ஆராய்ந்தபோது அது ஒரு சிக்கனமற்ற திட்டம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் தெரிவித்த கருத்தின்படி அது ஒரு வறட்சியான பகுதி என்பதால் மீண்டும் அதை ஆய்வு செய்ய அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பாண்டியாறு, புன்னம்புழா நீர்த்தேக்கத் திட்டம்.

105—(*வினா எண். 547) திரு. மாரப்பன், திரு. ஆ. நடராசன், மற்றும திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) பாண்டியாறு, புன்னம்புழா நீர்த்தேக்கத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பாண்டியாறு, புன்னம்புழாத் திட்டம் குறித்து கேரள அரசுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் தேக்க நிலை அடைந்துள்ளன. மீண்டும் பேச்சு வார்த்தைகள் தொடர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தின் கீழ் சென்னிமலை பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட காங்கேயம் பகுதியில் எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தின் மூலம் தண்ணீரை கிழக்கு நோக்கித் திருப்பிவிட்டால், கோவை மாவட்டத்திற்கு அந்தத் தண்ணீரை அனுப்பினால் பல்லடம் பகுதிக்கும் தண்ணீர் பாயும் என்று இருக்கிறது. அப்படிப் பாய்கிறது அந்தத் தண்ணீர் 1.4 இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பயன்படும் என்று தெரிகிறது.

**திரு. ஆ. நடராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தினால் பல்லடம் பகுதி மட்டுமல்ல; கோவை தாலுக்கா, அவினாசி தாலுக்கா, தாராபுரம் தாலுக்கா ஆகிய 4 தாலுக்காக்களுக்கும் மிகுந்த பயன் அளிக்கக்கூடிய ஒரு திட்டமாகும். இந்தப் பகுதிகள் மிகவும் வறண்ட பகுதிகளாக இருப்பதால் கேரள அரசுடன் விரைவாகப் பேச்சுவார்த்தை நடத்தி, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, திட்டம் பயனுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகள் தமிழ்நாட்டில் உற்பத்தியாகி, கேரளத்தை நோக்கி ஓடி, வீணாகப்போகிற தண்ணீரை நாம் திருப்பி தமிழ்நாட்டுக்கு விட வேண்டும். அப்படித் திருப்பி விடுகின்றபோது பல மலைகள் வழியாக, அணைகள் வழியாக தண்ணீரை திருப்பி கோவை மாவட்டத்திற்கு அனுப்பினால் பல்லடம் வரையில் பாசனத்திற்கு ஏற்றதாக இருக்கும். அதற்காகத்தான் கேரள அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. இதிலே இன்னும் சரியான, சுமூகமான சூழ்நிலை உருவாகவில்லை. அந்த பாண்டியாறு—புன்னம்புழா தண்ணீரை தமிழ்நாட்டுக்குத் திருப்பிக் கொள்ள வேண்டுமானால் பவானி ஆற்றுத் தண்ணீரை கேரளத்திற்குத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பவானி தண்ணீரை கேரளாவுக்குத் தருவது என்றால் அது காவிரிப் படுகையுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். ஆகவே பவானி ஆற்றுத் தண்ணீரை காவேரி ஆற்றுப் பிரச்சினை தீருவதற்கு முன்னால் மேற்கு நோக்கித் திருப்புவதோ அல்லது அதுகுறித்து பேசுவதோ உகந்ததல்ல என்று தெரிவித்திருக்கிறோம். ஆகவே பேச்சுவார்த்தை தடைபட்டிருக்கிறது. மீண்டும் சட்டமன்றம் முடிந்த பின்னால் அவர்களோடு பேச்சுவார்த்தைக்குச் செல்லலாம் என்று இருக்கிறோம்.

**திரு. கே. ரமணி :** தலைவரவர்களே, இந்த பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டம் என்பது பாசனத்திற்காக நீர் எடுக்கக்கூடிய ஒரு அணைக்கட்டுத் திட்டம் அல்ல. இந்தத் திட்டம் 1965-ல் மத்திய அரசாங்கத்தினுடைய கமிஷனால் ஒத்துக்கொள்ளப்பட்டு 100 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்து அது முழுமையாக தமிழ்நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய 'டெயில் ரெயின் வாட்டர்' மூலமாகத் தந்திருக்கக்கூடிய திட்டம். அதை நிறைவேற்றுவதற்கு தமிழக சர்க்கார் ஆரம்ப வேலைகளை அங்கே ஆரம்பித்து, அணைக்கட்டு கட்டி, தண்ணீர் போக வேண்டிய 'ஸ்ட்ரீம் லைன்' எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டு, பின் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் 100 மெகாவாட் மின்சாரம் வருவது நின்றுவிட்டது. மின்சார நெருக்கடி அதிகம் உள்ள தமிழ்நாட்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



அந்த 100 மெகாவாட் மின்சாரம் கிடைக்க வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும். மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற முறையிலும் அதிலிருந்து செல்கிற 'tail end raising water' அந்தத் தண்ணீர் அந்தப் பக்கம் போகாமல் அவர்கள் நமக்கு திருப்பிக கொடுப்பதற்கு, அதாவது எந்த அளவுக்கு அவர்களுக்கு வேண்டுமோ அதுபோக, நமக்கு எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ அதனைக் கேட்டுப் பெறுவதற்கு உரிய வகையில் அது ஒரு அண்டை மாநிலம் என்கிற முறையில் சுமுகமாக ஒரு பேச்சு வார்த்தையினை நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ரமணி அவர்கள் சொல்வது போல் அந்தப் பாண்டியாறு—புன்னம்புழா பகுதியில் நீர்மின்திட்டம் ஒன்று அமைப்பது; இதனுடைய முழுச் செலவையும் தமிழக அரசு ஏற்றுக்கொள்வது; மின் உற்பத்தி செய்த பிறகு வெளியேறும் தண்ணீர் முழுவதையும் கேரளம் கட்டணமின்றிப் பயன்படுத்திக் கொள்வது அப்படி செய்யப்படும் மின் உற்பத்தி, வெளியேற்றப்படும் தண்ணீர் இரண்டும் பருவ நிலைக் கேற்ப மாறாமல் ஒரே சீராக இருக்க வேண்டும். இந்த மூன்று நிபந்தனைகள் உண்டு. அந்த வகையில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கிற பணியில் இறங்கினோம். எப்போது இந்தப் பிரச்சினை எழுந்தது என்றால் கோவை மாவட்ட விவசாயிகள் மின் திட்டம் என்ற வகையிலான திட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்கிறீர்களே, போகிற தண்ணீரை கிழக்கே திருப்பிவிட்டால் பாசனத்திற்குப் பயன்படுமே என்று கொடுத்த ஒரு கோரிக்கையின் மீதுதான் அரசு மறுபரிசீலனை செய்ய ஆரம்பித்தது. இல்லாவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொல்வது போல் அந்த நீர் மின் திட்டத்தை ஏற்படுத்தி 14 டி.எம்.சி. தண்ணீரை கேரளம் எடுத்துக்கொள்ளட்டும் என்றிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது. நம்முடைய விவசாயிகளுக்கு பயன்படுமே, கிட்டத்தட்ட $1\frac{1}{4}$ இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாயுமே என்று அரசு நினைத்ததால்தான் இந்தப் பிரச்சினை மறுபரிசீலனை செய்யப்பட்டது. அதற்காகத்தான் நாம் தண்ணீரை திருப்பிக் கொள்கிறோம் என்று கேட்டோம். அவர்கள் அதற்கு முடியாது என்று சொல்லிவிட்டார்கள். பிறகு பேச்சு வார்த்தையின் ஊடே மறுபடியும் சொன்னார்கள். 9 டி.எம்.சி. தண்ணீரை மட்டும் நாங்கள் திருப்பித் தமிழகத்திற்கு எடுத்துக்கொள்கிறோம், 5 டி.எம்.சி. தண்ணீரை கேரளமே பயன்படுத்திக்கொள்ளட்டும் என்ற ஒரு வையா மீடியாவாக ஒரு திட்டத்தைக்கூட நாம் அறிவித்தோம். அதற்கும் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. கேரள அரசினுடைய ஸ்டாண்ட் என்னவென்றால் 14 டி.எம்.சி. தண்ணீரையும் நாம் கேரளத்திற்குத்தான் தரவேண்டும். ஒரு

சொட்டுத் தண்ணீரைக் கூட கிழக்கே திருப்புவதற்கு ஒத்துக் கொள்ள மாட்டோம். அப்படி ஒத்துக்கொள்ள வேண்டும் என்றால் பவானி ஆற்றுத் தண்ணீரைக் கேரளாவுக்கு நீங்கள் விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னது போல் சிக்கல் எங்கே ஆரம்பித்தது என்றால் தண்ணீரைத் திருப்ப வேண்டுமென்று நாம் நினைத்ததால்தான் ஆரம்பித்தது.

இன்றைக்கும் கோவை மாவட்ட விவசாயிகள் எங்களுக்கு அந்தத் தண்ணீர் வேண்டாம் என்று சொல்ல முன்வந்தால் நீர்மின் திட்டத்தை இப்போது கூட ஆரம்பிக்கலாம். ஆனால் விவசாயிகளுடைய கோரிக்கையையும் பார்த்தாக வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் கைச்சாடையாக சாப்பாடு முக்கியம் என்று காட்டிக் கொண்டிருக்கிறார். எனவே உணவு உற்பத்திக்கும் அது பயன்படும் என்ற காரணத்தால்தான் மீண்டும் பேச்சு வார்த்தையின் மூலமாக சுமுகமான முடிவு காணலாம் என்று இந்த அரசு விழைகிறது.

(முற்பகல் 9-40)

திரு மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு, புன்னம்புழா திட்டம் என்பது ஒரு ஜீவநாடியான திட்டம். கோவை, அவினாசி, பல்லடம் தாலுக்காக்கள் பொறுத்த அளவிலே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் ஒன்றை இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது, இதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் பேசிய போது, கடல் அரிப்பைத் தடுக்கின்ற வகையிலே, பாண்டியாறு புன்னம்புழாவிலே விழக்கூடிய தண்ணீரானது அவர்கள் தமிழ் நாட்டிற்கு தந்துவிட்டால் கேரளப் பகுதி கடல் அரிப்பால் பாதிக்கப்படுகிறது. இந்தப் தண்ணீர் விழுவதால்தான் அந்தத் வேகத்திலே அது தடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அப்போது தமிழக அரசு சார்பாக, நம்முடைய அரசு சார்பாக, ஹாலண்ட் நாட்டைப் போல எவ்வளவு பகுதிகள் கடல் அரிப்பால் பாதிக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு நீண்ட சுவர் கட்டித் தந்து விடுகிறோம். சர்ப்பிளஸ் வாட்டரை தமிழ் நாட்டிற்குத் தந்துவிடுங்கள் என்று பேசப்பட்டதாக ஞாபகம். அந்த அடிப்படையிலே இப்போது மீண்டும் கேரள அரசாங்கத்தோடு பேசி முடித்து இந்த பாண்டியாறு புன்னம்புழா தண்ணீர் கோவை, அவினாசி, பல்லடம் தாலுக்காக்களுக்குக் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் தனியான முறையிலே கேரள அரசோடு பேசி முடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. இராமநாதன் அவர்கள் சொன்ன கருத்தைக் கவனத்திலே கொண்டுதான் இந்த அரசு மீண்டும் கேரள அரசோடு பேச்சு வார்த்தைக்குச் செல்ல இருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மின்சாரத் திட்டம் அல்ல. பாசன திட்டம் தான். பிரிட்டிஷ் ஆட்சியின் போதே 'அப்பர் பவானி' என்ற பெயரிலே, அதாவது மேல் பவானி என்ற பெயரிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான புளூபிரிண்ட் தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டத்தின் வாயிலாக கோவை தாலுக்கா, பல்லடம் தாலுக்கா, அவினாசி தாலுக்கா ஆகியவைகளுக்கு பயன் கிடைக்கும் என்று இருந்தது. திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டது, 1967ஆம் ஆண்டு 4-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே வந்த விஷயம் என்று சொல்கின்றார்கள். பாசன திட்டமாகத்தான் அந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதிக்கு, என்னுடைய தொகுதிக்கு வந்த நேரத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் போது 'ஹி ஹேஸ் கிவன் எ சாலம் அஸ்ஸூரன்ஸ்', இந்தத் தொகுதிக்கு தண்ணீர் கிடைப்பதற்காக பாண்டியாறு, புன்னம்புழா திட்டத்தை நிச்சமாக நிறைவேற்றித் தருவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் கருத்திலே கொண்டு கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி நிச்சயமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பாசனத் திட்டமாக மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் கால் நூற்றாண்டுக் காலமாக நாம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். 1965லே ஆரம்பித்த திட்டம், 1989-லே கூட முடியாமல் இருப்பதற்குக் காரணம், மின்சார திட்டமாக இதை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றால் ஒரு நாளில் முடிந்து விடும். அதைப் பாசனத் திட்டமாக மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் கேரள அரசோடு மீண்டும் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். மீண்டும் பேசுவோம். நல்ல முறையிலே இந்த திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசு முன்வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். இதை பார்க்கின்ற போது இரண்டு மாநிலங்களுடைய முதலமைச்சர்கள் இதிலே தலையிட்டால் தான், இந்தப் பிரச்சினைக்கு ஒரு விடிவு காலம் கிடைக்கும் என்று

தெரிகிறது. பரம்பிக் குளம்—ஆளியாறுத் திட்ட ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்தல், 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த ஒப்பந்தத்தை மறு ஆய்வு, செய்ய ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 1988 நவம்பர் முதல் மறு ஆய்வு செய்ய வேண்டும். 15-12-1988 அன்று கடிதம் கேரள அரசுக்கு எழுதப்பட்டது. கேரள அரசிடம் இருந்து இன்னும் பதில் வரவில்லை. ஆக 4 மாத காலமாக இன்னும் கேரள அரசிடமிருந்து மறு ஆய்வு செய்வது பற்றிய பதில் வரவில்லை. அதே போல மேற்கு நோக்கிப் பாயும் கூடுதல் நீருள்ள ஆறுகளை திருப்புதல் பற்றியும் நம்முடைய மாநில அரசு கேரள அரசாங்கத்திற்கு இரண்டு முறை, 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கடிதம் எழுதியும் பதில் வரவில்லை. அதற்குப் பின்னாலும், தலைமைச் செயலாளர் அளவிலே பேசியும் பதில் வரவில்லை. எதற்குக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் இரண்டு மாநிலங்களுடைய முதலமைச்சர்களும் நம்முடைய அமைச்சர் அவர்களும் இதிலே தலை இட்டால்தான், இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான முடிவு காணமுடியும். இல்லை என்று சொன்னால், கேரள அரசிடம் இருந்து பதில் வரவில்லை என்று சொன்னால், எப்படி இந்த திட்டம் நிறைவேறும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இரா. மோகன் அவர்கள் ஒரு தவறான எண்ணத்திலே கேள்வி கேட்டுவிட்டார்கள். அவர் கேட்டது, படித்தது எல்லாம் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப் பற்றி, இங்குள்ள கேள்வி பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப் பற்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, ஓர் அறிவிப்பு வினாக் கேட்பவர்கள் தவறாக வினாக் கேட்டால், ஒரு பத்து வினாக்களுக்கு வாய்ப்பே அளிக்கப் படாமல் தண்டனை வழங்க வேண்டியிருக்கும் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**திரு. கே. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேள்வியிலே கேட்பது அவை முறையல்ல என்று இருந்தாலும் கூட, பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் கேட்கலாம். காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கேட்டது இருக்கும்படியான அந்த விளக்கம் பாண்டியாறு புன்னம்புழா-அது பாசனத் திட்டம்தான் என்று இந்த அவைக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அது பாசன திட்டம் அல்ல என்று முதலிலேயே எடுத்துக் காட்டினேன். அவர் அதற்கு என்ன சொல்லியிருக்கிறார் என்றால் இப்போது அதற்கு வேண்டிய விளக்கம் சொல்வது நல்லது. இந்தச் சபைக்கே நல்லது. அங்கே கீழ்பவானி அணைக்கட்டு.. (குறுக்கீடு).



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுடைய அன்பான கருத்தை ஏற்கிறேன். இன்னும் மீதி வினாவை முடித்துவிட்டுப் போனால்தான் முடியும். இல்லை என்றால் எல்லா வினாக்களையும் மொத்தமாக 'Wind up' பண்ண வேண்டியதாக இருக்கும் (குறுக்கீடு) எனவே இதிலே Point of Clarification-க்கு இடமே கிடையாது. உங்களுக்குத் தெரியுமே. வேறு வாய்ப்பு வரும்போது பேசலாம்.

**திரு. சி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு என்று சொல்லி அது பொதுப்பணித் துறையிலே இருக்கிறது. இந்த ஆய்வு அறிக்கை தருவதற்கு மிகக் காலதாமதமாகிறது. பல அணைக்கட்டுகளுடைய சர்வேக்கள் எல்லாம் முடிவு அடையாமல் மிகக் கால தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. அவசரமாக ஆய்வு நடத்தி அறிக்கைகளை வரவழைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

**பத்திரபல்லி அணைக்கட்டுத் திட்டம்.**

106—(*வினா எண் 2062) **திரு. வெ. கோவிந்தன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் பத்திரபல்லி என்ற இடத்தில் அணைக்கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே,

(அ) ஆம். உள்ளது.

(ஆ) திட்டம், தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களது ஆய்வில் உள்ளது. ஆய்வறிக்கை கிடைக்கப் பெற்றதும் பரிசீலிக்கப்பட்டு விரிவான ஆய்வு செய்வது குறித்து முடிவு மேற்கொள்ளப்படும்.

[1989 ஏப்ரல் 22

**பட்டு நெசவாளர்களுக்குப் பட்டுநூல்.**

107—(*வினா எண். 474) **திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக பட்டு நெசவாளர்களுக்குப் போதுமான பட்டு நூல் கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) பற்றாக்குறையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழக பட்டு நெசவாளர்களுக்கு போதுமான பட்டு நூல் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக் கூடிய காஞ்சிபுரம், சேலம், கும்பகோணம், ஆரணி பகுதிகளில் மிகப் பெருவாரியான அளவில் நடைபெற்று வருகின்ற பட்டு நெசவுத் தொழிலுக்கு அவ்வப்போது பட்டு நூல் கிடைப்பதில்லை என்ற புகார் தற்போது இல்லை என்று சொல்லுகின்றார்கள். ஆனால், அவ்வப்போது பட்டு நூல் என்பது மட்டுமல்லாமல், இப்போது பட்டு நூல் விலை அதிகமாக உயர்ந்திருக்கிற காரணத்தினாலே அவர்கள் தொழில் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதை நிரந்தரமாகப் போக்குவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு நூல் விலை உயர்வுக்கு இரண்டு காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒன்று சைனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. பட்டு நூல் கொள்கையிலே ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாகவும் 1987-88 ஆண்டு வாக்கில் கர்நாடகத்திலும் தமிழகத்திலும் பட்டுக்கூடுகள் நோயினால் தாக்கப்பட்ட காரணமாகவும் பட்டு உற்பத்தி அந்த ஆண்டு பாதிக்கப்பட்டது. இந்த இரண்டு காரணங்களினாலே பட்டு நூல் விலை ஏற்றம் அதிகரித்தது. அதற்குப் பிறகு தமிழகத்திலே 'டேன்சில்' என்ற நிறுவனத்தின் மூலமாக பட்டு வளர்ச்சியில் போதிய கவனம் எடுத்துக் கொள்ளப்பட்டு பட்டு போதுமான அளவுக்கு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1989 ஏப்ரல் 22 (திருமதி சுப்புலட்சுமி செகதீசன்)

தற்போது அந்த வகையிலே பட்டு நூலுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக டேன்சில் நிறுவனம் கர்நாடகத்தினுடைய பட்டு நூல் விற்பனை நிலையமும் சேர்ந்து 1.5 டன் மதிப்புள்ள பட்டு நூலை எப்போதும் கையிருப்பில் வைத்திருக்க வேண்டுமென்று ஒரு உத்தரவை அரசு பிறப்பித்து இருக்கிறது. வர இருக்கின்ற காலங்களில் பட்டு நூலினுடைய முழு தேவையையும் நிறைவு செய்கின்ற வகையில் உலக வங்கியினுடைய உதவியோடு தமிழகத்தில் பட்டு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான திட்டம் இந்த ஆண்டு இறுதி வாக்கில் அமலுக்கு வர இருக்கிறது. இந்த திட்டத்தின் மூலம் உலக வங்கி தமிழகத்திற்கு தர இருக்கிற தொகை ஏறத்தாழ ரூ.41.77 கோடி இந்த உதவியோடு, தமிழகத்திலே இருக்கக் கூடிய 9 மாவட்டங்களில் பட்டுப்புழுக்களுக்கு உணவாக ஆகக் கூடிய மல்பெரி செடிகளை வளர்ப்பதற்கு விவசாயிகளுக்கு வாய்ப்பு வழங்கி ஏறத்தாழ 859 மெட்ரிக் டன் அளவுக்கு பட்டு நூலை அதிகரிக்க உத்தேசம் உள்ளது.

**திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை பட்டு போல இந்த நெசவு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு செயற்கை பட்டு கிடைப்பதும் அரிதாக இருக்கிறது. அதிலே மிகப் பெரிய வியாபார சூதாட்டங்கள் எல்லாம் நடந்து கொண்டிருப்பதாக அவ்வப்போது புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செரிகல்சர் துறை மூலமாக டான்சில் என்கிற நிறுவனம் தமிழகத்தில் உற்பத்தி ஆகிற பட்டு நூலை கொள்முதல் செய்து, பட்டு நெசவாளர்களுக்கு வழங்குகிற அந்தப் பணியை மட்டும்தான்---இந்த டான்சில் என்கின்ற நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது. கைத்தறித் துறையின் மூலமாகத் தான் செயற்கை பட்டை கொள்முதல் செய்து விநியோகம் செய்கிற உரிமை அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செயற்கை பட்டின் விநியோகத்தைப் பற்றி ஏதாவது தெரிந்து கொள்ள விரும்பினால் கைத்தறி இலாக்காவோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப்பட்டை வளர்ப்பதில் திருவாளர்கள் தம்புசாமி, கோவிந்தசாமி, முத்துசாமி, அழகர்சாமி ஆகியோர் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள். (சிரிப்பு) திரு. தம்புசாமி.

**திரு. வி. தம்புசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு உற்பத்தியைப் பொறுத்த வரையில் கோரா,

சரிகை போன்ற பொருள்களை ஒரு குறிப்பிட்ட இடத்திலே வாங்குவதால் அதிக விலை கொடுத்து வாங்குகின்ற நிலை இருப்பதால் பட்டின் விலையையும் உயர்த்த வேண்டியது இருக்கிறது. ஆகவே, முன்பு தனியாரிடம் வாங்கியதுபோல அவர்கள் இஷ்டம் போல தனியாரிடம் வாங்கிக் கொள்ளலாம். என்று அரசு இது குறித்து பரிசீலித்து ஆணை வெளியிடுமா?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் பட்டு நூல் கொள்முதல் செய்கிற நேரத்தில் விலையில் மாறுதல் ஏற்படுகிறது என்பதை கருத்தில் கொண்டுதான் தமிழ்நாடு டான்சில் என்கிற ஒரு புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டு கர்நாடகத்திலிருந்தும் தமிழ்நாட்டில் உற்பத்தியாகிற இடங்களில் இருந்தும் பட்டு நூலை கொள்முதல் செய்து சீரான, சரியான விலையில் விநியோகம் செய்ய வேண்டுமென்ற முயற்சியில் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. ஆனால் இடையிடையே ஏற்படுகின்ற சில அசௌகரியங்களின் காரணமாக விலையில் ஏற்றம் ஏற்பட்டாலும் கூட பட்டு நூலை வாங்குவதைப் பொறுத்த வரையில் இந்த டான்சில் என்கிற நிறுவனம் மூலமாக பெற வேண்டுமென்று தான் இந்த அரசு விரும்புகிறது.

**திரு. ப. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு நூல் வளர்ப்பு விவசாயத்தோடு தொடர்புடைய தொழில். ஆகவே அதை கருத்திலே கொண்டு இந்த பட்டு நூல் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு சிறிய விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருமா?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். விஜயராகவன் அவர்கள் கேட்ட கேள்விக்கு விளக்கமாக விடையளித்திருக்கிறேன். உலக வங்கியின் திட்டத்தின் மூலம் நமக்கு கிடைக்கிற 41.77 கோடி ரூபாயில் ஏறத்தாழ தமிழகத்தில் இருக்கிற 9 மாவட்டங்களில் இருக்கிற சிறிய விவசாயிகளுக்கு 12 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் மல்பரி பயிரிட அந்தப் பணம் ஒதுக்கப்பட இருக்கிறது. ஆகவே, இந்தத் தொகை சிறிய விவசாயிகளுக்கு மல்பரி செடிகூடுகளை வளர்ப்பதற்காக மானியமாகவும் கடனாகவும் வழங்கப்படும். இந்த திட்டத்தின் கீழ் வரும் 5 ஆண்டுக் காலத்தில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் பயனடையவும் அதன்மூலம் ஏறத்தாழ 37 சதவிகிதம் அதாவது 37 ஆயிரம் பெண்கள் நேரடியாக அதில் ஈடுபடவும் வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50).

**திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறக்குமதி செய்யப்பட்டும் பட்டு நூலினுடைய





அடக்க விலையை விட மத்திய அரசாலே நம்முடைய கைத்தறி நெசவாளர்களுக்கு கிலோவுக்கு 100 ரூபாய் அதிகமாக லாபம் வைத்து விற்பனை செய்யப்படுகிறது. ஆகவே, இந்த கைத்தறி நெசவாளர்கள் நலன் கருதி அடக்க விலைக்கே நெசவாளர்களுக்கு பட்டு நூல் கொடுக்க இந்த மாநில அரசு மத்திய அரசோடு பேசி ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட புகார் எதுவும் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வில்லை. இப்போதுதான் அதுபற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசியிருக்கிறார். இது உண்மையா என்பதை ஆராய்ச்சி செய்ய, மத்திய அரசோடு பேச்சு வார்த்தை நடத்த இந்த மாநில அரசு முன்வரும்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு நூல் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு வெளியிலிருந்து இறக்குமதி செய்வதோடு, இன்றும் இந்த மல்பரி செடிகளை வளர்த்தல் மற்றும் பட்டுப் பூச்சிகளை வளர்க்கக்கூடிய திட்டம் ஆகிய திட்டங்களும் இருப்பதாக சொல்கிறார்கள். கடந்த காலத்தில் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு விவசாயிகளுக்கு, சிறிய விவசாயிகளுக்கு அரசு உதவி கிடைக்கும் என்று செடிகளையும் பட்டுப் பூச்சிகளை வளர்ப்பதற்கும் அவைகளை உற்பத்தி செய்வதற்கும் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அந்த பட்டுப் பூச்சிகளை காலாகாலத்தில் கொள்முதல் செய்வதிலும் வாங்குவதிலும் அரசாங்கம் சரியான ஒரு நடைமுறையை கடைப்பிடிக்காத காரணத்தால் பல்வேறு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே, அவர்களுக்கு அதில் ஊக்கம் ஏற்படவில்லை. ஆகவே, இந்த முறையிலே இங்கே அதிகமாக பட்டு நூல் உற்பத்தி செய்ய வேண்டிய ஓர் ஏற்பாட்டை மத்திய அரசிடமும் சொல்லி— காரணம் அந்நியச் செலாவணியும் நமக்கு மிச்சமாகும். விவசாயிகளுக்கும் உதவியாக இருக்கும், நெசவாளர்களுக்கு பட்டு நூலும் கிடைக்கும்— இங்கே உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளை ஊக்கப்படுத்தவும் இந்த அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு கூட்டை உற்பத்தி செய்கிற விவசாயிகள் தமிழ்நாட்டில் இருக்கிற டான்சில் நிர்ணயம் செய்யும் விலையை விட கர்நாடகாவில் இருக்கிற தனியார் வியாபாரிகள் சொல்கிற விலை அல்லது நிர்ணயிக்கிற விலை சற்று கூடுதலாக இருக்குமேயானால் அவர்கள் பட்டுக் கூடுகளை தமிழகத்தின் நிறுவனத்திற்கு தராமல் அவர்கள் கர்நாடகத்தில் இருக்கிற எல்லை ஓர பகுதிகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள். அதன் காரணமாக சில நேரங்களில் இந்த விலைப்பிரச்சினை ஏற்படுகிறது. தனியார் எவ்வளவு விலை வேண்டுமானாலும் தேவைக்கு ஏற்ப ஏற்ற முடியும். ஆனால்

ஓர் அரசு நிறுவனம் அதைப் போல அடிக்கடி விலையை அதிகரிக்க இயலாது. ஆகவே, இந்த குறைபாடுகள் எல்லாம் உலக வங்கியின் உதவித் தொகை கிடைத்து அதன்மூலம் அந்த மிகப் பெரிய திட்டமொன்று நடைமுறைக்கு வருகின்றபோது களையப் பட்டு தமிழகத்தில் உற்பத்தியாகிற பட்டு நூல்களை நல்ல விலைக்கு கொள்முதல் செய்ய அரசு முயற்சி செய்யும்.

அந்தியூர் தொகுதியில் சத்துணவு மையங்கள்.

108-- (*வினா எண். 941)-- திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அந்தியூர் தொகுதியில் உள்ள பர்கூர் மலையில் உள்ள குட்டையூர், தொள்ளி, கேளக அணை, கொங்காடை பெஜிலி பாளையம் ஆகிய ஊர்களில் சத்துணவு மையங்கள் அமைக்கப் படுமா

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இநதப் பகுதியிலே ஆதி வாசிகள், ஆதி திராவிடர்கள் அதிகமாக வாழ்கிற கர்நாடக மாநில எல்லைப் பகுதியாக உள்ளதால், இங்கேயுள்ள ஒரு சிறார்கூட சத்துணவு பெறவில்லை, ஆரம்பக் கல்வி பெறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, உடனடியாக இந்தப் பகுதிகளுக்கு அதிகாரிகளை அனுப்பிவைத்து உடனடியாகப் பள்ளிகளை, சத்துணவு மையங்களை ஆரம்பிக்க ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பர்கூர் மலையிலே இருக்கக்கூடிய கிராமங்களுக்கு பள்ளிக்கூட வசதியும் சத்துணவு வசதியும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அநதப்பகுதி என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற காரணத்தாலே இந்த வசதிகள் மட்டு மல்ல, அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல சாலை வசதிகள், குடிக்க குடிநீர் வசதிகள், மின்சார வசதிகள் போன்ற அடிப்படை வசதி களும் இல்லை என்பதை அறிவேன். இதுகுறித்து ஆதி திராவிடர்



நலத்துறை அமைச்சர் அவர்களுடன் பேசி, கூடியவிரைவில் அந்தப் பகுதிக்கு அமைச்சரவர்களை அழைத்துக் கொண்டு வந்து, பல ஆண்டுக்காலமாக புறக்கணிக்கப்பட்டுள்ள அந்த மக்களின் அடிப் படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த அரசு நிச்சயமாக முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

திருச்சியில் குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள்.

109—(*வினா எண். 488). திரு. அன்பில் பொய்யாமொழி: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பார் ?

(அ) திருச்சியில் குடிசைவாழ் மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மாடி வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டு அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் சொன்னாலும் எதிர் காலத்திலாவது இப்படிப்பட்ட வீடுகளைத் கட்டித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்வதோடு, வேறு திட்டத்தின் மூலம் திருச்சி யிலே வாழும் குடிசை வாழ் மக்களுக்குத் தீப் பிடிக்காத வீடுகளைக் கட்டும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சியைப் பொறுத்த அளவில் உலகவங்கித் திட்டத்தின் உதவியுடன் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் இன்றைய தினம் நடைமுறையில் உள்ளது. திருச்சி நகரில் 10,000 குடிசை மக்களுக்கு ரூ. 454 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் 1988-89 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, 5 ஆண்டுகளில் முடிக்கின்ற அளவுக்கு திட்டப் பணி நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 22

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, திருச்சியிலும் திருச்சி தாலுக்காவைச் சேர்ந்த திருவரம்பூர் பகுதியிலும் ஏராளமான குடிசைகள், அண்ணா, பெரியார், வ.உ.சி., பாரதி என்ற பெரியோர்களுடைய பெயரில் இன்றைக்கு குடிசை மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பல முறை இந்தக் குடிசைகள் தீப்பிடித்து அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு விரைவிலே வீட்டு வசதி வாரியத்தின் மூலம் பல அடுக்கு மாடி வீடுகளைக் கட்டி, அரசு அவர்கள் துன்பத்தைப் போக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு தலைவரவர் களே திருச்சியைப் பொறுத்த அளவில்மாடி வீடுகட்டுகின்ற திட்டம் தற்போது அரசின் குறிப்பில் இல்லை. குடிசைப் பகுதி மேம்பாட் டுக்காகத்தான் உலக வங்கியின் உதவியுடன் பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்க ளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. க. ஸ்டாலின் :** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளில் வசூலிக்கப்படும் வாடகையை ரத்துச் செய்து, அந்த அவர்களுக்கே சொந்தமாக்கும் திட்டம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய அரிய ஆலோசனை அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியிருக்கும் பெரும்பா லான ஏழை எளிய மக்கள் ரேஷன் கார்டுகளை வசதி படைத்தவர் களிடம் அடைமானம் வைப்பதுபோல, குடிசை மாற்று வாரிய வீடுகளை வசதி படைத்தவர்களிடம் விற்றுவிட்டு பிளாட்பாரத் திற்கு வநதுவிடுகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த அரசு நட வடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

(முற்பகல் 10-00).

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் கேட்ட இந்தக் கேள்வி, பல்வேறு கோரிக்கை மனுக்களாக என்னிடம் வரப்பெற்றுள்ளது. சென்னை நகரில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கு நான் நேரில் சென்று குறை களைக் கேட்கச் சென்ற நேரத்தில், நானே சில குடிசைகளில் உள்ள மக்களை விசாரிக்கும்போது, அப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றதை நானே நேரில் கண்ணுற்றேன். இந்தப் பிரச்சினையை முற்றிலுமாகத் தீர்ப்பதற்கு அரசு அதிகாரி களுடன் தொடர்ந்து நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தி





இதற்கு நல்லதொரு முடிவை எடுப்போம் என்பதையும் மாண்பு மிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. இரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி திருச்சியில் வாழ்கிற குடிசைவாழ் மக்கள் பற்றியது தான் என்றாலும், சென்னை நகரில் வாழ்கிற குடிசைவாழ் மக்களின் நன்மை கருதி கேட்கப்படுகிற இந்தத் துணைக் கேள்விக்குத் தாங்கள் அனுமதி தர வேண்டுகிறேன். குடிசைமாற்று வாரியம் மூலமாக, குடிசைகளை அகற்றி மாடி வீடு கட்டித் தருகிற திட்டம் தி.மு.க. ஆட்சியின்போது கழகத் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை யிலே கொண்டுவரப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இத்திட்டம் திருச்சிக்கு இல்லை என்றார்கள். ஆனால் சென்னை நகரைப் பொறுத்தவரையில் ஏராளமான குடிசைகள் இங்கே இருக்கின்றன. அங்கே ஏழை எளிய ஆதிதிராவிட மக்கள் நிறைய இருக்கிறார்கள். அங்கெல்லாம் சுகாதாரக் குறைகள் நிறையவே இருக்கின்றன. மாடிவீடு கட்டித்தருகிற திட்டம் குறிப்பாகத் தற்போது திருச்சி நகருக்கு இல்லையென்றாலும், சென்னை நகரத்தில் இதற்கான முயற்சிகள் ஏற்கெனவே எடுக் கப்பட்டிருக்கின்றன. ஆகவே, குடிசை மாற்று வாரியம் மூலமாக மாடிவீடுகளைக் கட்டித் தருகிற திட்டத்தை முதன் முதலாக சென்னை நகரத்திற்கு முன்னுரிமையாகவே எடுத்துக் கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, குடிசைகளில் வாழ்கிற மக்களை, குடிசைகளை அப்புறப்படுத்திவிட்டு அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றிவிடுகிறார்கள். அவர்கள் தொழில் செய்கிற இடம் வேறாக இருக்கிறது. எனவே அவர்கள் குடிசை களையும் இழந்து, வேலையையும் இழந்துவிடுகிற நிலை இருக் கிறது. இதில் அரசு தலையிட்டு பாதுகாப்பு அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி 10 ஆண்டுகளாகக் குடிசைகளில் இருந்தவர்களை அகற்றுவது சட்ட விரோதம் என்று இருக்கிறது. எனவே இது சம்பந்தமாக அரசின் கருத்து என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலில் திருச்சி நகருக்குத்தான் மாடிவீடு கட்டுகிற திட்டமில்லை என்று சொன்னேன். சென்னையில் மாடிவீடு கட்டுகிற திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. அந்தப் பணி பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**உசிலம்பட்டி தாலுக்காவில் நூற்பாலை.**

110-- (* வினா எண். 739). **திரு. பி. என். வல்லரசு:** மாண்பு மிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா —

(அ) உசிலம்பட்டி தாலுக்காவில், புத்தூர் மலைக்குப் பக்கத்தில் நூற்பாலை நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன. அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். (குறுக்கீடுகள்)

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருநதால் அவ்வுரைஉறு ப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

## 2. தகவல் கோரல்

**(அ) கர்நாடக மாநில அரசை மத்திய அரசு கலைத்துள்ளது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகுதான் பாயின்ட் ஆப் ஆர்டர் எல்லாம். எல்லோரும் உட்கார்ருங்கள். ஒவ்வொருவராகப் பேசலாம். முதலில் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் அதிகாலையில் பத்திரிகையைப் புரட்டிய உடனே, நாட்டிலே எதற்காக பேச்சுரிமை, ஓட்டுரிமை, எழுத்துரிமை எல்லாம் கொடுத்தார்களோ அதெல்லாம் படுகொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்டுவிட்டது. இதன் காரணமாக . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு செய்தி இருநதால் பேசலாம். (குறுக்கீடு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அதன் காரணமாக கர்நாடக அரசு , . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மத்திய அரசு தொடர்பான செய்தி. வேறு செய்தி இருந்தால் பேசலாம். அடுத்து திரு. பொன். விஜயராகவன்.





(ஜனதா தள உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 28 ஆம் தேதியன்று காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து பேச இருந்தபோது ஜனநாயகப் படுகொலை . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : அது படுகொலையோ இல்லையோ, அதற்கும் இந்த அவைக்கும் சம்பந்தமில்லை.

**(ஆ) கர்நாடக முதல்வரோடு காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி தமிழக முதல்வர் நடத்த இருக்கும் பேச்சு வார்த்தை குறித்து.**

திரு. பொன். விஜயராகவன் :28 ஆம் தேதியன்று நம்முடைய முதலமைச்சர் அவர்களும், கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களும் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கலைத்ததைப் பற்றியல்ல. இது காவிரிப் பேச்சு பற்றியது. எல்லாவற்றிற்கும் நீங்கள் எழுந்திருககக் கூடாது.

திரு. பொன். விஜயராகவன் : நம்முடைய தமிழ்நாட்டுக்கு முக்கியமான பிரச்சினையான காவிரி நதிநீர்ப் பிரச்சினைபற்றி பேசுவதாக இங்கே சொல்லப்பட்டது. ஏற்கெனவே நடுவர் மன்றத்திற்கு விட வேண்டுமென்கின்ற கருத்துக்கு மாறாக காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து இரண்டு முதல்வர்களும் பேசலாம் என்கின்ற ஒரு நிலைமை இன்றைக்கு முற்றிலுமாக சிதைக்கப்பட்டு இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் சட்டமன்றத்திலே தங்களுடைய பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அவகாசம் தருவதற்கு முன்னாலேயே . . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவிரிப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசுங்கள். (குறுக்கீடுகள்.)

திரு. பொன். விஜயராகவன் : அதோடு தொடர்புடைய காரியத்தை பற்றித் தானே நாம் பேசிக் கொண்டிருக்கிறேன். தலைவரவர்களே, அதோடு தொடர்புடைய காரியத்தைப் பற்றித் தானே பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த மன்றத்தில் பேசுவதற்கு உரிமை கிடையாது என்று யாருக்கும் சொல்வதற்கு உரிமை இல்லை.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையில் மத்திய அரசாங்கத்தை குற்றஞ்சாட்டிச் சொல்கிற சொற்கள் வந்தால்தான் தவறே தவிர, நடைபெற்று இருக்கிற நிகழ்ச்சிகளால் பேச

முடியாத நிலைமை ஏற்பட்டது என்று (குறுக்கீடுகள்)....நான் சொல்கிறேன்.... நான் சொல்கிறேன்......(குறுக்கீடுகள்).. (பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து அமர வேண்டும்,

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு எடுத்த நடவடிக்கையைக் குறை கூறிச் சொல்கிற சொற்றொடரைத் தவிர, அந்தக் 'காமெண்ட்', ஆக்ட்ஸ் ஆஃப் சென்ட்ரல் கவர்ன்மென்ட் என்ற முறையிலே வருகிற அந்தக் கருத்தைத் தவிர, மற்றபடி ஏற்பட்ட நிலைமைகளால் பேச்சு நடத்த முடியவில்லை என்பதற்கான விளக்கம் சொல்லப்பட்டால், அந்த வரிகளை ஏற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. வீரைய்யன் :** நாம் பேச முடியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாம் பேச முடியாது. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்கார வேண்டும். எல்லோரும் உட்காருங்கள். அவை முன்னவர் பேசுகிறபோது உட்காருங்கள். Please sit down உட்கார வேண்டும். பேரவைத் தலைவர் பேசும்போது நீங்கள் எழுந்து கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்போது நீங்கள் உட்கார வேண்டியது தானே. அப்புறம் பேசுங்கள். அவை முன்னவர் பேசுகிறபோது யாரும் எழுந்து குறுக்கே பேச வேண்டாம். அவர் பேசி முடித்த பிறகு மற்றவர்கள் தங்கள் கருத்தைச் சொல்லலாம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவரவர்களே, மத்திய அரசு மேற்கொள்கிற நடவடிக்கைகள் குறித்து, ஜனநாயகத்தைப் பற்றி இந்த அவையிலே ஒரு வாதம் எழுமேயானால், நடைமுறைகளைப் பற்றி ஒரு அரசாங்கம், மாநில அரசாங்கம் பாதிக்கப்பட்டது என்ற முறையிலே அந்தக் கருத்திலே, இந்த அவை விளக்கம் தரலாம். அந்தக் கருத்திலே அவையில் விளக்கம் தரலாம். எல்லாச் சட்ட சபையிலும் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மாதிரி ஒரு பிரச்சினையை எழுப்புகிற போது அந்தப் பிரச்சினையில் அதைப்பற்றி விவாதிப்பதற்கு இடம் இல்லாத காரணத்தால் ஒரு குற்றச்சாட்டை, ஒரு கண்டனக் கருத்தைத்தான் சொல்ல இடம் இல்லையே தவிர—இந்த அவைக்கு அதுபற்றித் தனியாக—கர்நாடக மாநிலத்தைப் பற்றி அல்ல, மத்திய அரசைப் பற்றி அல்ல—ஜனநாயகத்தைப் பற்றி விவாதிக்கும் நிலைமைகள் ஏற்படுமேயானால், அரசியல் சட்டத்தைப் பற்றி விவாதிக்கிற ஒரு கட்டம் ஏற்படுமானால், அப்படி விவாதிக்கிறபோது.



இதையெல்லாம், எல்லா. மாநிலங்களைப் பற்றியும்கூட, நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்ற முறையில் இடம் பெற உரிமை உண்டு. ஆனால் இப்போது இந்த அவையில் இந்தப் பிரச்சினை பற்றி ஒரு குறிப்பிட்ட கருத்தை உறுதிப்படுத்துகிற முறையில் எதையும் சொல்வதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துவது சிறப்பு அல்ல.

**திரு. பொன். விஜயராகவன் :** தலைவரவர்களே, அங்கு நடைபெற்ற சம்பவத்தினால் நம்முடைய மாநிலம் இப்போது எந்த அளவுக்கு பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்து கொண்டிருந்தேன். இன்னொன்று, பேசுகிறவர்களுக்கு 'முற்பகல்' மட்டும்தான் தெரிகிறது. 'பிற்பகல்' ஒன்று இருப்பது தெரியாமல் போய் விடுகிறது. ஆகவே இந்த நிலையினால் ஏற்பட்டு இருப்பது, அந்த மாநிலத்தினுடைய பிரச்சினையாக நான் சொல்ல விரும்பவில்லை. ஒரு ஜனநாயக அடிப்படையிலே, முன்னவர் அவர்கள் சொன்னது போல, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அதனுடைய பெரும்பான்மையை, அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய இடம் சட்டமன்றம் என்பதற்கு.... (குறுக்கீடுகள்) சட்டமன்றம் என்பது தானே அல்லாமல்.... (குறுக்கீடுகள்) அதைச் சொல்வதற்கு, ஜனநாயகத்தைப் பற்றி சொல்வதற்குக் கூட உரிமை இல்லை என்று சொன்னால்.... (பல உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.) (கூச்சல்—குழப்பம்.)

(முற்பகல் 10-10)

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** அதைப் பற்றி சபை விவாதிக்க முடியாது. (கூச்சல்—குழப்பம்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படி எல்லோரும் எழுந்து பேசுவது முறையல்ல எல்லோரும் உட்காருங்கள். திரு. கே. ரமணி அவர்கள் (கூச்சல்—குழப்பம்).

**திரு. சி. கோவிந்தசாமி :** இப்படி ஒவ்வொருவரும் எழுந்து நின்று சப்தம் போட்டுக் கொண்டிருந்தால் என்ன செய்வது? எல்லோரும் அப்படிச் செய்தால் யாரும் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. பொன் விஜயராகவன் :** தலைவரவர்களே, நான் முடித்து விடுகிறேன். நான் இங்கே பேச வந்தது அந்த மாநிலத்திற்காக அல்ல; எந்த மாநிலத்திற்கும் பொருத்தமானது; எல்லாவற்றிற்கும் பொருத்தமான ஒரு உணர்வைத்தான் நான் பேசுகிறேனே அல்லாமல் வேறல்ல. இதற்கு முன்னாலே இங்கே இருக்கக் கூடிய அரசாங்கங்களைக்கூடக்

கலைத்துவிட்டுப் போவார்கள்; பல ஆட்சிகள் இருந்த பொழுது கலைத்துவிட்டுத் தேர்தலுக்கு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு ஏற்பட்டிருப்பது ஒரு ஜனநாயகத்தினுடைய உரிமையைப்பற்றி இந்த மன்றத்திலே பேசுவதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் நாம் எங்கே போய்ப் பேச முடியும் என்பதை நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நான், உறுப்பினர்கள் சொல்வதைப்போல குடியரசுத் தலைவருடைய செய்கையையோ மற்றவைகளையோ குறை கூறுவதற்கு விரும்பவில்லை. அரசமைப்புச் சட்டத்திலேயே மிகத் தெளிவாக இருக்கிறது. குடியரசுத் தலைவர் அமைச்சரவையுடைய முடிவின்கீழ் தான் செயல்படுகிறார் என்பதை நாம் தெளிவாக உணர்ந்திருக்கிறோம். ஆகவே, இதனுடைய பொறுப்பு குடியரசுத் தலைவரைச் சாராது. குடியரசுத் தலைவரவர்கள் கருவியாக இருந்தாலும், பின்னாலே இயக்குவது சர்க்கார் என்பதை நாம் முதலிலே புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு மத்திய அமைச்சரவைதான் இந்த முடிவை எடுத்து குடியரசுத் தலைவரைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இதுபோன்ற செயல்களை நாம் பல காலங்களிலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதுபோன்ற செயல்களை நாம் அனுமதித்ததனுடைய காரணமாக இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய இதுபோன்ற நிலைமைகளை இன்னும் நாம் அனுமதிப்பதற்குத் தயாராக இருக்கின்றோமா? ஜனநாயக உணர்வு இந்த நாட்டிலே படுகொலை செய்யப்படுகின்ற பொழுது இதுபோன்ற காரியங்களுக்கு நாமும்....

**திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இதைத் தாங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுபற்றி நாம் இங்கே விவாதிக்க முடியாது. உட்காருங்கள் திரு. கே. ரமணி அவர்கள்.

**திரு. அ. இரகுமான்கான் :** காவிரிப் பிரச்சினை பற்றி அவர் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் அதைச் சொல்ல வேண்டியது தானே. திரு. கே. ரமணி அவர்கள்.

**திரு. பொன். விஜயராகவன் :** தலைவரவர்களே, நான் முடித்து விடுகிறேன். ஆகவே, நம்முடைய அரசு இந்தக் காவிரிப் பிரச்சினை குறித்து இன்றைக்கு என்ன நிலைமைகளை எடுக்கப் போகிறது? அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் இன்றைக்கு இல்லாமல் போய் இருக்கிறதே, முதலமைச்சர்



கள் கூட்டம் என்பது 28 ஆம் தேதி நடைபெற முடியாமல் போய் இருக்கிறதே. இந்த நிலையில் நம்முடைய அரசு இந்தக் காவிரிப் பிரச்சினை குறித்து, தமிழகத்தைப் பாதிக்கின்ற இந்தப் பிரச்சினை குறித்து, என்ன நடவடிக்கை எடுப்பதற்கு இருக்கிறது என்பதை விளக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** தலைவரவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களுக்கு, திரு. ரமணி அவர்கள் பேசிய பிறகு கண்டிப்பாக நான் வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. கே. ரமணி :** தலைவரவர்களே, தாங்களே எங்களுக்கு வழி காட்டிகளாக இருக்க வேண்டியது. அரசியல் சட்டத்தின் கீழேதான் இந்தச் சபை விளங்குகிறது. அரசியல் சட்டத்தின்படிதான் இந்திய நாடு முழுவதும் இருக்கின்ற அத்தனை 25 சட்டமன்றங்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றங்களும், பாராளுமன்றங்களும் வேலை செய்கின்றன. அரசியல் கட்சிகளினுடைய அடிப்படையில்தான் அரசியல் அமைப்பே இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய பேச்சு உரிமையை, எனக்கு மிகவும் நண்பராக இருக்கக் கூடிய திரு. பாலசுப்பிரமணியம் போன்றவர்கள், அரசியல் சட்டத்தைப்பற்றிப் பேசாதே என்று சொல்லக்கூடிய வார்த்தை இந்த அசெம்பிளியிலே வரக்கூடாது. நான் தாழ்மையோடு சொல்ல விரும்புகிறேன். அந்த மாதிரி வரக்கூடாது.

இரண்டாவது, காங்கிரஸ் கட்சிக்கு அரசியல் சட்டத்தைப் பாதுகாக்க எவ்வளவு தூரத்திற்கு ஆசையும், விறுவிறுப்பும் இருக்கிறதோ அதை விடவும் அதிகமாக, அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஏதாவது சில நல்ல அம்சங்கள் இருந்தால், அவற்றையும் பாதுகாத்து இந்திய மக்கள் எண்பது கோடி மக்களுக்கும் அதனுடைய பயனை உருவாக்கி, அதற்கு மேலேயும் இந்த அரசியல் சட்டத்தைத் தேவையானால் எத்தனை திருத்தங்கள் வேண்டுமானாலும் போட்டுக் கொண்டு போவதற்கு நிற்கக்கூடியது இந்தச் சட்டமன்றம்.

ஆகவே, நான் தாழ்மையோடு சொல்லிக் கொள்வேன். நான் சொல்லக்கூடிய விஷயம் யாருக்கும் கண்டனம் தெரிவிப்பதற்கோ அல்லது அந்த அரசியல் சட்டத்தினுடைய ஒவ்வொரு ஷரத்தை யும் யார் யார் உபயோகப்படுத்தினார்கள் என்று இங்கேயே கேள்வி கேட்டு முடிவு செய்வதற்கோ நான் பேசவில்லை. ஒரு முக்கியமான பாதிப்பு நம்முடைய அரசாங்கத்திற்கு வந்தாகிவிட்டது. தமிழ்நாட்டு மக்களுக்கு வந்தாகி விட்டது, காவிரி நதி நீர்ப் பிரச்சினை உயிர்ப் பிரச்சினையாக இருக்கிறது. அது தீர்க்கப்படாமல் இருக்கிறது. அது பல வருடங்களாக நீண்டு இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற மாண்புமிகு கலைஞர்

அவர்களுடைய அரசாங்கம் முன்பு இருந்த காலத்திலிருந்தும் அந்தப் பிரச்சினை இருக்கிறது. இப்போது அது ரொம்பவும் தீவிரப்பட்டிருக்கிறது. சகோதர அரசாங்கங்களாக இருக்கிற கர்நாடக மாநிலத்தோடு நாம் பேச்சு வார்த்தை நடத்துகிறோம், கேரளா மாநிலத்தோடு பேச்சு வார்த்தை நடத்துகிறோம், ஆந்திர மாநிலத்தோடு பேச்சு வார்த்தை நடத்துகிறோம். சகோதர நாடுகள், அண்டை நாடுகளோடு சண்டை அல்ல. நாடு என்றால் தமிழ்நாடு என்கிற மாதிரி நான் சொல்கிறேன். ஏனென்றால் பல நாடுகளை ஒன்றிணைத்து இருக்கும்படியான ஒரு பெரிய நாடு இந்தியா. ஆகவே அப்படிப்பட்ட ஒரு அண்டை மாநிலத்தோடு நாம் இன்றைக்கு பேச்சுவார்த்தை நடத்துகிறோம். அந்தப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்த அவையில் எங்களுக்கு முதலமைச்சர் ஒரு உறுதி கொடுத்திருக்கிறார்கள். அது, சபாநாயகர் அவர்களே, உங்களுக்கும் தெரியும். அவர் அன்றைக்கு உறுதி கொடுத்தார். இதை ட்ரிபியூனலுக்கு விட வேண்டுமா, பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமா என்று வந்தபோது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோடு எத்தனை தடவை பேச்சுவார்த்தை நடத்தினாலும் பரவாயில்லை. கொஞ்சம் கொஞ்சமாக, துளித் துளியாக நாம் முன்னேறுவோம்.

Area of difference-ஐத் தனிமைப்படுத்தி Area of agreement-ஐ ஒப்பந்தங்களாக உருவாக்கி, படிப்படியாக முன்னேறும்படியான ஒரு கலை தான், 'காம்ப்ரமைஸ்' பேச்சுவார்த்தை, சமரசம் என்பது. அப்படிப்பட்ட கலையை நம்முடைய கலைஞர் அவர்கள் கையாளுவதற்குத் தீர்மானித்து இங்கே தேர்தெடுக்கப்பட்டிருக்கிற அரசாங்கத்தோடு, முதலமைச்சரோடு, எத்தனை தகராறுகள் ஏற்கெனவே நடந்திருந்த போதிலும் கூட, பேச்சு வார்த்தை நடத்தி முடிப்பதற்கு ஒப்புக்கொண்டு, பேச்சுவார்த்தைக்குத் தேதியும் குறித்தாகிவிட்டது. அப்படிப்பட்ட நிலைமையில் அந்த முதலமைச்சரும் இல்லை. அரசாங்கமும் இல்லை. நம்முடைய கதி என்ன? காவிரி காத்துக் கொண்டிருக்க முடியாது. தண்ணீர் தேவை, தஞ்சை விவசாயிகள் கண்ணீர் வடிக்கிறார்கள். தண்ணீர் தேவை நமக்கு. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இந்த நிகழ்ச்சியைச் சொல்கிறபோது தான் 356-வது செக்ஷனைச் சொல்லாதே என்கிறார்கள். அப்படியென்றால் எந்த செக்ஷனைச் சொல்வது?

Please tell me, Mr. Balasubramaniam. The Hon. Member may please instruct me under what section I can talk this thing. தயவுசெய்து நான் வேண்டுமென்று கேட்கிற கேள்வி அல்ல, அவர் எனக்கு நண்பர். நான் என்னசொல்கிறேன் என்றால், நாம் அத்தனைபேரும் ஒன்றாக இருந்து காவிரி நதி நீர்ப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். இப்போதுகூட மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களிடம் பாண்டியாறு-புன்னம்புழா



பற்றிக் கேட்டது என்ன? அந்த அண்டை மாநிலத்தோடு சண்டை இல்லாமல் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கும் தொழில் கெடக் கூடாது. நமக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும், அது காம்ப்ரமைஸ் ஆகவேண்டும். அந்த 356-வது செக்ஷன் நம்முடைய கழுத்தைப் பிடித்தாகிவிட்டது. நான் சொல்கிறேன். தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய கழுத்தை இன்றைக்குப் பிடித்து இருக்கிறது. இல்லையென்று யாரும் சொல்ல முடியாது. அதுதான் பிரச்சினை. (கூச்சல்—குழப்பம்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எல்லோரும் உட்காருங்கள், நீங்கள் எல்லோரும் உட்கார்ந்தால் அவர் பேசி முடித்த பிறகு திரு. குமரி அனந்தன் பேசுவார். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. ரமணி அவர்களைத் தவிர எல்லோரும் உட்கார வேண்டும். திரு. ரமணி.

**திரு. கே. ரமணி** : மாண்புமிகு தலைவர் அவர்களே, 356-வது செக்ஷன் மட்டுமல்ல, அரசியல் சட்டத்தில் இருக்கும்படியான அத்தனை அத்தியாயங்களும், அவற்றின் ஷரத்துக்களும் ஒவ்வொன்றாக மாற்றியமைக்க இருக்கிறோம். ஒட்டுமொத்தமாக இன்னொரு அரசியல் நிர்ணயசபையை உண்டாக்கி இதைத் தூக்கி 'ஸ்கிராப்' பண்ணி எறிந்து இன்னொரு அரசியல் அமைப்புச் சட்டம் உண்டாக்குவதற்கு உரிமை இருக்கிறது. It is a Sovereign State. Indian State is a sovereign State.

அடிமைத்தனத்திலிருந்து இதற்குத்தான் விடுதலை பெற்றோம். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு இந்த 356-வது செக்ஷன் நம்முடைய கழுத்தைப் பிடித்து இருக்கிறது. திரு. குமரி அனந்தன் அவர்களுடைய, திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுடைய கழுத்தைப் பிடித்து இருக்கிறது என்று சொல்லவில்லை. (குறுக்கீடு.) I am nct yielding நான் அரசியல் சட்ட ஷரத்தைப் பற்றிச் சொல்வதை தடுப்பது என்பது That itself is illegal. இந்தச் சபைக்குள்ளே எங்களுடைய உரிமையை அவர்கள் மறுக்கிறார்கள். அரசியல் சட்ட ஷரத்து 356 திருத்தப்படுவது மட்டுமல்ல, நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்த நாட்டில் இன்றைக்கு வளர்ந்திருக்கிறது. அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் நாங்கள் சொல்கிறோம்.

(முற்பகல் 10-20)

இன்றைக்குக் காவிரிப் பாசனம் சம்பந்தமாகப் பேசி முடிக்க வேண்டி இருக்கிறது. காரணம் லட்சோபலட்சம் ஏக்கர்கள், 35 லட்சம், 40 லட்சம் ஏக்கர் நிலங்கள் இதனால் வறட்சி அடைந்து அதனால் தமிழ்நாட்டு மக்கள், ஏன் இந்திய மக்களே பாதிக்கக் கூடிய நிலைமையிருக்கிறது. அப்படிப்பட்ட 356-வது ஷரத்தைப் பற்றி ஒரு சட்டசபைக்குள்ளே

அதனுடைய தன்மை என்ன என்பதைப் பற்றி விவாதித்து முடித்திருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசியிருப்பார். ஒரு சட்டமன்றத்திற்கு உள்ளே அதைப் பற்றிப்பேசி முடித்திருந்தால், அதுதானே நடவடிக்கை, மரபு, அதுதானே கட்சித் தாவல் சட்டம் பற்றி பாராளுமன்றத்திலே பேசிய காலத்திலே பேசப்பட்ட விஷயம். இந்தச் சரித்திரத்தை எப்படி மறக்க முடியும். ஆகவே இன்றைக்கு நம்முடைய இந்தப் பேச்சு வார்த்தை, நமது முதலமைச்சர் மிகவும் ஆவலோடு நமக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற, அங்கே போய்ப் பேச இருந்ததை, பேச முடியாமல் பண்ணி, தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சர்க்கார் கலைக்கப்பட்டு இன்றைக்கு............. (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) 356-வது செக்ஷன், ஜனநாயகப் படுகொலை............ (கூச்சல்—குழப்பம்). இந்த ஹோல் சட்டமன்றம்.............. (குறுக்கீடு) அதற்கு எதிர்ப்புக் காட்டுவதற்கு உரிமையிருக்கிறது. ஆகவே இப்போது உள்ள நிலையில், காவிரிப் பேச்சு வார்த்தையைக் காப்பாற்ற நமது முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார். அவர் மட்டுமல்ல, தமிழ்நாடு மக்கள் முழுவதும் அவருக்குப் பின்னாலே இருக்கிற விஷயம். நாங்கள் அத்தனை பேர்களும் இருக்கிறோம். அவர்கள் மட்டும் செய்கிறது என்பது அல்ல. ஆகவே தவறு நடந்துவிட்டது. 356 நம்முடைய கழுத்தைப் பிடித்துவிட்டது. அதிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்கு அவர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதை நமக்குத் தெரியப்படுத்தவேண்டும். சட்டமன்றத்தில் விவாதித்து, மெஜாரிட்டி, மைனாரிட்டி பார்க்க முடியாமல் செய்கின்ற இந்த 356-ஐக் குறித்து திட்டவட்டமாக எதிர்ப்பு, கண்டனம் செய்ய வேண்டியது நம்முடைய கடமை. (கூச்சல்—குழப்பம்).

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொல்கிறபோது, அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி இங்கே பேசினார். அரசியல் அமைப்புச் சட்டத்திலே சில ஷரத்துக்கள் திருத்தப்படவேண்டும் என்று சொல்வது கூட தவறா என்று கேட்டார்கள். தவறு இல்லை. விவாதிப்பது கூட தவறில்லை. ஆனால் இப்போது, எந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் மீது பதவிப் பிரமாணம் எடுத்து அவர்கள் வந்திருக்கிறார்களோ, அந்த அரசியல் சட்டத்தைத் தூக்கிக் கடலிலே எறிவோம் என்றோ, அதை ஸ்கிராப் என்று பேசுவதோ.... (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் பேசாத ஒன்றை நீங்கள் வலியுறுத்தக் கூடாது.

**திரு. கே. ரமணி :** நான் சொல்லாத ஒன்றை ரெக்கார்டில் ஏற்றுகிறார். அரசியல் சட்டத்தை அடியோடு மாற்றுவதற்கு உரிமை இருக்கிறது என்று சொல்கிறோம். (குறுக்கீடு.)





**திரு. குமரி அனந்தன் :** அதுதான், அர்த்தம் அதுதானே, அடியோடு என்றால் என்ன? அடியும் முடியும் சேர்ந்து என்றால் அர்த்தம் அதுதானே. அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அது எந்த வகையிலே பொருந்தும் என்று சொல்வதோடு அது இருக்கலாமா என்று கேட்கிறார். நான் கேட்கிறேன், அரசியல் அமைப்புச் சட்டத்திலே இன்று என்ன இருக்கிறதோ, அதன்படிதான் நடந்துகொள்ள முடியும். (குறுக்கீடு). மாற்ற வேண்டுமென்றால் மாற்றலாம். இப்போது கேப்பிட்டல் பனிஷ்மெண்ட் என்று சொல்கிற தூக்கு தண்டனை இருக்கலாமா கூடாதா என்ற வாதம் இருக்கலாம். இன்று தூக்கு தண்டனை உண்டு என்றால், கொலைகாரர்கள் தூக்கிலிடப்பட வேண்டும் என்பதுதானே தவிர, விட்டுவிட முடியாது. (குறுக்கீடுகள்) நான் பேசினால் மட்டும் ஏன் தடுக்கிறீர்கள், வாதம் தானே (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. குமரி அனந்தன் :** இன்றைக்கு என்ன காரணத்தைக் கொண்டும தமிழ்நாடு அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசும், மத்தியிலே ஆண்டுகொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சியும் எடுத்திருக்கிற நிலை வேறு, மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்த அரசாங்கத்தைப் பற்றி நாங்கள் எந்த விதமான, வேறு வகையான முடிவுகளையும் எடுக்கவில்லை. (குறுக்கீடுகள்). ஆனால் அருமைக்குரிய மாண்புமிகு உறுப்பினா திரு. ரமணி அவர்கள் பேசுகின்றபோது, இந்த அரசாங்கத்தினுடைய கழுத்தை 356-வது ஷரதது நெறித்துக்கொண்டு இருக்கிறது என்று சொன்னாரே, அப்படி யாரும் நெறிக்கவில்லை. ஆனால் நீங்கள் இங்கே நடந்ததை எல்லாம் விவாதிப்பதாக இருந்தால் நான் சொல்ல விரும்புகிறேன், ஒரு கட்சி ஆட்சி என்று வைத்துவிட்டு, அந்தக் கட்சியினுடைய பெயரையே மாற்றி, அதனை அங்கிருக்கிறவர்கள் ஒத்துக் கொள்ளாத ஒரு நிலையில் மைனாரிட்டி அரசாங்கத்தை கான்ஸ்டிடியூஷன்படி கலைத்திருக்கிறோம், அவ்வளவுதான். (குறுக்கீடு) இல்லை. சட்ட விரோதம் இல்லை. (கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். திரு. குமரி அனந்தன் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்களும் உட்கார வேண்டும். இப்போது நாம் பிரிவு 356 பற்றியோ அல்லது வேறு செய்திகள் பற்றியோ விவாதிக்கவில்லை. எனவே அது பற்றிய விவாதங்களைத் தொடர்ந்து எழுப்பாமல், காவிரி நீர்ப் பிரச்சினை பற்றித் தமிழக அரசு என்ன முடிவு செய்திருக்கிறது, என்ன நிலை என்பதைக் குறித்து தான் அவர்கள் அவர்களுடைய நோக்கத்தோடு குறிப்பிட்டார்கள்

அது குறித்தே தாங்களும் ஏதேனும் கருத்துத் தெரி வித்தால் பொருத்தமாக இருக்கும். வேறு வகையில் வாதத்தைத் திசை திருப்பாமல் போனால் விரைவில் நாம் முடிவிற்கு வரலாம்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, கர்நாடகத்துலே நடந்து விட்ட ஒரு சம்பவம் அது. இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் (கூச்சல்—குழப்பம்) காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்குள்ள பாசனத் துறைச் செயலாளரை அனுப்பி அங்கிருக்கிற பாசனத் துறைச் செயலாளரோடு பேச வேண்டுமென்று முடிவு செய்கிறார் என்று வையுங்கள்—இருக்கிற பாசனத் துறைச் செயலாளர் கர்நாடக பாசனத் துறைச் செயலாளரோடு பேச வேண்டுமென்று முடிவு எடுக்கிறோம் என்று வையுங்கள்—அங்கே அந்தப் பாசனத்துறைச் செயலாளர் அந்தப் பதவியிலே இல்லாமல் ஒரு வேளை வேறு காரணங்களுக்காக நீக்கப்பட்டால், இவர் பேசவே மாட்டாரா? இந்தச் செயலாளர் போய்ப் பேசவே மாட்டாரா? அங்கு ஒரு அரசாங்கம் இருக்கிறது. There is no vacuum—ஒரு அரசாங்கம் இருக்கிறது. அந்த அரசாங்கத்தோடு காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச வேண்டியதுதானே. அங்கே வெற்றிடம் இல்லை. அங்கே ஒரு ஆட்சி இருக்கிறது அந்த ஆட்சியிடம் போய்ப் பேச வேண்டியதுதானே நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள். திரு. குமரி அனந்தன் பேசட்டும்.

**திரு. குமரி அனந்தன் :** அங்கே ஒரு அரசு இருக்கிறது. அரசு இல்லாமல் எப்போதும் இல்லை......(கூச்சல்—குழப்பம்)

**திரு கோ. வீரையன் :** அரசு என்பது வேறு, அரசாங்கம் என்பது வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அருள்கூர்ந்து இதிலே தொடர்ந்து விவாதங்கள் வேண்டாம். திரு. குமரி அனந்தன் அவர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லி முடிக்கிற வரைக் கும் மற்றவர்கள் பொறுமையாக அமர வேண்டும்.

**திரு. குமரி அனந்தன் :** குடியரசுத் தலைவருடைய அரசு அங்கே இருக்கிறது. குடியரசுத் தலைவருடைய அரசு அங்கே இருக்கிறபோது அந்த அரசோடு பேசுவதிலே ஒன்றும் தடை இல்லையே. இன்னும் நான் உங்களைப் பணிவோடு கேட்கிறேன்,





ஒரு அரசாங்க முதலமைச்சரோடு பேச வேண்டுமென்று இன்னொரு முதலமைச்சர் எடுத்து விட்ட முடிவின் காரணத்தினாலேயே அங்கு நடைபெறுகிற நிகழ்ச்சிகள் அத்தனை யும் அரசியலமைப்பின் படி என்பதை ஒத்துக்கொள்ள முடியுமா என்ன? அரசியலமைப்பின்படி நிர்வாகத்தை நடத்த முடியாது என்று ஏதாவது ஒரு மாநிலம் முடிவு செய்தால் in accordance with the Constitution (கூச்சல்—குழப்பம்). ஏதாவது ஒரு மாநிலம் என்று நான் சொல்கிறேன்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. குமரி அனந்தன் அவர்கள் காவிரியோடு முடித்துவிட வேண்டும். இது அப் படியே பெரிய விவாதமாகக் கொண்டு போய் விடும்.

**திரு. குமரி அனந்தன் :** நமது இந்திய நாட்டைப் பற்றிச் சொல்லுகிறபோது........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் திரு. குமரி அனந்தன் அவர்களை அன்போடு வேண்டுவது, காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக நம்முடைய தமிழக அரசு என்ன செய்ய வேண்டு மென்று கருதுகிறீர்கள்?

**திரு. குமரி அனந்தன் :** காவிரி நீர் தொடர்பாக தமிழக அரசு தொடர்ந்து பேச வேண்டும். பேசுவதற்கு அங்கே அரசு இருக்கிறது. அதனாலே பேச வேண்டும். இன்னொரு வேண்டுகோள்—முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களைச் சொல்லலாம் என்ற வகையில், பிரிவு 356 என்பது மட்டுமல்ல, இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் சொல்கிறபோது, கொங்கு நாடு என்று சொன்னால் அதைத் தனி நாடு என்று நாம் சொல்லிவிட மாட்டோம். தமிழ்நாடு என்று சொன்னால் அது தனி மாநிலம். எனவே மாநிலங்கள் அடங்கிய ஒரு இந்தியப் பெரு நாடு, திருநாடு என்று சொல்ல லாமே தவிர, பல நாடுகள் அடங்கிய ஒரு நாடு என்று சொல் வது அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஒவ்வாது என்பதைச் சுட்டிக் காட்டி, நமது முதலமைச்சர் அவர்கள் போய்ப் பேசலாம். இங்கே காய்ந்து கிடக்கின்ற இந்த பூமிக்குப் பாய்ந்து வருகின்ற வகையிலே காவிரியைக் கொண்டுவரலாம் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். (கூச்சல்—குழப்பம்).

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள். திரு. வரதராசன் ரொம்ப நேரமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அவரை அனுமதிக்கிறேன்.

## 3. ஒழுங்குப் பிரச்சினை.

### ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது குறித்த நடைமுறை.

**திரு. உ. ரா. வரதராசன்** : பேரவைத் தலைவர் அவர்களே, நான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 116 உப விதி 3-ன் கீழ் இந்த ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். என்னிடத்தில் ஆங்கிலப் புத்தகம் தான் இருக்கிறது. "A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as to regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker." என்று இருக்கிறது. அந்த அடிப்படையிலே நான் இந்த ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். இந்த அவையிலே என்ன பேசப்படலாம்; எப்படிப் பேசப்பட வேண்டும் என்பதை பேரவை விதி 92 குறிப்பிட்டுச் சொல்கிறது. 92 (3)-லே "Use of offensive expression about the conduct or proceedings of the Parliament or any State Legislature or of the Other House" கூடாது என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் பார்லிமெண்டிலோ இன்னொரு சட்டசபையிலோ நடைபெற்ற நடவடிக்கைகளைப் பற்றிகூட நாம் இங்கே பேசலாம். ஆனால் புண்படுத்தப்படுகிற வாசகங்களை மட்டும்தான் பயன்படுத்தக் கூடாது என்று இருக்கின்ற காரணத்தினாலே காவிரி நீர்ப் பிரச்சினை மட்டும் அல்ல, தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் அரசு சட்டமன்றத்திலே அதனுடைய பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறதே அரசியல் சட்டத்திலே அனுமதிக்கக்கூடியது என்பதைப் பற்றியும் பேசுவதற்கு இங்கே உரிமை உண்டு. நீங்கள் அதை அனுமதிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்** : தலைவர் அவர்களே, நண்பர் அவர்கள் படித்த விதியைச் சற்று ஆழமாகப் படிக்கும் படி நான் கேட்டுக் கொள்கிறேன். "........which is within the cognizance of the Speaker". என்று தானே இருக்கின்றதே ஒழிய அகில இந்தியாவிலும் பாராளுமன்றத்திலும் நடக்கக்கூடிய அனைத்து சம்பவங்களைப் பற்றியும் சட்டமன்றத்திலே பேச வேண்டும் என்பதில்லை. மேலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கர்நாடக முதல்வர் அவர்களுக்கு எழுதிய கடிதங்களைப் பாராளுமன்றத்திலே கூட காதல் கடிதங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். நாங்கள் கூட கலைஞர் அவர்களின் காதல் வெற்றியடைய வேண்டும் என்றுதான் நினைத்தோம். ஆனால் இப்போது அந்தப் பெண் போய் அதைவிட அழகான பெண் வந்திருக்கிறது. ஆகவே அதில் ஒன்றும் வந்துவிடப்போவதில்லை. அந்தக் கல்யாணம் வாழ வேண்டும் என்று வாழ்த்தி.... .. (கூச்சல்—குழப்பம்).



**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எல்லோரும் உட்காருங்கள். திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னதால்—முன்னால் இருந்தது அழகான பெண்ணா, பின்னாலே வந்திருக்கிறது அழகான பெண்ணா என்பதை நாம் ஆர அமர ஆராய்ந்து முடிவு பண்ணுவோம். ஒழுங்குப் பிரச்சினை தொடர்பாக திரு. வரதராசன் அவர்கள் கூறியதற்கு விடை. பேரவைத் தலைவர் அவருக்குள்ள அதிகாரங்கள் தொடர்பாக — அரசியல் சட்டத்தில் சில பகுதிகள் குறிப்பிடப்படுகின்றன—அரசியல் சட்டத்தில் பேரவைத் தலைவருக்கு அதிகாரங்கள் பற்றி என்னென்ன குறிப்பிடப்படுகின்றனவோ அவை பற்றித்தான் இங்கு விவாதிக்கலாமே தவிர அரசியல் சட்டத்தைப் பற்றியோ அல்லது அரசியல் சட்டம் சார்பாக பிற மாநிலச் செய்திகளையோ விவாதிக்க முடியாது என்பதை திரு. வரதராசன் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன். அடுத்து திரு. அப்துல் லத்தீப்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) கர்நாடக முதல்வரோடு காவிரி நீர்ப் பிரச்சினை பற்றித் தமிழக முதல்வர் நடத்த இருக்கும் பேச்சு வார்த்தை குறித்து—தொடர்ச்சி.

**THIRU M. ABDUL LATHEEF**: Honorable Mr. Speaker, Sir, An important pertinent constitutional question has been raised to attract the attention of not only this House but also the public who are concerned with some developments which affect directly the constitutional competence of a House similar to this one. One question that is of direct concern which is within the realm of cognizance by individual as well as all the Members of the House, is the proposed talk between the Honorable Chief Minister of Tamil Nadu and the Honorable Chief Minister of Karnataka. This arrangement was contemplated because a solution to the long pending Cauvery dispute was evading, because of the non-existence of a popular Government or involvement of the officials in the talk. Therefore, it was rightly thought that a direct bilateral talk should be held between the two Chief Ministers. That will have a direct effect and this will have a popular approval of the people of both the States. Therefore, after a long time, we were happy that on the 28th of this month, a solution will be found to the satisfaction and pleasure of the people of Tamil Nadu and to the much relief of the people of Tamil Nadu. Therefore, a question, a pertinent question, that has been raised by the honorable Member Mr. Pon. Vijayaraghavan was in the absense of popular Government, what is the alternative arrangement that the Government of Tamil Nadu is contemplating. That is the question we would like to know and it is our right.

The other question is, a vacuum has been created because of the application of Article 356 of the Constitution. Now Article 356 is an Article that can be used or misused against any State Legislature and

(திரு. எம். அப்துல் லத்தீப்) [1989 ஏப்ரல் 22

against the State Government. This is a State Legislature and this is a State Government and so, what has taken place because of the misuse or misapplication of Article 356 (Interruptions). It is definiteley my opinion ..... (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. லத்தீப் (குறுக்கீடுகள்) காவிரிப் பிரச்சினையோடு மட்டும் நிற்கவேண்டும். —(குறுக்கீடு). வேண்டாம், வேண்டாம்.

**THIRU M. ABDUL LATHEEF**: Hon Mr. Speaker, for everything there may be two opinions,........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்போது நாம் 356-ஐப் பற்றி ஆராய்ச்சி செய்யவில்லை. காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி மட்டும்தான் பேசுகிறோம்.

**THIRU M. ABDUL LATHEEF**: Mr. Speaker, you had a patient hearing from all the people. For everything particularly the constitution there may be opinions, not only two opinions .......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்போது நீங்கள் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றித் தமிழ்நாடு அரசு என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்).

**THIRU M. ABDUL LATHEEF** : I ask the Honorable Chair, not to allow any body to interrupt me.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நானே அவரை ஒழுங்குப்படுத்திக் கொண்டு இருக்கும்போது நீங்கள் திரும்பத் திரும்ப எழுந்து கொண்டிருப்பது நல்லதல்ல. (குறுக்கீடு) நானே அதைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இப்படித்தான் பேசவேண்டும் என்று (குறுக்கீடு). இப்போது எல்லோருமே எழுந்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தால், எல்லோரும் எழுந்து இப்படி ஆரம்பித்தால் இந்த அவையிலே என்ன முடிவு என்று உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் உட்காரவேண்டும்.

**THIRU M. ABDUL LATHEEF**: I have a right to express my opinion These people may have different opinions and let them have it. But so far as the provisions of the Constitution are concernd, not only the members of this House but also the citizens of this country have got every right to express their opinion. Submission to the provisions of the Constitution is different, but the interpretation of the Constitution is different. In this country everybody has got a right and particularly as a Lawyer, as an Advocate, I have got a right to express my opinion



1989 ஏப்ரல் 22] (திரு. எம். அப்துல் லத்தீப்)

on a provision or provisions of the Constitution. I have got every right...........(Interruptions).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தயவு செய்து திரு. அப்துல் லத்தீப் அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றித் தமிழக அரசு என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும்.

**THIRU M. ABDUL LATHEEF**: Mr. Speaker, Sir, I am just explaining as to how it is closely connected with the issue that has been raised in this House. Should you not have a patient hearing, should you not get a patient hearing from me, and particularly from this friend. What I was telling is, it has not only affected the Government of Karnataka and the State of Karnataka because of the application of certain provisions of the Constitution, Tamil Nadu is also affected not Karnataka alone. Our Honorable Chief Minister was expected to be in Bangalore on the 28th of this month. Preparations are afoot but all have become waste. This House is competent to discuss. Now what my Honorable friend, the Deputy Leader of the Congress Party has submitted to this House is, there is a Government in Karnataka, if not an elected Government, a popular Government, but a Presidential Government in Karnataka. A decision was taken to have a dialogue on the 28th of this month because of the continuance of the popular Government in Karnataka. Now in the absence of the popular Govt. particularly when an opportunity was not given to the popular Govt. to assess and to just prove its majority even on the floor of the House..............

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் பேசவும். (குறுக்கீடு). இதைப் பேசிக் கொண்டே இருக்க முடியாது, எல்லோரும் உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்லியாகிவிட்டது. தயவு செய்து உட்காருங்கள்.

**திரு. எம். அப்துல் லத்தீப்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. அப்துல் லத்தீப் அவர்கள் உட்காரலாம். சொல்ல வந்ததைச் சொன்னால் நல்லது. தொடர்ந்து இதையே நாம் வாதம் ஆக்கிக் கொண்டு இருந்தால் அவையை நடத்த முடியாது. கொஞ்சம் எல்லோரும் கவனிக்க வேண்டும். எல்லா பேச்சுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) எவ்வளவோ

நேரம் கொடுத்து ஆகிவிட்டது. பேசி முடிக்க வேண்டியது தானே. திருப்பித் திருப்பிப் பேசிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்.

**திரு. எம். அப்துல் லத்திப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மைக்காரர்கள் ஏன் வேண்டும் என்றே எனக்கு இந்த மாதிரிச் செய்கிறார்கள்?

Mr. **SPEAKER** : it is under the direction of the Speaker (Interruption) அப்படி மைக்காரர்களை எல்லாம் குற்றம் சொல்லக்கூடாது.

THIRU M. ABDUL LATHEEF: Mr. Speaker, Sir, I am on a point of order. This matter is of direct concern to the people of Tamil Nadu and I say that if such mis-application persists, the Government in the Centre will be............ (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவைகள் எல்லாம் அவை நடவடிக்கை பதிவேட்டில் ஏறாது.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டுக்கு முன்பு அரசியல் சட்டப் பிரிவு 356-ஐப் பற்றி யாருமே பேச முடியாது, 1977-க்கு முன்பு 1977 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலம் கலைக்கப்பட்டு 7, 8 மாநிலங்களை ஒன்றாகச் சேர்ந்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த போது அவர்கள் முதன் முறையாக நீதிமன்றமே ஏற்றுக்கொள்ளலாம், விவாதிக்கலாம் என்பதை 1977-ல் அவர்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். 1988 ஆம் ஆண்டு நம்முடைய சட்டப் பேரவையில் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு உச்சநீதிமன்றத்திற்கு நேராகச் சென்றார்கள், ரிட் மனு தாக்கல் செய்தார்கள்; அரசியல் சட்டப் பிரிவு 32-ன் கீழ், அதாவது ஜீவாதார உரிமை எம்.எல்.ஏ., பதவி என்று அவர்கள் வாதத்தை வைத்து உச்ச நீதிமன்றமும் அதை ஜீவாதார உரிமை என்று ஏற்றுக்கொண்டு 1988-ல் இங்கே இருந்து சென்றவர்களுடைய மனுவை ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே இந்த அவையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஜீவாதார உரிமை எம். எல். ஏ.-க்களுக்கு, அதைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அவைத் தலைவருக்கு உண்டு. அதாவது எம். எல். ஏ. பதவியினுடைய உரிமையும் உங்களுடைய கையில் தான் இருக்கிறது. (குறுக்கீடு) இங்கே பேசும் போது இடைவெளி இருப்பதாக, ஒரு அரசாங்கமே இல்லை என்ற பொருள்பட அவர்கள் சொல்லும்போது அரசியல் சட்டப் பிரிவு 163 "There shall be a Council of Ministers to aid and advise the Governor in exercise of his functions." என்று வந்து விட்டால்



அதை யாருமே தொட முடியாது. ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை. "There shall be a Speaker" என்று சொன்ன காரணத்தால் தான் நானே கடைசி வரை ஸ்பீக்கராக இங்கே இருந்தேன். "The speaker shall not vacate office என்று எழுதப்பட்டு இருக்கிறது 179-ல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் கவனிக்கவேண்டியது. காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? (குறுக்கீடு) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள், நான்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேனே. நானே சொல்லி விட்டேன், காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டும் என்று (குறுக்கீடு) மற்றவர்கள் உட்காரலாம்.

**திரு. பி. எச். பாண்டியன் :** நான் சொல்வதற்குள்ளாக ஏன் அவசரப் படுகிறீர்கள்? இந்த அவையிலே அரசியல் சட்டத்தைப் பற்றிப் பேசாமல் வேறு எங்கே பேசுவது? இந்த அவையிலேதான் அரசியல் கருத்துக்களைப் பேச முடியும். (குறுக்கீடு) இது முறையுல்ல. (குறுக்கீடு) முடியாது, நோ, நோ, உங்கள் ஜனாதிபதியே நினைத்தாலும் முடியாது. (கூச்சல் குழப்பம்), அவரை ரிமூவ் பண்ணவில்லை. வெஸ்ட் பெங்காலிலே ரிமூவ் பண்ணவில்லை. இவர்களுக்கு இதெல்லாம் தெரியாது. (கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஒன்றை நன்றாகக் கவனிக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் இப்படி எழுந்து நின்று பேசிக்கொண்டிருப்பது முறையல்ல. நான்தான் அவருக்குச் சொல்லியிருக்கிறேனே. திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி மட்டும் இப்போது பேச வேண்டும். (குறுக்கீடு) அந்த ஆராய்ச்சியெல்லாம் இப்போது வேண்டாம் (குறுக்கீடு) இப்போது அதைப்பற்றிப் பேசவேண்டாம். இப்போது நீங்கள் காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிப் பேசுங்கள். காவிரி நீர்ப் பிரச்சினை பற்றித் தமிழக அரசு என்ன செய்யவேண்டுமென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் என்று எத்தனையோ முறை சொல்லி விட்டேன். அப்படியும் திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் நின்றுகொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) நான் "ஸ்பீக்கரா" அல்லது நீங்கள் "ஸ்பீக்கரா" (குறுக்கீடு) அவரிடம் காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிப் பேசச் சொல்லிவிட்டேன், அப்புறம் எதற்குப் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்? காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிப் பேசுகிறார் என்று நான் தெளிவுபடுத்தி பிறகும் இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம் (குறுக்கீடு) இப்போது நீங்கள் உட்கார முடியுமா, முடியாதா? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, அரசியல் சட்டத்தில் ''There shall be a Governor என்று இருக்கிறது. ''There shall be a President'! என்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் அனை வரும் உட்கார வேண்டும்.

**திரு. பி. எச். பாண்டியன் :** இந்த அவைக்காகச் சொல் கிறேன். எனக்கு இதிலே ஒன்றும் லாபம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது லாப நட்டத்தைப் பற்றிப் பிரச்சினை கிடையாது. திரு. பி.எச். பாண்டியன் அவர்களும் உட்கார வேண்டும். (குறுக்கீடு) எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும். தயவுசெய்து எல் லோரும் உட்காருங்கள். தயவு செய்து திரு. பி. எச். பாண்டி யன் அவர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) இது தொடர்பாக தமிழக முதல்வர் அவர்கள் ஏதேனும் பதில் சொல்ல விரும்பினால் சொல்லலாம். இல்லாவிட்டால் அடுத்து அலுவலுக்குச் செல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காரலாம். இப்போது '' Point of order '' எல்லாம் கிடையாது. எல்லோரும் உட்காருங்கள். திரு. கே.கே.எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு).

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 9 ஆண்டுக் காலம் அந்த நாற்காலியிலே இருந்த காரணத்தினால். . . . (கூச்சல், குழப்பம்) நான் இதைக்கூட சொல்லக்கூடாதா?

**மாண்புமிகு யேரவைத் தலைவர் :** நீங்கள் ஒரு மணித்துளி உட்காருங்கள். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர் களே, இப்போது அவர் சொன்னதிலே என்ன தப்பு இருக்கிறது? (குறுக்கீடு) இல்லை. நான் கேட்கிறேன், அவர் சொன்ன திலே என்ன தப்பு இருக்கிறது? (குறுக்கீடு) அப்படியானால் எவ்வளவு காலம் இருந்தார் என்கிறீர்கள்? (குறுக்கீடு) எத்தனை மாதங்கள் இருந்தார்? (குறுக்கீடு) இப்போது, என்ன கணக்கிலே தகராறா அல்லது அவர் இருந்ததிலே தகராறா? (சிரிப்பு).

**திரு. கே. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, எங்களுடைய பேச்சுரிமையையும் எங்களையும் பாது காக்கவேண்டியது பேரவைத் தலைவருடைய கடமை. (குறுக்கீடு).



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள், எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும்.

(முற்பகல் 10-50.)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்த அவையினுடைய நடைமுறைக்கு ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படுகிறது. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்பதற்கும் அவையினுடைய உரிமை, அவையில் பேசப்படக்கூடிய கருத்துக்கள் என்பதற்கும் இடையே ஒரு சிறு வேற்றுமை உண்டு. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்பப்படுகிறபோது சில விதிகளுக்கு உட்பட்டுத்தான் கருத்துக்களைப் பேசவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் அந்த நேரத்தில் இந்த அவையில் அரசியல் சட்டத்தைப் பற்றியோ அல்லது அரசியல் சட்டத்தைப் பயன்டுத்துகிற மத்திய அரசினுடைய முறை பற்றியோ விவாதிக்கக் கூடாது என்பது இந்த பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற அந்தத் தலைப் பில் வருகிறபோது தான் விவாதிப்பதற்கு உரியதாக இல்லேயே தவிர, இந்த அவையிலே அதற்காக தனித் தீர்மானத்தையே கொண்டுவந்து அரசியல் சட்டத்தைப் பற்றி எந்த அளவுக்கும் விவாதிக்கலாம். நாட்டு நடப்பைப்பற்றி விவாதிக்கிறபோது மத்திய அரசினுடைய செயல்முறை நம்மைப் பாதிப்பது பற்றி மிக விரிவாகச் சொல்வதற்கும் உரிமை உண்டு. கண் டிப்பதற்குக் கூட உறுப்பினர்களுக்கு, கட்சித் தலைவர்களுக்கு நிச்சயமாக உரிமை உண்டு. ஆனால் இந்த நேரத்தைப் பயன் படுத்துகிறபோது பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருந்தால்தான் கருத்து விளக்கம் கிடைக்கும் என்பதால் இந்த விவாதத்தை இந்த எல்லைக்குள் நிறுத்து கிறோமே தவிர அவைக்கு உரிமை கிடையாது என்று சொல்வது சட்டமன்றத்தினுடைய உரிமையைப் பறிப்பதாக ஆகும். இந்த அவைக்கு அந்த உரிமை உண்டு. அதற்குரிய நேரத்தில் அல்லது அதற்குரிய தலைப்பில் விவாதிக்கிறபோது, அந்தக் கருத்தை விளக்கமாக விவாதிப்பதற்கு நமக்கு வாய்ப்பு இருக் கிறது. மாறுபட்ட கருத்து ஏறபடுவதற்குக் காரணம் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற அந்த எல்லைக்குள் இருக்க வேண்டிய நேரத்தில் இந்த அவைக்குள் அதுபற்றிப் பேசப்படக் கூடிய உரிமை தடுக்கப்படுகிறது என்ற எண்ணம் வரக்கூடாது என்பதற்காகவே நான் தங்கள் மூலமாக இந்தக் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்** மாண்புமிகு தலைவர் அவர் களே, நான் சொல்ல வந்தது—நீங்கள் ஏதாவது உத்தரவிட் டால் I should not defy என்ற காரணத்தால்-நான் அந்த இடத்தில் இருந்தவன் என்பதற்காகத்தான்—அதைச்

சொன்னேன். நான் பேசவேண்டாம் என்றால் மற்ற உறுப்பினர்கள் மாதிரி என்னால் இருக்க முடியாது. ஏனென்றால் அங்கே இருந்து கட்டுப்படுத்திவிட்டார்கள். காவிரி நீர்ப் பிரச்சினையை யாரோடு பேசுவது என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அதனால்தான் நான் சொன்னேன். இங்கே இருந்து அமைச்சரோ அல்லது முதலமைச்சரோ போய்ப் பேச வேண்டுமானால் அங்கே அரசாங்கம் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது பலருக்கு பல கருத்து உண்டு. நான் சொல்வது என்னுடைய சொந்தக் கருத்து அல்ல. அதனால் தான் புத்தகத்தில் இருப்பதைச் சொன்னேன். There shall be a Council of Ministers அதை ரத்து செய்ய முடியாது. There shall be a High Court அதை ரத்து செய்ய முடியாது. ப்ரொவிஷன் இருக்கிறது. There shall be a Supreme Court. அதை ரத்துச் செய்ய முடியாது. There shall be a Governor. அதை ரத்துச் செய்ய முடியாது. There shall be a Parliament. அதை ரத்துச் செய்ய முடியாது Article 168—There shall be a Legislative அதை எந்தக் காலத்திலும் ஒழிக்க முடியாது. இந்த அடிப்படையைத் தான் நான் சொன்னேன். சட்டமன்றத்தைக் கலைப்பது வேறு, அமைச்சரவையை நீக்குவது வேறு. Art. 163. ன்படி இன்றைக்கு ஆட்சி இல்லை; அரசாங்கம் கிடையாது. ஆகவேதான் போய் யாரோடு பேசுவது? அதனால் நீங்கள் போய்ப் பிரதமரோடு பேசுங்கள். இந்த சட்ட விளக்கத்தைச் சொன்னேன். நான என்னுடைய சொந்தக் கருத்தை வெளியிடவில்லை.

இன்னொன்று, 100 ரூபாய் கோர்ட் ஃபீ உச்ச நீதிமன்றத்தில் கட்டினால் இன்று பிற்பகல் வாதிடலாம். ஜனாதிபதி பற்றியும் பேசலாம்; பிரதமர் பற்றியும் பேசலாம்; எல்லோரைப் பற்றியும் பேசலாம். 100 ரூபாய்தான் கட்ட வேண்டும். இங்கே நாம் சும்மா பேசுகிறோம். (குறுக்கீடு) 200 ரூபாயா சரி. நம்முடைய திரு. கணபதி அவர்கள் இரண்டு ரூபாய் (குறுக்கீடு) கட்டினால் போதும் என்கிறார்கள். ஆகவே, இந்த அவைக்கு அரசியல் சட்டம் பற்றி விவாதிக்க உரிமை இருக்கிறது. 368-வது பிரிவுக்கு அமெண்ட்மென்ட் இருக்கிறது. திருத்தம் கொண்டுவரும்போது அரசியல் சட்டத்தை விவாதித்துத்தான் ஆகவேண்டும். ஆகவே, கர்நாடகத்தில் அரசாங்கம் இல்லாவிட்டாலும் நீங்கள் போய் இந்தச் சட்டத்தைச் சுட்டிக்காட்டிப் பேசலாம். ஆனால் கர்நாடகத்திற்குப் போக முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கத்திடம் முறையிடக் கூடாது. இந்த முதலமைச்சர் போய் அங்கே இருக்கிற ஆளுநரிடம் பேசக்கூடாது. இந்த முதலமைச்சர் அங்கே இருக்கிற சீப் செக்ரட்டரியோடு பேசக் கூடாது. தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கம் இருக்கிறபோது, முதலமைச்சர் அங்கே போய்ப் பேசக்கூடாது. (குறுக்கீடு) கவர்னருக்கு யார் எய்டு? யார்



அட்வைஸ் பண்ணுகிறார்? எந்தச் சட்டத்தில் அட்வைசரை நியமிக்க வழிவகைச் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவேதான் 'லக்குனா'.

1977 ஆம் ஆண்டு ஒரு வழக்கில் தீர்ப்பைச் சொல்லி இருக்கிறார்கள். உச்சநீதிமன்றம் தலையிடலாம். நாளைக்கே நீதிமன்றம் நினைத்தால் தலையிட்டு, சட்டமன்றத்தை மீண்டும் கூட்டலாம். திரு. பொம்மை அவர்கள் வழக்குத் தொடருவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். வழக்கு எப்படியோ தெரியாது. ஆகவே, காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களை பிரதம அமைச்சரோடு போய்ப் பேசுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். எக்காரணத்தைக் கொண்டும் தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கத்தைச் சந்திக்கக்கூடாது. நானும் சேர்ந்துதான் உங்களை முதலமைச்சர் ஆக்கியிருக்கிறோம். காரணம் எனக்கும் நீங்கள் தான் முதலமைச்சர். என்னுடைய ஜீவாதார உரிமை— கலைப்பது என்றால் பேசக்கூடாது என்று சொல்கிறார்கள். சட்டமன்றம் என்றால் பாண்டியனையும் சேர்த்துத்தானே, என்னைத் தவிர மற்றவர்களைக் கலைத்தால் நான் சும்மா இருப்பேன். ஆகவே இதுபோன்ற விவகாரங்களில் நாம் கட்சிக் கசப்பு இல்லாமல் அமர்ந்து பேசுவோம். கட்சி கிடையாது. நான் என்ன கட்சி குறித்தா பேசுகிறேன். இது என்ன காங்கிரஸ் அரசியல் சட்டமா? இந்திய அரசியல் சட்டம். ஆகவேதான் பேசுகிறேன். (கூச்சல்-குழப்பம்).

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இங்கே சட்டசபையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பெரும்பான்மையானவர்களாகிய நாங்கள் அமைதியாக இருக்கிறோம். முதலமைச்சர் கட்டளைக்கிணங்க நாங்களும் அப்படி அமர்ந்திருக்கிறோம். உங்களுடைய கட்டளையையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். யாராவது சுவையாகப் பேசினால் அவ்வாறு பேசுவதைக் கேட்க நாங்கள் ஆவலாக இருக்கிறோம் ஆனால் யார் பேசினாலும் உடனே நான்கு பேர் எழுந்து நிற்பது கோஷம் போடுவது, அதைத் தடுப்பது என்றால் அது அவ்வளவு நன்றாக இருக்காது. மேலே இருந்து மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நன்றாகப் பேசுங்கள். உள்ளத்தில் ஒளி இருந்தால் வாக்கில் ஒளி வரும். ஒளி இல்லாவிட்டால் ஓலம் வரும். எனவே உள்ளத்திலே ஒளி ஏற்றி வைத்து சட்டசபைக்கு வரவேண்டும். அவ்வாறு வந்து, பேசுவதை நாங்கள் கேட்கத் தயார். நாங்கள் Silent audience அது எங்களுக்கு விதிக்கப்பட்ட விதி. ஒரு ஐந்தாண்டுகளுக்கு நாங்கள் இப்படித்தான் உட்கார்ந்து இருக்கவேண்டும். இது ஏதோ ஒரு விதி. (சிரிப்பு) எனவே பணிவோடு நான் எல்லோரையும் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். யார் பேசினாலும் பொறுமையாகக் கேட்டுவிட்டு, பிறகு சபாநாயகருடைய அனுமதி பெற்ற பிறகு எழுந்து நின்று நீங்கள்

பதில் பேசினால் கேள்வி-பதில் என்ற வகையில் அது சுவையாக இருக்கும். ஆனால் எப்போது பார்த்தாலும் ஒங்காரக் கூச்சல் என்றால் அது எப்படி இருக்கும். நான் கேட்கிறேன். நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் யார் பேசினாலும் எழுந்து நிற்கிறார். அது எந்த முறை என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்).

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய பேச்சுக்களை எல்லாம் நாங்கள் கவனித்துக் கொண்டிருக்கிறோம். காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிப் பேசவேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதற்குள்ளாகத்தான் நாங்கள் பேசுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் சொல்லிக்கொள்வதெல்லாம் எங்களுடைய கட்சியின் கருத்து காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில்—எத்தனையோ அரசாங்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். அவருடைய காலத்தில் பல அரசாங்கங்கள் மாறி இருக்கின்றன. இங்கே கூட மாறி இருக்கிறது. ஆகவே அரசாங்கம் மாறுவதிலே அக்கறை இல்லாமல் எங்களுடைய முதலமைச்சருடைய கருத்துப்படி எந்த அரசாங்கம் இருந்தாலும், போனாலும், டிரிபூனலுக்கு இந்தப் பிரச்சினை போகும் என்று சொன்னால் தான் ஒழுங்காக நம்முடைய தஞ்சாவூர் மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும். எனவே அந்த வகையில் அந்த மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகையில் இந்த அரசுக்கும் அக்கறை இருக்கும் என்று நான் நம்புகிறேன்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது திரு. குமரி அனந்தன் அவர்கள்..........(குறுக்கீடுகள்)............ திரு. குமரி அனந்தன் அவர்கள் மட்டும் பேசலாம், ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள்.

**திரு. குமரி அனந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைதியாக முன்னாள் சபாநாயகர் பேசுகிற நேரத்தில் சொன்ன ஒரு கருத்தை, வேறு வகையில் அல்ல, அதனுடைய விளக்கமாக எனக்குத் தெரிந்த அளவில் என்னுடைய உள்ளத்தில் ஒளி.......

**மாணபுமிகு பேரவைத் தலைவர் :** திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இனியும் அதுபற்றி விளக்கமாகப் பேச வேண்டுமா? இதற்காக இன்னும் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டுமா? அவர் சட்டத்திலிருந்து மேற்கோள் காட்டி ஒரு கருத்தைச் சொன்னார். அதற்கு ஒரு விளக்கம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் வாதம் திசை திரும்புமா' திரும்பாதா ?





**திரு. குமரி அனந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டத்தில் இரண்டு ஷரத்துக்களை எடுத்து அவர்கள் சொன்னார்கள். நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை. ஒன்று உரிமை, அதாவது அந்த 'கவுன்சில் ஆஃப் மினிஸ்டர்ஸ்' இருக்கவேண்டும். என்று சொல்கிற உரிமை. எனவே..........(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து திரு. பூவராகன் அவர்கள் உட்கார வேண்டும்.

**திரு. குமரி அனந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு உரிமை, அது இல்லாதது ஒரு அரசல்ல. அந்த உரிமை தொடர்ந்திருக்கவேண்டும். 'கவுன்சில் ஆஃப் மினிஸ்டர்ஸ்' தொடர்ந்து இருக்கவேண்டும் என்று சொன்னாரே அதற்கு ஒரு சின்ன விளக்கம் எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். ஒரு மாணவர் விடை எழுதுவதற்கு பரிட்சை ஹாலில் இரண்டு மணி நேரம் உட்கார்ந்து எழுதுவதற்கு உரிமை பெற்று இருக்கிறான். அது அவனுடைய உரிமை. ஆனால் அவன் இன்னொருவரைப் பார்த்துக் காப்பி அடித்தால் அவன் வெளியேற்றப்படுவான். இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டது. அதைப் பின்பற்றாத காரணத்தால் தான் வெளியேற்றப்படுவான். கறி சமைத்துச் சாப்பிடுவதற்கு உரிமை உண்டு. ஆனால் மனிதக் கறியைச் சமைத்து சாப்பிடுவதற்கு உரிமை இல்லை. இந்த இரண்டும் வேறுபட்டவை. (குறுக்கீடுகள்).

*(முற்பகல் 11-00.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலுரை. (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்திற்காகப் பேசுவது என்றாலே இட ஒதுக்கீடு மாத்திரம் அல்ல. நேரம் ஒதுக்கீடு கூட சரியாகக் கிடைப்பதில்லை. என்பது பிற்படுத்தப்பட்டோருடைய விதி போலும். இருந்தாலும், இங்கே எழுப்பப்பட்ட மிக முக்கியமான பிரச்சினைக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவை முன்னவர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, ஒழுங்குப் பிரச்சினையிலே சொல்லப்படவேண்டிய கருத்துக்கள் அல்லது ஒரு தலைப்பை மையமாக வைத்து விவாதிக்கப்படுகின்ற நேரத்திலே சொல்லப்படவேண்டிய கருத்துக்கள், இவை இரண்டுக்கும் வேறுபாடு உண்டு.

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

இதே மன்றத்தில் மாநில சுயாட்சிக் குறித்து 1974-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக்கழக அரசு ஒரு தீர்மானத்தை கொண்டுவந்தபோது, அரசியல் சட்டத்திலே திருத்தம் வேண்டுமா, வேண்டாமா, என்பது குறித்து காரசாரமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. எல்லா உறுப்பினர்களாலும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்தத் தீர்மானத்தையொட்டி நடைபெறுகிற விவாதத்தில் அரசியல் சட்டத்தைப் பற்றிப பேசுவது சரியானது, முறையானது, யாரும் தடுக்க இயலாதது. இன்றைக்கு ஒரு ஒழுங்குப் பிரச்சினை, கர்நாடகத்திலே இன்றைக்கு முதலமைச்சர் இல்லேயே, அரசே இல்லேயே, காவிரிப் பிரச்சினை குறித்து எப்படிப் பேசப்போகிறீர்கள். யாரோடு பேசப்போகிறீர்கள் என்ற அடிப்படையிலே எழுந்த காரணத்தினாலே, அதையொட்டி ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியவர்கள் அவரவர்களுக்குள்ள திறமையை வைத்து, சொற்சாதுர்யத்தை வைத்து, சொல்ல வேண்டிய கருத்துக்களை எல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். இப்படிப்பட்ட கருத்துக்களை எல்லாம் சொல்லக்கூடாது என்று வாதிட்ட காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் கூட, அவரும் சொல்ல வேண்டிய கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார் என்று நான் நம்புகிறேன். நான் அந்தக் கருத்துக்களை பற்றியெல்லாம் விமர்சிக்க, மீண்டும் விவாதிக்க விரும்பவில்லை.

28 ஆம் தேதி அன்று, திரு. பொம்மை அவர்களோடு, கர்நாடக முதலமைச்சர் அவர்களோடு, காவிரிப் பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை, அதிலே கேரளத்தினுடைய முதலமைச்சர் அவர்களும், அதேபோல் புதுவையினுடைய முதலமைச்சர் அவர்களும் கலந்து கொள்வார்கள் என்று திரு. பொம்மை அவர்கள் எனக்கு அறிவித்திருந்தார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, பத்திரிகையிலே பரபரப்பான செய்திகள் வரத் தொடங்கின. கர்நாடக அமைச்சரவை கலைக்கப்படக் கூடும் என்ற செய்திகள் வெளி வந்தன. அப்போது நான் கர்நாடக அரசோடு தொடர்பு கொண்டபோது அவர்கள் சொன்னார்கள். அப்படி ஒன்றும், பத்திரிகையிலே செய்தி வந்தாலும் நிச்சயமாக அது கலைக்கப்படமாட்டாது. ஏனென்றால் அண்மையிலே மத்திய அரசு நியமித்த சர்க்காரியா குழு, மத்திய மாநில உறவுகளைப் பற்றி ஆராய்ந்த சர்க்காரியா குழுகூட, இதுபோன்ற நிலைமை வரும்போது, அதை சட்டசபையிலேதான் முடிவு செய்ய வேண்டுமே தவிர, கவர்னர் அறைக்குள்ளே முடிவு செய்யக்கூடாது என்று சர்க்காரியா கமிஷனே அறிவித்து இருக்கிறது. எனவே, 28 ஆம் தேதி சட்டசபையை நான் கூட்டுவதாக இருக்கிறேன். அப்போது நிச்சயமாக நான் தொடர்ந்து முதலமைச்சராக நீடிக்கக்கூடியக் வாய்ப்பு கிடைக்கும். எனவே





[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

28-ஆம் தேதி பேச்சுவார்த்தைக்கு எந்த இடைஞ்சலும் இருக்காது என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய வாய்ப்புக் கோளாறோ அல்லது காவிரிப் பிரச்சினைக்கு இன்னும் காலம் கனியவில்லை என்ற நிலையோ எனக்குத் தெரியாது. நிமிரென்று நேற்றையன்தினம், கர்நாடக மாநில அரசு கலைக்கப்பட்டுவிட்டதாக செய்தி வந்திருக்கிறது. நம்முடைய திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். அங்கேயுள்ள கவர்னரோடு பேசலாம் என்று சொன்னார்கள். திரு. பாண்டியன் அவர்கள் பேசக்கூடாது என்று தடுத்தார்கள். நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் இங்கே சொல்லும்போது, அதனால்தான் ஏற்கெனவே நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று தொடர்ந்து சொல்லி வருகிறோம் என்று குறிப்பிட்டார்கள். நடுவர் தீர்ப்புக்கு விடுவது என்பதை யாரும் குறுக்கே இருந்து தடுத்துக்கொண்டிருக்கவில்லை. நடுவர் தீர்ப்புக்கு விடுவதாக இருந்தால் கடந்த காலத்திலே ஓராண்டுக் காலம் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சி நடைபெற்றபோதே இந்த பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்கின்ற கோரிக்கை இருந்தே வந்திருக்கிறது. அப்போதே மத்திய அரசு, திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தலையிட்டு நடுவர் தீர்ப்புக்கு இந்தப் பிரச்சினையை விட்டிருக்கலாம். ஓராண்டுக் காலம் அதை நடுவர் தீர்ப்புக்கு விடாதது யாருடைய குறையும் அல்ல. மத்திய அரசினுடைய குறைதான். மத்திய அரசே நடுவர் தீர்ப்புக்கு விடுகின்றதில் காலம் கடத்துகின்ற காரணத்தினாலேதான் நாமாவது ஒரு முறை கர்நாடக முதலமைச்சர் அவர்களோடு பேசிப் பார்ப்போம் என்று அவர்கள் இடத்திலே கருத்துக் கேட்டேன். அவர்கள் பேசலாம் என்று சொன்னார்கள். டிரிபியூனலுக்கு விடப்படுகிற காரணத்தாலேயே—பைண்டிங்ஸ் என்பது பைண்டிங் அல்ல—இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்ற காரணத்தால் இறுதியாக டிரிபியூனலை வைத்துக் கொள்ளலாம்— ஒருமுறை, இருமுறை பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று எண்ணினோம். ஏனென்றால் 1975ஆம் ஆண்டில் இந்த ஆட்சி—அப்போது இருந்த ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பு திரு பாபு ஜெகஜீவன்ராம் அவர்களோடும், கேரளா, கர்நாடகா, புதுவை மாநில முதலமைச்சர்களோடும் தமிழக முதலமைச்சர் என்கின்ற முறையிலே நான்கலந்து பேசி ஒரு 90 சதவிகிதம் உடன்பாடு வந்தாகிவிட்டது. அதற்குப் பிறகு சில டெக்னிக்கல் பாயின்ட்ஸ்—எங்கே மீதம் செய்வது என்பதில்தான்.—அந்தப் பிரச்சினையில் தான் ஒரு குறுக்கீடு ஏற்பட்டது. அதைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று தான் எண்ணினோம். அந்த 90 பங்கு முடிவான ஒன்று. இடையிலே என்ன காரணத்தாலோ தாமதப்பட்டு அல்லது தயங்கப்பட்டு நிறைவேறாமல் போய்விட்டது. எனவே

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

அதிலிருந்து மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கலாம் என்ற ஆசையின் காரணமாக ஒரு முறை அல்லது இருமுறை பேசிப் பார்த்து இயலாவிட்டால் மத்திய அரசிடம் சொல்லி டிரிபியூனலை வற்புறுத்துவது என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. அதை ஏற்கெனவே நான் பலமுறை அறிவித்திருக்கிறேன். டிரிபியூனல் கேட்பது என்பதல்ல, ஓரிரு முறை பேசிப் பார்க்கலாம். இரண்டு மாநில மக்களின் சார்பான கருத்துக்களுக்கு வரட்டும் என்ற காரணத்தால்தான். ஏனென்றால் இப்பொழுது கர்நாடகாவில் இருக்கிற கட்சிகளே கூட—— இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சி காவிரிப் பிரச்சினைக்கா இந்த அரசின் சார்பில் பேசினால் கூட——அங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சி இந்த அரசின் சார்பாகப் பேச இயலாது. அந்த மாநிலத்திற்கு சார்பாகப் தான் பேச இயலும். இது எல்லா கட்சிக்கும் உள்ள நிலை. எனவேதான் ஒரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசோடு பேசுவதுதான் முறையாக இருக்கும். கவர்னர் அவர்களோடு பேசக்கூடாது. கடந்த முறை இங்கே கவர்னர் அலெக்சாந்தர் அவர்கள் இதைப் போல காவிரிப் பிரச்சினைக்காக ஒரு பேச்சுவார்த்தை நடத்தினார்கள. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அரசு என்ற காரணத்தாலோ என்னவோ அந்தப் பேச்சு முற்றுப் பெறவில்லை. இப்போது கூட கவர்னர் பல பிரச்சினைகளில், ஒன்றிரண்டு பிரச்சினைகளிலே, கொள்கை முடிவுகளை எடுத்திருந்தாலும் கூட பல பிரச்சினைகளில் கொள்கை முடிவுகளை எடுக்கக்கூடிய வாய்ப்பை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அரசுக்கு விட்டுவிட்டுதான் சென்றிருக்கிறார். அதை நான் பல எடுத்துக்காட்டுகள் மூலம் கூற முடியும். நேரம் இல்லாத காரணத்தால் கூறவில்லை. எனவே இன்றைய சூழ்நிலையில் அங்கு ஒரு முதலமைச்சர், சட்டமன்றம், அரசாங்கம் இல்லாத நேரத்தில் பேசுவது இயலாத காரியம். ஆனால் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் இங்கே பேசும்போது இப்போது வந்திருக்கிற பெண், அதைவிட நல்ல பெண் என்று சொன்னார்கள். எனக்கு இது நல்ல பெண்ணா, அது நல்ல பெண்ணா என்பதல்ல. எனக்குத் தேவை எல்லாம் காவிரிப் பெண்தான். சிரிப்பு காவிரி பெண்தான் நமக்கு வேண்டும். காவிரி பெண் வளமாக இருக்க வேண்டும் என்பது தான். இன்றைக்கு நமக்கு இருக்கின்ற பிரச்சினை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல இன்றைக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தால் தான்— கவர்னர் அவர்கள் நானே பேசி தீர்க்க முடியும்— நானே மக்கள் சார்பாக பேசித் தீர்ப்பேன்— அதை இங்குள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் ஒத்துக்கொள்ளும் என்கின்ற அளவுக்கு ஓர் உத்தரவாதத்தோடு அந்தப் பேச்சே முடிவான பேச்சாக இருக்கும்— அதிலே தான் சொல்கின்ற கருத்துதான் உறுதியான கருத்து, உத்தரவாதமான கருத்து என்கின்ற அளவுக்கு அந்தப் பேச்சுவார்த்தை அங்கே நடைபெற்று அவரும் ஒத்துக்கொள்வாரானால் நான் பேசுவதற்கு இப்பொழுதும் தயாராக இருக்கிறேன்.



[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

இன்னும் ஒரு 4, 5 மாத காலத்தில் மீண்டும் அங்கு ஒரு நேர்தல் நடைபெற்று, மீண்டும் ஓர் அரசு வரக்கூடும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாக இருக்கக்கூடும். அது காவிரிப் பிரச்சினையிலே தோழமை உணர்வுடன் நடந்து கொள்ளக் கூடிய அரசாக இருக்கக்கூடும் என்று நம்புகிறோம். அதற்கு இடையிலே நான் பிரச்சினையைத் தீர்க்கிறேன் என்று அங்குள்ள கவர்னர் உறுதியளிப்பாரானால் அவரோடு பேசத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஏம் அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எது எப்படியோ காவிரிப் பிரச்சினையில் தடை.............

**திரு. கே. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இங்கே நாங்கள் ஒரு முக்கியமான விஷயத்தை, காவிரித் தண்ணீர்ப் பிரச்சினை பற்றி நாங்கள் எடுத்துச் சொன்னோம். அந்த விஷயத்தின்மீது ஒரு சரியான முடிவை எடுக்க முடியாமல் போய் இருக்கக்கூடிய நிலையை நம் அரசாங்கம் உருவாக்கவில்லை—356-ஆம் பிரிவின் கீழ் ஓர் அரசாங்கத்தை--மக்களுடைய அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்வதை கண்டித்து எங்கள் கட்சி—நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).*

*(முற்பகல் 11-10).*

**திரு. எம். அப்துல் லத்தீப் :** தலைவரவர்களே, நாங்களும் மத்திய அரசைக் கண்டித்து, பிரிவு 356-ஐ தவறாகப் பயன்படுத்திய ஜனநாயகத்தின் குரல் வளையை நெறித்த காரணத்தால், மத்திய அரசை ஒழித்தே தீருவோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, வெளிநடப்புச்செய்கிறோம்.

*(முஸ்லீம் லீக்—எல் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).*

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, மத்திய அரசு 356-வது பிரிவைத் தவறாகப் பயன்படுத்தி, ஜனநாயக

முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைக் கலைத்ததைக் கண்டிக்கும் முறையிலே நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ.) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்].

**திரு. பொன். விஜயராகவன் :** தலைவரவர்களே, மரண தண்டனை இந்த நாட்டிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட தண்டனையானாலும், அந்தத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்னாலே ஒரு நீதிமன்றம் அவைகளை எல்லாம் விசாரித்துத்தான், அந்தத் தண்டனையை நிறைவேற்றுகிறது. அதை விட்டுவிட்டு, உடனடியாக மரண தண்டனையை நிறைவேற்றுவதில்லை. ஆகவே ஜனநாயகத்தை நிரூபிக்க வாய்ப்பு கொடுக்காமலேயே இந்த ஜனநாயகப் படுகொலையை செய்த மத்திய அரசினுடைய ஆட்சியைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(ஜனதா-வி கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே நாங்கள் எல்லாம் வெளி நடப்புச் செய்யாத காரணத்தால், கர்நாடகத்திலே ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளை ஆதரிப்பதாக அர்த்தமல்ல. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. பி. ஏச். பாண்டியன் :** தலைவரவர்களே, இந்திய அரசியல் சட்டத்தில் மத்திய அரசைக் கலைப்பதற்கு வழியில்லை என்ற தைரியத்தை வைத்துக்கொண்டு, அந்தச் சட்டப் பிரிவை வைத்துக்கொண்டு, மாநில அரசுகளை இப்படிக் கலைக்கின்ற முறையை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்திய நாட்டு மக்கள் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதற்காக அவர்களே சட்டத்தைத் திருத்தாமல், ஆட்சியைத் திருத்திக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் ;** தலைவரவர்களே, நமது முதலமைச்சரவர்கள் பேச வேண்டுமென்று சொன்னபோது, அங்கே ஒரு அரசு இருந்தது.............

**மாண்புமிகு பேரவைத் தலைவர், :** இதிலே எதற்கு விளக்கம் ? அதுதான் முடிந்து விட்டதே. அவரவர்கள் வெளி நடப்புச் செய்கிறவர்கள் எல்லாம் செய்துவிட்டார்கள். அவர் வெளி நடப்புச் செய்யவில்லை. அதற்கு என்ன பண்ணச் சொல்லுகிறீர்கள் ? கண்டிப்பாக வெளியே பிடித்துத் தள்ளவா முடியும் என்னாலே ? (சிரிப்பு) உட்காருங்கள், தயவு செய்து



## 4. கவன ஈர்ப்பு.

### வட ஆற்காடு மாவட்டத்தின் சில பகுதிகளில் காட்டு யானைகள் விளைவிக்கும் கேடுகள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், ப. சுந்தரம், அ. இராசேந்திரன் ஆகியோரில் ஒருவர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு, பெ. சு. திருவேங்கடம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, '' வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர், வாணியம்பாடி, போளூர், கலசப்பாக்கம் பகுதிகளில் காட்டு யானைகள் கூட்டமாக வந்து பயிர்கள், மரங்களை நாசம் செய்வதும் ஆட்களைக் கொன்று வருவதும் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை

1985-ஆம் ஆண்டு வரை வடாற்காடு மாவட்டத்தில் உள்ள காடுகளில் யானைகள் ஒன்றுகூட இருந்ததில்லை. முதன் முதலில் 1987-ஆம் ஆண்டு இறுதியில் குடியாத்தம் வனச் சரகத்தைச் சேர்ந்த காப்புக் காட்டில் ஒரு யானைக் கூட்டம் தென்பட்டது. இந்த யானைக் கூட்டம் எங்கிருந்து குடியாத்தம் வனக் காட்டிற்கு வந்தது என்று அறிய இயலவில்லை. ஆந்திர மாநில எல்லைக்கு அப்பால் யானைகள் விளைவித்த சேதங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட யானைகள் குடியாத்தம் சரகத்திற்கு வந்திருக்கலாம் என்று எண்ண சாத்தியக்கூறுகள் உண்டு. அது முதல் காட்டு யானைக் கூட்டங்களின் தொல்லைகள் இப் பகுதியில் தொடர்ந்து வந்துள்ளது.

2. இந்த காட்டு யானைகளைக் காட்டிற்குள்ளே விரட்டிவிட வனத்துறையினர் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டனர். பழக்கப்பட்ட யானைகளைக் கொண்டு காட்டு யானைகள் விரட்டப்பட்டன. ஆயினும், அவை உணவு தேடி மீண்டும் மீண்டும் காட்டிற்கு வெளியே வந்து பல இடங்களில் பயிர்களுக்குச் சேதம் விளைவித்தன. யானைகளை விரட்டியடிக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் முழுமையாகப் பலனளிக்கவில்லை.

[மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி]

3. 1988 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஒன்பது யானைகளைக் கொண்ட கூட்டமொன்று திருப்பத்தூர் நகரத்தையொட்டிய பகுதிகளில் தென்பட்டது. இக்கூட்டம் திருப்பத்தூர் வனக் கோட்டத்தைச் சேர்ந்த ஏலகிரி மலைப்பகுதிக்கு விரட்டியடிக்கப் பட்டது. இதுபோன்று ஆறு யானைகள் கொண்ட கூட்ட மொன்று எங்கிருந்தோ ஜவ்வாது மலைப்பகுதிக்கு வந்துவிட்டது. இந்த யானைக் கூட்டங்களால் ஏற்பட்ட பயிர் நாசத்தையும், உயிர்ச் சேதத்தையும் தடுப்பதற்கென்று ஒரு திட்டம் தீட்டப் பட்டது. இத்திட்டத்தின்படி மருந்துகளைக் கொண்டு யானை களை நினைவிழக்கச் செய்து அவற்றை காட்டிற்குள் எடுத்துச் சென்று விட்டுவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முறையில் இரண்டு காட்டு யானைகள் பிடிக்கப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்டு கோவை மாவட்டத்திலுள்ள இந்திரா காந்தி வனவிலங்குச் சரணாலயப் பகுதியில் விடுவிக்கப்பட்டன. இந்த யானைகளின் தாக்குதலினால் ஆறு நபர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

4. இதற்கிடையில் யானைகளை நினைவிழக்கச் செய்வதற்குத் தேவையான மருந்துகள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. இம்மருந்துகள் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட வேண்டும். இதற்காக மாநில அரசு, மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டதில் டேராடூனில் உள்ள இந்திய வனவிலங்கு நிறுவனம் (Wild life Institute of India) மருந்துகளை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொண்டுள்ளது என்றும் விரைவில் மருந்துகள் கிடைக்கக்கூடும் என்றும் தகவல் வந்துள்ளது.

5. காட்டு யானைகள் பயிர்களுக்கு விளைவிக்கும் நாசத்தை யும் உயிர்ச் சேதத்தையும் தடுப்பதற்கென்று வனத்துறை வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. யானைகளை நினை விழக்கச் செய்யும் மருந்துகள் கிடைத்தவுடன் யானைகளைப் பிடித்து காட்டுப் பகுதிக்கு அப்புறப்படுத்தும் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு இந்த தொல்லைகளிலிருந்து பொதுமக்க ளுக்கு முழுமையான நிவாரணம் அளிக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவ்ரவர்களே இங்கே அறிக்கையிலே பார்க்கின்றபோது எங்களுடைய பகுதியில் கலசபாக்கம் தொகுதியில், ஜவ்வாது மலைப் பகுதி, அதற்கு அருகி லுள்ள வீரலூர், மேலசோழங்குப்பம், நவாப்பாளையம், சிறு வள்ளூர், ஐயம்பாளையம், நேருநகர் போன்ற கிராமங்களில் பயிர்களை சேதப்படுத்துவதும் வாழைத் தோட்டங்கள், கரும்புத் தோட்டங்கள் போன்றவற்றை அழிப்பதும் வீடுகள் தாக்கப்பட்டு, உள்ளே இருக்கும் பொருள்களை சாப்பிடுவதும் கிணறுகளைத் தூர்ப்பதும் பம்பு செட்டுகளை சேதப்படுத்துவதும் போன்ற பல்வேறு காரியங்கள் மதயானைகளால் நடத்தப்படுகின்றன..





[திரு. பெ. சு. திருவேங்கடம்]

அதற்கு அரசாங்கத்திலே நஷ்ட ஈடு கேட்டால், மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் அரசிலே சட்டமில்லை என்று சொல்லுகிறார் கள். அண்டையில் உள்ள ஆந்திர அரசு அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இயற்றி இருப்பதாக அறிகிறோம். எனவே காட்டு யானைகளை அழிப்பதற்கு முன்னதாக, பாதிக்கப்பட்ட இந்த விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் சார்பில் நஷ்ட ஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாணபுமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் காட்டு யானைகள் நம்முடைய வனப் பகுதி யைச் சார்ந்தவையல்ல. இவையெல்லாம் அவ்வப்போது ஆந்திர மாநிலத்திலிருந்து இங்கே நுழைந்துவிடுகின்றன என்று நம்முடைய வனத்துறை தெரிவிக்கிறது. அங்கே அந்த யானைகளுக்குத் தொல்லைகள் நேருகிறபோது நம்முடைய தமிழ்நாட்டின் எல்லைக் குள் வந்துவிடுகின்றன. இங்கே நாம் அவைகளைப் பிடிக்க முயன் றால் நம்முடைய வனத்துறையின் கையிலே சிக்காமல் மீண்டும் அவை ஆந்திர எல்லைக்குள் போய்விடுகின்றன. மீண்டும் நம் எல்லைக்குள் வருகிறபோது விவசாயிகளுக்குத் தொல்லைக ஏற்படுகின்றன. ஏறத்தாழ 20 ஏக்கர் நிலத்தின் விவசாயப் பயிர்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவ ரின் அறிக்கையிலேகூட இருவர் இவைகளால் மரணமடைந் திருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டு மென்றும் அவர் சிபாரிசு செய்து இருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை நிராகரிக்கவில்லை. அந்த விவசாயிகளுக்கு நிச்சயமாக மாவட்ட ஆட்சித் தலைவர் கோரிக் கையை ஏற்று, இழப்பீடு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, காட்டு யானைகள் 9 வந்து திருப்பத்தூர் நகரத்தில்கூட பல இடங்களில் பயிர்களை நாசப்படுத்தியும் இரண்டு உயிர்களை யும் கொன்று அழித்திருக்கின்றன. அதைப் போலவே என்னு டைய தொகுதியைச் சேர்ந்த ஏலகிரியில்கூட பயிர்களை அழித்து, ஒரு உயிரையும் அழித்து இருக்கிறது. எனவே அவ்வாறு பயிர் களை இழந்தவர்களுக்கும், உயிர்களை இழந்த குடும்பத்தில் வாழுகிறவர்களுக்கும் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். அமைச்சர் அவர் களும் உடனடியாக உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு அவ்வாறு உதவி செய்ய ஏற்பாடு செய்வாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாணபுமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதறகான கோப்பு நகர்ந்து கொண்டிருக்கிறது ஆணையிட்டு நிச்சயமாக அந்த உதவித் தொகை வழங்கப்படும், என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 22

**திரு. அ. இராஜேந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் போளூர் தொகுதி படவேடு பக்கத்திலே 12 யானைகள் வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். 12 யானைகளும் இரவிலே ஊருக்குள் வந்து மக்களுக்குத் தொல்லை கொடுக்கின்றன. அந்த 12 யானைகளில் ஒரு தாய் யானை குட்டிகூட ஒன்று போட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்களெல்லாம் இதன் காரணமாக பீதி அடைந்திருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து மருந்து வந்து அதற்குப் பிறகுதான் இந்தத் தொல்லைக்குத் தீர்வு காணமுடியும் என்று இருக்கக் கூடாது. காரணம் மக்கள் தினந்தோறும் செத்து மடிகிறார்கள். வெளிநாட்டிலிருந்து மருந்து வருகிறவரை காத்திருக்காமல் வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த யானைகளைப் பொறுத்தவரை அவற்றைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் வனத்துறைக்கு இல்லை. ஆகவே, வெளிநாட்டிலிருந்து மயக்க மருந்துகளைக் கொண்டு வந்து எப்படியாவது அவற்றைப் பிடித்துவிடலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே சத்தியமங்கலம் காட்டில் நான் குறிப்பிட்டபடியும்—அங்கே பெரியார் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டபடியும் காட்டுக் கொள்ளைக்காரன் வீரப்பன் இருக்கிறான். அவன் கையிலே எப்படியோ இந்த யானைகள் சிக்கவில்லை. இங்கே மொத்தம் 22 யானைகள் இருப்பதாக வனத்துறை கணக்கிட்டிருக்கிறது. அதில் ஏறத்தாழ 4 யானைகள் பிடிக்கப்பட்டுவிட்டன. இரண்டு யானைகளை ஆனைமலை காட்டுக்கு அனுப்பி இருக்கிறார்கள். ஒரு குட்டியானை இங்கே அண்ணா உயிரியல் பூங்காவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னொரு யானை வடாற்காடு மாவட்டத்தில் உள்ள உயிரியல் பூங்காவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே யானைகளை எப்படியும் பிடிக்க வேண்டும் என்ற முயற்சியில் வனத்துறை தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

## (ஆ) சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் அம்மை நோயால் பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் உ. ரா. வரதராசன், செங்கை சிவம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அந்தக் கொண்டு வருவார்.



1989 ஏப்ரல் 22]

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை புறநகர் பகுதிகளில் அம்மை நோய் பெருகுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

பொதுவாக கோடைக்காலத்தில் தட்டம்மை மற்றும் சின்னம்மை நுண்ணுயிர் கிருமிகளால், காற்றின் மூலம் பரவுகின்றன. இந்நோய்கள் கடவுளின் சீற்றத்தால் ஏற்படுகிறது என்று பொது மக்கள் கருதுவதால் இவர்கள் இந்நோய்க்கு மருந்து தரவோ அல்லது மருத்துவ உதவியை நாடுவதோ இல்லை. இந்நோய் கண்டவர்கள் அதிகம் பாதிக்கப்படும்போது, மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைக்காக சேர்க்கப்படுகிறார்கள்.

2. தட்டம்மை : இந்நோய் சாதாரணமாக ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும்.

இந்நோயும் பிப்ரவரி மாதத்தில் ஆரம்பித்து மே மாதம் வரை அதிக நிலையில் தொடர்ந்திருந்து, பிறகு குறைகிறது. தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவ மனையிலும் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவ மனையிலும் இந்நோய்க்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் விவரப் பட்டியல் இணைப்பு 'அ' வில் தரப்பட்டுள்ளது.

3. **சின்னம்மை :**

இந்நோய் டிசம்பர் மாதத்தில் ஆரம்பித்து பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் மிக அதிகமாக ஏற்பட்டு, ஏப்ரல், மே மாதங்களில் குறையத் தொடங்குகிறது. சின்னம்மை பெரியவர்களுக்கு ஏற்பட்டால் கடுமையாக மாறி சிலருக்கு மரணத்தையும் உண்டாக்கலாம். குழந்தைகளை இந்நோய் அதிகமாகப் பாதிப்பதில்லை.

சின்னம்மை கீழ்க்கண்ட முறைகளில் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்நோய்க்கு தடுப்பு மருந்து கிடையாது:—

(1) நோய் கண்டவர்களைத் தனிமைப்படுத்துதல் :

(2) அறிகுறியை அறிந்து சிகிச்சை அளித்தல்.

சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளைப் பொருத்த மட்டில் எழும்பூர் குழந்தை நல மருத்துவமனையிலும் தண்டை யார்பேட்டை, சென்னை மாநகராட்சி தொற்று நோய் மருத்துவ மனையிலும் அதிகமான நோயாளிகள் சேர்க்கப்படுகிறார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் விவரப் பட்டியல் இணைப்பு 'ஆ'வில் தரப்பட்டுள்ளது.

4. தட்டம்மையைப் பொறுத்த மட்டில் தடுப்பு மருந்து உள்ளது. தட்டம்மை தடுப்பு முறையாக நாடு தழுவிய நோய்த் தடுப்பு ஊசித் திட்டத்தின் கீழ் 1985 முதல் அமுல்படுத்தப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தட்டம்மை தடுப்பூசி 1 வயதிற் குட்பட்ட குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிறது.

செங்கை மற்றும் சென்னை மாவட்டங்களில் தட்டம்மை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட குழந்தைகளின் விபரம் மூன்றாண்டு களுக்குக் கீழே தரப்பட்டுள்ளது—

| வருடம். (1) | | | சென்னை நகரம். (2) | செங்கல்பட்டு. (3) |
|---|---|---|---|---|
| 1986—87 | .. | .. | 25,324 | 36,817 |
| 1987—88 | .. | .. | 55,410 | 95,399 |
| 1988—89 | .. | .. | 1,05,593 | 80,835 |

5. சென்னையிலும் சென்னையைச் சுற்றிலும் தட்டம்மை நோய் மேலும் பரவாமல் தடுக்க குழந்தைகளுக்குத் தட்டம்மை தடுப்பூசி போடுவது தீவிரப்படுத்தப்படும்.

**இணைப்பு - அ.**

**தட்டம்மையால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் பட்டியல் :**

| சென்னை நகர். (1) | 1989. (2) | அனுமதிக் கப்பட்டவர். (3) | இறப்பு. (4) |
|---|---|---|---|
| 1. எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவ மனை. | ஜனவரி, பிப்ரவரி, மார்ச். | 94 | 2 |
| 2. தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவ மனை. | ஜனவரி, | 86 | 0 |
| | பிப்ரவரி | 157 | 0 |
| | மார்ச் | 236 | 2 |
| செங்கை அண்ணா மாவட்டம்: | ஜனவரி, பிப்ரவரி. | 299 | 1 |



**இணைப்பு - ஆ.**

**சின்னம்மையால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் பட்டியல் :**

| சென்னை நகர். (1) | 1989. (2) | அனுமதிக்கப் பட்டவர். (3) | இறப்பு. (4) |
|---|---|---|---|
| எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவ மனை. | ஜனவரி, பிப்ரவரி, மார்ச். | 30 | 3 |
| தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவ மனை. | ஜனவரி | 254 | 0 |
| | பிப்ரவரி | 562 | 1 |
| | மார்ச் | 1,052 | 1 |
| செங்கை அண்ணா மாவட்டம் : | ஜனவரி பிப்ரவரி | 3 | 0 |

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு தலைவரவர்களே, அறிக்கையில் குறிப்பிட்டதுபோல் அம்மை நோய்க்காக பலர் மருத்துவமனையை நாடுவதே இல்லை. இருந்தாலும் கூட மார்ச் மாதத்தில் 1,052 பேர் வரையிலே தண்டையார்பேட்டை புற்றுநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த அளவக்கு கடுமையாக அது இருக்கிறது. சில காலங்களில் அம்மை நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், அம்மை நோய்க்கான தடுப்பு ஊசிகள் போடுவது கூட கைவிடப் பட்டிருந்தது. ஆனால், இப்போது இவ்வளவு அதிகமாக அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சென்று சேருவதற்கே அஞ்சுகிற அந்த புற்றுநோய் மருத்துவமனையிலே கூட சேருகிற நிலைமை கள் இருக்கின்ற காரணத்தாலே அதைப் போக்க, அதைத் தடுக்க அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு தலைவரவர்களே, இது குறித்து சுகாதார அதிகாரிக ளுடன் பேசி உடனடியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சென்னையில் மட்டுமன்றி தமிழகம் முழுவதும் எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அவைகள் தீவிரப்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செங்சிவம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாதம் அம்மை நோய் மார்ச் மாதத்திலிருந்து ஜூன் வரையில் மிக அதிகமாக பரவுகிறது. சிக்கன் பாக்ஸ் ஸ்மால் பாக்ஸ் முற்றிலும் ஒழிக்கப்பட்டு

விட்டது. ஆனால் இதற்கு மூலகாரணம், இந்த நோய் அதிகமாக பாதிப்பதற்குக் காரணம், சுகாதாரக் கேடுகள்தான். இன்றைய தினம் சென்னை மாநகராட்சியிலே எவ்வளவு சுகாதாரக் கேடுகள் அதிகமாக இருக்கிறது என்பதை நாம் அறிகிறோம். அந்த அளவுக்கு இன்றைக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஹெல்த் விசிட்டர் என்ற அடிப்படையிலே கர்ப்பமுற்றிருக்கிற பெண்களைப் போய் பார்ப்பதற்கு அவர்களை பயன்படுத்துகிறார்கள். அதுபோல் இன்றையதினம் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களை அந்த முறையிலே சென்று— இந்த 3 மாதங்களிலாவது சென்று— துரித நடவடிக்கை எடுத்து அதைப் போக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன். ஜுலை மாதத்தில் கூட காலரா நோய் பரவுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. வருடந்தோறும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. மேல் நாடுகளில் அறவே ஒழித்ததைப் போல இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அரசினுடைய நோக்கமும் இந்த நோயை முற்றிலுமாக ஒழிக்க வேண்டுமென்பதுதான். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதுவும் குறிப்பாக யுனிவர்சல் இம்மியூனைஷேசன் புரோகிராம் என்ற திட்டங்களைக் கொண்டுவருவதன் மூலமாக குழந்தைகளுக்கு இளமைப் பருவத்திலேயே இதுபோன்று பல்வேறு தடுப்பு ஊசிகளை போட்டு தொத்து நோய்களைத் தடுப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது.

## 5. மானியக் கோரிக்கைகள், 1989-90— விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### கோரிக்கை எண். 32. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,30,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை நகரில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை கோரி அரசு ஆணை எண். 2549, நாள் 9-12-1987 வெளியிடப்பட்ட ஆணைப்படி 4 (1) அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளதைச் செயல்படுத்தும் வகையில் குடிமனைப் பட்டா



வழங்கப்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,30,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

**திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,30,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் நலன்களுக்கான அரசன் திட்டங்கள், கொள்கைகள் குறித்த விளக்கக் குறிப்பு 142 முதல் 161 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது. ஒன்று அவையில் வைக்கப்பட்டு இருக்கிறது. இதை அவை ஏற்றுக்கொண்டதாக அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் இறுதியாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதாக அறிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த விவாதத்தை முதலில் தொடங்கி வைப்பவர் திரு. சி. கோவிந்தராஜன்.

***திரு சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பிற்பட்ட நலத்துறை மானியத்தின் மீது எங்களுடைய கட்சியினுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய தொகை 19,30,78,000 ரூபாய். இப்பொழுது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மட்டும் அல்ல, அதோடு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும் சேர்த்து இது ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இது சம்பந்தமாக இந்தக் குறிப்பில் கூறப்பட்டிருக்கக்கூடிய சில விஷயங்களைக் குறித்து என்னுடைய கருத்தைக் கூற

விரும்புகிறேன். அங்கே 1989-90 ஆம் ஆண்டு முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மாணவர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசம் என்று கூறப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால் அதே சமயத்தில் இந்த கல்விச் சலுகை பெறுவதற்குப் பெற்றோரின் ஆண்டு வருமானம் 12,000 என்று வரம்பு வைத்திருப்பது இந்த இலவச சலுகைக்கும் இதற்கும் முரண்படுவதுபோலத் தோன்றுகிறது என்ற கருத்தை இங்கே நான் கூற விரும்புகிறேன். இப்படிப்பட்ட மாணவர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு, சீர் மரபினருக்கு, கல்லூரிப் படிப்பு வரை பட்டப் படிப்பு வரை இலவசமாக ஆக்கிவிட்டு, பெற்றோர்களுடைய வருமான வரம்பு ஒன்று நிர்ணயிக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தை இங்கே கூற விரும்புகிறேன்.

அத்துடன் புதிய விடுதிகள் 25 திறக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே இருக்கக் கூடிய விடுதிகள், கல்லூரி, பள்ளி, தொழிற்பயிற்சி மாணவர்கள் விடுதிகள் 671-இல் 51 விடுதிகள் தான் அரசுக்குச் சொந்தம் என்றும் மற்ற விடுதிகள் முழுவதும் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன என்றும் இங்கே கூறப்பட்டிருக்கிறது. அப்படியானால் ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய நிதியில் ஒரு கணிசமான பகுதி தொகை இந்த வாடகைக்கே போய்ச் சேரக் கூடிய நிலைமை தான் இருக்கிறது என்பதையும் இந்தச் சமயத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, இருக்கக்கூடிய குறைபாடுகள் பற்றி ஒவ்வொரு ஆண்டும் நாம் கூறி வருகிறோம். அதில் ஒரு மாற்றம் அவ்வப் பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் அரசாங்கம் செய்து வருகிறது. கல்லூரி விடுதிகளிலே, அதுவும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விடுதிகளில் அவர்களுடைய உணவுக்காக அளிக்கக்கூடிய தொகை 135 ரூபாய்—120இலிருந்து 135 ரூபாய் ஆக உயர்த்தப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது என்றாலும் 300 ரூபாய் கொடுத்து அல்லது 350 ரூபாய் கொடுத்து, விடுதிகளிலே மற்ற மாணவர்கள் நல்ல உணவை அருந்தக் கூடிய சூழ்நிலை இருக்கும் பொழுது, இப்படிப்பட்ட விடுதிகளில் 135 ரூபாய் என்று கொடுக்கப்பட்டாலும் 15 ரூபாய் உயர்த்திக் கொடுக்கப்பட்டாலும் உணவுத் தரத்திலே கூட மாணவர்கள் அங்கேயும் பிற்படுத்தப்பட்ட நிலைமையிலே இருக்கக்கூடிய ஒரு வரைகோடு தென்படுகிறது. இதைப் படிப்படியாகத்தான் மாற்றியமைக்க முடியும் என்ற ஒரு கருத்து இருந்தாலும் இது இருக்கிறது என்ற உண்மையை நாம் இந்தச் சமயத்திலே உணர்ந்தாக வேண்டும் என்று நான் இங்கே கூற விரும்புகிறேன். முடிந்தவரை இந்தத் தொகையையும் ஓரளவுக்கு உயர்த்தினால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.



இப்படிப்பட்ட சில குறைபாடுகளை நான் இங்கே குறிப்பிடும்
பொழுது, அவைகளெல்லாம் சாதாரண குறைபாடுகள்தான்.
எந்த அடிப்படையில் வருகிறது என்று சொன்னால், சமுதாயத்
தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட, அதுவும் முற்றிலும் பிற்படுத்தப்
பட்டு, தாழ்த்தப்பட்டிருக்கக்கூடிய மக்களுடைய வாழ்க்கை
மோசமாக இருக்கக் கூடிய நிலைமையின் காரணமாகத் தான்
அவர்களுக்கு என தனி இயக்ககம் ஏற்படுத்தப்பட்டு, இந்த
ஆண்டு புதிதாக மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு இயக்ககம்
ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் வரவேற்கத்தக்கது.
இப்படிப்பட்ட ஏற்பாடுகளெல்லாம் அரசாங்கத்தினால் செய்யப்
படுகிறது. இருந்தாலும் இது பரிபூரணமாக நிவாரணத்திற்கு
கொண்டு செல்லாது என்பது எங்களுடைய கருத்து. இதெல்
லாம் தற்காலிக ஏற்பாடுகள் தான். இந்த கோரிக்கை மானியத்
தின் மீது பேசுகிறபோது இப்போது எழுந்துள்ள இட ஒதுக்கீடு
பிரச்சினையை பேசாமல் இருக்க முடியாது. கொள்கை குறிப்பில்
இருக்கக் கூடிய நல்ல அம்சங்களையும் ஏதோ சில குறைபாடு
கள் இருந்தால் அதை திருத்த வேண்டுமென்ற முறையில் பேசிக்
கொண்டு இருப்பது வழக்கமாக ஒன்றாக இருக்கிற காரணத்தால்
அதை அரசு கவனித்து அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்கு
வதற்கு நடவடிக்கையெடுத்தாலும் இன்றைக்கு தலைதூக்கி
இருக்கிற ஒரு முக்கியமான பிரச்சினை, இந்த மானியத்தின்
மீது இந்த ஆண்டு பேசுகிறபோது இந்த இட ஒதுக்கீடு பிரச்சினை
பேச வேண்டியது என்று— மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட
காலையில் கூறினார்கள்— இட ஒதுக்கீடு மானியம் வரும்போது
நேரம் ஒதுக்கீடு கூட மிகவும் கஷ்டமாக இருக்கும் போல
இருக்கிறது என்று கூறினார்கள். எனவே, பிற்படுத்தப்பட்
டோர் நலத்துறை சம்பந்தமாக பேசுகிற போது, இட ஒதுக்கீடு
பிரச்சினையை பேசாமல் இருக்க முடியாது என்ற நிர்ப்பந்த
மான நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான்
இங்கே கூற விரும்புகிறேன். இது எதிலிருந்து ஏற்படுகிறது?
அனைவருக்கும் கல்வியும், வேலையும் கிடைக்க வாய்ப்பு
இருந்தால் இந்த இட ஒதுக்கீடு பிரச்சினைக்கு இடமே இல்லை.
அப்படிப்பட்ட நிலை இல்லாத காரணத்தால் தான் இந்தப்
பிரச்சினை இன்றைக்கு தலைதூக்கி எழுந்திருக்கிறது. அதுவும்
தனித்தனியாக பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர்
என்ற நிலையிலிருந்து பிற்படுத்தப்பட்டோரிலும் மிகவும் பிற்
படுத்தப்பட்டோர் என்ற அந்தப் பகுதியிலிருந்து, இன்னும்
ஜாதிவாரியாக இட ஒதுக்கீடு கேட்கக் கூடிய சூழ்நிலை இந்த
சமயத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில்
கொள்ள வேண்டும்.

(முற்பகல் 11-30)

காரணம் அவர்கள்
இதற்கெல்லாம் அடிப்படையான இட ஒதுக்கீடு கிடைத்தால்
நினைப்பது தனித்தனி ஜாதியாக வேலை வாய்ப்பு வசதியும் பெறலாம்.
நிச்சயமாக கல்வி வசதியும்,

[திரு. சி. கோவிந்தராஜன்] [1989 ஏப்ரல் 22

என்ற கருத்தோட்டத்தின் காரணத்தால் இப்படிப்பட்ட பிரச்சினை எழுகிறது. இதனால் பிரச்சினை தீராது என்பது எங்களுடைய கருத்து, எங்கள் கட்சியின் கருத்து. எவ்வளவு தான் இட ஒதுக்கீடு கொடுத்தாலும் சிலர் கேட்பது மாதிரி 20 சதவீதம் ஒரு குறிப்பிட்ட ஜாதிகாரருக்கே கொடுத்தாலும் கூட இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் அந்த ஜாதியைச் சார்ந்த அத்தனை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பிற்கோ அல்லது கல்வி வசதிக்கோ வாய்ப்பு இருக்குமா என்று சொன்னால் இருக்கவே இருக்காது என்பது தான் எங்களுடைய கருத்து. காரணம் இன்றைக்கு உள்ள பொருளாதார அமைப்பில், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் வேலை வாய்ப்பு என்பது படிப்படியாகச் சுருங்கிக் கொண்டே வருகிறது. இருக்கக் கூடிய வேலைகளும் போகக் கூடிய நிலைமை இன்றைக்கு ஏற்படுகிறது. மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட வரையில் ஏற்கனவே ரெயில்வே போன்ற நிறுவனங்களில் ஆறு லட்சம் பேர்களுக்கு மேல் வேலை காலியாக இருந்தும் கூட அவற்றை நிரப்பக் கூடாது என்ற உத்தரவை அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் காலி இடங்களை நிரப்பக் கூடாது என்ற உத்தரவு மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனங்களிலிருந்து பல்வேறு இடங்களில் இன்றைக்கு இருக்கிறது. அது மட்டுமல்லாமல், மத்திய அரசாங்கத்திலே கூட நேரடியாக அவரவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு பதிலாக, அந்த வேலைகளைச் செய்வதற்காக கான்ட்ராக்டர்களை நியமித்து விட்டதால் அவர்கள் நேரடியாக வேலைக்கு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இங்கே கூட நம்முடைய தமிழ்நாடு மின்வாரியத்தில் 13 ஆயிரத்திற்க்கு மேல் வேலை காலி இடங்கள் இருக்கின்றன. அது கடந்த 5, 6 ஆண்டுக் காலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. இதை நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். அரசுத் துறையில் அது மாநில அரசாக இருந்தாலும் சரி, மத்திய அரசாக இருந்தாலும் சரி வேலை வாய்ப்பு சுருங்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. திட்டமிட்டே இப்படி உத்தரவு மூலமாக காலி வேலைகளை நிரப்பக் கூடாது என்று மத்திய அரசின் உத்தரவு இருக்க, அதை சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களே அந்த உத்திரவை திரும்ப பெற வேண்டுமென்று அங்கே ஒரு மாநாட்டில் எழுப்ப, அப்படியானால் இன்றைக்கு இருக்கக்கூடிய ஆட்களுக்கு உங்களால் சம்பளம் கொடுக்க முடியுமா என்று நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களே கேட்டிருக்கிறார்கள், இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை வேலை வாய்ப்பு சம்பந்தமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மேலும் மேலும் கம்ப்யூட்டர்களை இங்கே கொண்டு வருவதன் மூலமாக வேலை வாய்ப்பை படிப்படியாக கெடுக்கக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. இன்னொரு பக்கத்தில் தொழில் வளர்ச்சி என்பது இல்லை தொழில் வளர்வதற்கு வேண்டிய வாய்ப்பை இங்கே உண்டு



1989 ஏப்ரல் 22] [திரு. சி. கோவிந்தராஜன்]

பண்ண முடியவில்லை. காரணம் எவ்வளவுதான் உற்பத்தி செய்தாலும் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை வாங்ககூடிய 'பர்ச்சேசிங் கெப்பாசிடி', வாங்கும் சக்தி மக்களிடத்திலே கிடையாது. அதுவும் கிராமப்புற மக்களிடத்திலே கிடையாது. எனவேதான் நாங்கள் கூறுகிறோம். அனைவரும் அனேகமாக ஒத்துக்கொண்ட விஷயம்தான். கிராமப்புறத்தில் இருக்கிற நிலக்குவியலை உடைத்து, விவசாயிகளுக்கு, உழவர் பெருமக்களுக்கு நிலத்தை வழங்கி, அவர்களுக்கு வாங்கும் சக்தியை நாம் எந்த அளவிற்கு அதிகப்படுத்துகிறோமோ, அதைப்பொறுத்துத்தான் தொழில் வளர்ச்சி ஏற்படும். அவர்களுக்கு வாங்குவதற்கு முடியும், தொழிலும் வளரும், தொழில் உற்பத்தியும் நடக்கும், வேலைகளும் பெருகும் வேலை வாய்ப்பு நிலைமையைப் பற்றி எங்களுடைய கருத்து இதுதான். இது பூராவும் இப்படி கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கிற நிலைமையில் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு இத்தனை சதவீதம் என்று கொடுத்தாலும் கூட, அதை எப்படி அவர்கள் பெறமுடியும் என்பதைத்தான் நான் இந்தச் சமயத்தில் சொல்ல வேண்டியதிருக்கிறது.

இங்கே மத்திய அரசாங்கத்தினுடைய வேலை வாய்ப்பு நிறுவனங்களிலிருந்து கிடைதிருக்கக்கூடிய கணக்கு கூறுகிறேன், வேலை வாய்ப்பு 1981-ல் அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டவர்களுடைய எண்ணிக்கை அனைவருக்கும் தெரிந்ததுதான். 178 லட்சம். 1988-ல் 350 லட்சம். ஆக 31 கோடி பேர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டு—வாலிபர்கள், படித்தவர்கள், பட்டதாரிகள், வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதில் அனைத்து ஜாதியினரும் உண்டு. அனைத்து வகுப்பினரும் உண்டு.

அதே போல் பதிவு செய்து கொள்ளாமல் கிராமப்புறத்தில் இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 15 கோடியிலிருந்து 20 கோடி வரை, 70 கோடி மக்கள் தொகை வாழக்கூடிய இந்த நாட்டில், வேலையின்றி வாழுகின்ற அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைமை இன்றைக்கு இருக்கிறது. இந்தச் சமயத்திலே இட ஒதுக்கீடு ஒரு கோரிக்கையை எழுப்புகிறோம் என்று சொன்னால், இந்தக் கோரிக்கையின் மூலமாக பிரச்சினை முழுவதும் தீர்ந்துவிடாது. நான் உதாரணம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக 100 வேலை காலியிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த 100 வேலைக்கு பொதுப் பட்டியுலில் 32 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 5 ஆயிரம் பேர்கள் அதற்கு விண்ணப்பிக்கிறார்கள். 5 ஆயிரம் பேர்கள் விண்ணப்பித்தால்—100 வேலை தான் காலியாக இருக்கிறது—32 பேர்களைத்தான் பொதுப்பட்டியலிலிருந்து எடுக்கப் போகிறோம். அந்தப் பொதுப்பட்டியலுக்கு 5,000 பேர்கள் விண்ணப்பிக்கிறார்கள் என்று சொன்னால், இந்த 32 பேர்கள் போக

பாக்கி பேர்களுக்கு வேலையில்லாத நிலைமையிருக்கிறது. அதேமாதிரிப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவீதம் என்றிருக்கிறது. 100 வேலைகள் காலியிருக்கிறது. 50 சதவீதமும் அவர்களுக்குக் கொடுக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப் பார்க்கும் போது, இந்த 50 பேர்களை எடுத்துவிட்ட பிறகு, இதில் 3,000 பேர்கள் விண்ணப்பித்தால், மீதியுள்ள பேர்களுக்கு வேலையில்லை. இதில் அத்தனை வகுப்பார்களும், அல்லது அத்தனை ஜாதிக்காரர்களும் இருக்கிறார்கள். அதே சமயத்தில், இப்போது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஒரு சதவீதத்தையும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஒரு சதவீதத்தையும் ஒதுக்கினாலும் கூட, அதிலும் இதே மாதிரி கணக்கைத் தான் நாம் பார்க்க முடியும். எனவேதான் இந்த இட ஒதுக்கீடு என்ற பிரச்சினை மூலமாக வேலைவாய்ப்பை அனைவரும் பெறுவது என்பதும், கல்வியை அனைவரும் பெறுவது என்பதும் ஆகிய ஒரு சாத்தியம் இல்லாத சூழ்நிலை இந்த நாட்டில் இருக்கிறது என்பதை அனைவரும் உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன். எனவேதான் எங்களுடைய கருத்து, அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலைவாய்ப்பு ஏற்படக் கூடிய மாற்றமான ஒரு காலச் சூழ்நிலை ஏற்படக்கூடிய காலத்தில்தான் இது நடக்கும். இருப்பினும் இன்றைக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் இந்த நிலைமை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்கு தற்காலிக நிலைமையாக நீடிக்கவேண்டும் என்பது எங்களுடைய கட்சியினுடைய கருத்து. இதில் இப்போது எழுந்திருக்கக்கூடிய மிக முக்கியமான விஷயம், கடந்த 2 ஆண்டுகாலமாக இந்த இட ஒதுக்கீடு பிரச்சினை தலை தூக்கி நிற்கிறது. அதனுடைய விளைவாக ஒவ்வொரு ஜாதிக்காரர்களும், தனித்தனியாக இட ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்கக் கூடிய நிலைமையும் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திலே அனைத்து ஜாதியினரும் ஒன்று, சமமாக வாழ வேண்டும் என்று ஒரு கருத்தை இன்றைக்குக் காலையிலே கூட நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் சொனனார்கள். ஆனால், இந்த துறை சம்பந்தமாக மானியம் வரும் போது, எல்லோரும் ஜாதிவாரியாகப் பிரிந்து நிற்கக்கூடிய நிலைமையும், அந்த ஜாதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய நிலைமையும், எப்படியாவது இந்தப் பட்டியலிலே சேர்ந்து நாமும் வேலை வாய்ப்பைப் பெற வேண்டும் என்ற எண்ணமும் கருத்தும் உண்டு பண்ணக்கூடிய ஒரு சூழ்நிலைமை உருவாகியிருக்கிறது.

(முற்பகல் 11-40)

இந்தச் சமயத்திலே நான் கூறவிரும்புகிறேன். எத்தனையோ கமிஷன்கள் போடப்பட்டு அதைப்பற்றி பரிசீலித்தாகிவிட்டது. அந்தக் கமிஷன்களுடைய பெயர்களையெல்லாம் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. மத்திய அரசு கூட இரண்டு கமிஷன்களைப் போட்டது ஒரு காலத்திலே 1953-லே



காகா சாகிப் கலேல்கர் கமிஷன் என்ற அந்தக் கமிஷனைப் போட்டு, அந்தக் கமிஷன் என்ன சொல்லியது என்றால் அன்றைக்கு 2,399 ஜாதிகள், பிற்படுத்தப்பட்ட ஜாதிகள் இருக்கின்றன என்று சொல்லியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 16 மணித்துளிகள் ஆகிவிட்டன, சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** அதற்குப் பிறகு மண்டல் கமிஷன் என்று 1978-ல் போட்டார்கள். அந்த மண்டல் கமிஷன் என்ன குறிப்பிட்டிருக்கிறது. அது 3,743 ஜாதிகள் பிற்படுத்தப்பட்டோரில் இருக்கிறது என்ற கணக்கை தருகிறது. இந்த 25 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 1,344 ஜாதிகள் வளர்ந்திருக்கிறதே தவிர—கணக்குப் பிரகாரம்—ஜாதிகள் மறைந்து விடவில்லை. பாரதியார் கூறினார் ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று. சுதந்திர நாட்டில் அது மறைந்து விடும் என்று கூறினார். இப்போது ஜாதி கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன. வேலை வாய்ப்புக்காக. நான் முன்பு சொன்ன காரணங்களுக்காக நடைபெறுகிறது. அதுவும் பலாத்கார முறையில் நடத்தப்படுகிறது. எப்படியாவது இந்தப் பிரச்சினையை தீர்த்துவிட வேண்டும் என்ற முறையிலே அவரவர்களும் ஒரு அரசை நாடி, செய்தார்கள். கடந்த காலத்திலே அந்தப் பிரச்சினை தேர்தலுக்குக் கூட பயன்படக்கூடிய முறையிலே செய்யப்பட்டது. ஆளுநர் ஆட்சியிலே கூட அதை தீர்த்து விடுகிறோம் என்று அதற்கான முயற்சி நடைபெற்றது. ஆனால் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மீண்டும் வன்முறை தலை தூக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசு வந்த பிறகும், வருவதற்கு முன்னதாகவும் தேர்தல் வாக்குறுதியிலேயும் கூட இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனறு கூறியதன் அடிப்படையில் 50 சதவீதம் பிற்படுத்தப்பட்டோர் என்பதிலிருந்து 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு என்று குறிப்பிட்டு அது இன்றைக்கு கொள்கை குறிப்பிலே கூட வந்திருக்கிறது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஜாதீய எழுச்சி பெருந்தீயாக மூண்டுக்கொண்டு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இது இந்தப் பதட்டத்தைத் தணிப்பதற்கு நிச்சயமாக உதவி செய்யும் என்று நான் கருதுகிறேன். ஆனால் இதுவும் கூட போதாது என்று கூறி இதை எதிர்த்து கிளர்ச்சி நடத்தக் கூடிய ஒரு நிலைமையையும் தீவிரப்படுவதாகத் தெரிகிறது. அது இந்த நாட்டு நலனுக்கு உகந்தது அல்ல என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருப்பதை அமல்படுத்திப் பார்க்க வேண்டும். அதை ஒரு ஆண்டுகாலம் பார்த்து எத்தனை பேருக்கு இதனால் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. எத்தனை

பேர்களுக்கு, அந்த சமுதாயத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு கல்விக்கான வசதி கிடைக்கிறது என்பதை ஒரு டிரையல் பண்ணி பார்ப்பதற்கு கூட விடாமல் எடுத்த எடுப்பிலே நிராகரித்துவிட்டு, போராட்ட திசைநோக்கிச் செல்வது என்று சொன்னால் அது சரியாக இருக்காது என்ற கருத்தை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

சட்டநாதன் கமிஷன், அம்பாசங்கர் கமிஷன், அத்தோடு அங்கே குஜராத் மாநிலத்தில் அருண்மேத்தா கமிஷன், பகஷித் கமிஷன், ரானே கமிஷன் என்று மட்டும் அல்லாமல் மத்திய சர்க்காருடைய கமிஷனும் போடப்பட்டது. இத்தனை கமிஷன்களும் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்தும், அந்த முயற்சியில் வெற்றி பெறவில்லை. இப்போது நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்பும் அப்படிப்பட்ட முயற்சிகளில் ஒன்று. அதை நாம் அமல் படுத்தி பார்ப்போம். டிரையல் செய்து பார்ப்போம். பரீட்சித்து பார்ப்போம் அதனால் என்ன விளைவு ஏற்படுகிறது, பலன் ஏற்படுகிறது என்று பார்க்காமல் அதை எடுத்த எடுப்பிலேயே அதனை உதறித்தள்ளி விட்டு போராட்டத்திற்குச் செல்வது என்பது சரியல்ல என்று இந்தச் சமயத்திலே கூற நான் பிரியப் படுகிறேன். ஒரே ஒரு விஷயத்தை சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட அணுகு முறையை பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் போன்றவர்களுக்கு தொடர்ந்து நாம் பின்பற்றினால் அனேகமாக எல்லா தரப்பு மக்களுடைய ஆதரவு இந்த அரசுக்கு கிடைக்கும் என்று நான் கூற விரும்புகிறேன். நான் கூட ஒரு 3, 4 நாட்களுக்கு முன்னதாக என்னுடைய தொகுதியில், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இருக்கக்கூடிய ஒரு இடத்தில், அதுவும் ஒரு மலைப் பிரதேசத்தில் — அங்கே ஒரு கேப்பர் குவாரி மலை இருக்கிறது—அங்கே ஒரு உயர்நிலைப்பள்ளி வேண்டும் என்று அவர்கள் கோரி 1985-86 ஆவது ஆண்டிலே தேவையான பணமும் கட்டி, இடமும் கொடுத்து எல்லா விதமான ஏற்பாடும் செய்து விட்ட பிறகும் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அங்கே அமைக்கப்படக் கூடிய அந்த உயர்நிலைப்பள்ளிக்கு ஆசிரியர்களுக்கு கொடுக்கக் கூடிய சம்பளத்தையும்கூட அந்த பொதுமக்களே கொடுத்தால் தான் அந்த கல்வி— உயர்தரக்கல்வி நிலையம் அங்கே அமைக்கப் படும் என்று கூறுகிறார்கள். நான் என்ன கூற விரும்புகிறேன் என்றால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிதிநிலை மோசமாக இருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். இருப்பினும் அணுகுமுறையில் 30 கல்வி நிலையங்கள் துவங்குகிறோம் என்று சொன்னால், எந்தப் பகுதிக்கு இது என்று ஆராய்ந்து பார்த்து— அந்தப் பகுதி நான் சொல்லக்கூடிய பகுதி தேர்தலையும் புறக்கணித்த பகுதி. (மணியடிக்கப்பெற்றது) அப்படிப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளை முன்னேற்ற நட-



வடிக்கை எடுக்கவேண்டும். இந்த பதட்ட தணிப்பை செய்யக் கூடிய அளவுக்கு நீங்கள ஒரு கொள்கை அறிக்கை கொடுத்து இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வந்திருப்பது மிகவும் நல்லது. இந்தச் சமயத்தில் இதைவிட வேறு பரிகாரம் காண முடியாது என்பது என்னுடைய கருத்து. இந்த அணுகு முறை எல்லா பிரச்சினைகளுக்கும் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. பெரியண்ணன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு வருகை தந்து இங்கே பேச வைத்திருக்கின்ற மாண்புமிகு கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கும், என்னைத்தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பிய புதுக் கோட்டைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் மற்ற மன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

தந்தை பெரியார் வழியில் பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கிய தலைவர் கலைஞரின் தலைமையில் திராவிடமுன்னேற்ற கழக அரசு அமைத்து 1988-89 ஆம் ஆண்டு நிதிநிலைஅறிக்கையினை தொடர்ந்து இன்று பிற்பட்டோர் நலத்துறை மானிய கோரிக்கையின் மீது என்னுடைய பேச்சை துவக்குவதற்கு முன்னால் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கழக அரசு அமைந்து அதன் கவர்னர் உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் பல்வேறு பிரிவு மக்களுக்கு நல்ல திட்டங்களை அறிவித்தும் நடைமுறைப்படுத்தியும் வருகின்ற முதல்வர் அவர்களையும் மற்றவர்களையும் மனமாற பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையில் பெண்களுக்கு 30 சதவீதம் வேலைவாய்ப்பும் ஒதுக்கீடும், விவசாயக் கடன் வட்டி ரத்து 40,000 பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் 40,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு, மூடப்பட்ட மில் தொழிலாளர்களுக்கு 250 உதவித் தொகை போன்ற பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்த டாக்டர் கலைஞர் அவர்கள் தான் 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்ற ஒன்றை ஏற்படுத்தி அதற்கு மறைந்த மாண்புமிகு என். வி. என். அவர்களை அமைச்சராக நியமித்து நலத்திட்டங்களை நிறைவேற்ற பிற்படுத்தப்பட்டவர்களுக்கான ஒரு தனித் துறையை அமைத்தார்கள் அவர்களே தான் இன்று பிற்படுத்தப்பட்டவர்களுக்கான மானியக் கோரிக்கையையும் முன்மொழிந்து இருக்கிறார்கள்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை 1967-68-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைவிட 12 மடங்கு இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல்வர் அவர்களை மன

மாற பாராட்டுகிறேன். 1989-90 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கட்டப்பட இருக்கும் 25 விடுதிகளில் பின் தங்கிய மாவட்டமான புதுக்கோட்டைக்கும் கட்டிடம் அமைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு தேர்வாணைக்கு தற்சமயம் பிற்படுத்தப்பட்டவர்களில் 60 பேருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதை சற்று அதிகமாக்க மாவட்டவாரியாக, ஒரு மாவட்டத்திற்கு 5 முதல் 10 பேரை தேர்வு செய்து சிறப்பு பயிற்சி அளித்தால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இன்னும் உபயோகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் அமைந்துள்ளதைப் போல், பின் தங்கிய மாவட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்திலும் ஒரு பொது நோக்குப் பொறியியல் பட்டறை ஒன்று அமைத்து, எங்கள் பகுதி மக்களுக்கும் சுய வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்ய வேண்டும் என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். பின்தங்கிய மாவட்டங்களான தென் மாவட்டங்களிலுள்ள மாணவர்களுக்கு தொழில்களான மருத்துவ, பொறியியல் பட்டப் படிப்பு நுழைவுத் தேர்வுப் பயிற்சி இத்துறையின் மூலம் அளிக்கப்படுகிறது. பெருநகரங்களில் படிக்கும் மாணவர்களோடு ஒப்பிடுகையில் பின் தங்கிய மாவட்டத்தில் உள்ள மாணவர்கள், அவர்களுடன் போட்டி போட்டுத் தேர்வு பெற முடியவில்லை. எனவே, மேற்படி தொழிற்கல்வி, மருத்துவக் கல்வி, பொறியியல் கல்விக்கு பின்தங்கிய மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் துறைக்கு 10 சீட்டுகள் என்று போட்டு ஒதுக்கீடு செய்து பின்தங்கிய மாவட்டத்திலிருக்கும் மாணவர்களை முன்னேறச் செய்திட வேண்டுகிறேன்.

(முற்பகல் 11-50)

புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்தபோது சென்னை மருத்துவக் கல்லூரி படிப்பிற்கு தனியாக இரண்டு சீட்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும் நினைவூட்டுகிறேன். சீர் மரபினர் பொருளாதார நிலைமையை மேம்படுத்த இரண்டு ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு கிணறு அமைப்பதற்கு மானியமாக ரூபாய் 2,500 ஒதுக்கியுள்ளதைப் பாராட்டுகிறேன். மேலும் பின் தங்கிய மாவட்டமான புதுக்கோட்டையில் முழுமையும் மழையையே நம்பியுள்ள கந்தர்வகோட்டை பகுதி போன்ற இடங்களில் 30 ஏக்கர் நிலம் உள்ளவர்கள் கூட மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இயற்கையான சூழ்நிலை உள்ளது. எனவே, இரண்டு ஏக்கர் என்பதை இப்பகுதி மக்களுக்கு மட்டும் 10 ஏக்கர் என நிர்ணயித்து மானியம் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



ஜீவன்தாரா கிணறு அமைத்திட ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் சலுகை வழங்குவதை, பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கிட சட்டத்தில் வழி வகை செய்து பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மக்களும் பயனடைய ஏற்பாடு செய்திட வேண்டுகிறேன். பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம் வாழுகின்ற புதுக்கோட்டையில், அதிலும் இந்தத்துறையின் சார்பாக ஒரு மேல்நிலைப்பள்ளி அமைத்துத் தரவேண்டுகின்றேன். அதைப் போல், 1988-89 ஆம் ஆண்டில் சலவைத் துறைகள் மூன்று கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளதில், புதுக்கோட்டை நகராட்சியில் அதிகமாக சலவைத் தொழிலாளர்கள் வசிப்பதால், புதுக்கோட்டையில் இரண்டு சலவைத் துறை கட்டித் தர அனுமதி வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், பின்தங்கிய மக்கள் அதிகம் வாழும் புதுக்கோட்டை நகரில் மக்களின் வீட்டுமனைப் பற்றாகுறையை நிவர்த்தி செய்திடும் பொருட்டு, புதுக்கோட்டை—தஞ்சை ரோட்டிற்கு கீழ்புறம், முன்மாதிரி பள்ளிக்குத் தென்புறம் காமராஜபுரம் 36 ஆம் எண் வீதிக்கும், ஓட்டக்குளம் வீதிக்கும் வடபுறம் உள்ள சின்னமலைக்காடு, ரிசர்வ் காட்டை வீட்டு மனைகளாக, நத்தமாக மாற்றிட மத்திய அரசு மற்றும் காட்டிலாகா ஒப்புதல் பெற்று வீட்டுமனைகளாகப் பிரித்து பட்டா வழங்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பாசனக் கிணறுகளுக்கு முன்னுரிமை அளித்து மின் இணைப்பு வழங்குதல் மிகவும் அவசியம், ஏனென்றால், புதுக்கோட்டை மாவட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை; மழையையே நம்பிக் கொண்டிருக்கிற அந்தச் சின்னஞ்சிறிய மாவட்டம். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் மிகப் பின்தங்கிய மக்களாக இருக்கிற காரணத்தால் பாசனக் கிணறுகளுக்கு யார், யார் மின்சாரம் வேண்டும் என்று சொல்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் மின்சாரம் கொடுத்தால், அந்தப் பகுதி நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவப்படும் என்று அப்போது இருந்த அரசாங்கம் அறிவித்தது. அதற்காக அதிகாரிகளையும் நியமித்து, சர்வே செய்யப்பட்டது. அப்படி சர்வே செய்யப்பட்டாலும் கடந்த நன்கைந்து ஆண்டுக் காலமாக அந்தச் சர்க்கரை ஆலை எங்கே நிறுவுகிறார்கள் என்ற விவரம் கூடத் தெரியவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் நாகுடி என்கிறார்கள். அப்போது இருந்த அமைச்சர்களைக் கேட்டால் அது அறந்தாங்கிப் பகுதி என்கிறார்கள்.

இப்போது அது அண்டகுளமா அல்லது அழியநிலையா என்பது கூடத் தெரியவில்லை. ஆகவே அந்த சர்க்கரை ஆலையை புதுக்கோட்டை மாவட்டத்தில் எங்காவது ஒரு பகுதியில் அது தெரிந்தெடுக்கப்படுகிற பகுதியில் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் புதுக்கோட்டை மாவட்டம் என்பது ஒரு விசித்திரமான மாவட்டம், காரணம் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அன்றையதினம் முதலமைச்சராக இருந்த போது 1974-ல் அந்த புதுக்கோட்டை பகுதி எல்லாம் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் நினைத்து அதோடு தஞ்சை மாவட்டத்தில் இருந்த கந்தர்வக்கோட்டை பகுதியில் அதேபோல் தஞ்சை மாவட்டத்திலிருந்த அறந்தாங்கிப் பகுதியை ஒரு மாவட்டமாக உருவாக்கினார்கள். அப்படி 2 மாவட்டங்களாக உருவாக்கியதற்குப் பின்னால் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், நிர்மாண திட்டங்கள் அந்தப் பகுதிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் அந்த மாவட்டத்தை உருவாக்கித் தந்தார்கள். அப்படி உருவாக்கியதற்குப் பின்னால் 1977-ல் கழக அரசு கலைக்கப்பட்டதற்குப் பின்னால் ஆண்டவர்கள் திட்டமிட்டு திட்டங்கள் தீட்டாத காரணத்தால் எந்த வளர்ச்சித் திட்டமும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உருவாகாமல் கடந்த 13 ஆண்டு காலமாக அதன் வளர்ச்சி தடைப்பட்டு இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அப்படிப்பட்ட (மணியடிக்கப் பெற்றது) வறட்சியான மாவட்டங்களுக்கு நல்ல பல திட்டங்களைகொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் நல்ல ஒரு தொழிற்சாலையை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மாவட்டத்தில் ஓடிய மில்கள் இரண்டு. ஒன்று ஆரங்கள் நமுனசமுத்திரம் மில், இன்னும் ஒன்று காவேரி மில். அந்த 2 மில்களும் இன்றைக்கு மூடப்பட்டு இருக்கின்றன. அப்படி மூடிக்கிடக்கின்ற மில்களை உடனடியாக திறக்க வேண்டும் என்றும், திறப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. அது மாமன்னர் கல்லூரி என்று பெயர். அந்த கல்லூரி கட்டி 106 ஆண்டுகள் ஆகிவிட்டன. 106 ஆண்டுகள் ஆகியும் அதிலுள்ள கட்டிடங்கள் புதுப்பிக்கப்படாமல் (மணியடிக்கப்பெற்றது) இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே இருக்கிறது.

அதைப் போல 1974-ல் நம்முடைய கழக அரசு இருந்த நேரத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி புதுக்கோட்டை



நகரத்தில் உருவாக்கப்பட்டது. அதற்கு இன்னும்கூட கட்டிடங்கள் இல்லை. கட்டிடங்கள் இல்லாமல் நடக்கிறது.

அதுபோல் பல்வேறு திட்டங்கள் அந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் உருவாக்கப்பட வேண்டும், அதற்கு நம்முடைய கழக அரசு இன்றையதினம் விசேஷமான முறையில் சலுகைகளை காட்டி நல்ல பல திட்டங்களை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டு இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அந்தியூர் தொகுதியிலிருந்து வந்து இருக்கிறேன். அந்தியூர் தொகுதி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற தொகுதி என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். காரணம் அவர் அந்த ஊரில் தொடர்புகொண்டு சம்பந்தம் செய்து இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதியினுடைய மக்களுடைய நிலைகளை எல்லாம் நன்கு அறிந்து இருக்கிறார்கள். அந்த சமுதாய மக்களுடைய நலன்களை எல்லாம் பேணும் முகத்தான் இன்றைக்கு ஆதிதிராவிடர்கள் நலத்துறை என்றும், ஆதிவாசிகள் நலத்துறை என்றும்; பிற்படுத்தப்பட்ட நலத்துறை என்றும்; மிக பிற்படுத்தப்பட்ட நலத்துறை என்றும் பிரித்து ஏழை எளிய மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் இருக்கிற மக்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று சொல்லிதான் கடந்த காலத்தில் தானைத் தலைவர் தங்க திருமகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு நல்ல பல திட்டங்களை தீட்டி இருக்கிறார்கள் என்பதை இந்த சபை நன்கு அறியும். அவரடிதொட்டு விடப்பட்ட பல பணிகளை தொடர்ந்து செய்வதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் இந்த நாட்டில் இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த சபை நன்கு அறியும். தயவுசெய்து ஆதி திராவிடர்கள் நலத்துறை, ஆதி வாசிகள் நலத்துறை, பிற்படுத்தப்பட்ட மக்கள் நலத்துறை ஆகியவற்றை இரண்டு கண்களாக பாவிக்க வேண்டும். அதற்கு இன்றைக்கு ஒதுக்கி இருக்கிற தொகை மிக மிகக்குறைவு என்பதை இந்த சபையில் சொல்லிக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00).

கல்வி வளர்ச்சியில் அதிகமான அக்கறை செலுத்தினால் தான்; அதிலே ஆதிவாசிகள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக முன்னேறினால் தான் இந்த நாடு முன்னேறும், நம்முடைய உலகம் போற்றும் உத்தமர்; நாடு போற்றும் நல்லவர் தேசம் போற்றும் தியாகி என்று எல்லாம் அழைக்கப்பட்ட மகாத்மா காந்தி அவர்கள்;

[திரு. வே. பெரியசாமி] [1989 ஏப்ரல் 22

இந்த நாட்டிலேயுள்ள தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் முன்னேறினால்தான் சமுதாயமும் நாடும் முன்னேறும் என்று சொன்னார்கள். அந்த நிலையிலே இன்றைக்கு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மக்களுடைய குழந்தைகளுக்கு, கண் என்று சொல்லப்படுகின்ற நல்ல கல்வியினை வழங்க வேண்டும். அதற்காக விடுதிகளை அமைத்திருக்கிறார்கள். பள்ளிகளை அமைத்திருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளை அமைத்து இருக்கிறார்கள், அவைகளெல்லாம், இன்றைக்கு தனியாரால் நடத்தப்படுகின்ற கல்வி ஸ்தாபனங்களை விட வசதிகள் குறைவாக இருக்கின்றன. உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கியிருக்கின்ற விடுதிகளில் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 2 ரூபாய் 88 பைசா வீதம் உணவுக்காக வழங்குகிறார்கள். அதாவது ஒரு மாதத்திற்கு 85 ரூபாய் வழங்குகிறார்கள். இது சற்றும் போதாத அளவிலே இருக்கிறது. 12ஆவது படிக்கின்ற ஒரு மாணவன் ஒரு விடுதியிலே தங்கி இருக்கிறான் என்று சொன்னால், ஒரு ஹைஸ்கூல் விடுதியிலே தங்கியிருக்கிறான் என்று சொன்னால் அவனுக்கு மூன்று வேளை உணவு அளிக்கவேண்டும். அதற்கு கொடுக்கப்பட்டிருக்கிற தொகை 85 ரூபாய். ஒரு வேளைக்கு, வெளியிலே உள்ள ஓட்டலிலே உணவு உண்ண வேண்டுமென்று சொன்னால், சாதாரண ஒரு சிறுவனுக்கு கூட 3 ரூபாய் ஒரு வேளைக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இந்த மாணவர்களுக்கு நல்ல உணவையும், சத்தான உணவையும் வழங்குவதற்கு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், பிற்படுத்தப்பட்ட நலத்துறையை தன் கையிலே வைத்திருக்கிற காரணத்தால், அந்த மாணவர்களுக்கு கொடுக்கப்படும் 85 ரூபாய் என்பதை குறைந்த பட்சம் 150 ரூபாயாக வழங்கவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். பெண் குழ்ந்தைககளாக இருந்தால், எண்ணெய், சோப்பு போன்றவைகள் வாங்குவதற்கு 2.00 ரூபாய் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். 1967-லே போடப்பட்ட இந்த உத்தரவு தொடர்ந்து இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்வதோடு அந்தத் தொகையை குறைந்த பட்சமாக 10 ரூபாயாக உயர்த்தி, அந்தக் குழந்தைகளுக்கு நல்ல எண்ணெய், சோப்பு போன்றவைகளைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை]

சீருடை அளிக்கிறார்கள். குறிப்பிட்ட காலங்களில் அந்த விடுதிகளில் தங்கியிருக்கின்ற மாணவ மாணவிகளுக்கு தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளின்போது சீருடை



1989 ஏப்ரல் 22] [திரு. வே. பெரியசாமி]

வழங்குகின்றபோது, எங்கேயும் விற்காத, மிகவும் கெட்டுப் போன, நலிந்த, நைந்த துணிகளை அந்த மாணவர்களுக்கு வழங்குகிறார்கள். அதை மாற்றி, இவ்வாண்டிலிருந்து டி.சி. துணிகளை அவர்களுக்கு வழங்கி 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களே, அதை அந்தக் குழந்தைகளின் சிரிப்பிலே நீங்கள் இறைவனைக் காணவேண்டுமென்று சொல்லி அவர்களுக்கு நல்ல உடைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காலணி அளிக்கும் திட்டத்தினை எங்களுடைய தங்கத் திருமகன் அவர்கள் வழங்கினார்கள். அதை நீங்கள் நிறுத்தி வைத்திருக்கிறீர்கள். அதை தொடர்ந்து செய்யவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தியூர் பகுதியிலேயிருக்கும் மலைப்பகுதியிலுள்ள மலைவாழ் மக்கள், ஆதிவாசிகள், இங்கே ஒருவரும் வருவதில்லை. ஒன்றும் கொடுப்பதில்லை. நீங்களாவது சொல்லக் கூடாதா என்றெல்லாம் சொல்லி, அங்கே யாரும் வருவதில்லை, எதுவுமே செய்வதில்லை என்று சொல்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் 1947, ஆகஸ்ட்-லே சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததாகச் சொல்லி, இன்றைக்கு மிட்டாய்களையும் கொடிகளையும் வழங்கிக்கொண்டிக்கிறார்களே, கொடிகளை ஏற்றிக் கொண்டிருக்கிறார்களே தவிர, எங்களுக்கு எதையும் செய்யவில்லை ஆகவே எங்களை கர்நாடக மாநிலத்தோடு சேர்த்து விடுங்கள் என்று கேட்கிறார்கள்.

நான் குட்டையூர் என்ற ஊருக்குப் போய் இருந்தேன். அங்கேயுள்ள ஒரு ஆதிவாசிப் பெண் சொல்கிறார். என்னை செருப்பால் அடித்தார்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற கூலிகள் என்னை கற்பழிக்க முயற்சி செய்தார்கள் என்று சொல்லி, நீங்களாவது காவல் துறையினரிடம் சொல்லி இதற்கு பரிகாரம் செய்யக் கூடாதா என்று என்னிடம் முறையிட்டார்கள். நானும் பர்கூரிலே உள்ள காவல் நிலையத்தில் இது குறித்து ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்து அவர்களுக்கு பாதுகாப்பாவது கொடுங்கள் என்று கேட்டேன். இதுகாறும் எந்த நடவடிக்கையும் இல்லை. நான் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கே போயிருந்தேன். எந்த நடவடிக்கையும் அந்த அதிகாரிகள் எடுத்திருக்கவில்லை. ஒரு பாதுகாப்புகூட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு செய்யப்படுவதில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப்போல நரிக்குறவர்களும் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலே இருக்கிறார்கள். சமுதாயத்திலே இவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள். தொழில் மூலமாக பிற்படுத்தப்பட்ட வண்ணார் என்று சொல்லக் கூடிய சமு

தாயத்தைச் சேர்ந்தவர்கள், நாவிதர்கள் போன்றவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக நிலங்களை கையகப்படுத்துகிறீர்கள். பல இடங்களை அதிகாரிகள் கையகப்படுத்துகின்ற நேரத்தில் விலை உயர்ந்த இடங்களை சில சமயங்களில் தேர்வு செய்கிறார்கள். சில சமயங்களில் வேண்டாத இடங்களை தேர்வு செய்கிறார்கள். சில சமயங்களில் கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலையிலே உள்ள இடங்களை தேர்வு செய்கிறார்கள். அதனால் அவர்களுக்கு வீடு கட்டுவதற்காகக் கிடைக்கக் கூடிய அந்த இடங்கள் அவர்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்காமல் அவர்கள் கோர்ட்டுக்குப் போவதால் காலதாமதம் ஆகிறது. ஆகவே கருணை உள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து அந்த ஏழை மக்களுக்கு நிலத்தை கையகப்படுத்தி நான்கு மாதங்களிலாவது அவர்களுக்கு பட்டாவைக் கொடுப்பதற்கு ஒரு புதிய திட்டத்தை கொண்டு வந்து அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் மூலமாக 25 விடுதிகளை தமிழகத்திலே திறக்கப் போவதாகச் சொல்லி இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. 25 விடுதிகள் என்று சொன்னால் ஒரு மாவட்டத்திற்கு ஒரு விடுதி என்று கூட வருவதில்லை. ஆகவே குறைந்த பட்சம் மாவட்டத்திற்கு 4 விடுதிகளையாவது திறக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் வேறு எந்த உதவியைச் செய்தாலும் செய்யவிட்டாலும் கல்வி வசதியை கட்டாயம் செய்து தரவேண்டும். கல்வியில் பிற்பட்ட மக்கள் முன்னேறினால்தான் இந்தச் சமுதாயம் உயர்ந்த அந்தஸ்தைப் பெற முடியும். குறைந்த பட்சம் கட்டாயக் கல்வியை எல்லா இடங்களிலும் அறிவித்து, ஊரில் இருக்கிற பெரியவர்களை எல்லாம் அழைத்துப் பேசி, அவர்களுடைய குழந்தைகள் 1-ம் வகுப்பு முதல் 10-வது வகுப்பு வரை கட்டாயம் படிக்க வேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். கட்டாயக் கல்வி படிக்க பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அனுப்பவில்லை என்றால் அந்தப் பெற்றோருக்கு கடுமையான தண்டனை அளித்து அந்தக் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும். படித்த அந்தக் குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தால்தான் அவர்கள் நிலைமை உயரும்: இந்த நாடு சுதந்திரம் பெற்ற பயனை அடைவார்கள். ஆகவே அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வழுக்குப்பாறைத் திட்டம், மணியாச்சித் திட்டம் ஆகிய இந்தத் திட்டங்களை அமுல்படுத்தினால் ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு பாசன வசதி



கிடைக்கும். கடந்த காலத்தில் பொதுப்பணித் துறை அமைச்சரிடம் இது சம்பந்தமான கோப்புகளை வைத்திருந்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) தலைவரவர்களே, நான் கன்னிப் பேச்சு பேசுகிறேன். கொஞ்சம் நேரம் கொடுங்கள்; முடித்து விடுகிறேன். இந்த வழுக்குப்பாறை, மணியாச்சித் திட்டங்களை நிறைவேற்றி பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும். அதைப்போன்று மற்றும் பல..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவை பொதுப்பணித் துறை சம்பந்தப்பட்டவை. அந்த அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள்.

**திரு. வே. பெரியசாமி :** அந்த அமைச்சரிடம் எழுதிக் கொடுக்கிறேன். அவர்கள் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற கேட்டு, என் உரையை முடிக்கிறேன். நன்றி. நன்றி. நன்றி.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இங்கே பல காரியங்களை அறிவித்திருக்கிறார்கள். அதோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு முக்கியமானப் பிரச்சினையை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம் சமூக நலத்துறையிலே 65 இலட்சம் குழந்தைகளுக்கு சீருடை வழங்குவது பற்றிச் சொன்னார்கள். அதிலே இது எல்லாம் சேர்ந்து வருகிறது என்று நினைக்கிறேன். குழந்தைகளுக்கு துணி தைத்துக் கொடுப்பது சரியாக இல்லை. வயதுக்கு ஏற்றபடி தைத்துக் கொடுக்கப்படவில்லை. பையனுக்கு 'ட்ரவுசர்' தைத்துக் கொடுக்கிறார்கள். 12 வயது பையனுக்கு ஒரு அளவை வைத்துத் தைத்துக்கொடுக்கிறார்கள். ஆனால் 12 வயது பையன் 16 வயது பையன் அளவுக்கு வளர்ந்திருக்கிறான். அப்படிப்பட்ட நிலையில் அது சரியாக இல்லை. ஆகவே, தைப்பதற்கு முன்னால் டெயிலரை அந்தப் பள்ளிக்கு அனுப்பி, பையன்களுடைய அளவை, சரியாக எடுத்து, ஆசிரியர்களை வைத்து பையன்களுக்கு அளவு எடுத்து தைத்துக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அளவு எடுப்பது ஆசிரியருக்கா அல்லது மாணவருக்கா ?

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** ஆசிரியர்களுக்கு அல்ல ஆசிரியர்களை வைத்து மாணவர்களுக்கு அளவு எடுக்க வேண்டுமென்று சொன்னேன். அப்படிச் செய்து கொடுத்தால் சாலச்

சிறந்ததாக இருக்கும். இதற்காக கோடிக்கணக்கான ரூபாயை செலவிடுகிறோம் பையன்களுக்கு இப்படி என்றால் பெண் குழந்தைகளுக்கு அதைவிட மோசமாக இருக்கிறது. பாவாடை தைத்துக் கொடுக்கிறார்கள். அதில் சுருக்கமே வைக்காமல் தைக்கிறார்கள். அளவும் சரியாக இல்லாமல் முழங்காலுக்கு மேலே இருக்கிறது. பார்க்க அசிங்கமாக இருக்கிறது. அதைக் கொடுத்தும் பயனில்லை. இதை எல்லாம் ஒழுங்காக கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டிலே 25 ஆஸ்டல்கள் திறப் பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது போதாது. உண்மையிலே இந்த வெயில் காலத்தில் குளிப்பதற்கு கூட வசதி இல்லாமல் நீண்டதூரத்திலிருந்து பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வரு கிறார்கள். வெயில் காலத்தில் அவர்கள் ரொம்பவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, எங்கெல்லாம் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி இருக்கிறதோ அங்கெல்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும், பேக்வர்டு கிளாஸ் மாணவர்களுக்கும் ஆதிதிராவிட மாணவர்களுக்கும் தனித்தனியாக ஆஸ்டல் வசதி செய்து கொடுக்க வேண்டும். 100 பிள்ளைகள் 150 பிள்ளை கள் அங்கே தங்கிப் படிப்பதற்கு ஏற்ற வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் மாணவர்கள் படிப் பதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலை உருவாகும். அந்த வசதிகளைச் செய்வதற்கு இன்னும் சற்று கூடுதலாக ஆஸ்டல்களைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

சிலர் ரொம்ப காலமாக எங்களை பேக்வர்டு கிளாசில் சேர்க்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்போதே சில சதவீதங்களை அறிவித்திருக்கிறீர்கள். 18 சதவீதம், 20 சத வீதம், 32 சதவீதம், 30 சதவீதம் என்று ஒதுக்கீடு இருக் கிறது. மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு 20 சதவீதம் என்று அறிவித்திருக்கிறீர்கள். மற்ற பேக்வர்டு கம்யூனிட்டிக்கு 32 சதவீதம் இருக்கிறது. ஆதி திராவிடர் களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாக்வர்டு கம் யூனிட்டிக்கு 30 சதவீதம் இருக்கிறது. இந்த ஒதுக்கீடுகள் எல்லாம் எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு அவர்களுக்குச் சென்று சேரவேண்டும ஆனால் இன்றைக்கு நடைமுறையில் பார்க்கும்போது சிலர் உண் மைக்குப் புறம்பாக சர்டிபிகேட் வாங்கி, முற்பட்ட சமு தாயத்தினர் மேலே போய்விடுகிறார்கள். மனசாட்சி இல்லாமல் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள்.



சமீபத்திலே ஹோசூருக்குச் சென்றிருந்தபோது பார்த்தேன். நல்ல கவுண்டன்மார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு நல்ல இடவசதி இருக்கிறது. வீட்டு வசதி இருக்கிறது. மற்ற வசதிகள் இருக்கின்றன. அவர்கள் எல்லாவிதமான செல்வத் தோடும் இருக்கிறார்கள். அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். எங்களை எல்லாம் எஸ்.டி.யில் சேர்க்க வேண்டும். மலைஜாதியில் எங்களை சேர்க்க வேண்டுமென்று மனு கொடுத் திருக்கிறார்கள். அங்கே இருக்கிற ரெவின்யூ இன்ஸ்பெக்டர் முடியாது என்று சொன்னதால் அவரை அடிக்கச் சென்றார்கள் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறார்கள்.

அதையும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உண்மையான எஸ். டி. 1971-லே அதாவது இந்த மலைஜாதி வகுப்பைச் சேர்ந் தவர்கள் அதாவது எஸ். டி. வகுப்பைச் சேர்ந்தவர்கள் .071 என்று இருந்தது. இன்றைக்கு அது 5.2 என்று வந்திருக் கிறது. இந்த வளர்ச்சி எப்படி வந்தது? எங்கே இருக்கி றார்கள்? பல ஜாதியைச் சேர்ந்தவர்கள் தங்களை எஸ். டி. என்று சொல்லி அரிசனங்களை விட நாங்கள் தாழ்ந்தவர்கள் என்று சொல்லி அவர்களுக்கு இருக்கக்கூடிய சலுகைகளைப் பெறுவதற்காக இவ்வாறு செய்கிறார்கள். அது நியாயமானது அல்ல. எனவே அதிலே சற்று தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நரிக்குறவர்கள். நாங்கள் எல்லாம் அரிசனச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டங்கள் எல்லாம் அதாவது என். ஆர். இ. பி., ஆர். எல். இ. ஜி. பி. மற்றும் தாட்கோ போன்றவற்றின் அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். ஆனால் இதர ஜாதியைச் சேர்ந்தவர்களும் வந்து ‘அக்கா நாங்களும் உங்களுக்குத்தானே ஓட்டுப்போட்டோம், எனவே எங்களுக்கு ஏன் வீடு கட்டிக் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள்’ என்று கேட்கிறார்கள். அப்படி அவர்கள் அடிக்கடி புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் கூட வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களைப் பொறுத்த வரையில், அதாவது 300 ரூபாய்க்கு, 500 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு, அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்காக ஒரு பகுதியை ஒதுக்கி அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கிற ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொடுத்தால் அவர்களுக்கும் ஒரு ஆத்ம திருப்தி ஏற்படும்

அடுத்து ரூரல் ஹவுசிங் ஸ்கீம் என்ற கிராமிய சட்டுறவு வீடுகட்டும் திட்டம் என்பதன் கீழ் கூட கடன்கள் சரியாகக் கொடுக்கப்படவில்லை. சரியானபடி பணம் கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே பெரும் பான்மையான இந்த ஏழைகளுக்கு இந்தக் கூட்டுறவுத் திட்டத்தின் மூலமாகவாவது வீடு கட்டிக் கொடுக்க ஒரு வழி வகை செய்ய முடியும் என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து தகுந்த நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

நீண்ட காலமாக பிறமலைக்கள்ளர் என்ற ஒரு பிரிவினர் அதாவது முக்குலத்தோர் என்ற சமுதாயத்தின் கீழ் வருகின்ற சீர் மரபினர் என்பவர்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறோம். நாம் பல இடங்களில் அரிசன மக்களுக்கெல்லாம் வீடுகளைக் கட்டிக் கொடுத்திருந்தாலும் கூட இவர்கள் அரிசன மக்களை விட மிகவும் மோசமான சூழ்நிலையில் இருந்துகொண்டிருக் கிறார்கள். 4,300 ரூபாய் கொடுத்து வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தோம். அது மிகக் குறைந்த அளவில் இருக்கிறது. இந்தப் பணம் போதாது. அதைக் கணிசமான அளவில் அதிகரித்துக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதை உயர்த்திக் கொடுப்பதாக இங்கே ஒரு குறிப்பிருக்கிறது. அடுத்து இப்போது ஆர். எல். இ. ஜி. பி. என். ஆர். இ. பி. மற்றும் தாட்கோ போன்ற திட்டங்களின் கீழ் 6,000 ரூபாய் ஒரு வீட்டுக்கு என்ற அளவுக்கு நாம் வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், இன்றைக்குக் கொத்தனாருக்கு 35 ரூபாய் கொடுத்து இரண்டு வேளை சாப்பாடும் போடவேண்டி இருக்கிறது. அப்படிப் போட்டால்தான் கொத்தனார்கள் வேலை செய்கிறார்கள். அந்தமாதிரி சித்தாளுக்கும் கூட கொடுக்கவேண்டி இருக்கிறது. நான் கூட கேள்வி நேரத்திலே ஒன்றைக் கேட்கலாம் என்று நினைத்தேன். அதாவது விவசாயக் கூலிகள் எல்லாம் நாம் நினைப்பதுபோல் இல்லை. நாம் போடுகிற சட்டம், ஆணைகள் அங்கே இல்லை. அவர்கள் ஒரு கான்ட்ராக்ட் மாதிரி எடுத்துக்கொள்கிறார்கள். ஒரு ஏக்கர் நிலத்திற்கு இத்தனை ரூபாய் என்று கான்ட்ராக்ட் எடுத்து அதன்மூலம் அவர்களுக்கு வருமானம் கிடைக்கிறது. இந்தச் சாதாரண மக்களுக்கு, ஏழை மக்களுக்கு ஒன்றுமே இல்லாத மக்களுக்கு, நிலம் கூட இல்லாத மக்களுக்கு, இந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதில் நாம் பாகுபாடு இல்லாமல் இதற்கென்று தனியாக ஒரு திட்டம் போட்டு இவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுத்தால் அவர்கள் திருப்தி அடைவார்கள். நேற்று கூட நான் கேள்வி நேரத்திலே—திருச்செந்தூருக்கு நெடும்பயணம் சென்ற காரணத்தால்தான் மீண்டும் அரியாசனத்திலே



தாங்கள் அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள். எனவே அந்த ஆண்டவனையே நம்பிக் கொண்டிருக்கிற அந்த ஏழைகளுக் கெல்லாம் அதிகப்படியான வீடுகளை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நரிக்குறவர்கள், அவர்கள் எங்கேயாவது ஒரு இடத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நரிக் குறவர் களுக்கு வீடு கட்டிக் கொடுத்தால் அவர்கள் ஓடிவிடு கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஒரு சமயத்தில் நம்முடைய அரிசனத் தந்தை திரு. என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள் தன்னுடைய இடத்தைக் கொடுத்து அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவர்கள் ஓடிவிட்டார்கள். இப்போது மீண்டும் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் நாங்கள் இனிமேல் ஓடி வெளியே போக வாய்ப்பில்லை. ஆகவே நாங்கள் இருக் கக்கூடிய இடத்திலேயே எங்களுக்கு விடு கட்டிக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் மாநிலத்தில் எங்கெங்கு இருக்கிறார்களோ அதுபற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும்.

அடுத்து குடுகுடுப்பை நாயக்கன்மார்கள். என்னுடைய தொகுதியிலே மூன்று, நான்கு ஊர்களிலே இருக்கிறார்கள். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். புதுப்பட்டி என்ற ஊரிலே அவர்கள் நிறைந்து இருக்கிறார்கள். அவர்கள் 6 மாதம், 9 மாதம் என்று வெளியே போய் குடுகுடுப்பை செய்து பிச்சை எடுத்துப் பிழைக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகளைப் படிக்க வையுங்கள் என்று நானே சொல்லி அந்தக் குழந்தைகளைப் படிக்க வைத்தார்கள். அப்படிப் படிக்க வைக்கின்றவர்கள் சம்பளம் கட்ட வேண்டி இருக்கிறது. அவர்களை பேக்வர் டிலேயும் சேர்க்காமல் நாயககன்மார்கள் என்ற பிரிவினரில் சேர்த்து வைக்கப்பட்டிருப்பது நல்லதல்ல. எனவே அந்த குடுகுடுப்பைக்காரர்களை எஸ். டி.-யிலே சேர்த்தால் தான் அவர்கள் முன்னுக்கு வருவார்கள். அந்தக் குழந்தைகள் மீண்டும் பிச்சை எடுக்கிற தொழிலைச் செய்யாமல் அவர்கள் வாழ்க்கையில் முன்னேறி வரக்கூடிய ஒரு நல்ல நிலைமை உருவாகும்.

அடுத்து இந்த கள்ளர் சீரமைப்புத் திட்டம் பற்றி ஏற் கெனவே நான் சொன்னேன். அந்த வீடுகட்டும் திட்டத்தை அறவே காணவில்லை. குறிப்பாக தென் ஜில்லாக்களில் இவர்கள் நிறைந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டுவதில் இந்த ஆண்டு குறைந்தது 5,000 வீடுகள் என்று

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1989 ஏப்ரல் 22

ஒரு இலக்கை வைத்துக்கொண்டு அதன்படி ஏற்பாடுகளைச் செய்தால் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான அளவுக்கு ஒரு நிலைமையை அரசாங்கம் செய்ய முடியும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து படிக்கக்கூடிய குழந்தைகளிடையே பாகுபாடு இருக்கிறது. நாம ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். அரிசனக் குழந்தைகளுக்கு 100 ரூபாய் குறைவு; இதர ஜாதிக் குழந்தைகளுக்கு 100 ரூபாய் ஜாஸ்தியாகக் கொடுக்கிறோம். நான் 100 ரூபாய் என்று குறிப்பாகச் சொல்லவில்லை. ஏதோ இவர்களுக்குக் குறைவாகவும், அவர்களுக்கு ஜாஸ்தி யாகவும் கொடுக்கப்படுகிறது. இது வந்து, அவாகளுக்குள்ளே ஒரு பாகுபாட்டைக் கொடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்குகிறது. கல்லூரியிலே படிக்கக்கூடிய மாணவர்கள், எல்லாம் என்ன அக்கா, எங்களுக்கெல்லாம் இந்த மாதிரி குறைத்து ஸ்காலர்ஷிப் வருகிறதே, எங்களுக்கு ரூ. 750 என்றால், பிற ஜாதிக்காரர்களுக்கு ரூ. 900, ரூ. 1,000 என்று வருகிறதே, இந்த பாகுபாடு ஏன் என்று கேட்கின்றார்கள். இந்த பாகுபாடு இல்லாமல் கல்லூரியிலே படிக்கக்கூடிய எந்த ஜாதிக்கார குழந்தைகளாக இருந்தாலும் சரி, ஏழைக் குழந்தைகளாக இருந்தால் ஒரே மாதிரியாக ஸ்காலர்ஷிப் ஏற்பாடு செய்தால் அதுவும் சற்று சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏழைக் குழந்தைகள், எந்த ஜாதியாக இருந்தாலும், பார்வர்டு கம்யூனிட்டியாக இருந்தாலும் சரி, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அத்தனை ஜாதி மக்களுக்கும், அந்த வீட்டு மனை கொடுப்பதிலும் கூட, நாம் அவர்களுக்கெல்லாம் எல்லோருடைய நிலைமைகளைப் பார்த்து, அதாவது 'டிப்பென்டிங் அப்பான் தி இன்கம்' என்று வைத்து அவர்கள் அத்தனை பேர்களுக்கும் வீட்டுமனைகளை வாங்கிக் கொடுத்துவிட்டால் கூட, நல்லது. அந்த மனை வாங்கி கொடுப்பதற்குக்கூட நாம் நடவடிக்கை எடுப்போமானால் அதை எல்லோரும் பாராட்டுவார்கள். ஆகவே அவர்களுக்கெல்லாம் மனைகள் கொடுப்பதிலேகூட நாம் பாகுபாடு காட்டாமல், ஏழைகளாக இருக்கக்கூடிய வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய எல்லா ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் நாம் அந்த உதவியை செய்யவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அத்தோடு இப்போது அந்த வீட்டை கட்டவே முடியவில்லை. அதற்கு நீங்கள் உலக வங்கியிலேயிருந்து கொடுத்தாலும் சரி, வேறு திட்டத்திலேயிருந்து கொடுத்தாலும் சரி, எங்கேயாவது கடன் வாங்கியாவது கொடுக்கலாம். அதிகப்படியான பணத்தை வாங்கி அவுசிங் யூனிட்டில் போட்டு அதன் மூலமாக கிராமபுறங்களில் இருக்கக்கூடியவர்களுக்குக்



1989 ஏப்ரல் 22] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கொடுக்கவேண்டும். அவர்கள் பட்டா வைத்திருக்கின்றார்கள். அதுதான் அவர்கள் சொத்து. வேறு ஒன்றுமில்லை. அவர்களுக்கு நிலம் கிடையாது. வேலை கிடையாது. எந்த வேலையும் இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அதைச் செய்யவேண்டும்.

கடைசியாக சலவைத் தொழிலாளர்கள் பிரச்சனை. இப்போது தண்ணீரே கிடைக்கவில்லை. எங்கே பார்த்தாலும் தண்ணீர் இல்லாமல் அவஸ்தைதைப் பட்டுக்கொண்டு இருக்கிறோம். பாவம் சலவைத் தொழிலாளர்கள். அவர்களுக்கு கிராமங்களிலே கிடைக்க கூடியது எல்லாம் தானியம் தான். அதுதான் அவர்களுக்குக் கூலி. அது இல்லாமல் பணம் கொடுக்கப்படுவதில்லை. இங்கே துணிக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறோம். ஆனால் அங்கே கிராமங்களிலே அந்த மாதிரி கொடுக்கப்படுவதில்லை. அந்தச் சலவைத் தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய ராட்சத கிணறு வெட்டி கொடுக்கவேண்டும். அவர்களுக்கு தோபிகானாக்கள் கட்டிக்கொடுத்தால் அது சற்று சாலச்சிறந்ததாக இருக்கும். அப்படி செய்தால்தான் கிராமங்களிலே வேலை செய்ய முடியும். அவர்கள் பிழைக்கமுடியும். அவர்கள் அத்தனை பேர்களையும் பேக்வேர்ட் கிளாசிலே சேர்த்தது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

அதுபோல, நாவிதர்கள். அவர்களுக்குக் கூட கிணறு வெட்டுவதற்கு கொடுக்கவேண்டும். இடம் இருந்தால், ரூ. 2.500 நாம் மானியமாக கொடுக்கிறோம். இந்தக் காலத்திலே ரூ. 2,500 என்பது எப்படி போதும். ஒரு கிணற்றுக்கு ஆழப்படுத்துவதாக இருந்தால் கூட ரூபாய் 10 ஆயிரம் தேவைப்படுகிறது. அவர்களுக்கு 2.500 ரூபாய் என்று இருப்பது மிகவும் குறைவு. அந்த ஏழைகளுக்கு, இடம் இருந்தால், 2 ஏக்கர் வைத்திருந்தால் அவர்களுக்கு இந்த ரூ. 2,500 என்பதை ரூ. 5,000 ஆக செய்தால் அதுவும் நன்றாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கருவிகள் கொடுப்பதிலே 10 பேர்களுக்குத்தான் கொடுக்கிறோம். 100 பேர்கள் அப்ளிகேஷன் கொடுத்தால், இந்த சலவைத் தொழிலாளர்களுக்கும், நாவிதர்களுக்கும் 100 பேர்களில் 10 பேர்களுக்குத்தான் கொடுக்கிறோம். அத்தனை பேர்களுக்கும் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வேறு வழியில்லை. இந்த கருவிகளை கொடுப்பதற்கான சூழ்நிலை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டு உரையை முடிக்கிறேன்.

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே எனக்கு பேச வாய்ப்பினை நல்கிய தமிழக முதல்வர் அவர்கள், தானைத் தலைவர், தமிழினத் தலைவர் மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்களுக்கும், பேரா

[திரு. தா. க. சுப்பிரமணியம்] [1989 ஏப்ரல் 22

சிரியர் பெருந்தகை அவர்களுக்கும், என்னை வெற்றி பெறச் செய்து அனுப்பிய சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் கூறி, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் நினைவு கூர்ந்து எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

பிற்பட்டோர் நலத்துறை மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்கு நான் முதலிலே பெருமைப்படுகிறேன். ஏனென்றால் என்னுடைய பகுதியாக இருக்கின்ற சத்தியமங்கலம் பகுதி மூன்றில் இரண்டு பங்கு பகுதி பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத்தரம் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற காரணத்தினால் இந்த சத்தியமங்கலம் தொகுதியிலே இருக்கின்ற தாளவாடி மலைப்பகுதியையும், சத்தியமங்கலம் ஒன்றியத்திலே இருக்கின்ற குத்தியாலத்தூர் மலைப் பகுதியையும், பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். கடந்தகால ஆட்சியிலே தமிழ் இனத் தலைவர் கலைஞர் அவர்கள் பிற்பட்டோர் நலத்திற்கு தனி மானியம் என்று ஏற்படுத்தினார்கள் என்பதிலே பெருமைப்பட்டு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சத்தியமங்கலம் தொகுதியிலே உள்ள தாளவாடி மலைப் பகுதி பிற்பட்ட பகுதி. அங்கே வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் கீழ்த்தரமாக இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட பகுதியாக தமிழக அரசு அதை அறிவித்து அரசிலே உள்ள அனைத்து சலுகைகளையும் அதற்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அரசுத் துறையில் நடத்தப்படும் 671 மாணவ மாணவிகள் விடுதிகளில் 61 விடுதிகளுக்குத்தான் அரசுக் கட்டிடங்கள் இருக்கின்றன. மற்ற விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் இயங்குகின்றன. வாடகைக் கட்டிடங்கள் சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தால், அதை எல்லாம் மாற்றி, அரசுக் கட்டிடங்களுக்கு மாற்றி, அந்த மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அந்த அரசுக் கட்டிடங்களுக்கு வருஷா வருஷம் மானியம் ஒதுக்கி, அவற்றைப் பழுது பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20).

அதைப்போல் அகில இந்திய உயர் அரசுப் பணிகளுக்கு மத்திய அரசு தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொள்ள, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு சென்னையில் மட்டும் ஒரு பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. அதைப்போல



1989 ஏப்ரல் 22] [திரு. தா. க. சுப்பிரமணியம்]

மாவட்டத் தலைநகரங்களில் இந்தப் பயிற்சி நிலையங்களை அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன். ஆண்டு வருமானம் 12,000-க்குக் குறைவாக உள்ளவர் களுக்கு உண்டி, உறையுள் தந்து, இலவசமாகப் பயிற்சி அளிக்கப் படுகிறது. ஆண்டு வருமானம் 12,000-க்கு மேலே உள்ளவர் களுக்கும், அவர்கள் சொந்தச் செலவில் தங்கிப் படிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீர் மரபினருக்கு வீடுகள் கட்ட தற்போது 4,300 வழங்கப் படுகிறது. இது மிகவும் குறைவாக உள்ளது. அந்தத் தொகையை அதிகப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். பிற்ப் படுத்தப்பட்ட பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பள்ளிக்கூடம் சென்றுவர பஸ் கட்டணச் சலுகை முழுவதும் அளிக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது பகுதியான தாளவாடி மலைப் பகுதி, மிகவும் பிற்பட்ட பகுதி. அதைப்போல புஞ்டியாநத்தார் பிற்பட்ட பகுதி. தாளவாடி ஒன்றியப் பகுதி சத்தியமங்கலம் வருவாய் வட்டாட்சியருக்கு உட்பட்டது. எனவே சத்தியமங்கலம் வர வேண்டுமென்றால் 70 கிலோ மீட்டர் வரவேண்டியிருக்கிறது. எனவே தாளவாடியை ஒரு தனி வருவாய் வட்டமாக அமைக்கக் கோருகிறேன். அடுத்து, என்னுடைய தொகுதி 150 கிலோ மீட்டர் நீளமுள்ளது. ஒரு பகுதி அந்தியூரிலிருந்து ; ஒரு பகுதி மேட்டூரிலிருந்து, கர்நாடக எல்லையிலிருந்து ஊட்டிவரை பரந்து விரிந்து இருக்கிறது. அங்கே பாதை வசதி சரியாக இல்லை. சற்று முன்பு இங்கே விவாதித்தார்களே, 12 யானைகள், 10 யானைகள் என்று, எனது தொகுதிக்கு வந்தால் ஏறத்தாழ நூற்றுக்கணக் கான யானைகளும், நூற்றுக் கணக்கான காட்டெருமைகளும், கரடிகளையும் என்னால் காட்ட முடியும். தேர்தல் நேரங் களில் அங்கே சென்றபோது, காட்டு எருமைகளிடமிருந்தும், கரடிகளிடமிருந்தும் யானைகளிடமிருந்தும் தப்பிக்க எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் சென்று வந்திருக்கிறேன். மக்கள் அந்த அளவுக்கு அந்தப் பகுதியிலே பாதுகாப்பின்றி வாழ்ந்துகொண்டி டிருக்கிறார்கள். அந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சென்று வர பாதை வசதியில்லை. டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1971-லேதான் அங்கே பாலங்கள் கட்டப்பட்டன. சாலைகள் போடப்பட்டன. அதற்குப் பின்னாலே எந்தவித வசதியும் செய்து தரப்படவில்லை. இப்போது அங்கே சென்ற போது, அங்கேயுள்ள மக்களெல்லாம் எங்களுக்கு வேறு ஒன்றும் தேவையில்லை. காட்டு மிருகங்களிடமிருந்து எங்களைக் காப் பாற்ற வேண்டுமென்று கோருகிறார்கள். இங்கே இருக்கிற யானை, சிங்கம், புலிகளிடமிருந்து எங்களைக் காப்பாற்ற வேண் டும் ; இங்கே செல்வதற்கு சரியான பாதை வசதி இல்லை, போக்குவரத்து வசதியில்லை என்று சொல்கிறார்கள். குறிப் பாக கர்நாடக எல்லையில் இருக்கிற காரணத்தாலே, தாளவாடி

மலைப் பகுதியிலிருந்து சத்தியமங்கலம் வர கர்நாடக எல்லையைச் சுற்றி வரும் சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றி சத்தியமங்கலம் பகுதியிலே சாலை வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பழங்காலத்தில் திப்பு சுல்தான் ஆண்டபோது அவன் வந்த வழி என்று, இன்றும் திப்பு சுல்தான் ரோடு என்று சொல்கிறார்கள் அந்தச் சாலையைச் சீர்செய்து, கஜநட்டி வழியாக சாலை அமைத்தால் 27 சுற்றுகள் ஏறிச் செல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. நேரடியாக 13 கிலோ மீட்டரில் சென்று விடலாம். கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் மின்சாரம் அங்கே வழங்கப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருப்பதால் மின்சாரம் சிங்கிள் ஃபேஸ் லைன் தரப்பட்டது. அதை 3 ஃபேஸ் லைனாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஒயர்கள் எல்லாம் பழுதுபட்டு, பல நாட்கள் மின்சாரம் கிடைப்பதில்லை. அதை மாற்ற வேண்டும். பல யானைகளாலும், காட்டு எருமைகளாலும் விவசாய நிலங்கள் எல்லாம் மிதித்து, நாசமடைவதால், விவசாயம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. கடந்த கால ஆட்சியிலே அவர்களிடமிருந்து துப்பாக்கிகள் அரசாங்கத்திலே கொண்டு வந்து வைக்கப்பட்டு, அது திருப்பித் தரப்படவில்லை.

அவர்களெல்லாம் காட்டு மிருகங்களிடமிருந்து பயிர்களைப் பாதுகாத்து வெள்ளாமையை எடுக்க முடியாது சூழ்நிலை இன்னும் இருக்கிறது. அவர்கள் காட்டு யானை, கரடிகளிடம் கடிபட்டு, மிதிபட்டு கஷ்டப்படுவதால் அவர்களுக்கெல்லாம் கண்டிப்பாக உதவித் தொகை வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே எனது பகுதி மலையும், மலையைச் சார்ந்த பகுதியுமாக இருப்பதால் நிறைய அணைக்கட்டுத் திட்டங்களை அங்கே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தாளவாடி மலையில் அணையைக் கட்டி அங்கே இருந்து தமிழ் நாட்டுக்கு தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். தற்போது கருநாடகத்திற்கு அந்தத் தண்ணீர் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. தாளவாடிக்குச கீழே உள்ள எனது தொகுதியில் நிறைய பாசனத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு வேளை நான்தான் தவறாக, இன்றைக்குப் பாசனம் பற்றிய விவாதம் நடத்துவதற்குப் பதிலாக என்னுடைய மானியம் மீது விவாதம் நடப்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறேனோ என்று விளக்கம் தந்தால் நல்லது. (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சுப் பேசுவதால் விட்டுக் கொடுத்தேன். அந்தப் பேச்சில் பாசனமும் கொஞ்சம் வரட்டுமே என்று விட்டிருக்கிறேன்.



**திரு. தூ. க. சுப்பிரமணியம் :** எனது பகுதி பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருப்பதால், மலையும், மலையைச் சார்ந்த பகுதியாக இருப்பதால் பேசிவிட்டேன். அதை மன்னித்து, ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு — மலைப் பகுதி மக்களுக்கு — அங்கே இல்லங்களைக் கட்டித் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, என்னுடைய தொகுதி பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருப்பதால் மலைப் பாதைகள் நிறைய சீர் செய்யப்படாமலேயே இருக்கின்றன. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வசதி செய்து தரப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அந்தப் பாதைகளை எல்லாம் சீர் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லி, மலையில் இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட அவர்களுக்கு மானியம் பெற்றுத்தர வேணடும் என்றும் சொல்லி, சத்தியமங்கலம் தொகுதியில் தாளவாடி மற்றும் முஷடியாலத்தூர் ஆகியவற்றை பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறையில் என்னுடைய கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் நன்றி கூறுகிறேன்.

பிற்பட்டோர் துறையின் மூலமாக— அந்தக் கொள்கையின் அடிப்படையில்—கல்லூரிகளில் இட ஒதுக்கீடு மற்றும் அரசாங்க வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு ஆகிய இரண்டையும் நாம கடைப்பிடித்து வருகிறோம். கடந்த காலத்தில்— குறிப்பாக ஒரு மாதத்திற்கு முன்பு மிகவும் பிற்பட்டோர் என்ற பிரிவினருக்கு 20 சதவீத இட ஒதுக்கீட்டைப் பிற்படுத்தப்பட்டோருக்கான சதவீதத்திலிருந்து எடுத்துக் கொடுத்திருக்கிறோம். என்னைப பொறுத்தவரையில் பிற்பட்டோருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 50 சதவீதத்திலிருந்து 20 சதவீத இடத்தை எடுத்துக் கொடுக்காமல், 32 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிற முற்பட்டோருக்குரிய ஒதுக்கீட்டிலிருந்து எடுத்துக் கொடுத்திருக்க வேண்டும். இதுதான் என்னுடைய ஆழமான எண்ணமாகும். மேட்டிலிருந்துதான் பள்ளத்திற்குத் தண்ணீரைப் பாய்ச்ச வேண்டுமே தவிர, ஒரு பள்ளத்திலிருந்து இன்னொரு பள்ளத்திற்கு நீர்ப் பாய்ச்சினால் அந்தப் பள்ளம் இன்னும் கொஞ்சம் அதிகமாகப் போய்விடும்.

பிற்பட்டவர்களுக்குத் தனிப் பாதுகாப்பு வேண்டும். காரணம் பிற்படுத்தப்பட்டவர்கள்தான் இங்கே பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அரசியல் சட்டத்திலே கூட மைனாரிட்டிகளுக்குத்தான் பாதுகாப்பு உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசி

யல் சட்டத்தில் ஏன் மெஜாரிட்டிக்கு பாதுகாப்பு கொடுக்கவில்லை என்றால், மெஜாரிட்டி எப்போதும் தன்னுடைய பங்கை எடுத்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையோடு அந்தப் பாதுகாப்பை அவர்கள் கொடுக்காமல் விட்டுவிட்டார்கள். நாம் சிறுபான்மையினருக்கு போகக்கூடிய பங்கில் கை வைக்காமல், பெரும்பான்மையினர் பெற வேண்டிய பங்கை விட்டுவிடக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

[பிற்பகல் 12-30]

கல்லூரியில் இடம் ஒதுக்கீடு தருகிறோம். வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு கொடுக்கிறோம். ஆனால் பெரிய பெரிய பதவிகளில் நியமிக்கும்போது அதே விகிதாச்சாரத்தை நாம் பின்பற்றுவது கிடையாது. தமிழ்நாட்டில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருக்கக் கூடியவர்களின் பட்டியலைப் பார்த்து இதே விகிதாச்சாரப்படி அவர்களும் அங்கே நியமிக்கப்பட வேண்டும். சென்னை கோட்டையிலே செயலாளராக இருக்கக்கூடியவர்களுடைய பட்டியலைப் பார்த்து இதே பிற்படுத்தப்பட்டோர் விகிதாச்சாரப்படி, இன்னும் சொல்லப்போனால் 18 சதவீதம் அரிசன மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அதையும் பின்பற்ற வேண்டும். சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் நியமனம் என்றாலும் அங்கே 18 சதவீதம் அரிசன மக்களுக்கும், அதேபோல் பிற்படுத்தப்பட்டோருக்கும் அதே விகிதாச்சார முறைப்படி நியமனம் இங்கே இருந்து பரிந்துரைக்கப்பட்ட வேண்டும். இன்றைக்கு கணக்கு எடுத்துப் பார்ப்பீர்களேயானால், 18 சதவீத அரிசன மக்களுடைய சார்பில் நியமனங்கள் உயர்நீதிமன்றத்திலும் கிடையாது ; உச்ச நீதியன்றத்திலும் கிடையாது. எல்லோரையும் பாதுகாக்கக்கூடிய அரசியல் சட்ட அமைப்பின் கீழ் வரக்கூடியவர்கள், அமரக்கூடிய இடங்களிலேயே அரசியல் சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட அந்த இட ஒதுக்கீடு, பாதுகாப்பு அங்கே இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அது ஒன்று.

அடுத்து பதவி உயர்வு கொடுக்கும்போது இதே விகிதாச்சாரப்படி பதவி உயர்வும் கொடுக்க வேண்டும். அவர்கள் உயர்ந்த பதவிகளை பெறும்போது, பல்வேறு அதிகாரிகளோடு போட்டி போடும்போது இதே விகிதாச்சாரப்படி அவர்களுக்கும் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி செய்தால்தான் இன்னும் 25 அல்லது 50 ஆண்டு காலத்திற்குள் எல்லோரும் ஒன்றாக, சமமாக வாழ முடியும்; எல்லோரும் ஒன்றாக, எந்த சமுதாயம் என்று பார்க்காமல், அவரவருடைய வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்ள முடியும் என்பதை நான் இங்கே உதாரணத்தோடுப் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். ஏஷியாட் விளையாட்டுப் போட்டியை பார்த்தவர்களுக்குத் தெரியும் ; ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியைப் பற்றி கேள்விப்பட்டவர்களுக்குத் தெரியும். இந்த இரண்டிலும் இட ஒதுக்கீடே கிடையாது. அதுபோல் திறமை வளர்வதற்கு, அதுபோன்ற திட்டங்களை அரசாங்கம் கொண்டுவருமேயானால், இன்னும் 50 ஆண்டுக் காலத்தில் உலக அரங்கில் இனி எல்லோரும் சமமாக போட்டி போட முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்னொன்று, இன்றைக்கு பிற்படுத்தப்பட்டோருக்குக் கொடுக்கக்கூடிய அரசாக—இங்கே என்னையும் சேர்த்து சொல்கிறேன், நானும் பாதுகாப்பு தான்— எல்லோரும் இங்கே இருக்கின்றோம் ; பிற்படுத்தப்பட்டோர் மக்களின் வாக்குகளைப் பெற்றுத்தான் அதிகமாக நாம் இங்கே வந்து இருக்கின்றோம். அவர்கள் நம்மை நம்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள். தேர்தலில் எந்தப் பிரிவானாலும், அவர்கள் அந்தப் பிரிவை சொல்லி வாக்கு கேட்பது கிடையாது. எந்தப் பிரிவும் வெளிப்படையாக பத்திரிக்கையில் விளம்பரம் கொடுப்பதும் கிடையாது. இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள், இந்தப் பிரிவுக்கு வாக்களியுங்கள் என்று நான் எந்தக் பத்திரிக்கையிலும் பார்க்கவில்லை. ஆனால் சில பேர் தவறு செய்து விடுகிறார்கள். ஒரே ஒரு சமுதாயம், முற்பட்ட சமுதாயம், இந்தத்தேர்தலில் இன்னாருக்குவாக்களியுங்கள் என்பதை நான் பத்திரிக்கையில் பார்த்து உண்மையிலேயே வேதனைப்பட்டேன். எல்லோரும் ஒன்றாக தேர்தலில் நின்று வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, வாக்குகளைக் கேட்டுக்கொண்டிருந்தபோது, இப்படி ஒரு சமுதாயம் இன்னாருக்கு வாக்களியுங்கள் ; நாங்கள் இந்தக் கட்சியோடு கூட்டு வைத்து இருக்கின்றோம் என்று முற்பட்ட சமுதாயம் சொன்னது உண்மையிலேயே வேதனைக்கு உரிய விவகாரம் ஆகும். முதலமைச்சர் அவர்களுக்கும் அது எந்த சமுதாயம் என்று தெரியும். ஆகவே சொல்கின்றேன், இனிமேல் அந்த பேதம் இல்லாமல், தேர்தல்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள், நம்முடைய நாட்டின் நடப்புகள் எல்லாம் உருவாக வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம் ஆகும். இதுபோன்ற நிலையில் அரசாங்கம் தன்னுடைய நிலையை விட்டுக் கொடுக்காமல் நிலைத்து நிற்க வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம் ஆகும். பல பேர் போராடுவார்கள். சில சமுதாயத்தினர் பிற்பட்ட சமுதாயத்துக்குள்ள விகிதாச்சாரத்தில் இருக்கின்றார்கள் ; அவர்களில் பல பேர் முன்னேறி விட்டார்கள் ; அவர்களை அந்தப் பிரிவிலிருந்து, விகிதாச்சாரப்படி பார்த்து கூட எடுத்துவிடலாம் ; எல்லோரையும் ஒன்றாகக் கருதிவிட முடியாது. இதைத்தான் மறைந்த முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் இதுபோன்ற சமுதாயத்தில், ரொம்ப முன்னேறியவர்கள் ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதியாகவோ, ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியாகவோ இரண்டு, மூன்று ஜெனரேஷனாக முன்னேறி விட்டார்கள் ; அவர்களுக்கு ஒதுக்கீடு தேவையில்லை என்ற அடிப்படையில்தான் அவர்கள் கொள்கையைக் கொண்டு வந்தார்கள். அதையும் கொஞ்சம் மனதில் வைத்துக்

கொள்ள வேண்டுமென்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு மூன்று ஜெனரேஷன் கொஞ்சம் முன்னேறி விட்டால் அவர்களை முன்னேறியவர்களோடு சேர்ப்பதில் ஒன்றும் தவறு கிடையாது. முதலாவதாக, ஒரு சமுதாயத்திலேயிருந்து படித்து வரக்கூடிய முதல் ஜெனரேஷன் கொஞ்சம் உயரும் பொழுது அதற்குக் கொஞ்சம் முக்கியத்துவம் கொடுக்கலாம். ஹேண்டிகேப்ட்—ஓட்டப்பந்தயத்திலே கூட அப்படித்தான். ஒரு கால் ஒடிந்திருந்தால், பத்தடி தள்ளி நிற்கச் சொல்லுவார்கள். அதுபோல கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, பிற்படுத்தப்பட்டோர் என்ற துறையே உருவானதற்குக் காரணமே முதலமைச்சரவர்கள்தான் அந்தத் துறையை உருவாக்கியிருக்கிறார்கள் முன்பு முதலமைச்சராக இருந்தபொழுது. பிற்படுத்தப்பட்டோருடைய உரிமை எந்தக் காலத்திலும் விட்டுக் கொடுக்கப்பட மாட்டாது என்ற காரணத்தினால் தான் அதை உருவாக்கியிருக்கின்றார்கள். ஆக என்னதான் அரசியல் பேதங்கள்—அரசியல் அநாகரிகமாகச் சில நேரங்களில் பலபேர் எண்ணுவார்கள். ஏன் இந்தச் சமுதாயம், சமுதாயம் என்று பேசிக்கொண்டிருக்கிறார்களே என்று. தேர்தல் நேரத்தில் தான் இதை உணர முடிகிறது. தேர்தல் நேரத்தில்தான் இதன் எதிரொலிப்பு தெரிகிறது. ஆகவே முன்னேறிய சமுதாயங்கள் எந்தெந்தச் சமுதாயங்கள் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த முன்னேறிய சமுதாயத்திலேயும் கொஞ்சம் பேர் பொருளாதார ரீதியில் பின்தங்கியிருக்கிறார்கள். அவர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த அளவிற்கு ஒதுக்கீட்டை வழங்க வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இல்லாவிட்டால் ஒட்டுமொத்தமாக 18 சதவீதம் அரசியல் சட்டம் வழங்கியிருக்கிறது அரிஜன மக்களுக்கு ; 50 சதவீதம் வழங்கியிருக்கிறது பிற்படுத்தப்பட்டோருக்கு ; முற்படுத்தப்பட்டோர்ஓப்பன் காம்பெடிஷன் 32 சதவீதம் 50 சதவீதத்திலிருந்து இப்பொழுது 20-ஐ எடுத்து விட்டோம். இந்த 30-இல் எந்தெந்த சமுதாயங்கள் இன்னும் முன்னேறாமல் இருக்கின்றன என்பதைக் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணமாகும். பிற்படுத்தப்பட்டோர் என்ற அந்த மானியக் கோரிக்கையில் கண்டிப்பாகப் பேச வேண்டுமென்றுதான் பேசுகிறேன் ; நான் வாயைத் திறக்காமல் இருந்துவிடக் கூடாது என்ற காரணத்தினால்தான். ஆகவே, என்னுடைய உணர்வை, நான் இங்கே வெளியிட்டு விட்டேன். நீங்கள் முடிவெடுங்கள். இங்கே சொல்கிறோம். முடிவெடுப்பது உங்களுடைய பொறுப்பாகும். ஆனால் இந்த ஜாதிஉணர்வு அதிகமாக வளர்ந்துவிடக் கூடாது ; ரொம்ப வளர்ந்துவிட்டது தேர்தலிலே. அதிலும் மெஜாரிட்டி ஜாதியிலே இரண்டு ஜாதி மோதினால்தான் ஒருவர் எம்.எல்.ஏ.-வாக ஆக முடியும். மைனாரிட்டிகளுக்கு அந்தத் தொந்தரவே



கிடையாது. மெஜாரிட்டியிலே அதே கம்யூனிட்டியிலே இன்னொருவரைத் தோற்கடித்தால் தான் இவன் எம்.எல்.ஏ.-வாக ஆக முடியும். அந்த நிலை இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. அதைக் கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டும். ஜாதி உணர்வு, திருமணங்களுக்கு, கலாச்சாரத்தின் அடிப்படையில் இன்றைக்கு நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அதை அரசியல் ரீதியில், அந்த உணர்வை வளர்க்காமல், தூண்டி விடாமல் இருக்க வேண்டும். இந்த ஜாதி, இந்த ஜாதியினருக்கு வாக்களிக்க வேண்டுமென்று சொன்னால் நம்முடைய தேர்தல் கமிஷன்கூட தடை போட்டிருக்கிறது : விதியைப் போட்டிருக்கிறார்கள், ஜாதி உணர்வைத் தூண்டக் கூடாது என்று. ஆனால் ஜாதி உணர்வையே தூண்டி சிலபேர் இன்றைக்கு இந்த அவைக்கே வந்து விட்டார்கள் ; தவறு செய்திருக்கிறார்கள். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி நான் சொல்லவில்லை. அந்த அளவிற்கு ஜாதி உணர்வு அதிகமாக இருக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மூன்று உயர்நிலைப்பள்ளிகள், பாப்பாக்குடி பஞ்சாயத்து யூனியனால், பள்ளக்கால புதுக்குடி, வடக்கு அரியநாயகிபுரம், மருதம்புத்தூர் ஆகிய மூன்றும் அரசினர் உயர்நிலைப் பள்ளிகள். அங்கே ஏதாவது ஒரு பள்ளிக்காவது நான் பேசியதற்கு நீங்கள் ஒரு ஹாஸ்டலை வழங்க வேண்டுமென்பதை, பிற்படுத்தப்பட்டோருக்கு என்பதை கேட்டுக்கொள்கிறேன். என்னதான் மாநில அளவில் பேசினாலும் தொகுதியை விட்டுவிட முடியாது. தொகுதி மக்கள்தான் உள்ளே அனுப்பியிருக்கின்றார்கள். வெளியே செல்வதற்கு என்னைத் தொகுதி மக்கள் அனுப்பவில்லை. ஆகவேதான் இங்கே அமர்ந்து முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். வழங்குங்கள், நன்றி. வணக்கம்.

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையை இன்றைய தினம் அவையிலே வைத்திருக்கின்றமுதல்வரவர்கள் மிகவும் பின் தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள். ஐம்பதாண்டுக் காலம் அரசியலிலே அனுபவம் பெற்றவர்கள். ஆளுங்கட்சியிலும், எதிர்கட்சியிலும் இருந்து பல துறைகளிலும் எல்லா வகையிலும் நன்கு அறிந்தவர்கள். தமிழகத்திலே ஒவ்வொரு சமுதாய மக்களும் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்றும், எந்தெந்தப் பகுதிகளிலே அவர்களுடைய நிலைமை எவ்வாறு இருக்கிறது என்றும் நன்கு உணர்ந்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றையதினம் இந்தத் துறையை அவர்கள் கையிலே வைத்துக்கொண்டு இதற்கான காரியத்தை ஆற்றுவது என்று வந்திருப்பதை நான் பெரிதும் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

[திரு. கோ. பூவராகன்] [1989 ஏப்ரல் 22

(பிற்பகல் 12-40)

குறிப்பாக நீண்ட நாட்களாக ஒரு சமுதாயத்தில் இருப்பவர்
களுக்கு வசதி வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்று சமீபகாலமாக
மட்டுமல்ல தொடர்ந்து நீண்டகாலமாக கோரிக்கை எழுந்து வந்
திருக்கிறது. இப்போது சமீபகாலமாக 7, 8 ஆண்டுகளாக
இதற்கு அதிக முக்கியத்துவம் வந்ததற்கு காரணம் பள்ளிகளில்,
வேலை வாய்ப்புகளில் ஒரு ரேட் வைத்து விட்டார்கள். பள்ளி
களில் சேரவேண்டுமென்றுச் சொன்னால், கல்லூரிகளில் சேர
வேண்டுமென்றுச் சொன்னால் இந்த அளவிற்கு கொடுத்தால்தான்
ஆகும். உத்தியோகத்திற்குப் போகவேண்டுமென்று சொன்னால்
குறிப்பாக போக்குவரத்துத் துறையில் ஒரு டிரைவர், கண்டக்டர்
வேலைக்கு போக வேண்டுமென்றால் டிரைவருக்கு 10 ஆயிரம்,
கண்டக்டருக்கு 5 ஆயிரம் என்று ஒரு ரேட் இருக்கிறது. தொழில்
கல்வியில் படிக்க வேண்டுமென்றால் தொழில் கல்வியில் கூட
என்ஜினியரிங் காலேஜில் படிக்க 35 ஆயிரத்திலிருந்து 65 ஆயிரம்
ரூபாய், வைத்திய கல்லூரியில் படிக்க வேண்டுமென்றால் 2 இலட்
சத்திலிருந்து 3 லட்சம் வரைக்கும் அதற்கு ரேட் உண்டு.
அதைப்போல ஐ.டி.ஐ.-யில் படிக்க வேண்டுமென்றால் 10 ஆயிரம்
முதல் 15 ஆயிரம் வரை என்று ஒரு நிலை வந்தது. அதைப்
பார்க்கிறபோது அதிலே இருப்பவர்களுக்கு கிடைக்காத போது,
குறுக்கே இருப்பவர்கள் பார்த்து இதுமாதிரி ஒரு விகிதாச்சாரம்
வந்தால் அந்த இடத்தை நாம் பிடித்து விடமுடியும் என்று
சொன்னபோது தான் இந்த நிலை வந்தது. இந்த நிலையைத்
தவிர்ப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். உத்தியோகம் ஆனாலும் சரி, பள்ளிகளில், கல்லூரி
களில் இடம் பிடிக்க வேண்டுமென்றாலும் சரி, இந்த ரேட்
முறையை அழித்திட வேண்டும். ஒழித்திட வேண்டும். அப்படி
யாராவது தனியார் கல்லூரிகள் இந்த ரேட் வைத்திருப்பார்க
ளானால், அரசாங்கமே அதை மொத்தமாக அந்த ரேட்டை
விலைகொடுத்து வாங்கி இது போன்று பின்தங்கிய நிலையில்
உள்ளவர்களுக்கு, மிகவும் பின்தங்கியவர்களுக்கு, சீர்மரபின
ருக்கு அளிப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

இந்த இலாக்காவிற்கு அதிகமாக ஆட்கள் நியமித்தல், டைரக்
டரேட் ஏற்படுத்துவது கார் வாங்குவதையெல்லாம் கூட விட்டு
விட்டால் பரவாயில்லை. இந்த இடத்தை வாங்கி இவர்களுக்கு
ஒதுக்குகிற ஒரு நிலை வர வேண்டும். ஏனென்றால் அந்த முறை
இருக்கக்கூடாது என்றவகையில் அரசாங்கம் ஏற்பாட்டைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது எவ்வாறு வந்தது ?
இதற்கு யார் பொறுப்பு என்று பார்க்கிறபோது, இந்த சமயத்தில்
முதல்வர் அவர்கள் ஒரு முடிவிற்கு வந்து பின்தங்கிய வகுப்பில்,
மிகவும் பின்தங்கிய வகுப்பில் இருப்பவர்களுக்கு இருபதும், அதி
(லயும் பின்தங்கியவர்களுக்கு, மீதி இருப்பவர்களுக்கு 30 சதவிதம்



1989 ஏப்ரல் 22] [திரு. கோ. பூவராகன்]

என்று வைத்திருக்கிறார்கள். இதிலே சிலபேர் வெளியிலே இந்த
மாங்கனியை வாங்குவதற்கு புறப்பட்டார்கள். ஒருவர் ஊரைச்
சுற்றினார். டெல்லிக்குப் போனார், அங்கே போனார் இங்கே
போனார். கடைசியில் ஒன்றும் கிடைக்கவில்லை. உங்களையே
சுற்றி வந்திருக்கிறார். நீங்களே சொன்னீர்கள் இந்த மன்றத்தில்
மொத்தத்தில் எங்கள் அணியைச் சார்ந்தவர்கள் 32 பேர்கள்
இருக்கிறார்கள் என்று. உங்களையே சுற்றி வருகிறவர்கள் சுற்றி
வந்து இன்றைய தினம் 20-ல் நின்று இருக்கிறார்கள். அதிலே 30
பேர்களுக்கு மேலே இருப்பதால் 20 என்ற எண்ணிக்கையை
இந்தப் பக்கம் மாற்றி 30-ஆகப் போடுவது சிரமமாக இருக்காது
என்று சொல்லிக் கொள்வேன். உங்களுக்கு நன்றாகத் தெரியும்.
ஒரு மாவட்டத்தில் இருப்பவர்கள், எவ்வாறு இருக்கிறார்கள்
என்று அந்த மாவட்டத்தில் எண்ணிக்கை வைத்து சொல்லுகிறீர்
கள். நான் ஒன்றைச் சொல்வேன். கள்ளர் ரெக்ளமேஷன்
என்று பார்க்கிறபோது இன்றையதினம் 275 பள்ளிகளுக்கு மேல்
ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள்
அவர்களுக்கென்று வைத்திருக்கிறீர்கள். இது இப்போது ஏற்
பட்டது அல்ல. தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு முன்பு ஏற்
படுத்தப்பட்டது. அந்த சீர்மரபினர்களுக்கு அவர்களுடைய
நிலையை உணர்ந்து கல்வியில், வீடு கட்டிக் கொடுப்பதில் என்று
பலதரப்பட்ட உதவிகளை அளிப்பதற்கு ஒரு இலாக்காவே பின்
தங்கிய இலாக்காவோடு இணைந்து செயல்பட்டு, அதற்கென்று
பணத்தை ஒதுக்கி நிறைய அவர்களுக்கு செய்திருக்கிறார்கள்
என்று இந்த சமயத்தில் சொல்லிக் கொள்வேன். அதைப் பார்க்
கிறபோது அந்த சீர்மரபினரையும் இன்றையதினம் இந்த மிகவும்
பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கிறபோது எண்ணிக்கை
கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. கணக்கிலே பார்க்கிறபோது
அவர்கள் சொல்வார்கள் 81-ம் வருடம் ,71-ம் வருடம் என்ற
கணக்கிலே பார்க்காமல் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கிறார்
கள், அந்த மாவட்டத்தில் எப்படி அவர்கள் வாழ்கிறார்கள்,
அவர்களுக்கு நாம் ஒதுக்கிய இந்த விழுக்காடு போதுமா என்பதை
கணக்கிலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அதை சிந்தனை செய்து பார்த்து செய்யவேண்டும். நான் அதிக
மாக விவாதத்தில் இதில் இறங்க விரும்பவில்லை. சங்கடத்தை
விளைவிக்க விரும்பவில்லை. சங்கடத்திலிருந்து விடுபடுவதற்கு
ஒரு யோசனையை இந்த சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன். நீங்கள் தயவு செய்து இந்த விழுக்காட்டை இந்த
பக்கம் இருப்பதை அந்த பக்கம் மாற்றி அவர்களுக்கு உதவியாக
இருக்கக்கூடிய அளவிற்கு நல்லமுறையில் செய்வதற்கு முன்வருவது
நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல
இந்த பின்தங்கிய வகுப்பினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர்
ஏற்பாடு செய்த அறக்கட்டளைகள் ஏற்கெனவே இருக்கின்றன.
அதாவது செங்கல்வராயன் இன்ஸ்டிட்யூட், அவர்களுடைய
டிரஸ்ட் ஒன்று சென்னை நகரத்திலே 1873ஆம் ஆண்டு நிறுவப்
பட்டது. அவர்கள் அறக்கட்டளை ஒன்றை நிறுவியிருக்கிறார்

13897
N211,31 N189
N189.12.1

கள். அந்த அறக்கட்டளை கல்விக்காகவும், தொழில் கல்விக் காகவும் சாதாரணமாக அதாவது விதவைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும், குறைந்தபட்சம் ஒரு நாள் ஒன்றுக்கு 10 மாணவர்களுக்காவது உணவு வழங்கவேண்டும் என்றும் கண்பார்வை அற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் இவ்வாறெல்லாம் அந்த அறக்கட்டளையிலே சொல்லப்பட்டிக் கிறது. அதிலே கூட அவர்கள் நிறையக் கட்டிடங்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். பீச்சிலேயும், மவுண்ட் ரோடிலேயும் வேறு பல இடங்களிலேயும விலை உயர்ந்த கட்டிடங்கள், எல்லாம் இன்றைய தினம் அந்த அறக்கட்டளைக்கு என்று இருக்கிறது. எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், சமுதாயத்திலே பின்தங்கிய மக்களுக்கு என்று அவர்கள் ஏற்படுத்திய அந்த டிரஸ்ட், அவர்களுக்கு எந்த அளவிற்கு உதவியாக இருக்கிறது என்று பார்ப்போமேயானால் தற்போது சரியாக இல்லை என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதற்கு ஆண்டு ஒன்றுக்கு அரசாங் திலே—போடப்படுகின்ற மதிப்பு 35 லட்சம்ரூபாய் வருகிறது என்று மதிப்பு போட்டிருக்கிறார்கள். சமீபத்திலே, அது சரியாக நிர்வகிக்கப்படவில்லை என்று சொல்லி, அது இன்னொரு டிரஸ்டோடு இணைந்து விட்டது. அந்த டிரஸ்ட்டின் நோக்கத்தை சரியாகக் கையாளவில்லை என்று சொல்லி, வழக்கு மன்றத்திற்குப் போனார்கள் அந்த வழக்கிலே நீதிபதி தீர்ப்பைக் கொடுத்தார். இவ்வாறு செய்வது சரியில்லை என்று சொல்லி, அந்தத் தீர்ப்பிலே டிரஸ்டிகளைக்கூட தனியாகப் போட்டார்கள். அப்போது இருந்த அரசாங்கம் கூட இதை எதிர்த்து ஏன் என்றால் நியாயம் நடந்து விடக் கூடாது நாட்டிலே— உயர்நீதிமன்றத்திற்குப் போனார்கள். அந்த வழக்கு அங்கே தடைபட்டு இருக்கிறது. அதற்கு இடையிலே இந்த டிரஸ்டிகள், அந்த இடத்திலே போய் உட்கார்ந்து விட்டார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர் களே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை பச்சையப்பன் அறக் கட்டளையிலேயிருந்து, இன்றைய முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடுதான் உயர்நீதிமன்றத்தில் நான் தொடர்ந்த வழக்குக்கு, சாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் அன்று இருந்த அரசு அதை எதிர்த்து உச்சநீதி மன்றத்திற்குப் போனது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்அவர்கள் உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை அமல்படுத்த வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், இது குறித்து நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

**திரு. கோ. பூவராகன்:** அதற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம்.



அதோடு இன்னும் வேறு பல பிரச்சினைகள் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். இந்தப் பிரச்சினை முதல்வர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதே போன்றுதான், ஆயிரம் காணி ஆளவந்தார் டிரஸ்ட் என்று ஒன்று இருக்கிறது. ஆயிரம் காணி இருந்தது அவருக்கு. உங்களுக்கு நன்றாகத் தெரியும், அவைகள் எந்தெந்தப் பகுதியில் இருந்தது என்று, இப்போது எங்கெங்கே யார் இதிலே அனுப வித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதுகூட இந்த அறக்கட்டளைக்குத் தகுந்த மாதிரி இன்றைய தினம் இதுவரை நடந்து கொண்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இப்படிப் பார்க்கிற போது, இந்த பின் தங்கிய மக்கள், மற்றும் மிகவும் பின்தங்கிய மக்களின் நிலை உயர்வதற்குத்தான் இந்த அறக்கட்டளைகள், நிறுவப் பட்டாலும்— இங்கே கூடச் சொன்னார்கள்—முழுக்க முழுக்க அவர்களுடைய ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூடச் சொல்லவில்லை. அவர்கள் குறித்த அந்த கட்டளைப்படி நடக்க வேண்டும் என்றுதான் சொல்கிறோம். அந்தக் கட்டளையின்படி நடக்கவில்லை என்பதுதான் என் னுடைய கருத்து.

அடுத்து நம்முடைய நண்பர் திரு. பாண்டியன் அவர்கள் இங்கே பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். ஏன் இந்த முற்போக் கிலிருந்து கொஞ்சம் எடுக்கக்கூடாதா என்று கேட்டார்கள். முற்போக்கிலிருந்து எடுத்தால் என்ன விளைவுகள் வரும் என்பது முதல்வர் அவர்களுக்குத் தெரியும். அந்த யோசனையை நான் சொல்வதற்குத் தயாராக இல்லை. அதோடு இரண்டு பேர்கள் தான் இப்போது நாட்டிலே, 2 வகுப்பார்கள்தான், ஒன்று ஐயர், ஐயர் என்று சொல்வதாலே யாரும் வருத்தப்பட வேண்டாம். அடுத்து வன்னியர் என்று சொல்வதாலே நான் ஜாதியைக் குறிப் பிடுவதாக நீங்கள் எண்ண வேண்டாம்—இந்த இரண்டு வகுப் பார்கள்தான்—கல்விக்கும் கல்யாணத்திற்கும் ஒரே மாதிரி போட்டுக் கொள்வார்கள். இது நடைமுறையில் இருக்கிறது. மற் றவர்களைப் பற்றிக்கேட்டால் எனக்குச் சொல்லத்தெரியாது. ஆக நடைமுறையில் இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த இரண்டு வகுப்பார் மட்டும் கல்விக்கூடங்களில் சேருவதற்கும் ஒரே ஜாதி, கல்யாணத்திலே போடுவதற்கும் ஒரே ஜாதி. மற்றவர்கள் பற்றி எனக்குத் தெரியாது. ஏனென்றால், அது அதற்குத் தகுந்த மாதிரி காலம் மாறுகிறபோது, எல்லாம் மாறி விடுகிறது. இவர்கள் எல்லாம் ரொம்பவும் அடிமட்டத்திலே இருக்கிறார் கள். நான் நம்முடைய முதல்வர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நான் எதிர்வரிசையில் இருந்த போது, இரண்டு இரண்டு கல்லூரிகளை ஒவ்வொரு வகுப்பாருக்குக் கொடுத்தீர் களே, எங்களுக்கு ஏன் ஒரு கல்லூரியைக் கொடுக்கக் கூடாது

என்று அவர்களிடம் வினவியபோது, தாராளமாகக் கொடுக்
கிறேன்.—அதற்கு ஒரு நியதி இருக்கிறது—இடங்களைக் கூட
நான் இலவசமாகக் கொடுக்கிறேன் என்று கூடச் சொன்னார்கள்.
முயற்சி எடுக்கப்பட்டு அன்றைய தினம் ஆட்சி உடனடியாகக்
கலைக்கப்பட்டதனாலே அவராலே அதை நிறைவேற்றித் தரமுடிய
வில்லை. எனவே அவர் பேரிலே அதை நான் குறையாகச்
சொல்ல விரும்பவில்லை. அன்றைய தினம் அவர் அதற்கு
அனுமதி கொடுத்த பிறகு நிதி கூட வசூலிக்கப்பட்டது. 2 லட்சம்
ரூபாய் நிதி வசூலிக்கப்பட்ட சமயத்திலே இடம் கூட கொடுத்
தார்கள். விருகம்பாக்கம் பகுதியிலே ஒரு இடத்திலே 20 ஏக்கர்
நிலம் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து அந்த நல்ல பணி
நடைமுறைக்கு வருகிறபோது திடீர் என்று அந்த ஆட்சி கலைக்
கப்பட்டதாலே அது நின்று விட்டது. இப்போது ஒரு கல்லூரிக்கு
எங்காவது ஒரு இடம் அளிக்க வேண்டுமென்று, தொழில் கல்லூரி
யோ அல்லது பாலிடெக்னிக் போன்ற கல்விக்கு பெண்களுக்
கும் ஆண்களுக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்
பினருக்கும் இடம் கொடுக்கின்ற வகையில் அதை ஆரம்பிக்க
வேண்டுமென்று அதுவும் இந்த ஆண்டே ஆரம்பிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-50)

அதோடு தென்னாற்காடு மாவட்டம் மிகவும் பின் தங்கிய
பகுதி. அங்கே ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறது. நாங்கள்
பெயர் அளவிலே அந்தப் பல்கலைக் கழகத்தை வைத்துக்
கொண்டிருக்கிறோம். அந்தப் பல்கலைக் கழகம் அன்றைய
தினம் 20 லட்சம் ரூபாய் முதலீடு போட்டு ஆரம்பிக்கப்பட்டது.
பிச்சாவரம் ஜமீன்தார் அவர்கள் அந்த இடத்தைக் கொடுத்
திருக்கிறார்கள். 700, 800 ஏக்கர் நிலம் அங்கே இருக்கிறது.
பெரிய வளாகம், ஒவ்வொரு கட்டிடம் எழுப்புவதற்கும்
ஒவ்வொரு துறைக்கும், உணவு விடுதி கட்டுவதற்கும் அரசாங்
கத்துடைய பணம் மானியமாகத் தரப்பட்டிருக்கிறது. நம்
முடைய அரசாங்கத்திலேயிருந்து மட்டுமல்ல மத்திய அரசாங்
கத்திலேயிருந்தும் மானியம் பெறப்பட்டு ஏராளமான கட்டிடங்
கள் கட்டப்பட்டு அதிலே விதிகளும்கூட இருக்கின்றன. நூற்றுக்கு
75 சதவீதமானது, அந்தப் பல்கலைக் கழகத்திலே படிக்கிற
மாணவர்கள் அங்கே தங்கி படிக்க வேண்டுமென்ற விதி இருக்கி
றது. ஆனால் இன்றைய தினம் என்ன நிலை? எல்லாம்
தபாலிலே படித்தால் போதும் என்ற நிலை. எல்லாப் பல்கலைக்
கழகத்திலும் அது மாதிரி இருந்தால் கூட, இது போன்ற
ரெசிடென்ஷியல் யூனிவர்சிடிக்கு அது இருக்கக்கூடாது என்பதை
முதல்வர் அவர்கள் ஒரு கட்டளையாகப் பிறப்பிக்க வேண்டும்.
அவர்களை அழைத்துக் பேச வேண்டும் என்பதை இந்தச்
சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல அந்தப்



பகுதியிலே தபால் மூலம் கல்வி என்று சொன்னால் அங்கேயுள்ள
பின் தங்கிய வகுப்பினரும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பின
ரும் எங்கே போய்ச் சேருவது, எப்படி சேருவது. அங்கே
இருக்கக்கூடிய நிலைமைகளை எல்லாம் முன்னாலேயே நான்
சொல்லியிருக்கிறேன். மற்ற மானியத்திலே பேசுகிறபோது
எவ்வாறு எல்லாம் அங்கே நடைபெறுகிறது என்று சொல்லி
யிருக்கிறேன். தபால் மூலம் கல்வியிலே மட்டும் கிட்டத்தட்ட
20 கோடி ரூபாய்க்கு மேலே வருகிறது. (மணியடிக்கப்
பெற்றது.)

ஐந்து நிமிடம் கொடுத்தால் பரவாயில்லை. அதிகமாக
எடுத்துக் கொள்ள மாட்டேன்.

முதலமைச்சருடைய கவனத்திற்கு இதை வைத்து, அங்கே
எதனால் இந்தப் பட்டப் படிப்புக்களையெல்லாம் எடுத்து விட்
டார்கள் என்றால் ஏதோ மாணவர்கள் கலாட்டா செய்கிறார்
கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி கலாட்டா செய்கிற
இடமெல்லாம் எடுத்தால், நாம் இந்த இடத்திற்கே வந்திருக்க
முடியாது. இந்த இடத்தைக்கூட நாம் கலைக்கவேண்டிய நிலை
ஏற்பட்டு விடும். இப்படி கலைப்பு செய்வது என்றால் அது
நல்லதல்ல. அதனாலே அந்தப்பகுதி மக்களுடைய உரிமை பாதிக்
கப்படுகிறது. அந்தப் பகுதியிலே வாழ்கிற, தென்னாற்காடு மாவட்
டம் மட்டுமல்ல. தஞ்சை மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம்
இன்னும் மற்ற மாவட்டங்களிலே அண்மையிலேஇருக்கிற மாவட்
டங்களிலேஇருக்கிறமாணவர்கள்படிப்பதற்கு அது உகந்ததாக இல்
லை. குறைந்த பட்சம் இந்த ஆண்டு பெண்களுக்காவது—ஏனென்
றால் 30சதவீதம்படித்தபெண்களுக்கு வேலைவாய்ப்ட—வாய்பபுக்
கொடுக்க வேண்டுமென்றும் நமது அரசாங்கம் உறுதி அளித்திருக்
கிறது. ஆகவே இது போன்ற பல்கலைக் கழகங்களிலே பட்டப்
படிப்புக்கும் தொழில் படிப்புக்கும் பெண்களுக்கு மட்டுமாவது,
ஏராளமான மாணவிகள் படிக்கக் கூடிய அளவுக்கு
வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த சமயத்
திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவை எல்லாம்
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு செய்கிற காரியமாக
அமைய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அது மட்டு
மல்ல, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தபால் மூலம் படிக்
கிறார்கள். அங்கே இருக்கிற விடுதியிலே தங்கி படிப்பவர்கள்
மற்றும் வெளியிலே இருந்து வந்து போய் படிப்பவர்கள் என்ற
வகையில் மொத்தமாக எல்லோரும் சேர்ந்து 4 ஆயிரம் பேர்கள்
கூட இல்லை. பல்கலைக் கழகம் என்ற பெயரிலே இவ்வாறு
நடைபெறுவது சரியாக இருக்காது. நான் யாரையும் குறை
யாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்ல வில்லை.
அப்படி குறை சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஏராளமாக
இருக்கிறது. அவற்றை தனியாக அவரிடம் வேண்டுமானால்
சொல்கிறேன். அது எவ்வாறு நடைபெறுகிறது என்பதை
முதல்வர் அவர்களிடம் தனியாக எடுத்து வைப்பேன். இப்போது

அதற்கு நேரம் இல்லாத காரணத்தாலே, அந்தப் பல்கலைக் சழகம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மாத்திரம் அலலாது தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மிகவும் பின் தங்கிய மக்களுக்கும் பயன்பெறும் வகையில் அதை மாற்றி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்றைய தினம் இந்த மிகவும் பிற்படுத்தப்பட் டோருக்கான டைரக்டரேட்டுக்கு, பிற்படுத்தப்பட்டோருக்கான அனைத்தும் இங்கே வருமா, அல்லது அதிலேயே இணைந்து விடுமா, இல்லை என்றால் கள்ளர் ரெக்ளமேஷனில் இருக்கிற அதிகாரிகளும் இதிலே சேர்ந்து விடுவார்களா எப்படி ஏற்படுத் தப்பட இருக்கிறது. இந்த டைரக்டரேட் ஏதோ ஒட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருப்பது போல் ஒட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நான் முதல்வர் அவர்களைக் கேட்டபோது இதன் மானியக் கோரிக்கை வரும் போது விளக்கமாக வருங்காலத்திலே......(குறுக்கீடு).

திரு. ஆர். சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் பேசு கின்ற பொழுது, ஏற்கெனவே 275 பள்ளிகள் பிரமலைக் கள்ளர் களுக்கு இருக்கிறது. அவர்களையும் 20 சதவீதத்தில் சேர்க்க வேண்டுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பிப் பேசினார். மேலும் கள்ளர் சீர் அமைப்புத் துறையில் ஒரு தனி துணை ஆட்சியரை யும் புதிய பிற்பட்டோர் இயக்குநர் நிருவாகத்துடன் இந்த இயக்ககத்தோடு சேர்க்க வேண்டுமா என்ற வாதத்தையும் வைத்து மறைமுகமாகப் பேசுவது முறை அல்ல என்று நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகின்றேன்.

திரு. கோ. பூவராகன்: இதிலே ஒழுங்குப் பிரச்சினை இருக் காது என்பது மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருக்கு...

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் பேசுகின்றபோது பிரமலைக் கள்ளர் களைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களுக்குப் பள்ளி இருக்கிறது. சற்று முன்னேறி இருக்கிறார்கள் என்ற தொனிபட கொஞ்சம் கருத்தைத் தெரிவித்து, அவர்கள் எண்ணிக்கையிலே அதிகம் ஆகிவிட்டார்களே, அந்த 20 விழுக்காடு சேர்க்க வேண்டுமா என்கிற அடிப்படையிலே கருத்துச் சொன்னதை மையமாக வைத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமிநாதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அவர்களுக்குக் கள்ளர் சீரமைப்பிலே பள்ளிகள் இருந்தாலும்கூட, மிகமிகப் பின்தங்கிய கட்டத்திலே தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். யாருக்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் வாதாடுகிறார்களோ அவர்களை விட இன்னும்



மோசமான கட்டத்திலே தான் மலைப் பகுதியில், பல்வேறு பகுதிகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களும் ஆழமாகச் சிந்திக்கபபட்டு உதவி செய்யப்பட வேண்டியவர்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. கோ. பூவராகன்: தயவுசெய்து தவறாக எண்ணிவிட வேண்டாம். இந்தக் கள்ளர் ரெக்ளமேஷனிலே இருக்கிற சீர்மரபினர் ஒரு காலத்திலே ஷெட்யூல்ட் டிரைப்ஸ்-லிலே சேர்க்கபபட வேண்டுமென்று அப்போதெல்லாம் வாதத்திலே கொண்டு வரப்பட்டது. அது எனக்குத் தெரியும் இருந்தாலும் கூட இப்போது கள்ளர் ரெக்ளமேஷன் என்ற முறையிலே, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது. பள்ளிக்கூடம் அமைக்கப்பட்டது. மற்ற துறைகளிலும் செய்திருக்கிறோம். அதே போன்று மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குச் செய் திருக்கிறார்களா? அவர்களுக்கு எவ்வாறு செய்ய இருக்கிறார்கள்? இந்த விவர அறிக்கையிலே ஒன்றும் காணோம் என்ற தொனி யிலே சொன்னேனே தவிர, கள்ளர் ரெக்ளமேஷனுக்கு நீங்கள் கொடுப்பதை நான் எதிர்க்கவில்லை. ஏனென்றால், கொடுப் பதை யாரும் எதிர்க்க முடியாது. அதற்குச் சந்தர்ப்பம் இல்லை. ஆனால், இங்கே நம்முடைய உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் சொன்னார்கள், ஜாதிகள் நிறைய பெருகி விட்டன. பெருகிக் கொண்டே போயிற்று என்று முன்பு இருந்த அரசாங்கத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அப்பொழுதுகூட முயற்சி எடுத்து, ஏதோ அதெல்லாம முடிகிற சமயமாக இருக்கிறதோ என்று எல்லோருக்கும் அழைப்புக் கொடுத்தார்கள். யாரெல்லாம் ஜாதி அமைப்புகள் வைத் திருக்கிறார்களோ, அவர்களுக்கு, அழைப்பு கொடுக்கப் பட்டது. வெறுமனே அழைப்பு கொடுக்கவில்லை. வந்து போனால் போக்குவரத்துச் செலவு கூட கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். இது மாதிரி எந்த அரசாங்கமும் ஜாதிகளை வளர்த்திருக்க முடியாது. போக்குவரத்துச் செலவுக்குப் பணம் கொடுத்து, உங்களுக்குக் குறை இருந்தால் சொல்லுங்கள் என்று எல்லோரையும் அழைத்து, ஏதாவது இருந்தால் சொல் லுங்கள், என்று கேட்டார்கள். அதில் மிகவும் தாழ்த்தப்பட்ட வர்கள் நரிக் குறவர்கள் எல்லாம் வந்து, படம் எல்லாம் எடுத்துக் கொண்டு போனார்கள். நீங்கள் எல்லாம் பார்த் திருக்க முடியும். அவ்வளவு கூரம் நடந்தது. இப்பொழுது இருக்கிற ஆட்சிக்கு முன்கூட்டியே சொல்லிவிட்டேன். எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள். எந்த ஜாதி இருக்கிறது, எந்தத் தெருவிலே இருக்கிறார்கள், எந்தத் தொகுதியிலே இருக்கிறார் கள் என்று நான் சொன்னாலுங்கூட அவர்களுக்குத் தெரியும். எந்த எந்தப் பகுதியிலே, எந்த எந்த மக்கள் வாழ்கிறார்கள். என்று அவர்கள் நன்றாக அறிவார்கள். நான் கடைசியாக முடிப்பதற்கு முன்னாலே, மிகவும் பின்தங்கிய மக்களாகிய

[திரு. கோ. பூவராகன்] [1989 ஏப்ரல் 22

அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுப்பதற்கு, மனை வழங்கு
வதற்கு, அவர்கள் தொழில் செய்வதற்குக் குறைந்த வட்டியில்
வழங்குவதற்கு; அவர்கள் ஏதாவது தொழிலிலே ஈடுபட
வருகின்றபொழுது, அந்தத் தொழிலிலே அவர்களுக்கு முன்
னுரிமை அளிப்பதற்கு, அவர்கள் ஏற்கனவே பழக்கப்பட்ட
தொழிலிலேயே முன்னுரிமை கொடுத்து. அவர்களுக்கு வழங்கு
வதற்கு, பள்ளிகள், கல்லூரிகள், உணவு விடுதிகள், எந்த
எந்த மாவட்டத்திலே, அதிகமாக மிகவும் பிற்பட்ட மக்கள்
இருக்கிறார்களோ, அந்தப் பகுதியிலே உணவு விடுதிகள்,
அவர்களுக்கு மற்ற கல்விச் சலுகைகள் கொடுப்பதற்கு, வேலை
வாய்ப்பு தேடிக் கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.
சமீபத்திலே வேலை வாய்ப்பு என்ற முறையிலே, ஹைகோர்டிலே
நடைபெற்றதைப் பற்றி அறிவோம். திரு. பி. எச். பாண்டியன்
அவர்கள் சொன்னார்கள், எப்படியெல்லாம் இருக்க வேண்டு
மென்று 14 பேர்கள் நேர்முகமாகவும் 14 பேர்கள் புரமோஷன்
முறையிலும் சப் ஜட்ஜாக, 28 பேர்கள் போடப்பட்டது.
அதிலே எத்தனை பேர் போட்டார்கள் என்று முதலமைச்சர்
அவர்கள் தான் அறிந்து கொள்ள வேண்டும். ஏன் போட
வில்லை எப்படி போடவில்லை என்பதெல்லாம்— தெரிந்து
திரும்பவும் அது வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லு
கிறேன். அதேபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் நம்
முடைய அரசு வருவதற்கு முன்னாலே இருக்கின்ற காலி இடங்
களையெல்லாம் நிரப்பிவிட்டார்கள். அதாவது பள்ளிக்
கூடங்களிலே ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு, ஒரு மாவட்டத்
திற்கு 500 என்று.

(பிற்பகல் 1-00 )

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனு
மதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கோ. பூவராகன் : எத்தனை பேர் அந்த ஆசிரியர்
பொறுப்புக்கு விடப்பட்டிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்.
என்னிடம் ஒரு கடிதம் வந்தது. ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்
திலே 16 வயது பெண்பிள்ளை ஆசிரியர் வேலைக்கு எடுக்கப்
பட்டு—எனக்கு கடிதம் நேரிடையாக வரவில்லை. அதாவது
மூப்பனார் அவர்களுக்கு நேரிடையாக அனுப்பிவிட்டு எனக்கு
காப்பி போட்டிருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்
திலே இவ்வாறு நடந்திருக்கிறது. அவ்வளவு விரைவிலே வந்த
தைப் பார்த்து— வயதுகூட பார்க்க வேண்டாம்; ஆசிரியர்
களை நிரப்பிவிட வேண்டும்; 20 சதவீதம், 30 சதவீதம் வந்
தால் நமக்கு கிடைக்காது என்று இருக்கின்ற காலி இடங்களை
யெல்லாம் நிரப்புவதற்கு ஒவ்வொரு இலாக்காவிலேயும் முயற்சி
நடந்து கொண்டிருக்கிறது. இதன் முடிவு நல்ல விதமாக



1989 ஏப்ரல் 22] [திரு. கோ. பூவராகன்]

ஆகின்ற வரையில் அந்த இலாக்காவில் இருக்கின்ற காலி
இடங்களை நிரப்பக் கூடாது என்று அரசாங்கத்திலிருந்து அவர்
களுக்கு தாக்கீது போக வேண்டுமென்று சொல்லிக்கொண்டு,
மிகவும பிற்படுத்தப்பட்டவர்கள், நான் முன்பு சொன்ன
மாதிரி அவர்கள் உங்களையே சுற்றி சுற்றி வருகிறார்கள்.
அந்தக் கனி அவர்களுக்கு கிடைக்கும என்று எண்ணுகிறார்கள்.
பிள்ளையாருக்கு கொடுத்த மாதிரி, நல்லவிதமாக இந்தப்
பிரச்சினையைத் தீர்த்து வைத்து, நல்ல மாங்கனியை நீங்கள்
அளிக்க வேண்டும் என்று நான் இந்த சமயத்திலே சொல்லிக்
கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்
களே, சமூக நீதி எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும்
என்பதில் குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய
வாழ்நாள் முழுவதும் அக்கறை எடுத்துக்கொண்டு அதற்காகவே
செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாடு அறியும்.
1969-ல் பிற்பட்டோர் நலனைக் கவனிப்பதற்காக டாக்டர்
கலைஞர் அவர்கள் தான் பிற்பட்டோர் நலத்துறை என்கிற
ஒரு தனி துறையை ஏற்படுத்தி அதற்காக ஒரு தனி அமைச்ச
ரையும் நியமித்து ஒரு தனிஇயக்ககத்தினுடைய நிர்வாகத்திற்குட்
பட்டதாக இந்தக் துறையை ஆக்கி நல்ல முறையில் இது
குறித்து ஆய்வு செய்து பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலனை
காக்க வேண்டும் என்பதற்கான முயற்சியை மேற்கொண்டார்
கள். இன்றைக்கு 20 ஆண்டுகளுக்குப் பிறகு 1989 ஆம்
ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் சீர்மரபினர் இவர்
களுக்காக ஒரு தனித்துறையை ஏற்படுத்தி அதற்காக ஒரு தனி
அதிகாரியையும் நியமித்து முறையாக இந்த 20 ஆண்டுகளிலே
மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும், சீர்மரபினர்களும் எந்த
அளவிற்கு பொருளாதாரத்தில், கல்வித்துறையில் ஏனைய
துறைகளில் அவர்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள்
என்பதை கண்டு பிடித்து ஆய்வு செய்து அதற்கேற்ப அரசு
நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு
தனித்துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் மனதாரப்
பாராட்டி டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய
வாழ்த்துக்களை சொல்வதற்கு கடமைப்பட்டவனாக இருக்கி
றேன். பொதுவாக பிற்படுத்தப்பட்டோர் நலனைக் காக்க
வேண்டும் என்று பலர் விரும்புகிறார்கள். நான் சார்ந்துள்ள
சமுதாயமும் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்பதை நீங்கள்
அனைவரும் ஏற்றுக்கொண்டு இருக்கிறீர்கள். அது உண்மை
யின்பாற்பட்டது. நானும் அந்த சமுதாயத்திற்கு நியாயம்
வழங்க வேண்டும் என்று கூறுகிறேன். ஆனால் அதே நேரத்
தில் என்னைப்போல் பிற்படுத்தப்பட்டவர்களாக ஆக்கப்
படுபவர்கள்— அவர்கள் எல்லோரும் தங்களுடைய நியாயமான
கோரிக்கைகளை எடுத்து வைப்பதற்கு உரிமை பெற்றவர்கள்
என்ற நியாயத்தை நான் உணர்ந்து கொண்டால்தான் என்

னுடைய நிலையினை உணர்த்துவதற்கு எனக்கு தார்மீக ரீதி
யிலே ஒரு தெளிவும் தைரியமும் ஏற்படும். ஆனால் இன்றைக்கு
நமக்கு இருக்கின்ற வேதனையெல்லாம் நமக்குள்ளே பிற்படுத்தப்
பட்ட மக்கள் என்று சொல்லப்படக்கூடிய பல்வேறு
விதமான கருத்துக்கள் நிலவுவதும், அதே நேரத்தில் எங்களுக்
குத்தான் எல்லா சலுகைகளும் கிடைக்க வேண்டும் என்று
சொல்வதும், அந்தப் பிற்படுத்தப்பட்டோர் நலனில் அக்கறை
கொண்டவர்கள் தங்களுடைய நலனுக்குத் தாங்களே தீங்கு
தேடிக் கொள்கிறார்கள் என்ற அளவிற்குத்தான் அது உரு
வாகும். ஏனெனில், இந்தியாவிலேயே பிற்பட்டோர் நல
னுக்காக ஒதுக்கீடுகள் செய்யப்படவேண்டும் என்கின்ற அந்தக்
கொள்கையை ஏற்றுக்கொண்டு இருக்கிற அரசு முதலிலே தமிழ்
நாடு அரசுதான் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

ஏனென்றால் இங்குதான் நம்முடைய முன்னோர்கள், பிற்
படுத்தப்பட்டோர் நலனிலே அக்கறை கொண்ட நம்முடைய
வித்தகர்கள், பல்லாண்டுகளாக சமூக நீதியின் அடிப்படையிலே
ஒதுக்கீடுகள் செய்யப்படவேண்டும் என்பதை வற்புறுத்திய
காரணத்தினால் இங்குதான் ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு
முந்திய 'கிராண்ட்-இன்-எய்டு-கோட்' என்ற அடிப்படை
யிலே அன்றைக்கு இருந்த சென்னை மாகாண அரசு,
'கம்யூனல் ஜி. ஓ.' என்ற அந்தப் புதிய ஒரு திட்டத்தின் அடிப்
படையில்தான் 'அரசு' ஆணை பிறப்பிக்கப்பட்டு சிலருக்கு
சமுதாயம் கை தூக்கி விடக்கூடிய கடமையுடையதாக இருக்கிற
காரணத்தால் அவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பாக சலுகை
கள் வழங்கப்படுவது நியாயத்தின்பாற்பட்டது என்கின்ற அந்த
மகத்தான உண்மையை இந்திய பூபாகத்திலே இருக்கிற
அத்தனை மாநிலங்களுக்கும் எடுத்துச்சொல்லி, எடுத்துச்
சொல்லியது மட்டுமல்ல, நடைமுறைப் படுத்திய ஒரு பெருமை
தமிழ்நாட்டிற்கு உண்டு. அதிலும் குறிப்பாக திராவிட
முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட
பிறகுதான் இந்தத் துறைக்கே ஒரு தனி அமைச்சரும் ஏற்
படுத்தப்பட்டு, இன்றைக்கு அந்தத் துறையிலே நல்ல பல
திட்டங்களின் அடிப்படையிலே சலுகைகள் அளிக்கப்பட்டு வரு
கிறது என்பது உண்மை.

சட்டநாதன் குழு, அம்பாசங்கர் குழு என்று இரண்டு குழுக்
களை அமைத்து, அரசாங்கமே ஒரு முடிவு எடுக்காமல் நடுநிலை
யிலே இருக்கிற ஒரு குழு அளிக்கிற தீர்ப்பின் அடிப்படையிலே
அவர்களுடைய பரிந்துரைகளின் அடிப்படையிலே பிற்பட்
டோருக்கு பல்வேறு வகையிலே இருக்கின்ற பிற்பட்டோ
ருக்குச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நியாயமான
முடிவை தமிழக அரசு எடுத்தது. ஆனால், மத்தியிலே 1952-
லேயிருந்து காகாசாஹிப் காலேல்க்கர் கமிஷன் நியமிக்கப்பட்ட
அந்த நேரத்திலேயிருந்து, பிற்பட்டோருக்கு சலுகைகள் அளிக்



கப்பட வேண்டும் என்று மத்திய அரசாங்கம் எண்ணத்தை
வெளியிட்டதோடு, காகாசாஹிப் காலேல்க்கர் பரிந்துரைகளைக்
கூட அது ஏற்றுக்கொண்டு—ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது
வேறு—ஏற்றுக் கொண்டு அதை நடைமுறைப்படுத்தவில்லை
என்பதும், அதே நேரத்தில் அண்மையிலே ஏற்படுத்தப்பட்ட
மண்டல் கமிஷன் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து,
எல்லாத் தரப்பு மக்களையும் சந்தித்து ஒரு பரிந்துரையை,
1980-லேயே—ஜனதாக் கட்சி மத்திய ஆட்சியிலே இருக்கும்
போது நியமிக்கப்பட்ட அந்த மண்டல் கமிஷன் தன்னுடைய
பரிந்துரைகளை 1980-இல் திருமதி இந்திரா காந்தி அம்மையார்
அவர்கள் மறுபடியும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட
போது பரிந்துரைகளைப் பாராளுமன்றத்திலே சமர்ப்பித்தது.
மத்திய அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது. அந்தப் பரிந்
துரைகளை ஆய்வு செய்து மத்திய அரசாங்கம் அதை ஏற்றுக்
கொண்டதாக அறிவித்தது.

அறிவித்தது மட்டுமல்லாமல், பாராளுமன்றத்திலேயே அதற்
குரிய வாக்குறுதிகளையும் தந்து பாராளுமன்றத்திலே இருக்கக்
கூடிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்ன கருத்துக்
களின் அடிப்படையில் மத்திய அரசாங்கம் அதிலே சொல்லப்
பட்டிருக்கிற பரிந்துரைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டது.
முக்கியமான பரிந்துரை, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27
சதவீதம் சலுகைகள் அளிக்கப்படவேண்டும். கல்வித்துறையிலே,
தொழிற்துறையிலே, பொருளாதாரத் துறையிலே பிற்படுத்தப்
பட்ட மக்களுக்கு 27 சதவீதம் அளிக்கப்படவேண்டும் என்று
அந்தக் குழு செய்த பரிந்துரையை ஏற்றுக்கொண்டதாக, ஒரு
தடவை அல்ல; மூன்று தடவை பாராளுமன்றத்திலே, ஒரே
மண்டல் கமிஷனுடைய பரிந்துரை பற்றி விவாதம் நடந்து,
மூன்று தடவை மத்திய அரசாங்கம் வாக்குறுதிகள் தந்திருக்
கிறது. அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம், ஏற்றுக்கொண்டி
ருக்கிறோம் என்று,

ஆனால், இதுவரையிலே அதற்கான அரசாணை பிறப்பிக்
கப்படவில்லை. இது வரையிலே எந்தச் சலுகையும் மண்டல்
கமிஷனுடைய பரிந்துரைகளின் அடிப்படையிலே அறிவிக்கப்
படவில்லை என்பது நாடு முழுவதும் இந்தக் குழுக்கள் செய்கிற
பரிந்துரைகளில் ஏதாவது பொருள் இருக்கிறதா, அருள் நிறைந்
ததா என்ற அளவிற்குச் சந்தேகத்தினை உருவாக்கி இருக்கிறது.
மண்டல் அவர்களும் மறைந்து இன்றைக்கு 7 ஆண்டுகள் ஆகி
விட்டன. மண்டல் மறைந்து 7 ஆண்டுகள் ஆகியும் அவர் செய்த
பரிந்துரைக்கு இன்றையவரையில் உயிர் கொடுக்கப்படவில்லை.

(பிற்பகல் 1-10)

அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு சொல்லப்போனால்
மண்டல் கமிஷன் ரிப்போர்ட் மத்திய அரசுக்கு தந்து 9 ஆண்டு
கள் ஆகின்றன. அதற்கு நினைவு நாள், நினைவு ஆண்டு 9-வது

நினைவு ஆண்டு. மண்டலுக்கு 7-வது நினைவு ஆண்டு. யாருக்கு எந்த நினைவு ஆண்டு வந்தால் இந்த பரிந்துரைகள் நினைவு கொள்ளப்படும் என்று எனக்கு தெரியவில்லை. அர சாங்கங்களுக்கு நினைவு ஆண்டு வருகின்றன. பரிந்துரை செய்த வர்களுக்கு நினைவு ஆண்டுகள் வருகின்றன. ஆனால் எப் போதும் வாழையடி வாழையாக வாழக்கூடிய சமுதாயத்திலே அடக்கப்பட்டவர்களாக அவர்களுக்கு தனி அடிப்படையில் சலுகைகள் தரப்பட வேண்டும் என்று சொன்னால் அது சமூக ரீதியிலே அவர்கள் ஆண்டு ஆண்டு காலமாக அடக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட காரணத்தாலே சமுதாயமே முன் வந்து அவர்களுக்கு சலுகைகளை அளிக்க வேண்டும் என்ற அந்த மகத்தான தத்துவத்தின் அடிப்படை யிலே செய்யப்பட்டு இருக்கிற பரிந்துரைகளை இது வரையில் மத்திய அரசு ஏற்றுக் கொண்டதோடு நின்று விட்டது. அவைகள் நடைமுறைப்படுத்தப்படாதது வேதனைக்குரிய ஒன் றாகும். எனவே நான் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே அக்கறை உடையவர்கள், இந்தத் துறையை தன்னுடைய கையில் வைத்து இருக்கிறார் என்பது மட்டும் அல்ல, யாரிடத்திலே அது இருந்தாலும் அதைப் பற்றி எப்போதும் பேசக்கூடியவர், அதிலே கவனம் செலுத்தக்கூடிய வர் என்ற வகையில் மத்திய அரசோடு இது குறித்து தமிழக அரசு அலுவல் ரீதியாக, அபிஷியலாக அவர்களுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும், இல்லை என்றால் நேரிடையாக பேச வேண்டும். இல்லை என்றால் இந்த மண்டல் கமிஷன் பரிந் துரைகளை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை இந்த சட்டமன்றத்திலே நிறைவேற்று வது கூட பொருத்தமாக இருக்கும். மண்டல் கமிஷன் பற்றியே ஒரு நாளைக்கு விவாதித்து உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டு ஒரு ஏகமனதான தீர்மானத்தை இந்த மன்றத்திலே நிறைவேற்றி நம்முடைய கருத்துக்களை, தமிழக மக்களுடைய கருத்துக்களை மத்திய அரசுக்கு தெரிவித்து உடனடியாக இந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளவேண்டும்.

நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளுவது, இந்த ஒதுக்கீடு குறித்து பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று சொல்லக்கூடியவர் களுக்குள்ளே ஒரு உணர்வு இருக்கவேண்டும். எல்லோரும் ஒன்று, பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற அடிப்படையில் வருகிற வர்கள் என்ற ஒரு உணர்வு இருக்குமானால் நமக்குள் சர்ச்சை கள் ஏற்பட்டு எல்லோருக்கும் கிடைக்கவேண்டிய ஒரு சலுகை கள் கிடைக்காமல் போவதற்கும் அப்படி கிடைப்பதற்கு தாமதம் ஏற்படுவதற்கும் அது வழிவகைகள் வகுத்துவிடும் எனவே அந்த முறையில் ஒரு பொக்துகருத்தை உருவாக்கிக் கொண்டு பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரையும் ஒன்றாக அணைத்து பொதுவாக நம்முடைய சமுதாயம் பிற்படுத்தப்



பட்ட சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்ற உணர் வோடு நாம் நடந்து கொள்ளுவது நல்லது என்று கருதுகிறேன். இப்போது நான் கூட பிற்படுத்தப்பட்டவன் தான். நான் கூட பல சலுகைகளை வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தான் இருக்கிறேன். அது நியாயத்தின் பால்பட்டது என்றுதான் நான் உணருகிறேன். அந்த அடிப்படையில்தான் நான் பேசு கிறேன். ஆனால் எனக்குக் கொடுத்து விட்டுத்தான் மற்றவர் களுக்கு கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டால் மற்றவர் களுடைய நல்லெண்ணத்தை நான் இழந்து விடுவேன் என்பதை நான் மறந்து விட்டுப் பேசக் கூடாது. பொதுவாக மற்றவர் களிடம் நல்ல எண்ணங்கள் இருந்தால், எங்களைப் போன்ற சிறுபான்மை மக்களுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்பு ஏதோ அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதி வைத்துவிட்டு இருக்கி றார்களே அது மட்டும் எங்களுக்கு பாதுகாப்பு இல்லை. அது ஏட்டுச் சுரக்காய். ஆனால் உண்மையான பாதுகாப்பு எது என்று நாங்கள் கருதுகிறோம் என்றால் பெரும்பான்மையான மக்களுடைய நல்லெண்ணம் இருக்க வேண்டும். அவர்கள் நம்மைப்புரிந்துகொள்ள வேண்டும்; நம்மை புரிந்து கொள்ளுவது மட்டுமல்ல, அவர்கள் நம்முடைய எண்ணம் நம்முடைய கோரிக்கை நியாயமானது என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய வகை யில் நம்முடைய சொல்லும், செயலும் அமையுமானால் அதுவே எங்களுக்கு கிடைத்த மகத்தான வெற்றி என்று நான் கருதுவேன். அதே நேரத்தில் நான் வற்புறுத்துகிற காரணத்தாலே மற்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் எங்களுக்கு விரோதிகளாக மாறி விடுவார்கள் என்று சொன்னால் அரசாங்கம் சில சலுகை களைச் செய்யலாம், ஆனால் சமுதாயம் (மணியடிக்கப்பெற்றது) அதை ஏற்றுக் கொள்ளாமல் போனால் அதனால் ஒரு பிரயோச னமும் ஏற்படாது என்ற அளவுக்கு என்னுடைய பேச்சும், சொல்லும் மற்றவர்களிடத்திலே 'அட்வர்ஸ் ரீ-ஆக்ஷன்' என்று சொல்வார்கள் அல்லவா ஒரு தவறான விரோத மனப்போக்கை ஏற்படுத்தி விடும் என்று சொன்னால் நான் கொஞ்சம் தெளிவோடு தான் பேச வேண்டும். என்னுடைய கோரிக்கைகளை அப்படித்தான் நான் கொஞ்சம் கட்டுப்பாட் டோடு வலியுறுத்தவேண்டும். எனக்கு நான் சார்ந்துள்ள சமுதா யத்தின் மீது அக்கறை இருக்கிறது என்று சொன்னால் அதாவது என் மீது மட்டும் நான் அக்கறை கொண்டால் அது அக்கறை என்று கருதபபடாது. அக்கரையில் இருப்பவர்கள் மீதும் அக்கறை கொள்ளவேண்டும். இக்கரையில் இருப்பவர்கள் மீதும் அக்கறை கொள்ளவேண்டும். அப்போதுதான் நம் முடைய அக்கறைகள் எல்லாம் கரை சேருமே தவிர இல்லா விட்டால் மத்தியிலே மூழ்கிவிடும் என்ற உணர்வு நமக்கு வேண் டும். இன்றைக்கு நான் தெளிவாகச் சொல்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்களை விட்டால், அவர்களை தவிர்த்து வேறு யாராவது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய உண்மையான பிரதிநிதியாக யாராவது இந்த நாட்டில்

இன்றைக்கு நாம் வாழ்கின்ற காலத்தில் யாராவது
இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? அவரை
விட பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பிரச்சினையை
அறிந்தவர் இந்த நாட்டிலே யாராவது இருக்கிறார்களா?
அவர்களுக்காகவே செயல்படக்கூடிய, அவர்களுக்காகவே எழுது
கிற, பேசுகிற ஒரு மகத்தான தமிழாய்ந்த தலைமகன்
இன்றைக்கு இந்த நாட்டுக்குத் தலைவராக இருக்கிறார் என்ப
திலே நாடும் ஏடும் இன்றைக்கு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்
கொண்டிருக்கிற கால கட்டத்திலே 'அவர் எங்களுடைய முதல்
எதிரி' என்றெல்லாம் பேசுவது அது எந்த அளவிற்கு குறிப்
பிட்ட சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் என்பதை உரியவர்கள்
நினைத்துப் பார்க்க வேண்டுமென்று நான் அவர்களிடத்திலே
கேட்க விரும்புகிறேன். அவர்கள் மீது எனக்கு இருக்கிற
அன்பின் காரணமாக, நான் வாழ்கிற பகுதியிலேயும் அவர்
கள்தான் நிறைவாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்
போனால், அவர்களுக்கும் எங்களுக்கும், அதாவது முஸ்லீம்
களுக்கும் அவர்களுக்கும் அண்ணன் தம்பி முறை என்ற அளவிற்
குத்தான் பங்காளிகளாக அவர்களை நாம் நேசித்துக்
கொண்டிருக்கிறோம். சில சமுதாயத்தவர்கள் இருக்கிறார்கள்.
அந்த சமுதாயங்கள் நாயக்கர், ரெட்டியார் போன்ற
வர்கள், என்னுடைய அருமை நண்பரை அன்பாக 'மாப்ளே'
என்றுதான் கூப்பிடுவேன். அவரும் என்னை அன்பாக
'மாமா' என்றுதான் கூப்பிடுவார்.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியிலேதானே?

**திரு. எம். அப்துல் லத்தீப்:** ஆமாம், மாண்புமிகு மாமா
என்றும் இங்கே கூப்பிடலாம் (சிரிப்பு) அதைப்பற்றி ஒன்றும்
இல்லை. சிலரை சியான் என்றும் கூப்பிடுவோம். தேவர்
சமுதாயத்தை சேர்ந்தவர்களெல்லாம் எங்களுக்கு சியான்கள்..
(மணியடிக்கப்பெற்றது) சில உணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.
ஆகவே அந்த வகையிலே நாம் நடந்து கொண்டிருக்கிறோம்.
குறிப்பாக எங்களுடைய பங்காளிகளாக இருக்கிற, ஒரு
குறிப்பிட்ட சமுதாயம், பெயரைச் சொல்கிறேன். வன்னியர்
கள் எங்களுக்கு அன்னியர்கள் இல்லை. நாங்கள் அவர்களோடு
வாழ்கிறோம். அவர்களை தங்களுடைய அண்ணன் தம்பி
களாக முஸ்லீம்கள் கருதுகிறார்கள். அவர்கள் ஆண்டாண்டுக்
காலமாக பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தார்கள்; இருக்கி
றார்கள் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை.
ஆயிரம் ஆண்டுகளாக அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களாக
இருக்கிறார்கள். படையாச்சிகளாக, படையை ஆண்டவர்கள்,
அவர்கள் படையாச்சிகளாக இருந்த இன்றைக்கு கீழ்நிலைக்கு
பண்ணையாட்களாக மாற்றப்பட்டு இருக்கிறார்கள் என்றெல்
லாம் சொல்வதிலே உண்மை இருக்கிறது. ஆனால் இன்றைக்கு
இருக்கிற சூழ்நிலையிலே நாம் நெளிவு சுளிவுகளோடு நடந்து





டாக்டர் கலைஞர் அவர்களை முழுமையாகப் பயன்படுத்தி,
அவர்களை நம்பி, இன்றைக்கு அவர்கள் அறிவித்திருக்கிற 20
சதவீதம் Exclusive reservation for the most Backward
and de-notified Communities— என்று சொல்கிறார்களே
அதை பயன்படுத்திக்கொண்டு இதனால் எவ்வளவு
முன்னேற்றத்தை அடைய முடியுமோ அவ்வளவு முன்
னேற்றத்தை அடைய வேண்டுமென்பதிலே நாம் அக்கறை
செலுத்த வேண்டும். நான் வலியுறுத்திய காரணத்தினாலும்,
பிற்படுத்தப்பட்டவர்களிலே இருக்கக்கூடிய மற்ற ஜாதிக்
காரர்கள் நமக்கு விரோதமாக மாறி அவர்களிலே ஒரு மூன்றி
யத்தை ஏற்படுத்தி விடக்கூடாது. அவர்கள் நமக்கு விரோத
மாக மாறிவிடக்கூடாது. இதிலும் நாம் அக்கறையாக இருக்க
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களிடத்திலே நான் பிற்படுத்தப்பட்ட மக்களிலே சிறுபான்மைச்
சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் ஒன்றைக் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். பக்கத்திலேயிருக்கிற மாநிலங்களில்
எல்லாம் சிறுபான்மைக் கமிஷன் என்று ஒன்று ஏற்படுத்தப்
பட்டிருக்கிறது. எனவே, இங்கேயும் மாநில அளவிலே ஒரு
சிறுபான்மைக் கமிஷனை கர்நாடகா, ஆந்திராவிலே இருப்
பதைப்போல தமிழுநாட்டிலே ஏற்படுத்த வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்வதோடு, உருது பேசுகிற சிறுபான்மை மக்களுக்
காக ஒரு உருது அக்காடமியை நீங்கள் ஏற்படுத்த வேண்டு
மென்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நம்
முடைய முன்னேற்றத்திற்காக , பிற்படுத்தப்பட்ட மக்களு
டைய முன்னேற்றத்திற்காக பேக்வேட் கிளாஸ் டெவலப்
மெண்ட் கமிஷன் என்று ஒரு கமிஷனை அமைத்தீர்கள். திரு.
பரமகுரு அவர்கள் அதற்கு முதன் முதலாக நியமிக்கப்பட்டார்
கள். அதற்குப் பிறகு அந்த அலுவலகம் என்ன செய்து
கொண்டிருக்கிறது? இப்போது அந்தக் கமிஷன் ஆபீசிலே
யார் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்? அவர்களுடைய
முன்னேற்றத்திற்காக எந்தெந்த வகையிலேயெல்லாம் அதை
நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்? அவர்கள் ஏதாவது
பரிந்துரை செய்து இருக்கிறார்களா? அவர்களுடைய நடை
முறை செலவுக்காக இந்த அரசாங்கம் ஏதாவது ஒதுக்கி
இருக்கிறதா என்பதையெல்லாம் கூட மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் சொன்னால் அது பயனுடையதாக இருக்கும் என்று
சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத்
துறையை நிர்வகிக்கிற காரணத்தினால் என்னுடைய முழு
நம்பிக்கையை இந்தத் துறைக்கு நான் தெரிவித்து முதலமைச்சர்
அவர்கள் வாழ்க என்று சொல்லி அவருடைய இந்த நல்ல
திட்டத்தால் சிறுபான்மை மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்க
ளும், தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ்க என்று சொல்லி அவரு
டைய காலத்தில் முன்னேற்றம் அடையாவிட்டால் இன்னும்

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 ஏப்ரல் 22

பல நூறு ஆண்டுகளுக்கு யாருடைய காலத்திலேயும் முன்னேற்
றம் அடைய முடியாது என்பதை உரியவர்கள் நினைவிலே
வைத்துக் கொள்ளவேண்டுமென்று கூறி, (மேசையைத் தட்டும
ஒலி), நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் :—மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற 32-வது
எண் மானியக் கோரிக்கையாக இருக்கிற பிற்படுத்தப்பட்ட
வகுப்பினர் முதலியோர் நலன் என்ற இந்த மானியக் கோரிக்கை
யில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரி
வித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20).

இன்றைக்கு பிற்பட்டோர் என்ற அமைப்பு இருக்கிறது
என்றால் சமுதாயத்திலே இருக்கிற ஒரு சீர்கேடுதான் என்பதை
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'ஜாதிகள் இல்லையடி
பாப்பா' என்று பாரதியார் பாடிச்சென்றார். ஜாதி மத பேத
மற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய
பெரியவர்கள் பாடுபட்டார்கள். ஆனாலும் இந்தக் கொடுமை
கள் இன்றைக்கும் நீடித்துக்கொண்டு செல்லுகின்ற நிலைமையைத்
தான் பார்க்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தத்
துறையைப் பொறுத்தவரையில் இந்த சமுதாயத்தைச் சேர்ந்த
மக்களுக்கு பல நன்மைகளை அளிக்க வேண்டுமென்று அரசு
பல திட்டங்களை உருவாக்கினாலும் அந்தத் திட்டங்களுடைய
பலன் அந்த மக்களுக்கு எந்த அளவுக்கு சென்று சேருகிறது
என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் இந்த மானியக் கோரிக்கையின்
மீதான கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரு சில கருத்துக்களைச்
சொல்லியிருக்கிறார்கள். 1986 ஆம் ஆண்டும் 1987 ஆம்
ஆண்டும் 23 விடுதிகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் நிதி
ஒதுக்கியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 1988-89
மற்றும் 1989-90 ஆண்டுகளில் அதைப்போன்ற விடுதிகளைக்
கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று நான் அறிகிறேன்.
இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால் அந்த விடுதிகளைக் கட்டு
வதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த
மதுராந்தகம் நகரில் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக
இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் பயனடையும் வகையில்
அங்கே இருக்கிற உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்
களுக்கு ஒரு விடுதி கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.



1989 ஏப்ரல் 22] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

அடுத்து, சீர்மரபினருக்கு 4700 ரூபாய் அளவிலே வீடுகள் கட்டித்தரப்படும் என்று குறிப்பு இருக்கிறது. அந்தத் தொகையைக் கொண்டு வீடு கட்ட முடியாது என்பதால் அந்தத் தொகையை உயர்த்தி, 10,000 ரூபாயாக ஆக்க வேண்டுமென்றும் அதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் என்ற முறையிலே அவர்களுக்கு என்று தனியாக இட ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அந்த பிரிவுக்குள்ளே இருக்கிற சில பிரிவுகளுக்கு இன்னும் பல சலுகைகளை வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்தச் சமுதாயத்திலே நாவிதர், சலவைத் தொழிலாளர் நரிக்குறவர் போன்றவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் அவர்களுக்கு வழங்கப்படுகிற வீடுகளை விரைவாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அந்தத் தொகையையும் கொஞ்சம் கூடுதலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை நகரத்திலே 100 நாவிதர்களும் சலவைத் தொழிலாளர்களும் வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்று முறையிட்டு, அரசாங்கம் அதற்கான நடவடிக்கை எடுத்து நோட்டிபிகேஷன்' செய்திருக்கிறது. ஆனால் இதுவரையில் அந்தப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. கடந்த ஆறு மாதமாக அதிலே எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே பட்டா வழங்க துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக 2266 பேர்களுக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் அளவுக்கு கடன் வழங்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்று அறிகிறேன். 2266 பேர்களுக்கு 20 இலட்சம் ரூபாய் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தத் தொகையை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தினால் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பலருக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். துறை தனியாக இருந்தாலும் இந்தத் தொகை குறைவாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் கூடுதலாக தொகையை ஒதுக்கினால் இன்னும் பல நூறு பேர்களுக்கு கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, விடுதியிலே தங்கிப் படிக்கிற மாணவருக்கு 90 ரூபாயும் விடுதியில் தங்காமல் வீட்டிலிருந்து வந்து படிக்கின்ற மாணவருக்கு 70 ரூபாயும் என்ற முறையில் அரசாங்கம் நிர்ணயித்து வழங்குகிறது. இது போதாது. விடுதியில் தங்கிப் படிப்போர், வீட்டிலிருந்து வந்து படிப்போர் இந்த இருசாராருக்குப் வழங்கப்படுகின்ற உதவித் தொகையை உயர்த்தி 150 ரூபாய் அளவுக்காவது வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, பிற்பட்ட மாணவர் விடுதியில் தங்கிப் படிக்க பெற்றோரின் வருமானத்தை ஆண்டுக்கு 5000 ரூபாய் என்றிருந்ததை 12,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். அவர்களுக்கு பிற சலுகைகள் வழங்க ஆண்டு வருமானம் இன்னும் 5000 ரூபாய் என்றுதான் இருக்கிறது. சலுகை வழங்குவதற்கான வருமான வரம்பையும் 12,000 ரூபாய் ஆண்டு வருமானம் என்ற அளவுக்கு உயர்த்தி அந்தச் சமுதாயத்தினருக்கு இந்த அரசு வழங்குகின்ற எல்லா சலுகைகளும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு உள்ள நிலைமை எல்லாம் நாட்டிலே ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டும். நாட்டிலே அமைதி ஏற்பட்டால்தான் மக்கள் வாழ முடியும் என்ற முறையில் இன்றைக்கு பலருடைய குறைகளை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஒரு பக்கத்தில் சலவையாளர்களுக்கு நாம் டோபிகானா என்று மூன்று இடங்களில் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம். ஆனால் சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் சலவைத் தொழிலாளர்கள் கூவம் ஆற்றிலே தான் துணிகளை எல்லாம் துவைக்கின்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. கூவம் ஆற்றைப் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. எல்லாவிதமான வியாதிகளும் அதிலே இருக்கின்றன. அப்படி வியாதிகள் நிறைந்த அந்தக் கூவம் ஆற்றில்தான் நம்முடைய துணிகள் எல்லாம் துவைக்கப்படுகின்றன என்று சொன்னால் எந்த அளவுக்கு இன்றைக்கு நாடு சென்று கொண்டிருக்கிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இந்த நிலைமையைப் போக்குகிற வகையில் தேவையான அளவுக்கு டோபிகானாக்களை அதிகமான அளவில் அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து இன்றைக்கு நாட்டிலே அமைதியான சூழ்நிலை ஏற்படவேண்டும் என்ற முறையில் பல முயற்சிகளை அரசாங்கம் செய்தாலும் ஒரு சிலர் மத்தியில் ஒரு அதிருப்தி நிலவிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு பக்கத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற முறையிலும் இன்னொரு பக்கத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற முறையிலும் நாம் பிரித்து அவர்களுக்கு



என்று குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கி இருக்கிறோம். ஆனால் அவர்களுடைய கோரிக்கையாக இருப்பதெல்லாம் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அந்தச் சதவீதம் போதவில்லை என்பதுதான். அவர்கள் சொல்வது அந்த 107 ஜாதிகளைச் சேர்ந்த எங்களுக்கு 20 சதவீதம் என்று ஒதுக்கியிருப்பது போதாது இதை அதிகப்படுத்த வேண்டும் என்பதுதான் இன்றைக்குப் பல்வேறு முயற்சிகள் அரசின் மூலமாக செய்யப்பட்டு இருந்தாலும் கூட மக்கள் தொகை அடிப்படையில் சரியான முறையில் இல்லை என்ற குறை இருக்கிறது. அதை மாற்றுகிற அளவிற்கு மக்கள் தொகை அடிப்படையில் மீண்டும் ஒரு சர்வே செய்து ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில் அங்கே கம்பார்ட்மெண்ட் மூலமாக இந்தச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. அதே போன்று வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த தேஷ்முக் என்பவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சலுகைகளை கல்விக்கும், வேலை வாய்ப்புக்கும் வழங்குவது அரசியல் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மண்டல் கமிஷனும் ஒரு அறிக்கையில் சொல்லியிருக்கிறது. தமிழகத்திலே பிற்படுத்தப்பட்ட ஜாதியினரில் 9 ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் தான் எல்லாவிதமான பலன்களையும் அடைந்து கொண்டு வருகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் மக்கள் தொகையில் அவர்கள் 11.7 சதவீதம்தான். அவர்களைப் பொறுத்தவரையில் கெஸடட் போஸ்ட்ஸ் 48.2 சதவீதமும், நான்-கெஸடட் போஸ்ட்ஸ் 73 சதவீதமும் வேலை வாய்ப்பிலே கிடைத்திருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த குறையைத் தீர்க்க வேண்டுமென்றால் இந்தக் கம்பார்ட்மெண்ட் சிஸ்டத்தைக் கொண்டுவந்தால்தான் ஒரு நல்ல வழிவகை ஏற்படும். இது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லோரையும் அழைத்துப் பேசி சுமுகமான. ஒரு அமைதியான நிலைமை தமிழகத்தில் ஏற்படக்கூடிய அளவுக்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை போன்ற பகுதிகளில் எல்லாம் படிப்பதற்கு நல்ல வசதிகள் இருக்கின்றன. இங்கே படிப்பவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் இருப்பதன் காரணத்தால் இங்கே பயிற்சி பெற்றவர்கள் தேர்வுகளில் அதிகமான அளவில் மார்க் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் கிராமப்புறத்திலே வாழ்கிற ஏழை மக்கள் என்னதான் நன்றாகக் கற்றாலும் குறைந்த மார்க்தான் வாங்குகிறார்கள். எனவே இப்படிப்பட்ட நிலைமையில் இவர்கள் இருவரையும் ஒன்றாக

இணைத்து பந்தயத்தில் விட்டால் உண்மையிலேயே நகரத்தில் உள்ளவர்களுக்குத்தான் நன்மை ஏற்படும். கிராமப்புற சூழ்நிலையில் இருக்கின்ற மக்களுக்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும். அவர்களுடைய தகுதியைத் தனியாக நிர்ணயம் செய்கின்ற அளவுக்கு உரிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த இட ஒதுக்கீடு பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதாவது எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்ற முயற்சி எடுத்து எல்லோரையும் அழைத்துப் பேசி இருக்கிறார்கள். அந்த வகையில், இருக்கின்ற மக்கள் தொகையை மீண்டும் சரிபார்த்து எந்தெந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எந்தெந்த அளவுக்குப் பிரதிநிதித்துவம் இருக்கிறது. எந்தெந்த அளவுக்கு அவர்களுக்கு மேலும் வழங்கவேண்டும் என்ற வகையில் நல்ல நிலைமைகளை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்றுகேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பினை அளித்திருக்கிற பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

(முற்பகல் 1-30)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்கான நலன்கள் குறித்து, நலன்கள் எவ்வாறெல்லாம் பெருகிட வேண்டுமென்பது குறித்து இந்த அரசின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துக்களை விளக்கமாக எடுத்து உரைத்திருக்கிறார்கள்.

முதலில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற நிலையிலே அவர்களுக்கு இட ஒதுக்கீடு என்கின்ற இந்தப் பிரச்சினை எல்லாம், போதுமான கல்வியும், வேலைவாய்ப்புக்களும் அனைத்து மக்களுக்கும் கிடைத்து விட்டால் எழவே எழாது என்று சொன்னார்கள். நானும் அதைத்தான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். போதுமான அளவிற்கு அனைத்து மக்களுக்கும் கல்வியும் வேலைவாய்ப்பும் கிடைக்காத காரணத்தினாலேதான், அப்படிக் கிடைப்பது ஏற்கெனவே முன்னேறிய ஒரு சாரார்க்குத் தொடர்ந்து கிடைத்துக்கொண்டு இருக்கின்ற காரணத்தினாலேதான், இந்தப் பிரச்சினை எழுந்து இட ஒதுக்கீடு என்கின்ற அளவுக்கு அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



ஆளுங்கட்சி சார்பிலே, எதிர்க்கட்சி சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த இட ஒதுக்கீடு குறித்து விரிவாகப் பேசாவிட்டாலுங்கூட, ஆங்காங்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, சீர்மரபினருக்கு எத்தகைய வசதி வாய்ப்புக்களை, கல்வி வாய்ப்புகளைச் செய்துதர வேண்டும் என்று கூறி இப்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்ல என்கின்ற குறைபாடுகளை எல்லாம் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்களும், இறுதியாகப் பேசிய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு உக்கம்சந்த் அவர்களும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்ல என்று சொன்னார்கள். நானும்கூட அது போதுமானது என்ற மன நிறைவோடு இல்லை. ஆனால் 1969-ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஒரு தனித் துறை அமைக்கப்பட்டபோது, அதற்கு என்று ஒரு தனி அமைச்சர் நியமிக்கப்பட்டபோது, ஏற்கெனவே ஆதிதிராவிட நலத்துறையோடு இந்தப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இணைந்து ஒரே துறையாக இருந்தது மாற்றப்பட்டு தனித் துறை, தனியாக அமைச்சர் என்ற நிலையை உருவாக்கினபோது முதன் முதலாக ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை அந்த மக்களுடைய நலனுக்காக ஒதுக்கப்பட்டு, இன்றைக்கு அது 19 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்திருக்கிறது என்பதை எண்ணி நாம் பெருமையடையலாம். 19 கோடி ரூபாய்தான்; ஏறத்தாழ 4 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேற்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் 19 கோடி ரூபாய் தான் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நாம் எண்ணினாலும் கூட, பல்வேறு துறைகளுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி ஒதுக்கீடுகள் இந்த மக்களுக்கும் பயன்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. குறிப்பாக கல்வித் துறைக்காக 900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றால், இந்தப் பயனை--இந்த மக்களும், அவர்கள் பிற்படுத்தப்பட்டோராக இருந்தாலும், மிகப் பிற்படுத்தப்பட்டோராக இருந்தாலும், சீர்மரபினராக இருந்தாலும், அவர்களும் ஒரு விதத்திலே இந்தப் பயனை--அடையத்தான் போகிறார்கள். எனவே குறிப்பாகவும், சிறப்பாகவும் இப்படிப்பட்ட நலன்களைக் கொடுக்கின்ற, சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைக் களைகின்ற வகையிலேதான் இந்த 19 கோடி ரூபாய்க்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நான் உங்களுக்கு உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கோடி ரூபாயாக 1969ஆம் ஆண்டிலே இருந்து 20 ஆண்டுக் காலத்திலே சற்றொப்ப ரூ. 20 கோடி அளவுக்கு வளர்ந்து இருக்கின்ற இந்த நிதி ஒதுக்கீடு அடுத்த ஆண்டு இரட்டிப்பு மடங்காகப் பெருகும் என்பதை மாத்திரம் நான்

இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசும்போது நான் மிகுந்த பூரிப்படைந்தேன். ஏனென்றால் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பொதுவாக பிற்படுத்தப்பட்ட மக்களுடைய சலுகைகளை, அவர்களுக்குத் தரப்படுகின்ற உரிமைகளை, ஆதி திராவிட மக்களுடைய பிரதிநிதிகள் ஏற்பார்களா என்கின்ற ஓர் ஐயப்பாடு சில நேரங்களில் எழுவதும், அதன் காரணமாக மோதல்கள் உருவாவதும் நாட்டில் பல இடங்களில் நாம் கண்ட, கண்டு வருகின்ற காட்சியாகும். அதற்கு நேர் மாறாக இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள், பல பகுதிகளில் சீர்மரபினர் என்று சொல்லப்படுகிற அந்த வகுப்பினர், ஆதி திராவிட மக்களுடைய வாழ்க்கையைவிட மிக மோசமான வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்குக் கிடைத்துள்ள வசதி வாய்ப்புகளை விட இவர்கள் மிகக் குறைவாகத்தான் அனுபவிக்கிறார்கள் என்று குறிப்பிட்டு, அவர்களுக்காகக் கட்டப்படுகின்ற வீடுகளுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகையைக் கூட அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று இன்றைக்கு வாதாடியிருக்கிறார்கள். இதுபோன்ற நல்ல எண்ணங்கள் தான்--நம்முடைய மாநிலத்தில்--பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் ஒரு நல்ல உணர்வை, உறவை, நட்புணர்ச்சியை, அதன் காரணமாக நிலையான அமைதியை தமிழகத்திலே உருவாக்குவதற்குப் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இட ஒதுக்கீடுகள், இவ்வளவு விழுக்காடுகள் என்று சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது. அதனுடைய பயனை அந்த மக்கள் அடைவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்பதில் இரண்டு விதமான கருத்துக்களுக்கு இடமே இல்லை. மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களில் நரிக்குறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டாமா என்றும் கேட்டார்கள். கழக ஆட்சிக் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு முயற்சி செய்யப்பட்டது. திருச்சிக்கு அருகிலே தேவராயனேரி என்ற ஒரு பகுதியிலே நானே முன் நின்று 100 நரிக் குறவர் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டன. நான் திருச்சிக்குச் செல்லும்போது எல்லாம் அங்கே சென்று அந்த வீடுகளைப் பார்ப்பது வாடிக்கை. அதுமாத்திரமல்லாமல் அந்த நரிக்குறவர்கள் கையாளுகின்ற நல்ல கலையான மணி பின்னுதல் என்னும் அந்தக் கலையை வளர்த்து அந்தத் தொழிலை ஒரு நல்ல தொழிலாக ஆக்கி, அந்த மணிகளை எல்லாம் திருச்சி ரெயிலடியிலே கொண்டு வந்து காட்சிப் பொருளாக வைத்து, சுற்றுலாப் பயணிகள் அந்த மணிகளை, மணிகளால் செய்யப்பட்ட பைகளை



இன்னும் பல்வேறு விதமான பொருள்களை எல்லாம் வாங்கிச் சென்றார்கள். அதன்மூலம் கிடைத்த வருமானமும் அந்த நரிக்குறவர் பெருமக்களுக்கே வழங்கப்பட்டது. திடீரென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1976-ல் கலைக்கப்பட்ட உடன் அடுத்த மாதம் அங்கே சென்று பார்த்தேன். அந்த வீடுகள் எல்லாம் காலியாக இருந்தன. யாரும் அவர்களைத்துரத்தவில்லை. அவர்களாகவே போய்விட்டார்கள். அவர்களால் ஒரே இடத்தில் இருக்க இயலாது- சில அரசியல்வாதிகளைப் போல. (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அவர்கள் அந்த இடத்தை விட்டு மாறிவிட்டார்கள். இப்போதுதான் மீண்டும் வந்து குடியேறியிருக்கிறார்கள் என்று நான் கேள்விப் பட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் இப்பொழுது இங்கே உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். இனிமேல் வீடு கட்டிக் கொடுங்கள், அவர்கள் அங்கே நிச்சயம் தங்குவார்கள் என்று உறுதியாக அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன தொடர்போ எனக்குத் தெரியாது. இருந்தாலும்கூட அவர்களுடைய உறுதிமொழியை நம்பி மீண்டும் நரிக்குறவர்களுக்காக அங்கே வீடுகள் கட்டித் தரப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்களும், திரு. பூவராகன் அவர்களும், திரு. அப்துல் லத்தீப் அவர்களும், பிற்படுத்தப்பட்டோர் நலனில் ஊடுருவி இருக்கின்ற சமுதாயப் பிரச்சினைகளை மிக ஆழமாக விரிவாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள். திரு. பாண்டியன் அவர்கள் பேசும்போது கல்வி, வேலைவாய்ப்பிலும் மாத்திரமல்ல, அவர்களுக்கு நீதிபதி பதவிகளிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய பதவிகளிலும், தலைமைச் செயலக அதிகாரிகள் பதவிகளிலும் கூட இந்த இட ஒதுக்கீடு சதவீதங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி ஒரு காலம் மலருமேயானால் அந்தக் காலத்தைப் பொன்னான காலம் என்று நானும் அவரோடு சேர்ந்து வரவேற்க காத்துக்கொண்டிருக்கிறேன் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இதில் இருக்கின்ற சிக்கல்கள் என்னவென்றால் நீதிபதிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமிக்கின்றபோது சீனியாரிட்டி என்கின்ற பிரச்சினை வருகிறது. அதற்கு நாம் யாரை விரும்புகிறோமோ, அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிறார்களா அந்த இடங்களை நிறைவு செய்ய, என்கின்ற பிரச்சினை எழுகிறது.

(பிற்பகல் 1-40)

இவைகளுக்கெல்லாம் பதில் அளிக்கத்தான் நாம் இன்றைக்கு ஏறத்தாழ 60 ஆண்டுகளாக,--நீதிக் கட்சிக் காலத்திலே--

மூதறிஞர் முத்தையா அவர்களாலே ஆரம்பிக்கப்பட்ட கம்யூனல் ஜி. ஓ. தமிழ்நாட்டிலே உள்ள அடித்தட்டு மக்களுக்கு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தரப்பட்ட வரப்பிரசாதமான கம்யூனல் ஜி.ஓ. தந்தை பெரியார் அவர்களால் வளர்க்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களால் பாதுகாக்கப்பட்டு, ஏன், பெருந்தலைவர் காமராஜ் அவர்களாலும் கைவிடப்படாமல் அது பாதுகாக்கப்பட்டு, அதற்கு அவர்களேகூடப் போராடுகிற நிலையிலே பாதுகாக்கப்பட்டு, இடைக்காலத்திலே அதற்கு ஒரு சேதாரம் வந்த நேரத்திலே அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே, கட்சி சார்பற்ற முறையிலே அனைவரும் குரல் கொடுத்து, மீண்டும் அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்- கம்யூனல் ஜி. ஓ.—— இட ஒதுக்கீட்டு முறை இன்றைக்கு நிலை பெற்றிருக்கிறது என்பது வரலாறாகும். அப்படிப்பட்ட வரலாற்றில் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் விரும்பியதைப்போல நீதிபதிகளிலும் இட ஒதுக்கீடு, எல்லா அதிகாரிகள் நியமனங்களிலும் இட ஒதுக்கீடு, அதைப் போலவே பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு என்பது போன்ற ஒரு நிலை வருமேயானால், அத்தகைய நிலைமையை எய்தும்போது அவரோடு சேர்ந்து மகிழ்ச்சி அடைபவர்களில் நானும் ஒருவனாக நிச்சயமாக இருப்பேன்.

இந்த அரசு இப்போது பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, சீர் மரபினருக்காக என்னென்ன நற்காரியங்களைச் செய்திருக்கிறது, செய்ய முன் வந்திருக்கிறது என்பதை தொடர்ந்து அரசின் சார்பில் வெளியிடப்பட்ட ஆணைகள் வாயிலாகவும், அறிக்கைகள் வாயிலாகவும், இந்த மாமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் மிக நன்றாக அறிந்திருக்கிறீர்கள். அறிவித்ததற்கு ஏற்றவாறு செயல் முறைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சமுதாய மாற்றம் சாதிகளற்றதாக இருக்க வேண்டுமென்று இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ''' சாதிகள் இல்லையடி பாப்பா '' என்று பாரதி பாடியதைக் கூடச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால், சாதிப் பாகுபாடு என்ற ஒன்று இருக்கின்றவரையில், அதன் காரணமாக விளைந்துள்ள தீமைகள் களையப்படுகிற வரையில் நாம் அந்தத் திக்கிலேதான் பயணம் நடத்தி, ஒரு சமத்துவ நிலையை எல்லோருக்கும் ஏற்படுத்தக்கூடிய செயலைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைத்தான் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.



நாட்டிலுள்ள சாதிப் பாகுபாடுகள் அனைத்தும் ஒழிந்து,
சமுதாயத் துறையில் மக்கள் அனைவரும் ஒன்றே குலம்
என்ற நிலை ஏற்படும்வரை இந்த வகுப்புவாரி முறை, அதா
வது வகுப்புக்கேற்ற நீதி வழங்கப்பட வேண்டுமென்ற நீதி
இருந்தே தீர வேண்டுமென்று வற்புறுத்துகிறோம் என்று
கூறிவிட்டு மேலும் அண்ணா அவர்கள் சொன்னார்கள். நம்
நாடு சமூக ஏற்றத்தாழ்வுகள் மிகுந்த இடமென்பது வாதத்
திற்கு உரிய விஷயமல்ல, உலகம் அறிந்த உண்மை. ஏற்றத்
தாழ்வு ஏன் ஏற்பட்டது, யார் ஏற்படுத்தினார்கள் என்பதும்
இனி நான் கூறி மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷய
மல்ல. நாடு அறிந்த இரகசியம் நாநிலம் கை கொட்டிச்
சிரிக்கும் கேவலத் தன்மை வாய்ந்த விஷயம் என்று அவனி
அறியும். பசி ஏப்பக்காரனுக்கு கஞ்சிக் கலயமும், புளியேப்பக்
காரனுக்கு மருந்து வட்டிலும் தரப்படுவதுதான் முறை
என்று கூறுவர் மனித மாண்பு உணர்ந்தவர்கள். இருள்
சூழ்ந்த இடத்திற்கு விளக்கொளி தேவை. இடர்ப்பட்ட
வாழ்வு வாழ்வோர்க்கு உதவி தேவை. மக்கள் நிலைமையைக்
கண்டறிந்து, எவரெவர் எந்தெந்த நிலைமைகளில் உள்ளனர்,
அவர்களுக்குற்ற குறைபாடுகள் யாவை, அவைகளைக் களைய
எம்முறைகளைக் கையாள வேண்டுமென்பதை ஆய்ந்து அதனைச்
செய்து, ஒரு நாட்டு மக்களுடைய ஏற்றத்தாழ்வுகள்
சமூக அமைப்பையே குலைத்து விடக் கூடியதாக இருக்கு
மானால், அதைவிடுத்து நலன்களை உண்டாக்கக்கூடிய முறை
களை வகுத்தலே நல்ல ஆட்சியாளர் செய்ய வேண்டிய
கடமை. அதுவே ஆட்சியின் மூலம் மக்கள் பெற வேண்டிய
பேறு. ஓநாயை வேட்டைக்காரன் கொன்றுவிடாமல் பாது
காப்பது அல்ல நீதி, ஓநாய் ஆடுகளைக் கொன்றுவிடாமல்
பாதுகாப்பதுதான் நீதி— இது அறிஞர் அண்ணா அவர்கள்
இட ஒதுக்கீடு குறித்து, வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் குறித்து
எடுத்துச் சொன்ன பொன்னான கருத்துக்களாகும்.
அந்தக் கருத்துக்கு, நாட்டில் பல்வேறு எதிர்ப்புகள்
ஏற்பட்டாலும்கூட, அதன் காரணமாக ஆட்சிக்கே கூட பல
சிரமங்கள் வந்தாலும்கூட, அவைகளைப் பொருட்படுத்தாமல்
—— நம்முடைய அருமை நண்பர் திரு. அப்துல் லத்தீப்
அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல—— இதன் காரண
மாக ஏற்படுகின்ற புகைச்சலால், கசப்பால், காழ்ப்புணர்
வினால், இந்த ஆட்சிக்கே கூட கேடு வரும் என்றாலும்,
சமுதாயத்திற்காக நாம் ஆற்றிய கடமைக்குப் பெறுகிற பரிசு
இது என்றுதான் இந்த ஆட்சியில் உள்ள நாங்கள் கருது
வோமேயல்லாமல் ஆகா இதனால் ஆட்சி பறி போய்
விட்டதே; இந்த மக்களுக்கு இந்தப் பணியைச் செய்யாமல்
இருந்திருந்தால் ஆட்சியில் இருந்திருக்கலாமே என்று எண்ணக்
கூடியவர்கள் அல்ல நாங்கள் என்பதை (மேசையைத் தட்டும்
ஒலி) இங்கே இருக்கிற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா,
பெருந்தலைவர் காமராஜர், காயிதே மில்லத், பசும்பொன்

தேவர் போன்றவர்களின் திருவுருவப்படங்களுக்கு முன்னால் நின்று சொல்வதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

அதனால்தான், கடந்த காலத்திலே தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருந்த இடஒதுக்கீட்டின் வாயிலாகக்கூட அதிகப் பயன்களைப் பெறமுடியாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் சற்று கொதிப்பேறிய நிலையில் சில கிளர்ச்சிகளிலே ஈடுபட்டு——அதன் காரணமாகத் தெரிந்தோ, தெரியாமலோ — அறிந்தோ, அறியாமலோ எப்படியோ நடந்துவிட்ட வன்முறைச் சம்பவங்களும் அந்தச் சம்பவங்களையொட்டி, அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளும் கூட சில, குறிப்பிட்ட சம்பவங்களைத் தவிர மற்ற வழக்குகள் அனைத்துமே. வாபஸ் பெறப்படும் என்று அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறதே' அதுகூட சமுதாய நலக் கண்ணோட்டத்தோடுதானே தவிர வேறல்ல. அரசியலில் பழிவாங்க வேண்டுமென்ற உணர்வு இருந்திருக்குமானால் அந்த வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டுமென்றோ அல்லது கைது செய்யப்பட்டவர்களையெல்லாம் விடுவிக்க வேண்டுமென்றோ இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்காது என்பதையும் இந்த அவையில் உள்ளவர்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

நான் முதலில் குறிப்பிட்டதைப்போல், கழக ஆட்சி பொறுப்பேற்று 100 நாட்கள்கூட நிறைவுறாத இந்த நிலையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு 30 சதவீதம் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருக்கு 20 சதவீதம் என்றும் கொடுக்கப்பட அறிவிக்கப்பட்டது. மிகவும் பிற்பட்டோர் நலத்துறை ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும் என்றும் சொன்னேன். அதன்படி மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பு மாணவர்களுக்கு, கல்லூரி அளவில் இளங்கலைப் பட்டப் படிப்பு இலவசமாக்கப்படும் என்றும் குறிப்பிட்டேன்.

பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மேலும் 25 மாணவர் இல்லங்கள் திறக்கப்படும் என்றும் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. திரு. உகம்சந்த் அவர்கள் பேசும்போது கூட, அவ்வாறு திறக்கப்படுமா என்று கேட்டார்கள். மேலும் திறக்கப்படும் என்று இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலேயே சொல்லப்பட்டுள்ளது.

பிற்பட்ட மாணவர்கள் கல்விச் சலுகை பெறுவதற்கு, பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 5,000 என்பது ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதுவும் இங்கே அறிவிக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு ஒரு புள்ளிவிவரம் சொல்ல வேண்டுமானால், 1971-72ஆம் ஆண்டில் இந்தத் துறைக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 4.44 கோடியாகும்.



1969ஆம் ஆண்டில் நான் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இதுபோன்ற ஒரு துறை அமைப்பதற்கு முன்பு சில லட்சம் ரூபாய்கள்தான் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதுவும் அரிசன நலத்துறையோடு ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே இந்தத் துறை சரியாகக் கவனிக்கப்படாமல் இருந்தது. எனவே ஒரு கோடி ரூபாயில் தொடங்கி 1971-72ல் ரூ. 4.44 கோடியாக மாறி, பிறகு ரூ. 5 கோடி, ரூ. 6 கோடி, ரூ. 15 கோடி, ரூ. 16 கோடி, ரூ. 19 கோடி என்கிற அளவுக்கு இன்றைக்கு ஆகியிருக்கிறது. பலருக்கு ஒரு சந்தேகம். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் 19 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே இதிலே சீர் மரபினருக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சேர்த்துத்தானே இந்த ரூ. 19 கோடி என்ற கேள்வி எழுப்பினால் நியாயம் உண்டு. அதனால்தான் கொள்கை விளக்கக் குறிப்பிலே— 10-ம் பக்கத்தின் அடிப்பகுதியில் '' மேற்குறிப்பிட்ட கட்டணங்கள் திருத்தப்பட்டு, சீர் மரபினருக்கு வழங்கப்படும். அதே அளவில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் வழங்கப்படும் '' என்ற ஒரு பகுதி புதிதாக இணைக்கப்பட்டிருப்பதோடு, 2-ம் பக்கத்திலே '' பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்காக, தேவையின் அடிப்படையில் கூடுதல் நிதியினை 1989-90ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகள் அல்லது திருத்திய மதிப்பீடுகளில் சேர்த்துக் கொள்ளப்படும் '' என்றும் கூறியிருக்கிறோம். எனவே ரூ. 19 கோடியோடு நிற்கப் போவதில்லை. இன்னும் அதிகமாக, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், சீர் மரபினருக்கும் செலவழிக்கப்படும் அந்த திருத்தச் செலவினங்கள், மதிப்பீடுகள் வாயிலாகவும், துணை மதிப்பீடுகள் வாயிலாகவும் அவையினுடைய ஒப்புதலுக்கு வைக்கப்பட இருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இவர்களுக்காக, தனியாக தொகை ஒதுக்கப்படாததற்குக் காரணம், நாம் இந்த அறிவிப்புகளைச் செய்வதற்கும், நம்முடைய நிதிநிலை அறிக்கையினுடைய கூட்டத் தொடர் தொடங்குவதற்கும், இடைக்காலம் மிகக் குறைவாக இருந்த காரணத்தால் இவைகளைப் பற்றி எல்லாம் சிந்தித்து, ஒரு முடிவு எடுத்து, எவ்வளவு நிதி என்று ஒதுக்கப்படுவதற்கு வழி இல்லாமல் போயிற்று. இருந்தாலும் கூட நிச்சயமாக அதற்கென்று கணிசமான தொகை ஒதுக்கப்பட்டு காரியங்கள் நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50).

ஒருசில அறிவிப்புகளை நான் இங்கே கூற விரும்புகின்றேன். ஏற்கெனவே இருந்த நிலையிலிருந்து மாறுதல்கள். மாணவர்களுக்கு ஏற்கெனவே சில பரிசுகள் இருந்தது. கல்வித்

துறையில் ஒதுக்கீடு செய்தால் மாத்திரம் போதாது. அவர்கள் முன்னேற வேண்டும், ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் பல அறிவிப்புகள் இந்தப் பிரிவு மக்களுக்காக செய்யப்பட்டிருக்கின்றன. அதிலும் சிறப்பாக பிற்படுத்தப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கும்மேல் நிலைப்பள்ளிப் பொதுத் தேர்வில் முதல் பரிசு பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இதுவரை ஆயிரம் ரூபாய் பரிசாக வழங்கப்பட்டது இனிமேல் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ மாண வியருக்கு 5 ஆயிரம் ரூபாய் பரிசு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே 10-ம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் பரிசு பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இதுவரை 500 ரூபாய் வழங்கப்பட்டது. இனிமேல், பிற் படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 1,500 ரூபாய்; மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 3 ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தி வழங்கப்படும். இது மாநில அளவில் வழங்கப்படும் பரிசு ஆகும்.

அதைப் போலவே டிஸ்ட்ரிக்ட் லெவல், மாவட்ட அளவில் மேல்நிலைப் பள்ளிப் பொதுத் தேர்வில் முதல் பரிசு பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இதுவரை 500 ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக இனி பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 1,500 ரூபாய்; மிகவும் பிற் படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 3,000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தி வழங்கப்படும்.

மாவட்ட அளவில் 10-ம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதி முதல் பரிசு பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒரு வருக்கும் இதுவரை 150 ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக, இனிமேல் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 500 ரூபாயும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 1,000 ரூபாயும் வழங்கப்படும்.

அதைப்போலவே இரண்டாம் பரிசு பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இதுவரை 100 ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக இனிமேல் பிற்படுத்தப்பட்டோ ருக்கு 250 ரூபாயும், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 500 ரூபாயும் வழங்கப்படும்.

மூன்றாம் பரிசு பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் 50 ரூபாய் இதுவரை வழங்கப்பட்டது. இனிமேல்



இந்தத் தொகை பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 150 ரூபாய், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 300 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படும்.

அதைப்போலவே 8-ம் வகுப்பில் முதல் பரிசு பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இதுவரை 100 ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 250 ரூபாயும், மிகவும் பிற்படுத் தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு 500 ரூபாயும் வழங்கப் படும்.

எட்டாம் வகுப்பில் இரண்டாம் பரிசு பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இதுவரை 50 ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக இனி பிற்பட்ட வகுப்பைச் சேர்ந் தவருக்கு 150 ரூபாயும், மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந் தவருக்கு 300 ரூபாயும் வழங்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மேல்நிலைப்பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண்கள், அதற்கடுத்த அதிக மதிப்பெண்கள் பெற்று தொழில் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற் படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 4 மாணவர்களுக்கு இரண்டுஆண்கள் இரண்டுபெண்கள் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்வீதம் படிப்பு முடியும் வரை அண்ணா நினைவுப் பரிசு இப்போது வழங்கப்படுகிறது; இந்தத் தொகை இந்த ஆண்டு முதல் 2,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

இதேபோல, பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள். அதற்கு அடுத்த அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர் மரபினர் பல்தொழில் நுட்பக் கல்வி பயிலும் நான்கு மாணவர்களுக்கு இரண்டு ஆண்கள், இரண்டு பெண்கள்— ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் மூன்றாண்டுகளுக்குப் பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இந்தத் தொகை இந்த ஆண்டு முதல் இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். இந்தப் பரிசு பெறுபவர்களுடைய பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் 12,000 ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது என்று இது வரையில் இருந்து வந்த உச்ச வரம்பு இந்த ஆண்டு முதல் நீக்கப்படுகிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

நம்முடைய முஸ்லீம்லீக் கட்சியினுடையதலைவர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இட ஒதுக்கீடு பற்றி இந்த அரசு விடுத்துள்ள அறிவிப்பை ஏற்றுக்கொண்டு, அதோடு தானும் ஒரு பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன்தான் என்று அடிக்கடி சொல்லி, தனக்குள்ள உரிமைகளையெல்லாம் இங்கே கோரி,

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 22

சில முறையீடுகளையும் இங்கே வைத்திருக்கின்றார்.
அவருக்கு நினைவுபடுத்த வேண்டிய அவசியமில்லை. நான்
மாமன்றத்தில் கடந்த முறை நான் இந்தப் பொறுப்பிலேயிருந்த இதே
பொழுதுதான். உருது பேசுகின்ற முஸ்லீம் மக்களைப் பின்
தங்கியோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்ற பிரச்சினை
இருந்தது. திரு.லத்தீப் அவர்கள்தான் அதற்காகக் கடுமையாக
வாதாடினார்கள். அப்பொழுதும் தோழமைக் கட்சிதான்.
இருந்தாலும் கடுமையாக வாதாடினார்கள். அப்படி வாதாடிய
பொழுது, அன்றைக்கிருந்த பிற்படுத்தப்பட்ட நலத் துறை
அமைச்சரவர்கள், ''என்னதான் நீங்கள் சொன்னாலும் சட்டத்
திலே இடமில்லை, உங்களை— உருது பேசுகின்ற மக்களை—
முஸ்லீம் மக்களைப் பின் தங்கியோர் பட்டியலிலே சேர்க்க'
என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள்; திரு.லத்தீப் அவர்
களும் திரும்பத்திரும்பக் கேட்டார்கள். இருவரிடத்திலும் வாதம்
முடிவடையவில்லை. சபாநாயகர் அவர்களே, திரு. லத்தீப்
அவர்கள் திரும்பத் திரும்பப் பேசுவது இப்போதுதான்
முதல் முறை என்று நீங்கள் கருதிக் கொள்ளக் கூடாது. அப்
பொழுதே அப்படித்தான் பேசுவார். அப்படித் திரும்பத்
திரும்ப இருவரும் மாறி மாறிப் பேசிக்கொள்கிறபொழுது
அமைச்சரவர்கள்—பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சரவர்
கள், சட்டத்திலே இடம் நிச்சயமாக இல்லை என்று உறுதி
யாகத் தெரிவித்தவுடன், திரு.லத்தீப் அவர்களும், முஸ்லீம் லீக்
நண்பர்களும் மிகுந்த வேதனைப்பட்டார்கள். அவர்களுடைய
முகக் குறிப்பை உணர்ந்துகொண்ட நான், உடனே எழுந்து,
சட்டத்திலே இடமில்லையென்றாலும், என்னுடைய இதயத்
திலே இடமிருக்கிறது என்று கூறி, உருது பேசுகின்ற முஸ்லீம்
மக்களையும், பின்தங்கிய சமுதாயத்திலே சேர்க்கின்ற ஆணை
பிறப்பிக்கப்பட்டதை நான் இங்கே நினைவூட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் அதன் மீதும் இன்று, இன்னும் பல நன்மைகளைச்
சிறுபான்மை மக்கள் பெற வேண்டுமென்பதற்காக, சிறுபான்மை
கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். எல்
லோரும் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல, 62 ஆண்டு
களுக்கு மேற்பட்ட சரித்திரத்தை உள்ளடக்கிய இந்த வகுப்பு
வாரிப் பிரதிநிதித்துவத்திற்கு அதனுடைய வரலாற்றில் முதன்
முதலாக அந்த மக்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து
என்னென்ன செய்யலாம் என்று அறிந்து அறிக்கை தருகின்ற
ஒரு குழு—ஒரு கமிஷன்—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி
யிலேதான் அமைக்கப்பட்டது, சட்டநாதன் அவர்களுடைய
தலைமையிலே. அதற்குப்பிறகு அருமை நண்பர் திரு.எம்.ஜி.ஆர்.
அவர்களுடைய ஆட்சியிலே அம்பாசங்கர் கமிஷன் அமைக்கப்
பட்டது.



1989 ஏப்ரல் 22] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்த இரண்டு கமிஷன்கள் தந்த அறிக்கைகளில், சட்டநாதன்
தந்த அறிக்கையிலே பலவற்றை முன்பு கழக அரசு நிறைவேற்றி
யது. ஆனால் அம்பாசங்கர் கமிஷனுடைய அறிக்கை பல்வேறு
பிரச்சினைகளுக்கு ஆளான காரணத்தால் அதை நடைமுறைப்
படுத்துவதிலே பல சங்கடங்கள் இருப்பதாகக் கடந்த காலத்
திலே அந்த அரசு தெரிவித்தது. அந்த அறிக்கை கூட இன்
னும் வெளியிடப்படவில்லை என்பது உங்களுக்குத்தெரியும். அந்த
அறிக்கைக்குப் பிறகு, தமிழகத்திலே எழுந்த பிற்படுத்தப்பட்ட
மக்கள் இவ்வளவு இட ஒதுக்கீட்டுக்குப் பிறகும், பிற்படுத்தப்
பட்ட மக்களிலேயே ஒரு சாரார், மிகவும் பிற்படுத்தப்பட்ட
மக்களாக இருக்கிற நிலையை உணரத் தலைப்பட்டார்கள்.

நான்கூட, நகர்ப் பகுதிகளிலே பார்க்காமல், தென்னார்க்
காடு மாவட்டத்திலும், வடார்க்காடு மாவட்டத்திலும்
அல்லது சேலம் மாவட்டத்திலும் அல்லது வேறு சில மாவட்டங்
களிலேயும் கொஞ்சம் உட்பகுதிகளுக்குச் சென்று பார்த்தால்,
பிற்படுத்தப்பட்ட மக்கள் கூட்டங்களிலே கலந்துகொள்ளும்
பொழுது அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களா அல்லது பிற்
படுத்தப்பட்ட மக்களா என்ற வேறுபாடு தெரியாத அளவிற்குத்
தான் அவர்களுடைய வாழ்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்
கிறது. அதுதான் அவர்களுடைய இன்றைய வாழ்வு.

அந்த நிலையின் காரணமாகத்தான், ஆதிதிராவிட
மக்களுக்கு என்னென்ன சலுகைகள் கிடைக்கிறதோ, அந்தச்
சலுகைகளில் ஒரு முக்கால் பகுதியாவது தங்களுக்குக் கிடைத்
தாக வேண்டும், இட ஒதுக்கீடு செய்யப்பட்டும் கூட தங்களிலே
ஒரு பெரும் பகுதியினர் ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறோம்
என்ற மனக் கொதிப்பை அவர்கள் வெளியிட்டார்கள்.

(பிற்பகல் 2-00)

அந்த மனக்கொதிப்பை நான் குறைத்து மதிப்பிடமாட்டேன்.
அது இயல்பானது. எனவே தான் கடந்த காலத்தில் இருந்த
அரசுகள் உடனடியாகச் செய்ய முன்வராத அந்தக் காரியத்தை
கழக அரசு பொறுப்பேற்றவுடன், வேறு வேலை எதுவும்
பார்க்காமல் அது குறித்து ஆலோசனை நடத்தி இந்த அறி
விப்பை வெளியிட்டு இருக்கிறோம். இதிலே கூட நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் பேசும்போது
சொன்னார்கள். சில பேர் டெல்லிக்குச் சென்று, எங்கெங்
கேயோ சென்று மாங்கனியைத் தேடினார்கள். உங்கள் கூட
இருப்பவர்கள் மாங்கனியைப் பெற்று விட்டார்கள் என்று
சொன்னார்கள். அதாவது வன்னியர் பிரச்சினை குறித்து
தான் சொன்னார்கள்... கூட இருப்பவர்களில் அவரும் ஒருவர்
என்றுதான் கருதிக் கொண்டிருக்கிறேன் நான். ...அந்த மாங்கனி
யைப் பெற்று விட்டார்கள் என்று சொன்னார்கள். சொல்லி

விட்டுச் சொன்னார்கள், இருந்தாலும் 20 என்பதை 30 ஆக்கி, 30 என்பதை 20 ஆக்குங்கள்என்று மாங்கனி கையில் கிடைத்து இருக்கிறது. அதைத் தின்று பார்த்து, சுவைத்துப் பார்த்து, சுவைக்கிறதா, புளிக்கிறதா என்று தெரிந்த பிறகு அல்லவா தேவையானால் மாங்கனியை மாற்றி விட்டு வேறு மாங்கனியைத்தேடவேண்டும். இதுதான்நான் மாண்புமிகு திரு.பூவராகன் அவர்களுக்கு அளிக்கிற விளக்கம் ஆகும்.

இந்த மாங்கனியைப் பற்றி இன்றைக்குக் குறை கூறப்படுகிறது. நான் இல்லையென்று சொல்லவில்லை. நம்முடைய நண்பர் திரு. உகம்சந்த் அவர்கள்கூட இன்றைக்குச் சொன்னார்கள், மறுபடியும் ஒரு சர்வே எடுத்து, மக்கள் கணக்கெடுப்பு எடுத்து, அதற்குப் பிறகு இந்த விகிதாச்சார முறையை அறிமுகப்படுத்தலாம் என்று சொன்னார்கள். அது அவருடைய கருத்து மாத்திரம் அல்ல. காங்கிரஸ் கட்சிக்குப் புதிய தலைவராக வந்திருக்கிற திரு. இராமமூர்த்திஅவர்கள்கூட இதே கருத்தைச் சொன்னதாகப் பத்திரிக்கையில் பார்த்தேன். "......The Reservation policy of the Tamil Nadu Government was bound to create confusion'....", யாருக்கு 'confusion ''என்று தெரியவில்லை."....He said, "demanding that the Scheme of Enumeration commenced under President's Rule be resumed for arriving at a comprehensive decision .. ..." காங்கிரஸ் கட்சியினுடைய புதிய தலைவர் கூட சொல்லியிருக்கிறார். இதனால் பெரிய குழப்பமே ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார். குழப்பம் எப்படி ஏற்பட்டிருக்கிறது. யாரால் ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் எல்லோருக்கும் தெரியும். மேலும் குழப்பம் இந்தப் பிரச்சினையால் ஏற்படவில்லையென்பது அனைவருக்கும் தெரியும் அதேகருத்தை திரு. உகம்சந்த்அவர்களும் சொன்னார்கள். மறுபடியும் சர்வே எடுக்க வேண்டும்என்றார்கள். எனக்கு ஒன்றும் பெரிய காரியமல்ல அது. இன்றைக்கு அறிவித்து விடலாம். ஆனால் அந்தச் சமுதாயத்து மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், வன்னியர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் அதை ஏற்றுக் கொள்வார்களா என்றால் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். கிளர்ச்சி நடத்தினால் நடத்திவிட்டுப் போங்களேன் எனக்கு என்ன? ''ஸ்டேடஸ்கோ மெயின்டெய்ன்'' ஆகும். சொல்லிவிட்டுப் போகலாம். மறுபடியும் மக்கள் கணக்கெடுப்பு நடத்திட ஒரு கமிட்டி போட்டு விட்டுப் போகலாம். அப்படி ஒரு மக்கள் கணக்கெடுப்பு நடத்துவதற்கு ஒரு கமிட்டியை நான் போட்டு விட்டால் இன்னும் இரண்டு ஆண்டுக் காலம், மூன்றாண்டுக் காலம் அதனுடைய பணி நடைபெற்று, அதற்குப் பிறகு அந்தக் கணக்கெடுப்பு கையில் கொடுக்கப்பட்டு, அதிலே அது சரி, இது சரியல்ல என்று ஒவ்வொரு வகுப்பாரும், ஒவ்வொரு ஜாதிக்காரர்களும் போரிட்டு, குரல் எழுப்பிக் காரியம் நடக்காமல் இருப்பதற்கு வேண்டுமேயானால்



இந்தக் கமிட்டியைப் போடலாம். கல்கி அழகாகச் சொல்வார். ஒரு காரியத்தைப் பற்றிப் பிரச்சினை எழுமானால் ஒரு கமிட்டியைப் போட்டு விடு. இல்லாவிட்டால் அதன் தலையில் ஒரு கல்லைப் போட்டு விடு என்று! அதைப்போல வேண்டுமானால் கமிட்டியைப் போடலாம். சில உருப்படியான காரியங்களுக்குத்தான் கமிட்டி போட வேண்டும். நம்மால் முடியாது, இதிலே பிரச்சினை வந்துவிட்டது, சிக்கல் வந்து விட்டது என்று தப்பித்துக்கொள்ள வேண்டுமெனறால் மீண்டும் கமிட்டிபோட்டு கணக்கு எடுங்கள் என்று சொல்லலாம். அருமை நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் எல்லா ஜாதிக்காரர்களையும் அழைத்துப் பேசினார் என்றுகூடக் குறிப்பிட்டார்கள். அப்படிப் பேசியதைப் பார்த்தபோது அவர்கள் கண்ட உண்மை என்ன? ஒவ்வொரு வரும் சொன்ன அவரவர்களுடைய வகுப்பின் கணக்குப்படி தமிழ்நாட்டில் ஐந்து கோடி மக்கள் அல்ல, 20 கோடி மக்கள் இருப்பதாகக் கணக்கு வந்தது. அதற்குப் பிறகு என்ன செய்ய முடியும்? அதைப் போல அடுத்து கவர்னர் மேதகு அலெக்சாண்டர் அவர்களும் ஒரு One Man Commission என்று நியமித்து இந்தக் கணக்கெடுப்பைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதை அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த பிரதிநிதிகளே கூட ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த one man commission வேண்டாம், மறுபடியும் கணக்கு எடுக்கிற வேலை வேண்டாம்என்று நண்பர் திரு.இராமதாஸ்கூட வெளிப்படையாக அறிக்கைவிட்டார். உங்களுக்கு எல்லாம் தெரியும். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், என்னிடத்தில் வந்துபேசியதைக் கூடக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே நான் சொல்கிறேன். என்னுடன் பேசும்போது கூட Compartmental Reservation தேவையென்று வலியுறுத்தினார்கள். அதைத்தான் திரு,உகம்சந்த் அவர்கள்கூட வலியுறுத்தினார்கள். கர்நாடகாவில் இருப்பதை போல என்று. நான் கூடத் தொடக்கத்தில், கடந்த ஆண்டில் கர்நாடகம், ஆந்திரா, கேரளா போன்ற இடங்களில் உள்ள இந்த இட ஒதுக்கீடு முறைகளைப் பரிசீலித்துப் பார்த்து விட்டு இந்த அரசு கூட அதன்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்னேன். அந்த அரசு செய்ததோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் அவைகளை எல்லாம் வாங்கிப் படித்துப் பார்த்தேன். கர்நாடகாவில் உள்ள கம்பார்ட்மெண்டல் முறையை தமிழ்நாட்டில் புகுத்தி விட்டால் ஒரு பெரிய கிளர்ச்சியே வரும். ஏனென்றால் அங்கே பெரும்பாலானவை, முக்கால் பகுதி பொருளாதார அடிப்படையில். பொருளாதார உச்சவரம்பை வைத்துத்தான் அங்கே இட ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. அதைத் தமிழ்நாடு என்றைக்கும் ஏற்றுக்கொள்ளாது. அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்பதற்கு உரக்கக் குரல் கொடுத்தவர்கள் நாம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது, எனவேதான் இப்போது சொல்லப்படுகின்ற பிரச்சினையே என்னவென்றால், 107 ஜாதிகளுக்கு 20 சதவீதம் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். இதிலே ஜாதி எண்ணிக்கையை மாத்திரம் பார்க்கி

கூடாது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வகுப்புகள் 39 வகுப்புகள். வன்னியர் உள்ளிட்ட வகுப்புகள் 39 வகுப்புகள், இந்தப் பட்டியல் 31—1—1957 ஆம் தேதியிட்ட அரசு ஆணையில் வெளியிடப்பட்டதாகும் இதே அவையில் பெருந்தலைவர்காமராஜர் முதலமைச்சராக இருந்தபோதுதான் —உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல், 39 பெயர்கள் எண்ணிக்கையைக் கொண்ட இந்தப் பட்டியலை உள்ளடக்கி வெளியிடப்பட்டது. இந்த அவையில், அதற்குப் பிறகு 30—7—1985 அன்று மீண்டும் இந்தப் பட்டியல் ஊர்ஜிதப் படுத்தப்பட்டு அன்று இருந்த அரசால் அது அறிக்கையாக வெளியிடப்பட்டது. இதில் வன்னியர் பெருங்குடி மக்கள் மாத்திரம் பெரும்பான்மையோராவர். மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினரான 39 வகுப்பினரின் மொத்த மக்கள் தொகை 105 லட்சம். இந்த 105 லட்சத்தில் வன்னியர்கள் மாத்திரம் 65 லட்சம் பேர்கள். ஏனைய 38 வகுப்பினர்களும் சேர்ந்த மக்கள் தொகை 40 லட்சம் தான். 39-லே வன்னியர்கள் 65 லட்சம். மீதம் உள்ள 38 வகுப்பும் சேர்ந்து 40 லட்சம்தான். இந்த 38 வகுப்பில் ஒரு சில வகுப்புகளை மாத்திரம் நான் படித்துக்காட்டுகிறேன், அவர்களுடைய ஜனத்தொகை எவ்வளவு என்பதை. நரிக்குறவர் 20,162 பேர்கள்; ஜோகி 19,848, ஜோகி, இந்த ஜாதியையே நாம் கேள்விப்பட்டு இருக்கமாட்டோம். இது எல்லாம் இதிலே இருக்கிற ஜாதிகள். யோகீஸ்வரர் 18,618; தாசரி 15,907, பட்ராஜு 15,700, ஸ்ரீவைஷ்ணவா 15,354, தொண்டமான் 14,036, குன்னுவர் மன்னாடி 11,055, நோக்கர் 7,559, மகேந்திரா 7,418, பேஸ்தா சிவியர் 7,063, மொண்டாடன் செட்டி 6,254, மொண்டு கொல்லா 5,700, புன்னான் வேட்டுவ கவுண்டர் 4,562, டொம்மாரா 4,436, குருகினி செட்டி 4,225, கொரச்சா 3,429, முட்லகம்பட்டி 1,575, ஜாம்புவானோடை 1,399, எரவல்லர் 1,377. இப்படி 20 வகுப்பினர்.

அதுமாத்திரம் அல்ல. 20 ஆயிரத்திற்கும் கீழாக உள்ள சீர் மரபினர் பட்டியலைப்பார்த்தால் வெட்டுக்கவுண்டர் 17,430, ஒட்டர்16,977, கந்தர்வக்கோட்டை கள்ளர் 14,556, போயாஸ் 12,478, ஆத்தூர் கீழ்நாடுகுறவர் 7,994, உப்புக்குறவர் 7,626, தெலுங்கப்பட்டி செட்டி 5,184, கொட்டப்பால், 4,888, ஜோகிஸ் 4,512, செங்கயம்புடி குறவர் 3,136, சேலம், உப்புக் குறவர் 2,782, சூரமரி ஒட்டர் 2,691, இப்படியே 2 ஆயிரம், ஆயிரம் என்று குறுகி, கலாகுறவர் 887, என்று ஆகி, தோகமலை குறவர் 512 என்று ஆகி குடுதாசரீஸ் 482 என்று ஆகி, பட்டு துர்காஸ் 441 என்று ஆகி, டோங்கா, 287, டோம்ஸ் 260 என்று ஆகி மொண்டா கொல்லா 64 பேர்கள், சாரங்கா பள்ளி குறவர் 54 பேர்கள், தொப்பை கொறச்சா 51 பேர்கள், வயல்பாடு அல்லது நாவல் பேடா கொறச்சா வெறும் 15 பேர்கள். இப்படி இவ்வளவு ஜாதிகள். 107 ஜாதிகள் என்று சொல்லிவிட்டால் போதாது. மொத்த





மக்கள் தொகை எவ்வளவு என்று பார்க்க வேண்டும். மொத்த
மக்கள் தொகையில், இந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள்
தொகையில், வன்னியர் 65 லட்சம் என்பதை நாம் மறந்துவிடக்
கூடாது. எனவேதான் வகுப்புகளுடைய எண்ணிக்கை 107 ஆக
இருந்தாலும்கூட, பெரும்பாலும் இந்த ஒதுக்கீட்டின் பயனை
அனுபவிக்கப்போகின்றவர்கள் 65லட்சம் பேர்களைக் கொண்ட
வன்னியர்களும் மற்றும் ஒரு சில வகுப்பினரும், குறிப்பாக
அம்பலகாரர், சலவைத் தொழிலாளர், மருத்துவர், ஒட்டர்,
வலையர், மீனவர், ஆண்டிப்பண்டாரம், குறும்பர்,
வேட்டுவக் கவுண்டர், சீர்மரபினரில் பிறமலைக்கள்ளர், மறவர்
ஆகியோர்தான் பலன் அடைய இருக்கிறார்கள்.

(பிற்பகல் 2-10)

இது வரையில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்த
அனைத்து வகுப்பினருடைய மக்கள் தொகை, பிற்படுத்தப்
பட்ட மக்கள் மொத்தம், —இதுவரையில் இருந்தது—இந்த
அறிவிப்புக்கு முன்பு 339.68 லட்சம் பேர். இந்த 339.68
லட்சம் மக்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருந்தது 50
சதவீதம் தான். இந்த 339.68 லட்சம் பேரில் மிகவும்
பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருடைய மக்கள் தொகை
122.19 லட்சம். 339.68 லட்சம் பேருக்கு 50 சதவீதம் என்ற
வகையில் 122.19 லட்சம் பேருக்கு எத்தனை சதவீதம் ஒதுக்கி
யிருக்க வேண்டுமென்றால் 18 சதவீதம் தான் ஒதுக்கி
யிருக்க வேண்டும். ஆனால் நாம் ஒதுக்கியிருப்பது 20 சதவீதம்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மிகப் பிற்
படுத்தப்பட்டோரில் வன்னியர் மற்றும் மேலே சொன்ன
சில வகுப்பினரைச்சேர்த்து, நான் சொன்ன இந்தக் கணக்கைப்
பார்க்கும் போது அவர்களுக்கு நாம் ஒதுக்கியிருப்பது குறை
வானது அல்ல. கிட்டத்தட்ட ஒரு கோடியே சொச்சம் பேருக்கு
20 சதவீதம்,இரண்டு கோடியே சொச்சம் பேருக்கு 30 சதவீதம்.
— என்ற கணக்கைப் பார்க்கும்போது இதில் எந்த அநியாயமும்
நடந்துவிடவில்லை என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே உள்ள ஏடுகள் மாத்திரம் அல்லா
மல் வெளி மாநிலத்திலேஉள்ள ஏடுகள், குறிப்பாக நியு டெல்லி
யிலிருந்து வெளி வருகின்ற ஹிந்துஸ்தான் டைம்ஸ், தலையங்கத்
திலே இப்படி எழுதுகிறது:

*New Delhi—Hindustan Times* :

"Faced with the Vanniya Community's demand for proportionate reservation in Government jobs and educational institutions, the Tamil Nadu Government has adopted an eminently sensible course by setting apart a twenty per cent quota for the Most Backward out of the fifty

per cent already available to the Backward Communities. Chief Minister Karunanithi cannot be faulted for rejecting the idea of compartmental reservation which will open the Pandora's box. Karunanithi was not exaggerating when he stated that the Government had done the maximum possible for them. If the Vanniya Sangham leader was not prepared to see it in this light, it is because he had pegged his demand unduly high asking for 20 per cent reservation in the State sector. His summary rejection of the Government's pragmatic approach should strengthen Mr. Karunanithi's hands in calling the Vanniya Sangam's bluff" என்று நியூ டெல்லியிலேயிருந்து வெளி வருகின்ற ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை எழுதியது. பெங்களூரிலிருந்து வெளி வருகிற எக்கனாமிக் டைம்ஸ் என்ற பத்திரிகை 'A Just Solution' என்ற தலைப்பில் எழுதிய தலையங்கத்தில் The new formula for reservation of Government jobs and seats in educational institutions announced by the D.M.K. Government of Tami-Nadu must be considered reasonable and equitable. Mr. Karunanithi who had promised an amicable solution to the Vanniya issue if his party was voted to power, wisely decided to drop the move for a time consuming census. Instead he has announced his decision. Within hours of making the announcement, he has set up a separate department to promote the social and economic welfare of the most backward communities. Compartmentalised reservation for each most backward community as demanded by the Vanniya Sangam is neither feasible nor desirable. To make separate reservation for each and everyone of the communities is next to impossible. The new Government's formulalsis practical and appropriate."என்று அந்த ஏடு எழுதியிருக்கிறது.

அதைப்போலவே சட்டநாதன் அவர்களுடைய கருத்தும் ஆதரவான கருத்தாக வெளிப்பட்டது. அம்பாசங்கர் அவர்களுடைய கருத்தும் அப்படியே வெளிப்பட்டது. பெரியவர் மாணிக்கவேலு அவர்களுடைய கருத்தும் அவ்வாறு வெளிப்பட்டது. வன்னிய அடிகளார் கருத்தும் அவ்வாறே வெளிப்பட்டிருக்கிறது. இருப்பினும் நாங்கள் கிளர்ச்சி செய்தே தீருவோம் என்ற வகையிலே சிலர் எண்ணுவார்களே யானால் நான் அவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் ஆர்வம், நம்முடையநண்பர் திரு. பூவராகன் அவர்களுக்கு இருக்கிற வகை ஒன்று, அவர்களுக்கு இருக்கிற வகை ஒன்று. திரு. பூவராகன் அவர்களோ அல்லதுமற்றவர்களோ இங்கேபேசும் போது 20 சதவீதம் போதாது என்று சொல்வதிலே அவர்கள் நியாயங்களை எடுத்து வைப்பார்களேயானால் அதை நாம் பிராக்டிகலாக, இங்கே நம்முடைய நண்பர் திரு. கோவிந்த ராஜன் எடுத்துக் காட்டியதைப் போல பரீட்சார்த்தமாக இந்த ஆண்டிலே நடத்திப்பார்த்து விட்டு, இதிலே குறைகள் இருக்கு மானால் அடுத்த ஆண்டிலே அதைத் திருத்திக் கொள்ளக்கூடிய



ஒரு சூழ்நிலை நமக்கு ஏற்படாமல் போகாது. திருத்தித்தான் தீரவேண்டுமென்றால், இல்லை இல்லை நாங்கள் செய்தது செய்ததுதான், அப்படித்தான் இருக்கவேண்டுமென்று, பிற்படுத்தப் பட்ட மக்களை, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை, சீர்மர பினரைக் கைவிட்டுவிடக்கூடிய அரசு அல்ல இந்த அரசு என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே கேட்டாரா, அழைத்தாரா அதனால்தான் போராட்டம் நடத்துகிறோம் என்பதற்கெல்லாம் இடம் இல்லாத வகையில் நான் அழைத்துப் பேசி இருக்கிறேன். அவரே ஒரு அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். நம்முடைய அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகமும், அவரும் என்னைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடி எடுத்த முடிவுகளைப் பற்றியெல்லாம் அவரே சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதற்கும் நான் வெளியிட்டிருப்பதற்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. இருப்பினும் இப்போதும் நான் சொல்லிக்கொள்கிறேன். இந்த அவையின் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன். பொறுத்திருங் கள். இந்த முடிவினைச் சோதித்துப் பார்ப்போம். வருகின்ற மாதங்களில் நடைபெறுகின்ற கல்வி, வேலைவாய்ப்பு இந்த வாய்ப்புகளிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் சீர்மரபின ரும் ஏமாற்றப்படுவார்களானால் அதற்கு மேலும் அவர்களை எப்படியும் காப்பாற்றித் தீரவேண்டும். அவர்களை கை தூக்கிவிடவேண்டும் என்ற அந்தக் கருத்தோடுதான் இந்த அரசு நடைபோடும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொண்டு; எனவே, கிளர்ச்சிகளைக் கைவிட்டு, பொறுத்திருந்து பார்த்து அதிலும் நல்ல காரியங்கள் நடைபெறவில்லையென் றால், இந்த மக்கள் வாழ்வதற்கான வழி கிடைக்கவில்லை என் றால், அவர்களுக்கு முன்னேற்றப் பாதை மீண்டும் தடுக்கப் படுகிறது என்றால், மறுபடியும் இந்த அரசு அதைப்பற்றிச் சிந்திக்க மறுக்காது என்பதை எடுத்துச் சொல்லி, எனவே போராட்டங்கள் தேவையில்லை என்பதை இந்த அவையின் சார்பாக நான் ஒரு வேண்டுகோளாக விடுத்து, இந்த மானியக் கோரிக்கை மீது கருத்துக்களை எடுத்துரைத்த எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து தந்துள்ள வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெறுமாறும் கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**திருமதி பாப்பா உமாநாத்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது என்னுடைய தொகுதியைச் சார்ந்த தேவராயநேரி நரிக்குறவர்களைப்பற்றிச் சொன்னார்கள். அந்த நரிக்குறவர்களை நெரிக்குறவர் என்று பெயர் மாற்றமும் செய்திருக்கிறார். அவர் கட்டிக் கொடுத்த காலனி 14 ஆண்டுகளுக்குப் பிறகு பாழடைந்து போய் இருக் கிறது. ஆகவே அதை மறுபடியும் புதுப்பித்து முதலமைச்சர் அவர்கள் பெயரிலே அதைத் திறப்புவிழா செய்ய வேண்டுமென்று

[திருமதி பாப்பா உமாநாத்] [1989 ஏப்ரல் 22

என்னிடம் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். நேரம் இல்லாத காரணத்தால் அதைத் தர இயலவில்லை. ஆகவே அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பெயரைத் தவிர மற்றதெல்லாம் யோசிக்கப்படும்.

**திரு. எம். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கழக ஆட்சிக் காலத்திலே கிராமப் பகுதியில் இருக்கின்ற பெருவாரியான மாணவர்களுக்கு, மருத்துவம், என்ஜினியரிங் கல்லூரிகளில் இடம் கிடைத்தது. அதற்குப் பின்னாலே நுழைவுத் தேர்வு வந்த காரணத்தினாலே கிராமப் புறத்திலே உள்ள மாணவர்களுக்கு இந்த மாதிரி இடம் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த அவையிலே முதல்வர் அவர்கள் நுழைவுத் தேர்வை மாற்றியமைப்பதற்கு வழிவகை செய்வாரா என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மீண்டும் நாங்கள் ஆட்சியிலே இப்பொழுதுதான் நுழைந்து இருக்கின்ற காரணத்தினால் நுழைவுத் தேர்வினுடைய பலாபலன்களைப் பற்றித் தெரியாது. தெரிந்த பிறகு அதைப் பற்றிச் சிந்திப்போம்.

**திரு. ஆர். சிங்காரம் :** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசுகின்ற போது நரிக்குறவர்களுக்குக் காலனி மீண்டும் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு மகிழ்ச்சி. அதே நேரத்தில் பேராவூரணி நகரத்திலே 40 நரிக்குறவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது சமீபத்தில். அவர்களுக்குப் புதிய காலனிகள் கட்டிக் கொடுக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அந்த விவரங்களை அளித்தால் அதைப்பற்றி யோசிக்கப்படும்.

***திரு. வே. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, தமிழக அரசு புதியதாக உருவாக்கியிருக்கின்ற மிகவும் பின்தங்கியவர்கள், சீர்மரபினர் ஒதுக்கீட்டில் தென் மாவட்டங்களில் மிக அதிகமாக வாழ்கின்ற முக்குலத்தோர் சமுதாயத்தில் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய அந்தச் சீர் மரபினருக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் முழுவதுமாகக் கிடைக்காத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சலுகைகள் அவர்களுக்கு, குறிப்பாக மறவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த மறு ஆய்வில் அந்தச சமுதாயத்து மக்கள் குறிப்பாக தென் மாவட்டத்தில் வாழ்கின்ற கள்ளர்கள், அகமுடையர்கள், மறவர்கள் முழுவதையும் ஒரே இனமாக தேவர் இனமாக அறிவித்து அந்த முழுப் பயனும் அந்தப் பகுதி மக்களுக்கு, இன



1989 ஏப்ரல் 22] [திரு. வே. தங்கபாண்டியன்]

மக்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்புகளையும் வழிமுறைகளையும் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற துறைக்கு இந்த அரசு அறிவிக்க வேண்டும் என்று மீண்டும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அந்த இனங்கள் எல்லாம் ஒரே இனம் என்று சொல்ல வேண்டியது அந்த இனத்தின் பொறுப்பே தவிர அரசின் பொறுப்பு அல்ல.

(பிற்பகல் 2-20)

**திரு. எம். அப்துல் லத்தீப் :** தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் பரிந்துரைகளைக் குறித்த மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்துக்கள் நாடறிந்தவை. இருந்தாலும் அரசு ரீதியாக, இப்போது அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, மண்டல் கமிஷனைக் குறித்து, அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைக் குறித்து, அரசு எந்த வகையில் சிந்தித்துக்கொண்டிருக்கிறது? மத்திய அரசாங்கத்திடம் அதைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்தி முறையாக ஆராய்ந்து அதை நடைமுறைப்படுத்த இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 20 சதவிகித ஒதுக்கீடு குறித்து அரசு அறிக்கை வைத்தபோதே, மண்டல் கமிஷனுக்காக, மத்திய அரசிடம் தொடர்ந்து இந்த மாநில அரசு வலியுறுத்தும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு திரு. அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பிய வினாவினை ஒட்டி, மண்டல் கமிஷனுடைய பரிந்துரையை நிறைவேற்ற வேண்டும் என்று இந்த அவையின் மூலமாகவே மத்திய அரசிற்கு விரைவில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண். 32.

திரு. கோ. வீரையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

திரு. பொன். விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்—என்ற தலைப்பின்கீழ், ரூ. 19,30,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுதினம் 24-4-1989 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் :

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. 1986-87 ஆம் ஆண்டிற்கான ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் நான்காவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

85. 1986-87 ஆம் ஆண்டிற்கான மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).

86. 1987-88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).



87. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் இருபத்தியெட்டாவது ஆண்டறிக்கை (1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்குச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962/31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

115. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம், 1985—90—தமிழ்நாடு (தமிழ்).

[பக்கம் 70-ல் உள்ள அடிக்குறிப்பை காண்க.]

## பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### மானியக் கோரிக்கை எண். 32.

### 1989-90.

### 1. முன்னுரை.

1989-90ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண். 32-ன் கீழ் ''பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம்'' எனும் தலைப்பில் ரூ. 19,30,78,000 வழங்குமாறு நான் முன்மொழிகின்றேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனையும் முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு, இவ்வரசால் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நலனுக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை ஓர் இந்திய ஆட்சிப் பணி அலுவலரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட அளவில் துணை ஆட்சியர் தகுதியில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றனர். பிரமலைக் கள்ளர்கள் முன்னேற்றத்திற்கென வகுக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தனித் துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரையில் செயலாற்றி வருகிறார். இத்துறையால் மேற்கொள்ளப்படும் பணிகளில் கவனமும், முனைப்பும் செலுத்தும் பொருட்டு பிற்படுத்தப்பட்டோர் நலத்திற்கென தனி மானியக் கோரிக்கை 1971ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1967-68ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 1,61,40,000 படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 19,30,78,000 ஆக உயர்ந்துள்ளது.

இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், இட ஒதுக்கீடு குறித்து வன்னியர் உள்ளிட்ட சில சமூகத்தினர் எழுப்பிய பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காண ஒருமுகமான நோக்கில் முழுமூச்சுடன் முனைந்து செயலாற்றியது. விரிவான ஆழ்ந்தாராய்விற்குப்பின், கல்வி மற்றும் அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் மற்றும் சீர் மரபினருக்கும் 20 விழுக்காடு சிறப்பு ஒதுக்கீடு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடும், எஞ்சிய 30 விழுக்காடு மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் அளிக்கப்பட்டு



ஆணையிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்
குடியினருக்கான 18 விழுக்காடு இட ஒதுக்கீடும், அனைத்து வகுப்
பினருக்கும் பொதுப்போட்டிக்கான 32 விழுக்காடும் இட ஒதுக்
கீடும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். அரசின் இம்முடிவுகள்
பெரும்பாலான சமூகத்தினராலும் பெரிதும் வரவேற்கப்
பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கட் தொகையில் மிகப்
பிற்படுத்தப்பட்டோரும், சீர்மரபினரும் கணிசமான அளவில்
இருப்பதாலும் அவர்களுடைய சமூக, கல்வி மற்றும் பொருளா
தார நிலை பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை விட பின்தங்கிய
நிலையில் உள்ளதாலும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்
மரபினரின் மேம்பாட்டிற்காக ஒரு தனி இயக்ககம் 13-3-1989-ல்
ஏற்படுத்தப்பட்டு, ஓர் இந்திய ஆட்சிப் பணி அலுவலரின்
தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இத்துறை இயக்குநர் மிகப்
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் நலனுக்கான பல்
வேறு ஆலோசனைகளையும் ஆராய்ந்து இவர்களுக்கான பல்வேறு
திட்டங்களையும் அவற்றின் பயனை இவர்கள் முழுமையாக
அடையும் வகையில் சீரிய முறையில் செயல்படுத்த நடவடிக்கை
கள் மேற்கொள்வார். இதைத் தவிர, இவ்வியக்ககம் மிகப் பிற்
படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு எழுத்தறிவு மற்றும்
கல்வி வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டங்களைத் திறம்பட
செயல்படுத்த முழு முனைப்புடன் இயங்கி வரும். 1989-90-ம்
ஆண்டு முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்
மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்
படும். இப்புதிய இயக்ககம் 1989-ம் ஆண்டு மார்ச் திங்களில்
ஏற்படுத்தப்பட்டுள்ளதால், 1989-90-ம் ஆண்டில் வரவு-செலவு
மதிப்பீட்டில் இத்துறைக்கு தனிநிதி ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை
எனினும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்
காக தேவையின் அடிப்படையில் கூடுதல் நிதியினை 1989-90-ம்
ஆண்டுக்கான துணைமதிப்பீடுகள் அல்லது திருத்திய மதிப்பீடு
களில் சேர்த்துக் கொள்ளப்படும் அல்லது திருத்திய மதிப்பீடு
களில் வழங்கப்படும்.

1989-90 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்
தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்காக
மேலும் 25 புதிய விடுதிகள் திறக்கப்படும். பிற்படுத்தப்பட்ட,
மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் கல்விச்
சலுகை பெறுவதற்குப் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு
ரூ. 5,000 என்பதை ரூ. 12,000 ஆக உயர்த்தி நிர்ணயம் செய்ய
ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மேம்பாட்டுக்காக அரசு மேற்கொண்டுவரும் பல் வேறு நலத் திட்டங்களின் விவரம் பின்வருமாறு :—

2. கல்வி.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் எல்லாத்துறைகளிலும் முன்னேற்றம் பெற கல்வி ஒரு முக்கியமான சாதனமாதலின், அரசு இவர்கள் கல்வியில் ஏற்றம் பெற தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மேற்காண் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்காக பள்ளிகள், விடுதிகள் போன்ற வசதிகளையும் உதவித் தொகை, பாட புத்தகங்கள், பயிற்சி மற்றும் குறிப்பேடுகள், எழுது பலகைகள், மதிய உணவு, சீருடைகள், இலவச காலணிகள் ஆகியவற்றை யும அளித்து வருகிறது.

(அ) பள்ளிகள்.

அரசு . 'சீர்மரபினர்' நிலையை மேம்படுத்துவதற்காக தனிச் சலுகைகளையும், வசதிகளையும் அளித்து வருகிறது. சீர் மரபினர் சிறார்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தமிழ் நாட்டில் 278 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. 1988-89-ம் ஆண்டில் 53,169 மாணவ, மாணவியர்கள் பயனடைந் தனர்.

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் கல்வித் தரத் தையும் வசதிகளையும் உயர்த்த கீழ்க்கண்ட திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

1. மதுரை மாவட்டம், உத்தமபுரம் மற்றும் கருநாக முத்தன்பட்டி நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ரூ. 4.47 இலட்ச மதிப்பீட்டில் மேல்நிலைப்படுத்துதல்.

2. மதுரை மாவட்டம், நாட்டார் மங்கலம் மற்றும் செக்காணூரணியில் உள்ள மேல்நிலைப்பள்ளிகளுக்கு 16 பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களையும் 2 மேல்நிலைப்பள்ளித் தலைமை யாசிரியர்களையும் நியமித்தல்.

1988-89-ம் ஆண்டு இப்பள்ளிகள் நடத்த ரூ. 2,77,39,000 ஒதுக்கப்பட்டது. 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 3,02,01,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பரிசுகள் வழங்குதல்.

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் முதல், இரண்டாம்



மற்றும் மூன்றாம் நிலை மதிப்பெண்கள் பெற்ற மாணவர் களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுகள் வழங்கப்படுகின்றன :—

மாநில அளவில் வழங்கப்படும் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வு. | முதல் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர். | ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000. |
| பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு. | முதல் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர். | ஒவ்வொருவருக்கும் ரூ. 500. |

மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வு. | முதல் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர். | ஒவ்வொருவருக்கும் ரூ. 500. |
| பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு. | முதல் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர். | ஒவ்வொருவருக்கும் ரூ. 150. |
| | இரண்டாம் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர். | ஒவ்வொருவருக்கும் ரூ. 100. |
| | மூன்றாம் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர். | ஒவ்வொருவருக்கும் ரூ. 50. |
| எட்டாம் வகுப்பு | முதல் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர். | ஒவ்வொருவருக்கும் ரூ. 100. |
| | இரண்டாம் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர். | ஒவ்வொருவருக்கும் ரூ. 50. |

மொத்தத்தில் ஒவ்வொரு ஆண்டும் 244 பரிசுகள் வழங்கப்படுகின்றன. இப்பரிசுகளை வழங்க 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 41,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் நினைவுப் பரிசுகள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் மற்றும் அதற்கடுத்த அதிக மதிப்பெண்கள் பெற்று தொழில் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் இனத்தைச் சார்ந்த நான்கு மாணவர்களுக்கு (2 ஆண் + 2 பெண்) ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 வீதம் படிப்பு முடியும் வரை பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. இது போன்று பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் மற்றும் அதற்கு அடுத்த அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் பல்தொழில் நுட்பக் கல்வி பயிலும் நான்கு மாணவர்களுக்கு (2 ஆண் + 2 பெண்) ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 வீதம் 3 ஆண்டுகளுக்கு "தந்தை பெரியார் நினைவுப் பரிசு" வழங்கப்படுகிறது. இவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இதற்கென 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 3,20,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம்.

இத்துறையின் கீழ் நடைபெறும் 278 பள்ளிகள் அனைத்திலும் 5 வயது முதல் 15 வயது வரையுள்ள 48,658 மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 33,96,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் வழங்குதல்.

இத்துறை மூலம் நடத்தப்படும் சீர் மரபினர் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவ, மாணவியருக்கும் பாட புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் எழுது பலகைகள் (3-ம் வகுப்பு வரை) இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்துறைப் பள்ளிகளில் 9, 10-ம் வகுப்பு பயிலும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு புத்தகங்களும், குறிப்பேடுகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 14,49,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 49,000 மாணவ, மாணவியர் பயனடைவர்.



### சீருடைகள் (பள்ளிகள்).

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவ, மாணவியர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டிலும் தீபாவளி பண்டிகையின் போது 1 ஜோடி சீருடையும், மற்றும் பொங்கல் பண்டிகையின் போது 1 ஜோடி சீருடையும், ஆக ஆண்டுக்கு 2 ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1989-90-ம நிதியாண்டிற்கு ரூ. 29,21,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 47,000 மாணவ, மாணவியர் பயனடைவர்.

### (ஆ) அரசு மாணவர் விடுதிகள்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் 671 விடுதிகள் நடத்தப்படுகின்றன. இவற்றின் விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | கல்லூரி மாணவர் விடுதிகள் .. | 71 |
| 2. | பள்ளி மாணவர் விடுதிகள் .. | 596 |
| 3. | தொழிற்பயிற்சி மாணவர் விடுதிகள் | 4 |
| | மொத்தம் .. | 671 |

பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மேற்படாத மாணவ, மாணவியர் இந்த விடுதிகளில் சேரத் தகுதியுடையவராவர்.

1988-89-ம் ஆண்டில் 38,449 மாணவ, மாணவியர் பயனடைகின்றனர். ஆதி திராவிடர் மற்றும் முற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களும் 35 விழுக்காடு வரை இவ்விடுதிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

### உணவுச் செலவு.

தற்போது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதிகளில் பின்வரும் விகிதத்தில் உணவுச் செலவினம் வழங்கப்படுகிறது :—

| வ. எண். | விடுதிகள் விவரம். | மாதமொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் அனுமதிக்கப்படும் தொகை. | |
|---|---|---|---|
| | | சென்னை மாநகரம். | வெளியூர். |
| 1 | கல்லூரி மாணவர் விடுதிகள் | ரூ. 140 | ரூ. 135 |
| 2 | தொழிற் கல்வி மாணவர் விடுதிகள். | | |
| 3 | பள்ளி மாணவர் விடுதிகள் | 85 | 85 |

1989-90-ம் நிதியாண்டில் 5 விடுதிகளுக்கு சமையல் எரி வாயு இணைப்பு வழங்குதல் மற்றும் 10 விடுதிகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரங்கள் வழங்குவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

இதற்கென 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 6,89,90,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**சீருடைகள் (விடுதிகள்).**

இத்துறையின் பள்ளி மாணவர் விடுதிகளில் தங்கியுள்ள மாணவ, மாணவியருக்கு ஆண்டுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. இதற்காக 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 27,76,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 33,500 மாணவ, மாணவியர் பயன் பெறுவர்.

**மாணவர் விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல்.**

தற்போது இத்துறையால் நடத்தப்படும் 671 மாணவர் விடுதிகளில், 51 விடுதிகள் மட்டும் அரசுக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. ஏனைய விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. பொதுப்பணித் துறையினரால் தயாரிக்கப்பட்ட புதிய வடிவமைப்பின்படி பள்ளி மாணவர் விடுதிக்கு ரூ. 5.68 இலட்சம் மதிப்பீட்டிலும், பள்ளி மாணவியர் விடுதிக்கு ரூ. 6.32 இலட்சம் மதிப்பீட்டிலும், கல்லூரி மாணவர்/மாணவியர் விடுதிக்கு ரூ. 11.84 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. 1986-87 மற்றும் 1987-88-ல் புதிதாக 23 விடுதிக் கட்டிடங்களை கட்ட அரசு அனுமதித்துள்ளது. அதன் விவரம் பினவருமாறு :—

| ஆண்டு. | பள்ளி. | | கல்லூரி. | | |
|---|---|---|---|---|---|
| | மாணவர் விடுதிக்ள். | மாணவியர் விடுதிகள். | மாணவர் விடுதிகள். | மாணவியர் விடுதிகள். | மொத்த விடுதிகள் |
| 1986-87 | 8 | 3 | .. | .. | 11 |
| 1987-88 | 10 | .. | .. | 2 | 12 |
| மொத்தம் .. | 18 | 3 | .. | 2 | 23 |

1986-87-ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 11 விடுதிக் கட்டிடங்களில் நான்கு மாணவர் விடுதி கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. விரைவில் இதர கட்டிடங்களை கட்டி முடிக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**பகுதி நேர போதனை ஆசிரியர்களை நியமித்தல்.**

பள்ளி விடுதிகளில் தங்கி ஒன்பது, பத்து மற்றும் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை/மாலையில் பாடங்கள் போதிப்பதற்கு பகுதி நேர போதனை ஆசிரியர்கள் ஆண்டுதோறும் ஆறு மாதங்களுக்கு நியமிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 90 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.

**உணவு மானியம்.**

தனியாரால் நடத்தப்படும் 38 மாணவர் விடுதிகளுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. உணவுச் செலவு ஆண்டுக்கு பத்து மாதங்களுக்கு மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 70 வீதம் உணவு மானியமாக வழங்கப்படுகிறது. உணவு மானியம் பெறும் விடுதிகளில் தங்கிப் பயில பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 வரை உள்ள மாணவ, மாணவியரே தகுதியுடையவர்களாவர்.

1988-89-ல் ரூ. 15,83,000 செலவில் 2,019 மாணவர்கள் பயனடைந்தனர். 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 11,83,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 2,000 மாணவ, மாணவியர் பயனடைவர்.

**(இ) படிப்புதவித் தொகைகள்.**

ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கல்வி பயிற்றுவிக்கும் எல்லா முயற்சிகளுக்கும் உறுதுணையாக தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு உதவித் தொகை அளிப்பதன் மூலம் அரசு பேருதவி புரிந்து வருகிறது. இவ்வுதவித் தொகையில் மாணவர்களின் படிப்புக் கட்டணம், தனிக் கட்டணங்கள், புத்தகங்களின் தொகை, தேர்வுக் கட்டணம், விடுதிகளில் தங்கிப் படித்தால் அதற்கான உண்டி, உறையுள் கட்டணம் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் அடங்கும். பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், சீர்மரபினர் இன மாணவர்களுக்கு ஆறாம் வகுப்பிலிருந்தும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. இம்மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படா'மல் இருத்தல் வேண்டும். இவ்வுதவித் தொகையைப் பெற பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 விழுக்காடு மதிப்பெண்ணிற்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும். ஆனால், சீர்மரபினர் மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதையே போதுமானதாகக் கொண்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

தற்போது கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு அவர்களுடைய கல்லூரிகள், தொழிற்கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையை விரைவில வழங்க ஏதுவாக முந்தைய ஆண்டில் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உதவித் தொகையில் கணிசமான பகுதி அந்நிறுவன முதல்வரிடம் முன்பணமாக கொடுக்கப்படுகிறது.

புதிதாக உதவித்தொகை கோரும் மாணவர்களுக்கு அவர்கள் தகுதி பற்றிய அட்டைகள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர்களால் கல்வி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. 1989-90-ம் நிதியாண்டில் 3,05,500 மாணவர் பயனடைய ரூ. 4,19,41,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) உணவு, உறைவிடக் கட்டணம்.**

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகையுடன் வழங்கப்படும். உணவு, உறைவிடக் கட்டண விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

| வரிசை எண். | பாட முறை. | பிற்படுத்தப் பட்டோர்/ மிகப்பிற்படுத் தப்பட்டோர். | சீர்மரபினர். |
| --- | --- | --- | --- |
| | | (மாதம் ஒன்றுக்கு ரூபாய்) | |
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை மாநகர். | | | |
| 1 | கலை, விஞ்ஞானம், சட்டம் | 60 | 70 |
| 2 | மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். | 60 | 75 |
| 3 | தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி. | 50 | 60 |



| | | | |
| --- | --- | --- | --- |
| வெளியூர் : | | | |
| 1 | கலை, விஞ்ஞானம், சட்டம் | 50 | 55 |
| 2 | மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை சார்ந்த மற்ற படிப்புகள். | 55 | 70 |
| 3 | தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி. | 45 | 50 |

மேற்குறிப்பிட்ட கட்டணங்கள் திருத்தப்பட்டு சீர்மரபினருக்கு வழங்கப்படும். அதே அளவில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் வழங்கப்படும்

**(உ) படிப்புக் கட்டணச் சலுகைகள் :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ 1,500-க்கு மேற்படாத பள்ளிப் படிப்பிற்கு மேல் கல்வி பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவர்களுக்கு படிப்புக் கட்டணச் சலுகை முழுமையாகவும், இதே ஆண்டு வருமானமுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அரைக் கட்டணச் சலுகையும் கல்வித் துறையால் வழங்கப்படுகிறது.

ரூ. 1,501 முதல் ரூ. 5,000 வரை ஆண்டு வருமானம் உள்ள மேற்கண்ட இன மாணவர்களுக்கு அரைக் கட்டண சலுகையுடன் கூடிய உதவித் தொகை இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

**(ஊ) கடன் உதவித் தொகை:**

தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு அவர்களுடைய பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 5,001 முதல் ரூ. 10,000-க்குட்பட்டு இருந்தால், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 750 வீதம் கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. படிப்புதவித் தொகை பெற இயலாத பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர். ஒரு மாணவருக்கு ஒரு குறிப்பிட்ட படிப்பிற்கு அதிக பட்சமாக 5 ஆண்டு காலத்திற்கு மொத்தத்தில் ரூ. 3,750-க்கு மிகாமல் கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 20,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. பயிற்சி.**

**சிறப்புப் பயிற்சி நிலையம்.**

அனைத்திந்திய உயர் அரசுப் பணிகளுக்காக மத்திய அரசு தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் எழுதும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மிகப் பிற்படுத்தப்பட்ட

மாணவர்களுக்கு அத்தேர்வு எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று இத்துறையின் மூலம் 1971-ம் ஆண்டில் சென்னையில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந் நிலையத்தில் 60 மாணவர்கள் (50 மாணவர்கள் உண்டி, உறையுள் வசதிகளுடனும், 10 மாணவர்கள் விடுதி வசதியில்லாமலும்) சேர்க்கப்படுகின்றனர். இந்நிலையத்தில் சேர பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். மாணவருக்கு இலவசத் தங்கும் வசதியும், ரூ. 250 விகிதத்தில் உண்டி வசதியும் செய்து தரப்படுகிறது.

கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் அனைத்திந்திய பணிகளுக்கான தேர்வு எழுத பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் மகளிருக்குப் பயிற்சியளிப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. 1989—90-ம் நிதியாண்டிற்கு ரூ. 6,39,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுநோக்கு பொறியியற் பட்டறைகள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்கானூரணியிலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வீரகேரளம்புதூரில் உள்ள மூன்று பொதுநோக்கு பொறியியல் பட்டறைகள் இத்துறையின் நிதி உதவியுடன் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் மேற்பார்வையில் நடத்தப்படுகின்றன. இவை 1984-ம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து தொழிற் பயிற்சி நிலையங்களின் தரத்திற்கு இணையாக உயர்த்தப்பட்டுள்ளன. சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்த இப்பட்டறைகளில் பொருத்துதல், பற்ற வைத்தல் மற்றும் கடைசல் ஆகியவற்றில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர்மரபினர் மேற்கூறிய தொழில்களில் பயிற்சி பெற்று அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக, சுயமாக தொழில்களை ஆரம்பிக்கவும் அல்லது வேலைவாய்ப்பு பெறும் வகையிலும் போதிய தொழில் நுட்பத் திறமையை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆண்டொன்றுக்கு 208 நபர்கள் இப்பயிற்சி நிலையங்கள் மூலம் பயன்பெறுவர்.

தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்குப் பயிற்சியளிப்பதற்காக கீழ்க்காணும் தொழிற்பயிற்சிக் கூடங்கள் செயல்படுகின்றன :—

1. தையல் மற்றும் ஆயத்த ஆடைப் பயிற்சி நிலையம், அண்ணா நகர், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.



2. தையல் மற்றும் பூ வேலைப்பாடு நிலையம், தெற்குத் தெரு, மதுரை மாவட்டம்.

3. தையல் நிலையம், திருவெண்ணெய்நல்லூர், தென்னார்க்காடு மாவட்டம்.

4. தையல் நிலையம், இராமவர்மபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.

5. தையல் நிலையம், உசிலம்பட்டி, மாதுரை மாவட்டம்.

6. தையல் நிலையம், சேரன்மாதேவி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

7. தையல் நிலையம், இராமநாதபுரம் மாவட்டம்.

8. நாரிழைப் பிரிவு, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

தையற் பயிற்சி நிலையங்கள் சமூக நலத்துறை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. நாரிழைப் பயிற்சி நிலையம் இத்துறை நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகின்றது. 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 18,13,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டப் பட்டதாரிகளுக்கு பயிற்சி அளித்தல்.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 20 சட்டப் பட்டதாரிகளை ஆண்டுதோறும் தெரிந்தெடுத்து அவர்கள் நீதித் துறையில் அனுபவம் பெறும் பொருட்டு பல்வேறு சட்டப் பிரிவுகளில் வல்லமை பெற்று சிறந்து விளங்கும் முதுநிலை வழக்குரைஞர்களிடம் 3 ஆண்டுகள் பயிற்சி பெறும் திட்டமொன்றினை அரசு உருவாக்கியிருக்கிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகையாக வழங்கப்படும். முதுநிலை வழக்குரைஞர்கள் இத்திட்டத்தில் பங்கேற்பதை சிறப்பிக்கும் பொருட்டு அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ, 5,001 மதிப்பூதியம் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 12,000 ஆகும். 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 2,46,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### நுழைவுத் தேர்வு.

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சென்னை ஆகிய நான்கு இடங்களில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு பொறியியல்; மருத்துவம், கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கான கல்லூரி நுழைவுத் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் இத்துறையின் கல்லூரி மாணவர் விடுதிகளில் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இப்பயிற்சிக்கு ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 9,000 ஆகும். ஒரு மாத காலத்திற்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனால் 400 மாணவர் பயனடைவர். 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 61,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் :

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 50 மாணவர் மற்றும் 50 மாணவியர்களுக்கு குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்லூரியில் ஆறு மாதகால கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச உண்டி, உறையுள் வசதி அளிக்கப்படுகிறது.

பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மேற்படாத மாணவ, மாணவிகளுக்கு உண்டி, உறையுள் வசதியுடன் கூடிய பயிற்சி அளிக்கப்படுகிறது. பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 9,000-க்கு மேற்படாத மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி மட்டும் அளிக்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோருக்காக வங்கிப் பணி, பணியாளர் தேர்வுப் பணி வாரியம் ஆகியவற்றில் பணி நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு தொலைப்பேசி தொலையச்சு இயக்குபவருக்கான பயிற்சியளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 7,07,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



## 4. பொருளாதார முன்னேற்றம்.

### சலவைத் துறை கட்டுதல்.

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு சலவைத் துறை கட்ட பின்வருமாறு நிதி உதவி அளிக்கப்படுகின்றது:—

1. அரசின் மானியத் தொகை .. 75 விழுக்காடு.
2. உள்ளாட்சி மன்றத்தின் பங்கு 20 விழுக்காடு.
3. பயனாளிகள் பங்கு .. .. 5 விழுக்காடு.

1988-89-ம் ஆண்டில் 3 சலவைத் துறைகளைக் கட்ட அரசு அனுமதித்துள்ளது. 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 1,01,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### தொழிற்கருவிகள் வழங்குதல்.

முடிதிருத்தும் கருவிகள், துணி தேய்ப்புப் பெட்டிகள் மற்றும் கல்லுடைக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1989-90-ல் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கருவிகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண். | கருவியின் பெயர். | | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 1 | துணி தேய்ப்புப் பெட்டி | .. | 3,830 |
| 2 | முடிதிருத்தும் கருவிகள் | .. | 500 |
| 3 | கல்லுடைக்கும் கருவிகள் | .. | 350 |

1989-90-ம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 20,65,000 ஒதுக்கப்பட்டுள்ளது. தச்சு மற்றும் கொல்லுப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொழிற்கருவிகள் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### சலவையகம் மற்றும் முடிதிருத்தகம் அமைத்தல்.

#### முடிதிருத்தகம்.

இத்திட்டத்தின்படி ரூ. 1,500 அரசின் மானியத் தொகையாகவும் ரூ. 3,500 வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம்.

சலவையகங்கள் மற்றும் நடமாடும் சலவையகங்களை அமைக்க அரசு மானியம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப் படுகிறது. இதற்கு பின்வருமாறு நிதியுதவி அளிக்கப்படுகிறது :—

சலவையகம்.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 1. | வங்கிக் கடன் | .. | 3,500 |
| 2. | அரசு மானியம் | .. | 1,500 |
| | மொத்தம் | .. | 5,000 |

நடமாடும் சலவையகம் :

| | | | ரூ. |
|---|---|---|---|
| 1. | வங்கிக் கடன் | .. .. | 1,400 |
| 2. | அரசு மானியம் | .. | 600 |
| | மொத்தம் | ரூ. | 2,000 |

1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 2,55,000 ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**பாசனக் கிணறுகள் அமைத்தல்:**

சீர்மரபினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு அவர்களில் 2 ஏக்கருக்கும் குறையாத சாகுபடி நிலம் உள்ளவர்களுக்கு பாசனக் கிணறு அமைக்க மானியம் அளிக்கப் படுகிறது. ஒரு கிணறு அமைக்க வழங்கப்படும் அதிக பட்ச மானியத் தொகை ரூ. 2,500 ஆகும். 1989-90-ம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 75,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி.**

சீர்மரபினருக்கு தலா ரூ. 4,300 மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன, 1979-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இம்மதிப்பீட்டில் வீடுகள் கட்ட இயலாததால், இதனை உயர்த்துவதற்கான கருத்தும் அரசின் ஆய்வில் உள்ளது.

**மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டுமனைகள் வழங்க நிலம் கையகப்படுத்துதல்**

மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் தொழில் அடிப்படையிலான வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் மிகவும் நலிந்த நிலையிலுள்ளவர்களுமான ஒட்டர் நாவிதர், வண்ணார், நரிக்குறவர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு 3 சென்ட் மிகாமல் வீட்டுமனைகள் வழங்க தனியார் பட்டா நிலங்களை கையகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1989-90-ம் நிதியாண்டிற்கு ரூ. 13,50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.





**5. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 1981-ல் அரசால் ஏற்படுத்தப்பட்டு கீழ்க்காணும் நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது :—

(1) பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும்பொருட்டு தொழில் தொடங்குவதற்கான குறியீட்டுக் கடன் தொகையை நான்கு விழுக்காடு குறைந்த வட்டியில் வழங்குதல், மற்றும்

(2) பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரின் பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியம் என்று கருதக் கூடிய வர்த்தக, வணிக தொழில் ரீதியான மற்றும் பொதுவான நடவடிக்கைகளை நேரடியாக அல்லது மறைமுகமாக மேற்கொள்ளுதல்.

இக்கழகம் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்காக பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 20 விழுக்காடு தொகையையோ அல்லது அதிகபட்சமாக ரூ. 3.00 இலட்சம் வரை 4 விழுக்காடு வட்டியில் குறியீட்டுக் கடனாக வழங்கி வருகிறது. எஞ்சியுள்ள 80 விழுக்காடு முதலீட்டுத் தொகையை நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தோ அல்லது கூட்டுறவு வங்கிகளிடமிருந்தோ பெற்றுக் கொள்ள வேண்டும்.

இக்கழகம் இதுவரை 31 கூட்டுறவு சங்கங்களுக்கு 1,566 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ. 7.184 இலட்சம் குறியீட்டுக் கடன் வழங்கியுள்ளது.

45 திட்டங்கள் இக்கழகத்தின் பரிசீலனையில் உள்ளன, இத்திட்டங்களால் 2,266 பேர்கள் குறியீட்டுக் கடனாக ரூ. 20.884 லட்சம் பெற்று பயனடைவர்.

இக்கழகத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக கழகத்தின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான கூடுதல் பணியினை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களிடம் ஒப்படைக்க அரசு ஆணையிட்டுள்ளது. அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட பணியுடன் இக்கூடுதல் பணியும் சேர்க்கப்பட்டுள்ளது.

## 6. முடிவுரை.

இவ்வாறு இவ்வரசு பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் வாழ்க்கை நிலையை உயர்த்திட பல முன்னேற்றத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இம்மானியத்தை ஏற்று ஒப்புதலளிக்க இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

## இணைப்பு.

### 1989-90-ம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீடு.

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் .. | | .. .. | 1,93,078 |
| நிர்வாகத்தில் .. | 10,943 | திட்டத்தில் | 1,73,350 |
| பல்வகைச் செலவு | 8,785 | | |

| திட்டத்தின் பெயர். | திட்டத்தில் சேர்ந்தவை. 52288 | | திட்டத்தில் சேராதவை. 121,062 | | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | பி.வ./மி.பி.வ. | சீ.ம. | பி.வ./மி.பி.வ.. | சீ.ம. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. உதவித் தொகை .. .. | 717 | 12,853 | 37,534 | 3,332 | 54,436 |
| 2. பள்ளிகள் .. .. | .. | 1,169 | .. | 28,671 | 29,840 |
| 3. மதிய உணவு .. .. | .. | 785 | .. | 2,611 | 3,396 |
| 4. புத்தகம் மற்றும் உடை .. | 1,650 | 4,332 | 543 | 621 | 7,146 |
| 5. உணவு மானியம் .. | 103 | .. | 1,074 | 6 | 1,183 |
| 6. விடுதிகள் .. .. .. | 22,186 | 2,944 | 34,169 | 9,691 | 68,990 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. பல்கலைக் கழக மானியம் | .. | .. | 26 | .. | 26 |
| 8. ஆசிரியர்களுக்கு வீடுகள் .. | .. | 15 | .. | .. | 15 |
| 9. விவசாயம் .. .. | .. | .. | 75 | 75 | 75 |
| 10. தொழிற்பயிற்சி .. .. | .. | 75 | 211 | 1,527 | 1,813 |
| 11. இலவச கருவிகள் .. .. | 2,755 | .. | 165 | .. | 2,920 |
| 12. குடிநீர் .. .. .. | .. | .. | .. | 10 | 10 |
| 13. சலவைத்துறை .. .. | 101 | .. | .. | .. | 101 |
| 14. சிறப்புப் பயிற்சி நிலையம் | .. | .. | 580 | .. | 580 |
| 15. சீர்மரபினர்களுக்கு வீட்டுவசதி | .. | .. | .. | .. | .. |
| 16. வீட்டுமனை கையகப்படுத்துதல் | 1,200 | .. | 150 | .. | 1,350 |
| 17. சிறப்புப் பயிற்சி .. | 59 | .. | 61 | .. | 120 |
| 18. பட்டயக் கணக்கர் படிப்பு .. | .. | .. | 5 | .. | 5 |
| 19. சிறந்த மாணவர்களுக்கு பரிசு .. | 361 | .. | .. | .. | 361 |
| 20. பள்ளிகள்/விடுதிகள் கட்டுதல் .. (பழுது பார்த்தல்). | 30 | .. | .. | .. | 30 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21. | வேலை வாய்ப்புப் பயிற்சி யாளர்களுக்கு விடுதிகள். .. | 707 | .. | .. | .. | 707 |
| 22. | சட்ட பட்டதாரிகளுக்கு பயிற்சி. .. | 246 | .. | .. | .. | 246 |
| | மொத்தம் .. | 30,115 | 22,173 | 74,518 | 46,544 | 1,73,350 |

1988-89-ல் மொத்தம் ரூ. 16,44,85,000

1989-90-ல் மொத்தம் ரூ. 19,30,78,000

600 009
13869

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamamn Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

---

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.